Sangathamil
# சங்கத்தமிழ்

குரல் – 108 | சர்வதேச மின் செய்தித்தாள் | 01 நவம்பர் 2025

## 18ஆம் ஆண்டு
# வீரவணக்கம்



தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர்

## பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வன்

02.11.2007 அன்று கிளிநொச்சி, தமிழீழத்தில் சிறீலங்கா வான்படையின் தாக்குதலில் வீரச்சாவடைந்த தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் உட்பட ஏழு மாவீரர்களின் 18 ஆம் ஆண்டு வீரவணக்க நினைவு நாள்



லெப். கேணல் அலெக்ஸ்



மேஜர் செல்வம்



மேஜர் மிகுதன்



மேஜர் கலையரசன்



லெப். ஆட்சிவேல்



லெப். மாவைக்குமரன்

கார்த்திகை (நவம்பர்) **மாவீரர் மாதம்**

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

NISHANTHAN LAW OFFICE
SERVICES
- Purchasing a Residential Property
- Selling a Residential Property
- Residential Mortgage Refinancing
- Wills and Powers of Attorney
NOTARY SERVICES
NEW LOCATION
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
39 Devonshire Ave., Markham ON L3S 3P2
McCowan Rd & Devonshire Ave. (Between Steeles & Denison St)

MT CPA CA
MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
- AUDIT
- REVIEW ENGAGEMENT
- NOTICE TO READER
- BUSINESS ADVISORY
- CONTROLLERSHIP SERVICES
- CORPORATE TAXES
- PERSONAL TAXES
- FINANCIAL PLANNING
- CRA AUDITS
- PAYROLL
- BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

Ideal Auto Tech
For all your vehicle repair and Service needs
Ontario
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

JRS AUTO TECH
Call Subas
Cell: 416-206-9489
Office: 416-628-4399
AC $119.99 +
OIL CHANGE $59.99 +
USED TIRE $74.99 +
BRAKES JOB $299.99 +
7 DAY - OPEN: 9 AM - 9PM
2655 Lawrence Ave., E, Unit 05
Scarborough ON M1P 2S2
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
SERVICE@JRSAUTOTECH.CA

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

உங்கள் கனவு இல்லத்தை நனவாக்கிட என்னை அழையுங்கள்!
Kaja Sivalingam
Sales Representative
647-338-5252
skajaruban@gmail.com
Higher Standard Agents... Higher Results!
HOMELIFE
HOMELIFE/GTA REALTY INC.
5215 Finch Ave E, Suite 203, Scarborough ON M1S 0C2 OFFICE: 416-321-6969

Muhunthan Sivathasan (Danny)
Graphic Designer & Printer
Silver Print House
Digital Printing, Graphics & Publication
D'impression numérique, les graphiques et la publication
437 423 5460
Silverprinthouse@gmail.com

Kurinchi
Beauty & Makeup
647.918.9742

RIGHT AT HOME REALTY INC.
JEY RASATHURAI
MBA, BBA (Hons)
REALTOR & MORTGAGE BROKER
- Mortgage, Line of Credit, Refinance, Renewal
- Private 1st,2nd & 3rd Mortgages - No Income Verification
- Solutions for Power of Sale Issues
- Buying & Selling & Lease Commercial & Residential Properties
Cell : 416-624-4843
Bus : 416-816-9011
301-305 Milner Ave, Toronto ON M1B 3V4
" NO PROMISES BUT SOLUTIONS"

MORTGAGE ARCHITECTS
Brokerage No. 12728
Need Assistance for your
First and Second Mortgages?
Re-Financing? Secured Line of Credit?
Commercial Mortgages?
Are you... Self Employed?
Temporary Resident? New Immigrant?
Not to Worry!
Please Call - THEVEN KANKESU
Mortgage Agent, FSCO Lic# M08008759
416.939.8789
thevenk1.tk@gmail.com / theven.kankesu@mtgarc.ca

ACCIDENT HAPPENS!
But your injuries don't have to last a lifetime.
TRUST ARAM LEGAL SERVICES!
ONE CALL - WE WILL HANDLE IT ALL!
ARAM Legal Services
Selva Thiyagarajah
416-618-1447
www.aramlegal.ca


விளம்பரத் தொடர்பிற்கு அழையுங்கள்: 437.345.4203



"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்


2026 உலக வணிகம்
ULAGA VANIKAM உலக வணிகம்
Ulaga VANIKAM
Tel: 437 345 4203
www.ulagavanikam.com
ulagavanikam@gmail.com

# தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**மிகவும் சோதனையான இக்கால கட்டத்தில் நெஞ்சத்தை உலுப்பும் வேதனைகளையும் நாம் சுமந்து நின்று மிகவும் நிதானமாக, மிகவும் விழிப்பாக, உறுதி தளராது எமது இலட்சியப்பணியைத் தொடர வேண்டும்.**






# சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**

437 345 4203

**மின்னஞ்சல்** (Email)

sangathamilcanada@gmail.com

**இணையத்தளம்** (Website)

www.sangathamil.ca

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பரதாரர் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# வன்னியின் முழுநிலவு
# லெப். கேணல் சந்திரன்




உன்னை நாங்கள் மறந்து விட்டோமா? இல்லை.

அது எங்களால் முடியாது. உன்னை மட்டுமல்ல, உன்னை மாதிரி இந்த மண்ணை நேசித்து, இந்த மண்ணுக்கு உயிர் தந்த எவரையுமே எங்களால் மறக்க முடியாது. சந்திரன், உன்னை – உனது உணர்வுகளை, மறக்கமுடியாமல் நாங்கள் மட்டுமா தவிக்கிறோம்? இல்லை.

புதரிகுடாவில் காற்சட்டை இல்லாமல் உன்னைக் கண்டதாக வும் சிறுசுகளும், பொன் நகரிலும் முள்ளியவளையிலும் உர லுக்குள் பாக்கிடித்தபடியே விழிகளால் உன்னைத் தேடும் கிழவி களும், களைத்து விழுந்துவரும் உன்னைத் தடவி உற்சாக மாக வழியனுப்பும் நிழல் மரங்களும் உன்னைக் காணாமல், உன்னை விழுங்கிய கடலலைகளைப் போலவே குமுறிக் கொண்டிருக்கிறார்கள்.

சந்திரன், நீ முல்லைத்தீவுக்கு வரும்பொழுது ஒரு சின்னப் போராளி.

நீ கறுப்பாக இருந்தாலும் அழகாக இருப்பாய். கண்ணாடிக்குள் ளாகத் தெரியும் உனது கண்களில் அன்பும், கனிவும் இருக்கும் சில நேரங்களில் கோபமும் தெறிக்கும்.

சந்திரன் நீ அடிக்கடி சொல்வாய்:

“நான் ஏழைக்குடும்பத்தில்தான் பிறந்தனான். வயலில் கூலி வேலை செய்துதான் நாங்கள் வாழ்ந்தனாங்கள்.”

உண்மைதான். அதனால்தான் ஏழைகளை நேசிக்கும் இதயத் தைப் பெற்றுக்கொண்டாய். அதனால்தான் எப்பொழுதுமே ஏழை மக்களுடன் ஒன்றிக் கலந்துவிடுவாய்.

ஒருமுறை, புதரிகுடா என்ற கிராமத்திற்கு நாங்கள் போயிருந் தோம். வயற்கரை ஓரங்களில் சிறு கொட்டகைகளைக் கட்டி அங்கு சில குடும்பங்கள் இருந்தன. கூரைகள் பிய்ந்துபோயிருந் தன. மழையிலும் வெயிலிலும் அவர்கள் நனைந்துகொண்டு தான் இருந்தார்கள். விழிகளில் ஏக்கத்துடன், வெறும் மேனி யுடன், நோயினால் வீங்கிய வயிறுகளுடன் இந்த மண்ணின் குழந்தைகள் எங்கள் முன்பு நின்றார்கள்.

நீ தவித்தாய்.

அவர்கள், பல நாட்களாகக் குளிக்கவில்லை என்றார்கள். தண் ணீர் அல்லவேண்டாம் என்று பக்கத்து வளவுக்காரன் தடுத்து விட்டானாம். குடிப்பதற்குக்கூடத் தண்ணீர் இல்லை என் றார்கள். அதைக்கேட்டு, நீ பட்ட தவிப்பும், உன்னிடம் தோன்றிய கோபமும் எங்களுக்கு நன்றாகவே தெரிந்தன. அந்த ஏழை மக்கள் இந்த மண்ணில் மனிதர்களாக வாழவேண்டும். அவர் களுக்கென்று இந்த மண்ணில் சொந்த நிலம், தொழில், மகிழ்ச் சிக்குரிய வாழ்வு எல்லாமே தோற்றுவிக்கப்பட வேண்டும் என,



நீ தீர்மானித்துக் கொண்டாய். உண்மையில் நீ கேலியாகச் சொல்வது மாதிரி ‘அதுவும் ஒரு போர்முனை’ தான்.

நீண்ட காலமாகக் கவனிக்கப்படாமல் ஊருக்குள் காடாய் இருந்த உடையார் ஒருவரின் பெரும் நிலம், அவர்களுக்குச் சிறிய பகுதிகளாகச் சொந்த நிலமானது. புதிய அழகான மண் வீடுகள் அவர்களுக்குச் சொந்தமானது.

அந்தக் கிராமத்திற்கென்று பாலர் பாடசாலையை ஆரம்பித்த போது, உன்னுடன் நாங்களும் அங்கே நின்றோம். நீ அவர்க ளுக்குப் புதிய ஆடைகளைக் கொடுத்திருந்தாய். ஆறு வயது தொடக்கம் பத்துப் பன்னிரண்டு வயதுவரை, எல்லாக் குழந்தை களும் பாலர் வகுப்பில் படிப்பதற்கு வந்திருந்தார்கள். அது ஒரு மகிழ்ச்சிக்குரிய நாள். இனி அந்தக் கிராமம் தனக்கென்றொரு வாழ்வைக் காணும் என்பது அன்று வெளிப்பட்டது.

சில நாட்கள் சென்றன. அந்தக் கிராமத்தவர்களுக்குப் புதரிகுடா என்ற பெயர் பிடிக்கவில்லையாம். அதனைச் சந்திரபுரம் என மாற்றிவிட்டார்கள். அதனைக்கேட்ட எங்களுக்குச் சிரிப்பாக இருந்தது. உனக்குக் கோபமாக இருந்தது.

நீ எசினாய். இனி அப்படிச் சொல்லக்கூடாது என்றே. ஆனால் சந்திரன், நீ உயிரோடு இருக்கும் பொழுதும் உன் மரணத்தின் பின்பும் அந்தப் பெயர் மாறவே இல்லை. நீ அதற்குப் பின் எவ் வளவோ பெரிய பெரிய பொறுப்புக்களில் எல்லாம் இருந்திருப் பாய். ஆனால் நீ தடம்பதித்துச் சென்றது இங்குதான். உன் நினைவுகள் ஆழமாக வேரூன்றிப் போனதும் இங்குதான்.

சந்தின், உன் நினைவுகளைச் சொன்னபடி சந்திரபுரம் மட்டும் தான் இருக்கிறதென்றில்லை. நீ உருவாக்கிய இன்னொரு

**போர்முனையிலே நாம் சந்தித்த ஒவ்வொரு வெற்றியின்போதும், அவற்றுக்காக இலட்சிய வேட்கையோடு போராடிய எத்தனையோ தோழர்களைப் பறிகொடுத்து விட்டோம். தங்கள் வாழ்வைவிட தமிழீழத்தின் விடுதலையை நேசித்தவர்கள் – இனிய கனவுகளைச் சுமந்த இளமை வாழ்வை தமிழீழத் தாயிற்குக் காணிக்கையாக்கியவர்கள் – மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் மரணித்தபோது மகிழ்ச்சியடைந்தார்கள். பெருமைப்பட்டார்கள். திருப்தியடைந்தார்கள்.**

கிராமமான பொன்னகர், நாவற்காடு, உன்னைத் தன் பிள்ளை யாக ஏற்றுக்கொண்ட முள்ளியவளை, தண்ணீரூற்று, முல் லைத்தீவு, பாண்டியன்குளம், பனங்காமம்.... ஏன் வன்னி முழுவதுமே உன் நினைவுகளைச் சொன்னபடி நிற்கின்றன.

சந்திரன், உனது உள்ளம் சிலவேளைகளில் தாயன்பைத் தேடி அழுவதுண்டு. நீ உந்து அம்மாவில் எவ்வளவு அன்று வைத் திருந்தாய் என்பது, எங்களுக்குத் தெரியும். உன்னுடைய சோகம் நிறைந்த இளமைக் காலத்தை நீ, வேலைகளினூடே சொல்வதுண்டு.

அந்தக் காலங்களில் எங்கள் முன் கடுமையான வேலைகள் நின்றன. நீ முறிந்து, கஷ்டப்பட்டு வேலை செய்வாய். நாங்கள் வியந்து நிற்போம்.

"நான் சின்ன வயசிலேயே வயலுக்கை நிண்டனான்" என்பாய் நீ. உன் விழிகளில் ஏதோ ஒரு ஏக்கம் தெரியும்.

"அண்ணன்மாருக்கும் எனக்கும் சேர்த்து அம்மா பழஞ்சோறு உருட்டித்தருவா" என்பாய் நீ. உன் விழிகளை நாங்கள் பார்ப்போம். நீ வேறெங்கோ பார்த்துக் கொண்டிருப்பாய்.

சந்திரன், நீ கிளிநொச்சியில்தான் பிறந்தாய். ஆனால் உனது அம்மாவும், அப்பாவும் மலையகத்தைச் சேர்ந்தவர்கள். உனது அப்பா சாகும் பொழுது உனக்கு இரண்டு வயதாம். உனது இரண்டு அண்ணன்மாரும் சின்னப்பிள்ளைகள். உங்கள் மூன்று பேரையும் வைத்துக்கொண்டு உனது அம்மா எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பாள். இப்போதெல்லாம் உன்னுடைய அம்மா உனது படத்தை வைத்துக்கொண்டு விம்மிக் கொண்டிருக்கிறாளாம்.

சந்திரன், நீ முள்ளியவளையில் அரசியல் வேலை செய்யும் பொழுது, சில நேரங்களில்... இரவில் உன்னைத் தேடி நாங்கள் வருவதுண்டு. இரவில் சோகமான பாடல் கேட்கும். வீட்டில் உன்னை நாங்கள் காணுவோம். நீ விழித்திருப்பாய். "இந்த விடயம் ஆமிக்காரனுக்குத் தெரிந்தால் பாட்டுக்கேட்கிற வீட்டில் வந்து உன்னைப் பிடிக்கப்போறாங்கள்" என்று, நாம் எசுவோம். நீ வீடு வீடாக வேலிகளுக்கு மேலாகப் பழைய சோறு தேடித் திரிவாய். அதற்காக நீ வெட்கப்படுவதுமில்லை. ஏனென்றால் அங்கிருக்கிற எல்லா வீட்டிற்கும் நீ பிள்ளை மாதிரித்தான். உனக்குச் சாப்பாடு தரவேண்டும் என்பதற்காகவே, அவர்கள் இரவில் சோற்றை மிச்சம் வைப்பதுண்டு. சந்திரன், இன்றைக்கு அந்தச் சனத்தினுடைய இதயத்தில் நீ இருக்கிறாயடா!

சந்திரன், நீ அரசியல் பேசுவதை நாங்கள் கேட்பதில்லை. சில நேரங்களில் பார்த்திருக்கிறோம். ஏதாவதொரு வீட்டின் முற்றத்தில், ஒரு கல்லின்மேல் நீயிருப்பாய். தங்கள் வீட்டுக் கதைகளைச் சொல்லிக்கொண்டே அந்த வீட்டுகாரரும் முன்னாலிருப்பார்கள். அப்போதுதான் நீயும் இந்த மண்ணின் நிகழ்வுகளைச் சொல்லிக் கொண்டிருப்பாய். அவர்கள் எவருக்குமே தெரியாது, அவர்களுக்கு நீ அரசியல் படிப்பிக்கிறாய் என்று. கதைத்து முடிந்த பின்பு, "இந்த மண்ணின் விடுதலைக்காக எல்லோரும் போராடத்தான் வேண்டும்" என்பார்கள்.

முல்லைத்தீவு மாவட்டப் பிரதேசத்திற்கு நீ அரசியல் வேலை செய்வதற்கு வந்து, இரண்டு வருடங்கள் சென்றன. இந்தக் கால இடைவெளியில் உன்னிடம் பல மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. எதற்கெடுத்தாலும் கோபப்படும் உனது இயல்பும் மாறி இருந்தது. முல்லைத்தீவு பிரதேசத்திலும் பல மாறுதல்கள் ஏற்பட்டிருந்தன. உனதும் உனது தோழர்களதும் கடுமையான உழைப்பு, தேசவிரோத சத்திகளின் பிடியிலிருந்து மக்களை விடுவித்தன. தங்கள் மண்ணின் விடுதலையைப் பற்றி மக்களைச் சிந்திக்க வைத்தது. அந்த விடுதலைக்காக மக்களைப் போராடத் தூண்டியது.

சந்திரன், உனக்குத் தெரியும் - அந்த நேரங்களிதான், இந்தியப் படை எம் தேசத்தின் மீதொரு யுத்தத்தை நடாத்தியது. நாங்கள் தெருக்களில் நடக்க முடியாமலும் - கிராமங்களில் நிற்க முடியாமலும் - இருந்த நேரமது.

இரவு நேரங்களில் காடுகளிற்குள்ளும்- காட்டுக் கரையோரங்களிலும்தான் நாங்கள் படுப்போம். ஆபத்தை எதிர்பார்த்தபடியே இரவின் அச்சத்தில், பசித்த வயிற்றுடன் இருக்கும் எங்களை, நீதான் சிரிக்க வைத்துக்கொண்டிருப்பாய். நாட்கள் செல்ல செல்ல ஆபத்து நிறைந்த அந்த இரவுகளே இனிமையான இரவுகளாக எங்களுக்கு மாறிவிட்டன. சந்திரன், எங்களின் எல்லாத் தோழர்களும் சொல்வார்கள் "கஷ்டமான அந்த நாட்களும் அந்த நினைவுகளும்தான், இன்னும் எங்களின் மனங்களில் பசுமையாய் படிந்து கிடக்கின்றது" என்று.

சந்திரன் நீ அரசியல் வேளைகளில் முழுமையாக ஈடுபட்டிருந்தாலும், தாக்குதற் களங்களுக்குச் செல்வதற்கும் தவறுவதில்லை. உன் கைகள் எதிரிக்கு எதிராகப் பலமுறை துப்பாக்கிகளை இயக்கியிருக்கும்.

இந்தியப் படைகளுடன் நெடுங்கேணியில் நடந்த சண்டை ஒன்றில் நீ, கழுத்திலும் கையிலும் காயமடைந்திருந்தாய். களத்தில் ஆயுதங்களைக் கைப்பற்ற முன்னேறியபோது நீ காயமடைந்ததாக, உன் தோழர்கள் சொன்னார்கள்.

நீ எமது முகாமில் சாய்மனைக் கட்டிலில் சாய்ந்திருந்தாய். உன் கழுத்தில் சிக்கிய துப்பாக்கி ரவை, உன்னை வேதனைப்படுத்தியது. நீ அதைவிட அதிகமாக பாவனை, நடிப்புச் செய்தாய். உன் பாவனைகளை எத்தனை தோழர்கள் ரசித்துக் கொண்டிருந்தார்கள். எங்காவது ஒரு மூலையிலிருந்து ஒரு தோழன் உன்னை அழைப்பான்.

நீ கழுத்தைத் திருப்ப முடியாமல் உடல் முழுவதையும் திருப்பி அவனைப் பார்ப்பாய். எங்கள் முகாம் முழுவதும் உன்னைப் பார்த்து ரசித்துச் சிரிக்கும். இந்தியப் படைகள் எங்களைச் சுற்றி ஒரு வயைத்தை அமைத்து எங்களை நெருங்கிய பொழுதும், நாங்கள் காடுகளிற்குள் மகிழ்ச்சியாக இருந்தோம். போராட்டத்தில் நம்பிக்கையோடு இருந்தோம் என்பது, இந்தியர்களுக்குத் தெரிந்திருக்குமோ தெரியாது.

உனது காயம் சுகமாகியது. அந்த நேரத்தில் முல்லைத்தீவு பிரதேசத்து மக்கள் இந்தியப் படைகளால் அடித்து விரட்டப்பட்டு, காடுகளிலும் வயல்களிலும் தஞ்சமடைந்து வாழ்ந்தனர். நீயும் அவர்களுடன் கலந்து நின்றாய். நீயும் உனது தோழர்களும் அந்த மக்களுக்குப் போராட்டத்தில் நம்பிக்கையை ஏற்படுத்தினீர்கள். போராட்டத்தின் தேவியைப்பற்றி, இந்த மண்ணின் விடுதலையைப்பற்றி, இந்திய ஆக்கிரமிப்பின் நோக்கத்தைப் பற்றியெல்லாம் அவர்களுக்குத் தெளிவுபடுத்தினீர்கள். அந்த நிலையை விளங்கிக்கொண்டு, மக்கள் எங்களை அரவணைத்ததால்தான், ஆகிரமிப்பாளனுக்கு இந்த மண் அடிபணியாது தலை நிமிர்ந்துகொண்டது.



அந்த நாட்களில்தான், நீ கிளிநொச்சிக்கு அரசியற் பொறுப்பாளராக நியமிகப்பட்டாய். முல்லைத்தீவு மாவட்டத்து மக்களின் கண்கள் உன் பிரிவைத் தாங்காது தவித்தன. ஆனால் உன் முன் இருந்ததோ பெரும் கடமை. நீ கிளிநொச்சிக்குச் சென்ற பின்பு, அரசியற் பிரிவை ஒழுங்குபடுத்தி விஸ்தரித்திருந்தாய். உனது திறமையான செயற்பாடுகள் அந்த மாவட்டத்திலும் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தின. அந்த நேரங்களில் இரண்டு மூன்று தடவைகள், இந்தியப் படைகளின் சுற்றிவளைப்புக்களிலிருந்தும் நீ தப்பிக்கொண்டாய்.

வன்னி மாவட்ட அரசியற் பொறுப்பாளராக இருந்த மாறன் அண்ணாவின் இழப்பின் பின்பு, நீ வன்னி மாவட்ட அரசியற் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டாய். அந்த நேரத்தில்தான் இந்தியப் படை இந்த மண்ணை விட்டு வெளியேறியது. நீ வன்னி முழுவதும் அரசியற் பிரிவை ஒழுங்குபடுத்தி, வேலைத் திட்டங்களை வகுத்துக்கொண்டே. புதிதாய்ப் பிறப்பெடுத்த எமது கட்சி அமைப்பும் அந்த நேரங்களில் பலப்பட்டுக்கொண்டது. அந்த நேரங்களில் நாங்கள் நடாத்திய பேரணிகளில், கூட்டங்களில், உனது பேச்சை மக்கள் விரும்பிக் கேட்பார்கள். உன்னால் எப்படி இவ்வளவு இலகுவாக - தெளிவாக எல்லா மக்களையும் கவரக்கூடியமாதிரிப் பேசமுடிகிறது என்பது, எங்களுக்கு வியப்பாகவே இருக்கும்.

சிறீலங்கா இராணுவத்தினருடனான சண்டை மீண்டும் தொடங்கியபோது, நீ எங்கேயோவொரு தாக்குதற் காலத்தில் தான் நிற்பாய் என்பது, எலோருக்குமே தெரியும். அப்படித்தான் நீயும் நின்றாய்.

கொக்காவில் இராணுவ முகாம்மீதான தாக்குதலிலும் நீ கலந்துகொண்டாய். அந்த முகாமை நாங்கள் வெற்றிகொண்டோம். ஆனால், அங்குதான் உனது அடிவயிற்றில் துப்பாக்கிக் குண்டு தாக்கியது.

சந்திரன், நீ எங்கள் வைத்தியசாலை ஒன்றின் கிடந்தாய். உன் விழிகள் நீ தப்பிக் கொள்வாய் என்ற நம்பிக்கையைத் தரவில்லை. உன் உறுதியான கருத்தைத் தேகம் வாடிப்போய்க் கிடந்தது.

கலங்கிய விழிகளுடன் நாங்கள் காத்திருந்தோம்.

சில வாரங்கள் சென்றன. நீ கண்விழித்தாய். ஆனால், உன் கால்கள் இனி வழங்காது என்றார்கள். கால்கள் இல்லாத சந்திரனை எங்களால் கற்பனை கூடச் செய்யமுடியாது சந்திரன்! ஆடாமல், பாடாமல், ஓடாமல் நீ இருக்கவே மாட்டாய். நாங்கள் தவித்தோம். கலங்கி நின்றோம். ஆனால் நீ கலகலப்பாக இருந்தாய். உனது நிலை உனக்குத் தெரிந்த பின்பும் உற்சாகமாக இருந்தாய்.

சந்திரன், நீ வைத்தியசாலைக் கட்டிலிருந்துகொண்டெ "நான் இங்கையும் அரசியல் வேலை செய்யிறன். இங்கு வருகிற தாதிகளுக்கும், வைத்தியர்களுக்கும், ஏன் என்னை இந்தக் கதவுகளால் எட்டிப் பார்க்கும் ஒவ்வொருவருக்கும் இந்த மண்ணில் ஒரு போராட்டம் ஏன் நடக்கிறது எனச் சொல்லிக்கொண்டிருக்கிறேன்" என்றாய். உண்மைதான். நீயிருந்த - சோகம்பாடும் அந்த -வைத்தியசாலைகூட கலகலப்பாக மாறிப்போனது.

சந்திரன் நடக்கத் தேவையில்லை. அவன், இருந்தாலே போதும். போராடுவான், போராட்டத்திற்குப் பங்களிப்பான் என எங்கள் மனங்கள் எண்ணிக்கொண்டன.

அதன் பின்பு

நீயும் உனது தோழர்களும் வைத்திய வசதியைத் தேடிக் கடலில் பயணம் போனதாகக் கேள்விப்பட்டோம். உண்மையில் உங்களுக்கு என்ன நடந்தது என்பது எங்களுக்குத் தெரியாது. கடலிற்குள் தோன்றிய சிங்கள மிருகங்கள் உங்களைக் கவிட்டிருக்கும். உனக்கு நீந்தத்தெரியும். நீ கைகளால் நீந்த முயன்றிருப்பாய். வழங்காத உனது கால் உன்னைக் கீழே கீழே இழுத்திருக்கும். கடல் உன்னை மூட ஒரு கணம் தயங்கியிருக்கும். மூடிய பின்பும் ஏற்றுக்கொள்ள முடியாமல் குமுறி இருக்கும். வன்னி மக்களின் மனங்கள் கொந்தளித்ததைப் போலவே, கடலும் உன்னை அணைத்த பின்பு வேதனை தாளாது கொந்தளித்திருக்கும்.

நினைவுப்பகிர்வு:- தோழர்கள்.
வெளியீடு :களத்தில் இதழ் 09.10.1996

# லெப். கேணல் சந்திரன் பூங்கா கிளிநொச்சி, தமிழீழம்













**சொல்லுக்கு முன்னே எப்போதும் செயல் இருக்கவேண்டும். செயலால்தான் நாங்கள் செல்வாக்குப்பெற்றோம்; செயல்தான் நமது நடவடிக்கைகளுக்கு அரசியல் வடிவம் தருகிறது.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–




# குருந்தூர்மலை சட்டவிரோத விகாரை சூழலிலுள்ள தமிழ் விவசாயிகளின் நிலங்களை அழித்து 'தொல்லியல் தளம்' என்கின்ற அறிவித்தல் பலகை!

15.10.2025

குருந்தூர்மலை சட்டவிரோத விகாரை சூழலிலுள்ள தமிழ் விவசாயிகளின் நிலங்களை அழித்து "தொல்லியல் தளம்" என்கின்ற அறிவித்தல் பலகைகளை தொல்லியல் திணைக்களம் இன்று நிறுவியிருக்கின்றது.

கடந்த மே மாதம் இந்த பூர்வீக விவசாய நிலங்களை பண்படுத்தி விவசாயம் செய்ய முற்பட்ட தமிழ் விவசாயிகளை அங்குள்ள கல்கமுவ சாந்தபோதி தேரர் பொலிஸில் பிடித்து கொடுத்து சிறையில் அடைந்திருந்தார்.

அதன் தொடர்ச்சியாக இன்று பயிர் செய்கைகள் மேற்கொள்ளப்பட்ட விவசாய நிலங்களை அழித்து தொல்லியல் திணைக்களம் ஆக்கிரமித்திருக்கின்றது.

ரணில் விக்ரமசிங்கே அதிகாரத்திலிருந்த போது இரவோடு இரவாக தண்ணிமுறிப்பு கிராமம் உட்பட அப்பகுதியுள்ள 341 ஏக்கர் தொல்லியல் நிலம் என எல்லைக்கற்களை நாட்டியிருந்தார்கள் இருப்பினும் ரணில் விக்கிரமசிங்கே அவர்கள் தலையீடு செய்த காரணத்தினால் விவசாய நடவடிக்கைகளுக்கு குந்தகம் ஏற்படுத்தப்படவில்லை.

ஆனால் இந்த முரண்பாடுகளின் விளைவாக அப்போதைய தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் பேராசிரியர் அனுர மனதுங்க தனது பதவியை கூட இராஜினாமா செய்திருந்தார்.

அதன் பின் அமைதியாகவிருந்த கல்கமுவ சாந்தபோதி தேரரும் தொல்லியல் திணைக்களமும் ஜேவிபி அதிகாரத்திற்கு வந்த பின்னர் குருந்தூர்மலை மலை மற்றும் அதனை சூழ வுள்ள 341 ஏக்கர் விவசாய நிலப்பரப்புக்கும் பாதுகாப்பு வேலை ஒன்றை அமைத்து முழுமையாக ஆக்கிரமிக்க முயற்சித்து வருகின்றார்கள்.

அதன் முதற்கட்டமாக இராணுவத்தினரின் ஒத்துழைப்போடு உள்ளூர் நீதிமன்ற தீர்ப்புகளை கூட புறம்தள்ளி விவசாய நிலங்களை அழித்து அறிவித்தல் பலகைகளை இன்று தொல்லியல் திணைக்களம் வைத்திருக்கின்றது.

மறுபுறம் ஜேவிபி ஆட்சியாளர்கள் கீரி சம்பா அரிசி பற்றாக் குறைக்கு தீர்வாக நாளை முதல் இறக்குமதி செய்ய தீர்மானித்திருக்கின்றார்கள்.

அதாவது உள்ளூரில் அரிசி உற்பத்திக்கு பயன்படுத்த வேண்டிய மிக வளமான விவசாய நிலங்களை அழித்து ஆக்கிரமிக்கும் சம நேரத்தில் மறுபுறம் மக்களின் தேவைக்கு அரிசியை இறக்குமதி செய்ய முயற்சிக்கின்றார்கள்.

2028 ஆம் ஆண்டு முதல் ஆண்டு தோறும் 5.5 பில்லியன் அமெரிக்கா டொலர்கள் கடன்களை மீள செலுத்த வேண்டிய சீரழிந்த பொருளாதார சூழலுக்கு மத்தியில் இந்த இனவாத



கோமாளித்தனங்களை எப்படி புரிந்து சொல்லுவதென்றே தெரியவில்லை. ஆனால் பொதுப்பரப்பில் இனவாதம் ஒழிக்கப்பட்டுவிட்டதாக ஜேவிபி ஆட்கள் வெறும் வாயில் நிறுவ முயற்சிக்கின்றார்கள்

# கோப்பாய் சிறீலங்காப் பொலிசாரை பொலிஸ் நிலையத்தில் இருந்து உடனடியாக வெளியேற உத்தரவு

15.10.2025

கோப்பாய் சிறீலங்காப் பொலிசார் நீதிமன்ற உத்தரவில் வெளியேற்றப்பட்டமையால் கோப்பாய் பொலிஸ் நிலையம் தற்காலிகமாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.



கோப்பாய் பொலிஸ் நிலையம், இராச பாதை வீதியில் தனியாருக்கு சொந்தமான காணிகள் மற்றும் வீடுகளை அடாத்தாக கைப்பற்றி அமைக்கப்பட்டருந்தது.

தமது காணிகள், வீடுகளை விட்டு பொலிசார் வெளியேற்றப்பட்டு, தமது காணிகள் மற்றும் வீடுகளை தம்மிடம் ஒப்படைக்குமாறு, யாழ் மாவட்ட நீதிமன்றில் கடந்த 2019ஆம் ஆண்டு காலபகுதியில் 07 உரிமையாளர் வழக்கு தொடர்ந்தனர்.

வழக்கு விசாரணைகள் கடந்த 06 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வந்த நிலையில் கடந்த யூன் மாதம் 27ஆம் திகதி பொலிசார் தனியார் காணிகள் வீடுகளை உரிமையாளர்களிடம் மீள ஒப்படைத்து விட்டு, வெளியேற வேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டது.

நீதிமன்றம் தீர்ப்பளித்து 2 மாதங்களுக்கு மேலாகியும், பொலிசார் காணிகள், வீடுகளை ஒப்படைக்காத நிலையில்,




இன்றைய நாள் புதன்கிழமை நீதிமன்ற பதிவாளரின் முன்னிலையில் பொலிசார் அவ்விடத்தில் இருந்து வெளியேற்றப்பட்டு, உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன.







"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

**www.sangathamil.ca**

# குருந்தூர்மலையை மகாவம்சத்துடன் தொடர்புபடுத்தி காட்சிப்படுத்தப்பட்ட போலி வரலாற்றுப் புனைவு

## வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன்

15.10.2025

தமிழர்களின் பூர்வீக வழிபாட்டிடமான முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையை பௌத்தவரலாற்றுடனும், பௌத்த வரலாற்றுநூலான மகாவம்சத்துடனும் தொடர்புபடுத்தி போலியான வரலாற்றுத் தகவல்கள் புனையப்பட்ட காட்சிப்பலகைகள் குருந்தூர்மலைப்பகுதிகளில் தொல்லியல் திணைக்களத்தால் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் இதுதொடர்பில் அறிந்த வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் குருந்தூர்மலைப் பகுதிக்கு 15.10.2025இன்று நேரடியாகச்சென்று நிலமைகளைப் பார்வையிட்டதுடன், தொல்லியல் திணைக்களத்தின் இத்தகைய கட்டமைக்கப்பட்ட தமிழ் இனவழிப்புச் செயற்பாட்டிற்குத் தனது வன்மையான கண்டனங்களைத் தெரிவித்துள்ளார்.

மேலும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,



குருந்தூர்மலையில் சில விளம்பரப் பலகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவித்தல் கிடைக்கப்பெற்றது அதற்கமையவே இப்பகுதிக்கு வருகைதந்தேன்.

ஏற்கனவேயும் தமிழர்களின் பூர்வீக குருந்தூர் மலையை பௌத்த இடமென விவரிக்கும் வகையில் காட்சிப்பலகைகள் குருந் தூர்மலை அடிவாரத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இந்நிலையில் 14.10.2025அன்று புதிதாக “குருண்டி தொல்லியல் தளம்” எனத் தலைப்பிடப்பட்டு போலியான பௌத்த வரலாறுகள் புனையப்பட்ட காட்சிப்பலகைகள் தொல்லியல் திணைக்களத்தினால் குருந்தூரமலையின் அடிவாரம், குரந்தூர்மலையின் மேற்பகுதி மற்றும் குருந்தூர்மலையைச் சுற்றியுள்ள பகுதிகளிலுமாக மொத்தம் நான்கு இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. இவ்வாறான போலியான வரலாற்று புனைவுகளை இங்கு நிறுவுவதை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

குறிப்பாக எமது தமிழ் மக்கள் இந்தக் குருந்தூர்மலையை அண்டியுள்ள தண்ணிமுறிப்பு பகுதியில் பூர்வீகமாக வாழ்ந்துவந்ததுடன், இந்த குருந்தூர்மலையில் அமைந்திருந்த ஆதிசிவன் ஐயனாரை சூலவழிபட்டுவந்துள்ளனர். இதுவே தண்ணிமுறிப்பினதும் குருந்தூர் மலையினதும் வரலாறாக இருக்கின்றது. இந்நிலையில் இந்த தண்ணிமுறிப்புப் பகுதியில் பூர்வீகக் குடிகளாக வாழ்ந்த எமது தமிழ் மக்கள் இன்னும் மீளக்குடியமர்த்தப்படவில்லை.

இத்தகையசூழலில் தமிழர்களுடைய பூர்வீக வாழிடமான தண்ணிமுறிப்பையும், குருந்தூர்மலையையும் மகாவம்சத்துடனும், பௌத்த வரலாறுகளுடனும் தொடர்புபடுத்தி தொல்லியல் திணைக்களத்தினால் போலியானதொரு வரலாறு புனையப்பட்டு காட்சிப்பலகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.




இவ்வாறாக போலியான வரலாறுகளைப் புனைந்து காட்சிப் பலகைகளை காட்சிப்படுத்துவது தொல்லியல் திணைக்களத்தினுடைய பணியில்லை. தொல்லியல் திணைக்களமென்றால் இந்தநாட்டில் சிங்கள மக்கள், தமிழ் மக்களென்ற வேறுபாடின்றி வரலாறுகளை ஆராய்ந்து உண்மையான வரலாறுகளை பதிவுசெய்யவேண்டும்.

ஆனால் இலங்கையிலுள்ள தொல்லியல் திணைக்களம் பௌத்தர்களுக்கு சார்பாக போலியான வரலாற்றுபுனைகதைகளை உருவாக்குவது மற்றும் காட்சிப்படுத்துகின்ற செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுக்கின்றனர். இவ்வாறாக எம்மீது கட்டமைக்கப்பட்ட இனவழிப்புச் செயற்பாடுகள் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன.

குருந்தூர்மலை மற்றும் அதனை அண்டிய சகல இடங்களும் எமது தமிழ் மக்களுடைய பூர்வீக இடங்களாகும்.

தற்போதும் தொல்லியல் திணைக்களத்தால் அடாவடியாக ஆக்கிரமிக்கப்பட்ட இடங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களிலெல்லாம் தமிழ் மக்களே பயிர்ச்செய்கை மேற்கொண்டுவருகின்றனர்.

குறிப்பாக குருந்தூர்மலையைச்சூழவுள்ள தமிழ் மக்களுக்குச் சொந்தமான 300 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகள் தொல்லியல் திணைக்களத்தினால் அத்துமீறி ஆக்கிரமிக்கப்பட்டு எல்லைக்கற்கள் இடப்பட்டுள்ளன. இவ்வாறு தொல்லியல் திணைக்களம் பாரிய அளவில் எமது தமிழ் மக்களின் குடியிருப்பு மற்றும் பயிர்ச்செய்கைக்காணிகளையும் அபகரித்து வைத்திருப்பதற்கு எந்த அவசியமும் இல்லை. எனவே அந்தக் காணிகளும் விடுவித்து எமது தமிழ் மக்களிடம் கையளிக்கப்படவேண்டும். எமது தமிழ் மக்கள் தண்ணிமுறிப்பில் மீளக்குடியமர்த்தப்படவேண்டும் என்றே நாம் தொடர்சியாக கோரிவருகின்றோம்.

எமது பூர்வீக தாயகத்தில் நாம் எமது வரலாறு, பண்பாடு, கலாச்சாரம், வாழ்வியல் வழிபாட்டு அம்சங்களுடன் நிறைவாக வாழ்



வதையே விரும்புகின்றோம். ஆனால் எமது கட்டமைப்புக்களைச் சீர்குலைக்கின்ற வகையிலேயே கட்டமைக்கப்பட்ட தமிழ் இனவழிப்புச் செயற்பாடுகளை தொல்லியல் திணைக்களம் தொடர்ச்சியாகச் செயற்பட்டுவருகின்றது.




தொல்லியல் திணைக்களம் போலியாக வரலாறுகளைப் புனைந்துள்ள மகாவம்சக் காலத்திற்கு முன்பிருந்தே எமது தமிழர்கள் ஆண்ட இடங்களாக இந்த இடங்கள் காணப்படுகின்றன.

இந்த நாடு பெரும்பான்மை பௌத்தர்களின் ஆட்சியின் கீழ் இருக்கின்றதென்பதற்காக, பெரும்பான்மை பௌத்தர்களுக்கு ஏற்றவர்களுக்கு போலியான வரலாறுகளைப் புனைந்து தமிழர்களின் பூர்வீக வரலாற்றிடங்களைத் திட்டமிட்டு ஆக்கிரமிப்புச் செய்வதை ஒருபோதும் எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது. தொல்லியல் திணைக்களத்தின் இத்தகைய செயற்பாட்டை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

மேலும் இந்த குருந்தூர்மலையில் நீதிமன்ற கட்டளைகளையும் மீறி சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரைக்கு பொறுப்பாகவுள்ள தேரரரும் இவ்வாறான அபகரிப்பு மற்றும் பௌத்த வரலாற்று புனைவுச் செயற்பாடுகளுக்கு முழு ஆதரவுடன் செயற்படுவதாக அறிகின்றோம். இவ்வாறாக பௌத்த துறவியாக இருப்பதற்கு அடிப்படைத் தகுதியே இல்லாத ஒருவரையே இங்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளது. அவருடைய அத்துமீறல்கள் மற்றும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்புச் செயற்பாடுகளுக்கு எனது வன்மையான கண்டனங்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் இத்தகைய வரலாற்றுப் புனைவுகளூடாக மேற்கொள்ளப்படும் கட்டமைக்கப்பட்ட தமிழ் இனவழிப்புச் செயற்பாடுகள் தொடர்பிவ் உரியவர்களின் கவனத்திற்கு கொண்டுவருவதுடன், இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்கும் எம்மாலான சகலநடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் - என்றார்.

# தனியார் காணிகளை கடற்படையினருக்கு வழங்க முடியாது யாழ். வலிலிகாமம் வடக்குப் பிரதேச சபையில் தீர்மானம்

16.10.2025

யாழ்ப்பாணம் - கீரிமலையில் கடற்படையினர் ரேடார் அமைக்க கோரும் 2 ஏக்கர் காணியை வழங்க முடியாது என வலிகாமம் வடக்கு பிரதேச சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

வலி வடக்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் சோ. சுகிர்தன் தலைமையில் நேற்றைய நாள் வியாழக்கிழமை பிரதேச சபை சபா மண்டபத்தில் நடைபெற்றபோது குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன்போது, போதைப்பொருள் ஒழிப்புக்காக ரேடார் அமைக்கவே காணி கோரப்படுவதாக தெரிவித்த தேசிய மக்கள் சக்தி உறுப்பினர், காணி உரிமையாளர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். அதில் அரசியல் செய்ய வேண்டாம் என தெரிவித்தார்.

இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்த தவிசாளரும் ஏனைய கட்சி உறுப்பினர்களும், போதைப் பொருள் ஒழிப்புக்கும் காணி சுவீகரிப்புக்கும் சம்பந்தம் இல்லை. ரேடார் அமைப்பதற்கு இரண்டு ஏக்கர் தேவையில்லை. மக்கள் காணி மக்களுக்கே என கூறிவிட்டு மக்கள் காணிகளை சுவீகரிக்க அனுமதிக்க முடியாது என்றனர்.

அத்துடன் வலிகாமம் வடக்கு பிரதேச சபை மற்றும் மக்களின் எதிர்ப்பை காட்டும் வகையில் பிரதேச செயலாளருக்கு கடிதம் அனுப்பவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



www.sangathamil.ca

# வடமாகாண ஆளுநர் அலுவலகத்தை முற்றுகையிட்டுள்ள ஆசிரியர்கள்

16.10.2025

வடமாகாண ஆசிரியர்கள் ஆளுநர் அலுவலகத்தை 15.10. 2025, புதன்கிழமை மூன்றாவது நாளாக தொடர் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

ஆசிரியர் இடமாற்ற கொள்கையை சரியான முறையில் நடைமுறைப்படுத்துமாறும், கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக கஷ்டப் பிரதேசம் மற்றும் அதி கஷ்டபிரதேசங்களில் பணிபுரிந்த ஆசிரியர்களுக்கான இடம் மாற்றங்கள் சரியான முறையில் வகுக்கப்படவில்லை என கூறி வடமாகாண ஆசிரியர்கள் திங்கட்கிழமை முதல் வடமாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று புதன்கிழமை மூன்றாவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் வடமாகாண ஆளுநர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டள்ளனர்.

போராட்டத்தின் போது வடமாகாண ஆளுநர் அலுவலகத்தினுள்ளே போராட்டக்காரர்கள் உட்புக முயற்சித்த வேளை பொலிசார் அவர்களை தடுத்து நிறுத்தினர். அதனால் போராட்ட காலத்தில் சிறிது நேரம் பதட்டம் ஏற்பட்டது.










# வலி. வடக்கில் காணிகளை விடுவிப்பதாகக் கூறி ரேடார் அமைக்கவும், வைத்தியசாலை அமைக்கவும் காணிகளை சுவீகரிக்க முயற்சி

## வடமாகாண காணி உரிமைக்கான மக்கள் அமைப்பு

1710.2025

மக்களுடைய காணி மக்களுக்கே என கூறி ஆட்சி அமைத்தவர்கள் வீதியை மாத்திரம் திறந்து விட்டு, காணிகளை கையளித்தது போன்றதான மாயையை உருவாக்கியுள்ளனர் என வடமாகாண காணி உரிமைக்கான மக்கள் அமைப்பினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

வலி, வடக்கில் நடாத்திய ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தனர்.

மக்களின் காணிகளை மக்களுக்கே கையளிப்போம் என ஆட்சி அமைத்தவர்கள், இன்று ஆட்சி அமைத்து ஒரு வருட காலம் கடந்து காணிகளை மக்களிடம் கையளிக்கவில்லை.

கடந்த அரசாங்கம் கையளிக்க தயாராக இருந்த காணிகளையே அவர்கள் ஆட்சிக்கு வந்து சில நாட்களில் மக்களிடம் கையளித்தனர்.

யாழ்ப்பாணம் - பலாலி வீதியை முழுமையாக திறந்து விட்டதன் ஊடாக உயர்பாதுகாப்பு வலயமாக உள்ள பலாலி காணிகளை விடுவித்தது போன்று காட்டுகின்றனர்.

பலாலி பகுதியில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் கடந்த 35 வருட காலத்திற்கு மேலாக வாடகை வீடுகளில் தங்கியுள்ளனர். அவர்களின் சொந்த இடங்கள் இன்னமும் இராணுவ கட்டுப்பாட்டில் காணப்படுகிறது. அவர்கள் தங்கள் காணிகளை விடுவிக்குமாறு தொடர்ந்து போராடி வருகின்றனர்.

பலாலி இராணுவ வைத்தியசாலையை சூழவுள்ள பகுதியில் உள்ள தனியார் காணிகளை அடாத்தாக கையகப்படுத்தி வைத்தியசாலை கட்டடங்களை இராணுவத்தினர் கட்டி வருகின்றனர்.

தற்போது போதைப்பொருள் கடத்தலை கட்டுப்படுத்த கீரிமலையில் ரேடார் அமைக்க போவதாக கூறி 2 ஏக்கர் தனியார் காணியை கடற்படை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கிறது.



ஜனாதிபதி வாக்குறுதி வழங்கியது போன்றே மக்களின் காணி மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என மேலும் தெரிவித்தனர்.

# திருகோணமலை முத்துநகர் விவசாயிகளின் விவசாய நில அபகரிப்புக்கு எதிரான போராட்டம் ஒரு மாதம் பூர்த்தி

17.10.2025

திருகோணமலை முத்து நகர் விவசாயிகள் தங்களது விவசாய நில அபகரிப்புக்கு எதிராக நேற்று (16.10.2025) 30 ஆவது நாளாக தொடர் சத்தியாக் கிரக போராட்டத்தில் ஈடுபட்டனர்.







குறித்த போராட்டம் மாவட்ட செயலகம் முன்பாக இடம் பெற்று வருகிறது. இவ்வாறான நிலையில் பிரதமர் ஹரினி அமர சூரிய வழங்கிய இரண்டாம் கட்ட வாக்குறுக்கு இன்னும் மூன்று நாட்களே எஞ்சியுள்ளதாக போராட்டக்காரர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கை துறை முக அதிகார சபையின் காணி என கூறி 352 விவசாய குடும்பங்களை வெளியேற்றி சூரிய மின் சக்தி உற்பத்திக்காக தனியார் கம்பனிகளுக்கு தாரை வார்த்துள்ளதாக தெரிவிக்கின்றனர். குறித்த பகுதியில் இரு விவசாய நீர்ப் பாசன குளங்களை மூடி சூரிய மின்சக்தி உற்பத்தி திட்டத்துக்கு வழங்கியதால் ஜீவனோபாயம் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

சாதகமான தீர்வை பெற்றுத் தராத பட்சத்தில் போராட்டம் தொடரும் எனவும் எச்சரித்துள்ளனர்.

# வடகிழக்கு மாகாணசபையும் வரதராஜப்பெருமாளும்!

**பா. அரியநேந்திரன்**

18.10.2025

1987 யூலை, 29இல் இந்திய இலங்கை உடன்பாட்டை அடுத்து புதிதாக அமைக்கப்பட்ட வடகிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் 1988 நவம்பர் 19 இல் நடத்தப்பட்டது. விடுதலைப் புலிகள் தேர்தலை பகிஷ்கரிக்குமாறு அறிவித்தது. அதில் இந்தியப்படையின் ஆதரவில் இயங்கிய ஈபிஆர்எல்எஃப் இத் தேர்தலில் வெற்றி பெற்றது. தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, புளட், ஈரோஷ் இத்தேர்தலில் பங்கேற்கவில்லை.

கிழக்கில் மட்டும் ஈபிஆர்எல்எவ்வுடன் சிறீலங்கா முஷ்லிம் காங்கிரஷ், ஐக்கியதேசிய கட்சி, ஈஎன்டிஎல்எவ் போட்டியிட்டது.

கிழக்கு மாகாணத்தில் ஈபிஆர்எல்எவ் செவ்வரத்தம் பூ சின்னத்தில் ஈஎன்டிஎல்எவ்வும் இணைந்து போட்டியிட்டு 215,230 வாக்குகளை பெற்று 17, ஆசனங்களையும், சிறீலங்கா முஷ்லிம் காங்கிரஷ் 168,038 வாக்குகளை பெற்று 17, ஆசனங்களையும், ஐக்கியதேசிய கட்சி 8,086 வாக்குகளை மெற்று 01, ஆசனத்தையும் பெற்றது, ஈஎன்டிஎல்எவ், ஈபிஆர்எல்எவ்வுடன் இணைந்து போட்டியிட்டது.

மொத்த ஆசனங்கள்: 35

வடக்கில் ஈபிஆர்எல்எவ், ஈஎன்டிஎல்எவ் இணைந்து ஈபிஆர்எல்எவ் கட்சியூடாக வேட்பு மனுக்களை தாக்கல் செய்தது வேறு எந்த கட்சிகளும் வேட்பு மனுக்களை தாக்கல் செய்யாமையால் தேர்தல் நடத்தாமலேயே ஈஎன்டிஎல்எவ் கட்சியையும் இணைத்து போட்டியிடாமையால் ஆசனங்களை பகிர்ந்து. 24 ஆசனங்கள் ஈபிஆர்எல்எவ், 12 ஆசனங்கள் ஈஎன்டிஎல்எவ் வழங்கி வடமாகாணத்தில் 36 ஆசனங்களை பெற்று வடகிழக்கில் மொத்தம் (35+36=71) 71 ஆசனங்களில் அதிகப்படியாக ஈபிஆர்எல்எவ் 41, ஆசனங்களுடன் வரதராஜப்பெருமாள் முதலமைச்சரானார்.

வரதராஜப்பெருமாள், 1988 நவம்பர் 19 தொடக்கம் 1990 மார்ச் 01 வரையும் மட்டும். அதாவது 01 வருடம், 03 மாதம், 12 நாள் மட்டுமே முதலமைச்சர் என்ற பதவியில் இருந்தார்.

1990 மார்ச் 01இல் அவர் இந்தியப்படையுடன் கப்பலில் திருகோணமலையில் இருந்து பிற்பகல் தப்பி செல்வதற்கு முன்னம் அன்று காலை 10:00 மணிக்கு அவசர அவசரமாக திருகோணமலையில் இறுதி அமர்வை கூட்டி தமிழீழத்தை பிரகடணம் செய்து உரையாற்றிவிட்டே வரதராஜப்பெருமாள் சென்றார்.

1990 மார்ச் 02, ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தனது நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி வடகிழக்கு மாகாண சபையை உடனே கலைத்து, மத்திய அரசின் நேரடி ஆட்சியைக் கொண்டு வந்தார்.

இந்தியா சென்ற வரதராஜப்பெருமாள் சிறிது காலம் மத்தியப் பிரதேச மாநிலத்தில் வாழ்ந்த பின்னர் இராஜஸ்தானில் இந்திய அரசின் பாதுகாப்பில் வாழ்ந்து வந்தார். 2009 மே 18இல் முள்ளிவாய்க்காலில் போர் மௌனித்த பின்னர் 2010 மார்ச் 29 இல், 20 வருடங்கள் கடந்த பின்னர் மீண்டும் இலங்கைக்கு வந்தார்.

இதுதான் வரதராஜப்பெருமாளின் வரலாறு.

மத்திய அரசின் கீழ் இணைந்த மாகாணசபை ஆளுநர் ஊடாக 2006 அக்டோபர் 16 வரை இணைந்த வடகிழக்கு மாகாண சபை ஆளுநரின் நிர்வாகத்தில் இயங்கியது.

2006 யூலை 14இல் ஜே வி பி இணைந்த வடகிழக்கு பிரிப்புக்கு எதிராக கொழும்பு உச்ச நீதிமன்றில் வழக்கை தாக்கல்செய்தமையால் அதன் தீர்ப்பு அவர்களுக்கு சாதகமாக 2006 அக்டோபர் 16இல் தீர்பு வழங்கப்பட்டது.

2006 அக்டோபர் 16இல் இலங்கையில் எட்டு மாகாணசபையாக வர்தமானியில் வெளியிடப்பட்ட மாகாணசபைகள் 09, மாகாணசபை என கிழக்கு மாகாணசபை தனியாகவும் வடக்கு மாகாணசபை தனியாகவும் வெளியிடப்பட்டவுடன் அதனை உறுதிப்படுத்த அவசரமாக ஜனாதிபதி மகிந்த கிழக்கு மாகாண



சபை தேர்தல் அறிவிப்பு செய்யப்பட்டு அந்த தேர்தல் 2008 மே 10இல் நடத்தப்பட்டது அதற்கு பிள்ளையானை முதலமைச்சராக ஜனாதிபதி மகிந்தவே அறிவித்தார்.

இதுதான் வடகிழக்கு மாகாணசபையின் வரலாறு.

# சிறீலங்கா ஜனாதிபதி திருகோணமலைக்கு விஜயம்; முத்து நகர், கிண்ணியா வான் எல விவசாயிகள் போராட்டம்

18.10.2025

சிறீலங்கா ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க திருகோணமலையில் உள்ள சீனக் குடா விமான நிலையத்தில் சனிக்கிழமை (18) நிகழ்வொன்றில் பங்கேற்பதற்காக வருகை தந்ததையடுத்து திருகோணமலை முத்து நகர் விவசாயிகள், கிண்ணியா வான் எல விவசாயிகள் இணைந்து நில அபகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலை மாவட்ட செயலகம் முன்பாக 32 ஆவது நாளாகவும் தொடர் சத்தியாக் கிரகப் போராட்டத்தில் ஈடுபட்ட முத்து நகர் விவசாயிகளும் ஜனாதிபதியை சந்தித்து தங்களது விவசாய நிலங்களுக்கான தீர்வை முன்வைக்க கோரி வீதிக்கு இறங்கினர்.

மக்கள் போராட்ட முண்ணனி, அகில இலங்கை விவசாய சம்மேளனம் ஆகியன இணைந்தும் விசேடமாக குறித்த கவனயீர்ப்பை மேற்கொண்டனர்.







**அடக்குமுறையாளர்கள் போராளிகளை அழிப்பதில் காட்டும் தீவிரத்தைவிட, பொதுமக்களின் ஆன்மீக உறுதியை உடைக்க வேண்டும் என்பதில்தான் அதிக அக்கறை காட்டுகின்றனர்.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# ஐந்தாவது நாளாக தொடரும் புல்மோட்டை கனிய மணல் கூட்டுத் தாபன ஊழியர்களின் போராட்டம்

18.10.2025



திருகோணமலை மாவட்டம் குச்சவெளி பிரதேச செயலக பிரிவில் புல்மோட்டை பிரதேசத்தில் அமைந்துள்ள இலங்கை கனிய மணல் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றும் 83 ஊழியர்களுக்கு கடந்த 15 மாதங்களாக சம்பளம் வழங்கப்படாமல் இருப்பதால் அவர்களது குடும்பங்களின் வாழ்க்கை மிகுந்த சிரமத்திற்குள்ளாக்கியுள்ளது. இதனால் அவர்கள் தங்களுக்கான நீதியை கோரி சனிக்கிழமை (18) ஐந்தாவது நாளாக அமைதி வழி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த பிரச்சினையை தீர்க்கும் நோக்கில், பலமுறை நிறுவன மேலதிகாரிகளிடமும், தொழிலாளர் திணைக்களத்திடமும், சம்பந்தப்பட்ட அமைச்சகத்திலும் மனுக்கள் அளித்தும் இதுவரை எந்தவிதமான பயனுள்ள நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என தெரிவித்துள்ளனர்.

இதனால் பலர் குடும்பச் செலவுகளையும், குழந்தைகளின் கல்வியையும் மேற்கொள்வதில் பெரும் சிரமத்தை எதிர்கொள்கிறார்கள்.

எனவே, ஜனாதிபதி, அமைச்சர், மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் தலையீட்டின் மூலம் உரிய அமைச்சின் ஊடாக இந்தப் பிரச்சினை விரைவாகத் தீர்க்கப்பட்டு, தங்களுக்குரிய நிலுவை சம்பளங்கள் வழங்கப்படும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அவர்கள் கேட்டுள்ளனர்.

தொடர்ந்தும் தமக்கான தீர்வுகள் கிடைக்காதவிடத்து உண்ணா நோன்புப் போராட்டத்தில் ஈடுபடவும் தயாராகிவருவதாகவும் மேலும் தெரிவித்தனர்.

# ஊடகவியலாளர் நிமலராஜனின் 25ஆம் ஆண்டு நினைவேந்தல்

18.10.2025

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜனின் 25ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் இன்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை யாழ் . ஊடக அமையத்தில், அமையத்தின் தலைவர் கு. செல்வக்குமார் தலைமையில் நடைபெற்றது.





நிமலராஜனின் திருவுரு படத்திற்கு குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் மற்றும் செயற்பாட்டாளரும் ஊடகவியலாளருமான பெடி கமகே மலர் மாலை அணிவித்தனர், தென்னிலங்கை ஊடகவியலாளர் அஜித் பொது சுடரேற்றியதை தொடர்ந்து, ஊடகவியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மலர் வணக்கம் செலுத்தினர்.

போர் சூழலில் யாழில் இருந்து ஊடகப்பணியாற்றிய மயில் வாகனம் நிமலராஜன். பி.பி.சி.யின் தமிழ் மற்றும் சிங்கள சேவை, வீரகேசரி, ராவய போன்ற ஊடகங்களில் பணியாற்றி இருந்தார்.

அந்நிலையில் 2000ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19ம் திகதி யாழ்.மாவட்டத்தில் ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்த வேளை இவரது வீட்டு வளவினுள் புகுந்த ஆயுத தாரிகள், வீட்டின் யன்னல் ஊடாக அவர் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர்.

அதன் போது அவர் எழுதிக்கொண்டு இருந்த கட்டுரை மீது வீழ்ந்தே உயிர் துறந்தார்.

கொலையாளிகள் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு நிமலராஜனை படுகொலை செய்த பின்னர், வீட்டின் மீது கைக் குண்டு தாக்குதலையும் மேற்கொண்டனர்.

அதன் போது வீட்டில் இருந்த நிலமராஜனின் தந்தை சங்கரப்பிள்ளை மயில்வாகனம், தாய் லில்லி மயில்வாகனம் மற்றும் மருமகன் ஜெகதாஸ் பிரசன்னா ஆகியோர் படுகாயமடைந்து இருந்தனர்.



இந்த படுகொலை சம்பவம் நடைபெற்று 25ஆண்டுகள் கடந்துள்ள போதிலும், இதுவரையில் குற்றவாளிகள் கண்டறியப்படவில்லை. நிமலராஜன் படுகொலைக்கு நீதி கோரி யாழ் . ஊடக அமையம் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் தொடர்ச்சியாக குரல் கொடுத்தே வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**எமது விடுதலைப் போராட்டத்தின் பளுவை அடுத்த பரம்பரை மீது சுமத்த நாம் விரும்பவில்லை, எமது கடின உழைப்பின் பயனை அவர்கள் அனுபவிக்க வேண்டும். எமது வாழ்நாளில் எமது இலட்சியம் நிறைவேறாது போகலாம் அப்படியாயின் அடுத்த தலைமுறைக்குப் போராட்டத்தை கையளிக்கும் தெளிந்த பார்வை எமக்குண்டு.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

**www.sangathamil.ca**

# 18ஆவது நாளாகவும் தொடரும் முத்துநகர் விவசாயிகளின் உண்ணா நோன்புப் போராட்டம்

19.10.2025

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜனின் 25ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று (19.10.2025) மட்டக்களப்பு காந்தி பூங்காவில் உள்ள நினைவுத்தூபியில் நினைவுகூரப்பட்டது.





மட்டு ஊடக அமையத்தின் ஏற்பாட்டில், நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து நினைவுச்சுடர் ஏற்றப்பட்டது.

இதன்போது சமூக செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் மலர் வணக்கம் செலுத்தினர்.

தொடர்ந்து அக வணக்கம் செலுத்தப்பட்டதுடன் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள், பொது நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டு வணக்கம் செலுத்தியிருந்தனர்.

# இந்திய அரசால் வல்வெட்டித்துறை படுகொலைச் சம்பவத்திற்கு இழப்பீட்டு நிதியை வழங்க கோரிக்கை

## வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு செயலாளர் ந. அனந்தராஜ்

20.10.2025

இந்திய அமைதிகாக்கும் படையினால் 1989 ஆம் ஆண்டு வல்வெட்டித்துறையில் மேற்கொள்ளப்பட்ட படுகொலை சம்பவத்தில் கொல்லப்பட்ட, காயமடைந்தவர்கள் மற்றும் சொத்திழப்புகளுக்காக 4.5 பில்லியன் இலங்கை ரூபா இழப்பீட்டினை வழங்க வேண்டும் என சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம் பரிந்துரைத்துள்ளது.

வல்வெட்டித்துறை படுகொலையின் வாக்குமூலங்கள் அறிக்கையின் நூல் வெளியீட்டு நிகழ்வும் யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தில் செயலாளர் இரா.மயூதரன் தலைமையில் நேற்று (19) காலை 10.00 மணிக்கு இடம்பெற்றது.

வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவின் அனுசரணையுடன் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்ட அமைப்பினரால் தயாரிக்கப்பட்டுள்ள வல்வெட்டித்துறை படுகொலை சம்பவத்தின் போது நிகழ்ந்த இழப்புகளுக்கான இழப்பீட்டு பரிந்துரை அறிக்கையினை வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு செயலாளர் ந. அனந்தராஜ் வெளியிட்டு வைத்திருந்தார்.

இந்த இழப்பீட்டு பரிந்துரை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, உயிர் இழப்பிற்கான இழப்பீடுகளை மதிப்பீடு செய்வதற்கு, இலங்கை அரசாங்கத்தினால் 2022 இல் மேற்கொள்ளப்பட்ட முடிவினை உதாரணமாக பின்பற்றி, ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் உயிர் இழப்பிற்கு 10 மில்லியன் இலங்கை ரூபாய்களை இழப்பீடாக வழங்கியதன் அடிப்படையில் 1989 ஆம் ஆண்டு நிலவரத்தின்படி 450 ஆயிரம் இலங்கை ரூபாய்கள் ஆகும்.

அதனடிப்படையில் வல்வெட்டித்துறை படுகொலை சம்பவத்தின் போது கொல்லப்பட்ட 66 பேருக்கும் 29.75 மில்லியன் (29,750,574.00) ரூபா இழப்பீடாக மதிப்பிடப்பட்டுள்ளது.

காயமடைந்த 36 பேருக்கான இழப்பீடாக 1.38 மில்லியன் (1,380,025.00) ரூபாவும், அழிக்கப்பட்ட சொத்துகளுக்கான இழப்பீடாக 57.59 மில்லியன் (57,597,068.00) ரூபாய்களுமாக மொத்தமாக 88.72 மில்லியன் (88,727,667.00) ரூபாய்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேற்குறித்த தொகைக்கு 1989 ஆகஸ்ட் முதல் 2025 மே மாதம் வரையான காலத்திற்கான வட்டியாக 4.43 பில்லியன் (4,433,174,088.00) ரூபாய் சேர்த்து 4.5 பில்லியன் (4,521,901,754.00) ரூபாய் தொகையினை இழப்பீடாக வழங்க வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.



# உடுப்பிட்டி மகளிர் கல்லூரி வளாகத்தில் மனிதப் புதைகுழி

## வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு செயலாளர் ந. அனந்தராஜ்

20.10.2025

வல்வைப் படுகொலை இழப்பீடு தொடர்பான ITJP சர்வதேச உண்மைகள் மற்றும் நீதிக்கான செயற்றிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று (19) இடம்பெற்ற வல்வைப் படுகொலை இழப்பீடு பரிந்துரையை சர்வதேச உண்மைகள் மற்றும் நீதிக்கான செயற்றிட்ட அறிக்கையை வெளியீடு செய்தது.

இதன் போது இந்திய இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட 10 மாணவர்கள் சித்திரவதை செய்து படுகொலை செய்யப்பட்ட நிலையில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி வளாகத்தில் புதைக்கப்பட்டுள்ளதாக கண்கண்ட சாட்சியின் அடிப்படையில் குறித்த மனிதப் புதைகுழி தொடர்பில் ITJP சர்வதேச உண்மைகள் மற்றும் நீதிக்கான செயற்றிட்ட வல்வைப் படுகொலை இழப்பீடு பரிந்துரை அறிக்கையில் வெளிப்படுத்தியுள்ளது.

குறித்த மனிதப் புதைகுழியை ஸ்கான் பரிசோதனை மேற்கொண்டு அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க அனைவரும் ஒத்துழைப்பு தர வேண்டுமென கண்கண்ட சாட்சியும் வல்வைப் படுகொலை ஆவணப் புத்தகத்தை ஆக்கியவருமான ந.அனந்தராஜ் யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தில் வைத்து ஊடகங்களினூடாக கோரிக்கை விடுத்துள்ளார்.




**நாம் தனித்துநின்று இந்தியத் தலையீட்டை எதிர்த்தோம், நாம் தனித்துநின்று உலகின் மிகப் பெரிய இராணுவத்தை எதிர்த்தோம், நாம் தனித்துநின்று எமது தேசிய சுதந்திரத்தீயை அணையவிடாது போராடினோம், இறுதியில் நாம் வெற்றிகொண்டோம். இந்த வெற்றிக்கு காரணம் எமது மனந்தளராத உறுதி, சாவுக்கு அஞ்சாத எமது வீரம், சத்தியத்திலும் தர்மத்திலும் எமக்குள்ள நம்பிக்கை.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# இந்தியச் சாத்தானியப் படைகள் நிகழ்த்திய யாழ். வைத்தியசாலைப் படுகொலை!

21.10.2025

1987-ஆம் ஆண்டு ஒக்ரோபர் 21ஆம், 22ஆம் திகதிகளில் இந்தியப்படைகள் யாழ் வைத்தியசாலையில் படுகொலை நடத்தினர். கேணல் பிரார் என்ற இந்திய அதிகாரியின் மேற்பார்வையில் இப்படுகொலை நடந்தது. இதில் ஊழியர்கள், நோயாளிகள் என்று 68 பேர் கொல்லப்பட்டிருந்தனர்.



யாழ். நகரத்தின் கிழக்குப் புறமாக நகரில் அமைந்துள்ள யாழ். போதனா வைத்தியசாலை யாழ் குடாநாட்டில் வாழ்கின்ற எட்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களிற்கு மட்டுமன்றி அயல் மாவட்டங்களான கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற இடங்களிற்கும் பிரதான வைத்தியசாலையாக உள்ளது. தினசரி ஆயிரம் பேர் வரையில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதோடு, பல கட்டட வசதிகளுடன், சத்திரசிகிச்சைப் பிரிவு, அவசர சத்திரசிகிச்சைப் பிரிவு எனப் பல பிரிவுகளுடனும் 1970களிலிருந்து இயங்கி வருகிறது.



1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் பத்தாம் நாள் இந்தியப் படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தம் தொடங்கியதிலிருந்து தொடர்ச்சியாக நடைபெற்ற போரின் மூலம் யாழ்நகரைக் கைப்பற்றும் முயற்சியில் இந்திய இராணுவத்தினர் ஈடுபட்டார்கள். யாழ்ப்பாணக் கோட்டையில் நிலைகொண்டிருந்த இந்திய இராணுவத்தினர் யாழ் நகரப்பகுதி மீது பெருமளவு எறிகணைத் தாக்குதல், விமானத் தாக்குதலை மேற்கொண்டிருந்தபோதும் யாழ். வைத்தியசாலையில் வைத்தியர்கள், ஊழியர்கள், தாதிமார் தமது உயிரையும் பொருட்படுத்தாமல் மக்களுக்கான வைத்திய சேவையை வழங்கிப் பல உயிர்களைக் காப்பாற்றிக் கொண்டிருந்தார்கள். 1987 ஒக்டோபர் இருபத்தோராம் திகதி இந்தியப்படையினர் எறிகணை வீச்சு, விமானத் தாக்குதல்களை நடத்தியவாறு யாழ். நகரை நோக்கி முன்னேறினார்கள். யாழ். வைத்தியசாலையில் பணிகளில் ஈடுபட்ட வைத்தியர்கள், ஊழியர்கள், சிகிச்சை பெற வந்த நோயாளர்கள் போன்றோர் பாதுகாப்பிற்காக,வைத்தியசாலை எக்ஸ்றே பிரிவு அலுவலகம் அமைந்துள்ள இடத்தில் பாதுகாப்பு தேடினார்கள்.

பிற்பகல் 3.00 மணியளவில் யாழ். நகரப் பகுதிக்குள் இந்திய இராணுவம் உள்நுழைந்தது. பின்னர் 4.30 மணியளவில் யாழ். போதனா வைத்திய சாலைக்குள் நுழைந்த இந்திய இராணுவம் அலுவலகப் பகுதி யில் வைத்தியசாலைச் சீருடையுடன் இருந்த ஊழியர்கள், நோயாளர் வண்டில், கட்டில், பாய், வாங்குகளிற் படுத்திருந்த நோயாளர்கள் என எல்லோரையும் சுட்டுப் படுகொலை செய்தது.




**1987ம் ஆண்டு ஒக்ரோபர் 21,22ம் திகதிகளில் யாழ்ப்பாண வைத்தியசாலையில் கடமையிலிருந்த போது இந்திய அமைதிப் படையால் படுகொலை செய்யப்பட்டவர்கள்**



இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர் கூறுகையில் :-

1987 ஒக்ரோபர் இருபத்தோராம் திகதி மாலை 4.30 மணியளவில் வைத்தியசாலையினுள் வந்த இந்திய இராணுவத்தினர் மறுநாள் காலை 10.00 மணி வரை வைத்தியசாலையில் மக்கள் மீது தாக்குதலை நடத்தினார்கள். தாக்குதலிற் காயப்பட்டவர்கள் சத்தமிடும் போது அவர்கள் மீது கைக்குண்டினை எறிந்ததுடன், துப்பாகியாலும் சுட்டார்கள். மறுநாள் காலை 6.00 - 7.00 மணிக்கிடையில் வைத்தியசாலையின் இருபத்தாறாவது நோயாளர் விடுதிப்பக்க மிருந்து சம்பவ இடத்திற்கு வந்த வைத்தியர் சிவபாதசுந்தரம் அவர்களும், இரண்டு தாதியினரும் இந்தியச் இராணுவத்தினருடன் கதைத்து எஞ்சியிருக்கும் பொது மக்களைக் காப்பாற்ற முயற்சித்தார்கள். ஆனால் இராணுவத்தினர் ஓடிச்சென்று துப்பாக்கியினை எடுத்து வைத்தியரையும் கூடச்சென்றவர்களையும் சுட்டதில் அவர்கள் அனைவரும் உயிரிழந்தார்கள். காலை 10.00 மணியளவில் ஏனைய வைத்தியர்கள் எடுத்த முயற்சியினால் சம்பவத்தில் காயமடைந்து உயிருடனிருந்தவர்கள் காப்பாற்றப்பட்டார்கள். சம்பவத்தில் உயிரிழந்த மூன்று வைத்தியர்கள், இரண்டு தாதிமார்கள், மேற்பார்வையாளர், ஊழியர்கள் உட்பட இருபத்தொரு மருத்துவமனை பணியாளர்களும், நோயளார் விடுதிகளிற் சிகிச்சை பெற்றுவந்த நாற்பத்தேழு நோயாளர்களு மாகமொத்தம் அறுபத் தெட்டுப் பேர் உயிரிழந் தார்கள். உயிரிழந்த அனைவரது உடல்களையும் வைத்தியசாலை பின்வாசற் பக்கமுள்ள பிண அறைக்கு அருகிற் போட்டு இந்தியப்படையினர் எரியூட்டினர் எனத் தெரிவித்தார்.

1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் இருபத்தோராம், இருபத்திரண்டாம் திகதியில் கடமையின்பால் உயிர்நீத்த வைத்தியர்கள் உட்பட இருபத்தொரு ஊழியர்களையும் அவர்களுடன் உயிரிழந்த நோயாளர்கள் நாற்பத்தேழு பேரையும் யாழ். மருத்துவமனை ஒவ்வொரு வருடமும் நினைவுகூர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது







**www.sangathamil.ca**

# இந்திய அரச படையால் யாழ். போதனா வைத்தியசாலைப் படுகொலையின் 38ஆவது ஆண்டு நினைவேந்தல்

22.10.2025

1987ஆம் ஆண்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம் பெற்ற படுகொலை சம்பவத்தின் 38ஆவது ஆண்டு நினை வேந்தல் நிகழ்வுகள் நேற்று (21) முன்னெடுக்கப்பட்டது.





1987ஆம் ஆண்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் இந்திய அமைதிப்படையினரின் தாக்குதலில் வைத்தியசாலை பணி யாளர்கள் 21 பேர் உள்ளிட்ட 68 பேர் படுகொலை செய்யப்பட் டதுடன் பலர் காயமடைந்திருந்தனர்.

இதனை நினைவுகூரும் வகையில் நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வின் போது வைத்தியசாலையின் பணிப்பாளர், வைத்தியர் த.சத்தியமூர்த்தி உள்ளிட்ட வைத்தியசாலை சமூகத்தினர் மற்றும் படுகொலை செய்யப்பட்டவர்களின் உற வினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது உயிரிழந்தவர்களின் உருவப்படங்களுக்கு நினைவுச்சுடர் ஏற்றப்பட்டதுடன், மலர்மாலை அணிவித்து மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

பின்னர் நோயாளிகளுக்கு சக்கர நாற்காலிகளும் வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.









# உரிமைகளைப்பெற எமது இளையோர் 'நச்சுக் குப்பி' அணிந்துகொண்டு போராடினர்; உயிர் அச்சுறுத்தல்களுக்கும் மிரட்டல்களுக்கும் அஞ்சேன்!

## வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

21.10.2025

தமிழர்களின் உரிமைகளைப் பெறுவதற்காக கடந்தகாலத்தில் தமிழ் இளைஞர் மற்றும் யுவதிகள் 'நச்சுக் குப்பி' அணிந்து கொண்டு போராடியதாகச் சுட்டிக்காட்டிய வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், தமக்கு விடுக்கப்படுகின்ற இவ்வாறான மிரட்டல்களுக்கும், உயிர் அச்சுறுத்தல்களுக்கும் ஒருபோதும் அஞ்சப்போவதில்லையெனவும் தெரிவித்துள்ளார்.



வவுனியா வடக்கு பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட தமிழர்களின் பூர்வீகபகுதியான திரிவச்சகுளம் மற்றும் அதனை அண்டியபகுதிகள் பெரும்பான்மை இனத்தவர்களால் அத்துமீறி ஆக்கிரமிக்கப்படுதை  வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தொடர்ச்சியாக எதிர்த்து வருகின்றார்.

இந்நிலையில் குறித்த திரிவைச்சகுளம் பகுதியில் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை ஆக்கிரமிப்பதுடன், அதனை அண்டியபகுதிகளில் பாரிய அடர்வனங்களை அழித்து சட்டவிரோத ஆக்கிரமிப்பு செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்ற பெரும்பான்மை இனத்தைச்சார்ந்த ஒருவர் அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அவர்களது பெயரைக்குறிப்பிட்டு உயிர் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இத்தகைய சூழலில் அண்மையில் தமிழ் அரசுக் கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடனான கலந்துரையாடல் ஒன்றில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போது, குறித்த அச்சுறுத்தல் சம்பவத்தை மேற்கோள்காட்டி மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்திருந்தார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

நாங்கள் மக்களுக்கான சேவையில் முழுமையாக செயற்பட்டு வருகின்றோம். அந்தப் பணியைத்தான் கட்சி எமக்குத் தந்துள்ளது.

எனவேதான் எமது மக்களுடைய பிரச்சினைகளைக் கேட்டறிவதற்காக நாம் ஆழ்கடலுக்கும் செல்கின்றோம். இதுதவிர எமது வயல்கள், ஆறுகள், குளங்கள், காடுகள், கிராமங்கள் என அனைத்து இடங்களுக்கும் சென்று எமது மக்களுடைய குறைபாடுகள் மற்றும் சிக்கல் நிலைமைகள் தொடர்பில் கேட்டறிந்து அவற்றைத் தீர்த்துவைப்பதற்கான முழு முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றோம்.

அந்த வகையிலேதான் வவுனியா வடக்கு பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட தமிழர்களின் பூர்வீக திரிவச்சகுளம் பெரும்பான்மையினத்தவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமை மற்றும் அதனை அண்டிய பாரிய அடர்வனங்கள் பெரும்பான்மை இனத்தவர்களால் சட்டவிரோதமான முறையில் அழிக்கப்பட்டு அபகரிப்புச் செய்யப்படுகின்றமை தொடர்பான விவகாரத்தில் தலையீடுசெய்து, அந்த அபகரிப்பு முயற்சிகளைத் தடுக்கின்ற விதமாகச் செயற்பட்டிருந்தேன்.

இந்நிலையில் அங்கு எமது தமிழ் மக்களின் பூர்வீக திரிவைச்சகுளம் வயல் நிலங்களை ஆக்கிரமித்து, அதனை அண்டிய பகுதியில் சட்டவிரோத காடழிப்பினை மேற்கொள்ளும் பெரும்பான்மை இனத்தைச் சார்ந்த ஒருவர் எனது பெயரைக்குறிப்பிட்டு எனக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் கருத்துக்களைக் கூறியதாக சிலர் என்னிடம் கூறினர். அத்தோடு குறித்த பெரும்பான்மை இனத்தவர் எனது பெயரைக்குறிப்பிட்டு உயிர் அச்சுறுத்தல் விடுக்கின்ற காணொளிகளையும் என்னிடம் சிலர் காண்பித்துள்ளனர்.

இவ்வாறு உயிர் அச்சுறுத்தல் விடுக்கின்ற குறித்த பெரும்பான்மை இனத்தவர் என்னைப்பற்றி முழுமையாக அறிந்து கொள்ளாமல் அவ்வாறு கருத்துவெளியிட்டிருக்கின்றார் என நினைக்கின்றேன்.

நாம் செல்லவேண்டிய அனைத்து இடங்களுக்கும் செல்வோம். எவரும் இவ்வாறு உயிர் அச்சுறுத்தல்களை விடுக்கின்ற விதமாகச் செயற்பட்டு எம்மைக் கட்டுப்படுத்த முடியாது.

இந்த இடங்கள் அனைத்தும் எமது தமிழ்மக்களுடைய பூர்வீக பகுதிகளாகும். இந்த இடங்கள் பெரும்பான்மை இனத்தவர்களுக்குரிய இடங்களில்லை. எனவே வடக்கு, கிழக்கு பூர்வீக தமிழர்தாயகம் என்கின்ற வகையில் எமது செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுத்துக்கொண்டேயிருப்போம். நாம் இங்கு வெறுமனே வீரவசனங்களைப் பேசிக்கொண்டிருக்கவில்லை. தொடர்ந்தும் ஓய்வின்றி மக்களுக்கான சேவைகளை செய்துகொண்டிருக்கின்றோம்.

குறிப்பாக நான் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்றேன். எனவே மக்கள் எனக்களித்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி என்னால் இயலுமான முழுமையான சேவையை மக்களுக்கு வழங்கிவருகின்றேன்.

இவ்வாறிருக்க  இவ்வாறான உயிர் அச்சுறுத்தல்களுக்கும், மிரட்டல்களுக்கும் நாம் எதற்காகப் பயப்படவேண்டும்.

கடந்தகாலத்தில் 'சைனட்' குப்பிகளுடனேயே எமது இளைஞர்களும், யுவதிகளும் எமது உரிமைக்காகப் போராடினார்கள். அவ்வாறிருக்கும்போது  எமது உரிமைகளைப் பெறுவதற்காக நாம் ஏன் பயப்படவேண்டும்.

இந்நிலையில் தற்போதும் எமது மக்களின் உரிமைக்காக நாம் ஜனநாயக முறையில் அரசியல் ரீதியாக போராடும்போது எம் மீது இவ்வாறாக உயிர் அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன. அதற்கு நான் பயப்படப்போவதில்லை. எமது மக்களின் உரிமைக்காக ஜனநாயக வழியில் தொடர்ந்தும் போராடுவதுடன், எமது மக்களின் நியாயமான கோரிக்கைகளைக் கேட்டுக் கொண்டேயிருப்பேன்.

ஏன் எனில் எமது மக்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து, இந்த நாட்டின் உயரிய சபையான பாராளுமன்றிற்கு என்னை அனுப்பிவைத்துள்ளார்கள். ஆகவேதான் பாராளுமன்றில் எனது மக்களுக்காக பேசிக்கொண்டிருக்கின்றேன். தொடர்ந்தும் எனது மக்களுக்காக பாராளுமன்றில் பேசுவேன். எமது மக்களின் நியாயமான கோரிக்கைகளை உரிய இடங்களுக்கு கொண்டு சென்று எமது மக்களின் கோரிக்கைகளையும், தேவைப்பாடுகளையும் நிறைவேற்றுவதுடன், எமது மக்களின் உரிமைக்காகவும் தொடர்ந்தும் குரல்கொடுப்பேன்.

இவ்வாறான உயிர் அச்சுறுத்தல்களுக்கு நாம் ஒருபோதும் அஞ்சப்போவதில்லை – என்றார்.

# கடல் அரிப்பினால் பாதிப்புக்குள்ளாகும் அம்பாறை மாவட்ட திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவு!

21.10.2025

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவு சுமார் 10 ஆயிரம் குடும்பங்களில்  35 ஆயிரம் சனத்தொகையை கொண்ட ஒரு பிரதேம். தாண்டியடி முதல் தம்பட்டை வரை வரையுள்ள 22 கிராம சேவையாளர் பிரிவுகளில் 11 பிரிவுகள் கடலை அண்டிய கரையோர பிரதேசமாகும். அதில் சுமார் 7000 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

கடந்த ஐந்து வருட காலத்திலே கடல் அரிப்பினால் இப்பிரதேசம் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறது. அங்கு பாடசாலைகள் சமய நிறுவனங்கள் மற்றும் வைத்தியசாலை என்பன அமைந்திருக்கின்றன.

இரண்டு புறமும் அதிகமான அரிப்புகளை சந்தித்த இந்த கிராமம் தற்போது முழுமையாக கடந்த மூன்று வருட காலத்தில் கரையோரத்தில் இருந்த பாதை அழிக்கப்பட்டு மீனவர் கட்டிடம் குருகுலம் மற்றும் சிறுவர் இல்ல கட்டிடங்கள் முழுமையாக சேதமாக்கப்பட்டது.

சித்திர வேலாயுத சுவாமி ஆலய முன்றலில் பாரிய அரிப்பு ஏற்பட்டு வீதி தொடக்கம் வாடிகள் தென்னைமரங்கள் கிணறுகள் கடலுக்குள் சங்கமமாகி உள்வாங்கப் பட்டிருக்கின்றன.

இதனைத் தொடர்ந்து பல்வேறு அதிகாரிகள் மற்றும் பிரதேச செயலகம் சமய நிறுவனங்கள் ஆலயங்கள் மற்றும் ஏனைய பொது அமைப்புகள் இணைந்து இதற்கு பாரியளவு நடவடிக்கைகளை சமூக ஊடகங்கள் ஊடாகவும் பத்திரிகை செய்திகளுடன் காண்பித்து நடவடிக்கைகளுக்காக கடும் முயற்சி எடுத்தன.





ஆனால் இந்த திருக்கோவில் ஆலயம் முன்பாக  50 தொடக்கம் 75 மீட்டர் கூட இல்லாத ஒரு கல்லணையைத் தவிர வேறு எந்த ஒரு சம்பவங்களும் நடைபெறவில்லை.

இதனால் சமூக ஊடகங்கள் அரச நிறுவனங்கள் ஓய்ந்திருக்கின்றன.

அதேவேளை அண்மை கிராமங்கள் இதே காலத்தில் பாதிக்கப்படுகிற பொழுது அதாவது அட்டாளைச்சேனை, ஒலுவில், நிந்தவூர், சாய்ந்தமருது போன்ற பிரதேசங்களில் பல கோடி ரூபாய் செலவில் அணைகள் மற்றும் பல வேலைத் திட்டங்கள் செய்யப்பட்டுள்ளன. வரவேற்கிறோம்.

ஆனால் தமிழ் பிரதேசங்கள் கடந்த காலங்களைப்போல தற்காலத்திலும் புறக்கணிக்கப்பட்டு வருகிறது.

2025 ஆம் ஆண்டில் இப்பொழுது சுமார் மூன்று மீட்டர் நீளம் அளவிலே கடலில் உள்வாங்கப்பட்டு பல மலசல கூடங்கள் கிணறுகள் உள்வாங்கப்பட்டுள்ளன.

இங்குள்ள நிறுவனங்கள் அமைப்புகள் திணைக்களங்கள் அதிக அக்கறையோடு துரிதமாக செயற்பட்டு இந்த மக்களையும் இந்த பிரதேசத்தையும் வாழ்வாதாரத்தையும் பாதுகாக்குமாறு வினயமாக வேண்டிக்கொண்டிருக்கின்றோம் கடந்த ஐந்து ஆண்டுகளில் பல முயற்சிகள் எடுத்தும் பலனளிக்காத நிலையில் அங்குள்ள ஓய்வு நிலை கிராம சேவை நிருவாக உத்தியோகத்தரும் திருநாவுக்கரசு நாயனார் குருகுல பணிப்பாளரும் பிரபல சமூக செயற்பாட்டாளருமான கண்ணன் என அழைக்கப்படும் கண.இராசரெத்தினம் விரக்தியுடன் தனது உள்ளக் குமறலை ஊடகங்களுக்கு தெரியப்படுத்தினார்.









# யாழ். வடமராட்சி கிழக்கு மணல்காட்டில் 300 ஏக்கர் காணி சிங்களவர் அபகரிப்பு முயற்சி மக்களால் முறியடிப்பு!

22.10.2025

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு மணல்காடு கிராமத்தில் முந்நூறு ஏக்கர் காணி சிங்களவர் அபகரிப்பு முயற்சி இன்று மணற்காடு மக்களால் முறியடிக்கப்பட்டது.





சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இன்றைய நாள் காலை 11 மணியளவில் வாகனம் ஒன்றில் வந்த சிங்கள மொழி பேசுபவர்கள் தனியார் காணிகள் உட்பட அரச காணிகள் மற்றும் சமூக காடாக பிரகடனப்படுத்தப்பட்ட சவுக்குமரக்காடு உட்பட 300 ஏக்கர் காணியை கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் அனுசரணையுடன் அபகரிப்பதற்கும், நில அளவை செய்வதற்கும் முற்பட்டுள்ளனர்.

அங்கு காணி அளவீடு செய்வதனை அவதானித்த கிராம மக்கள் உடனடியாக அவ்விடத்திற்கு சென்று காணியை அளவீடு செய்ய விடாது தடுத்துள்ளனர். குறித்த சிங்கள மொழி பேசுபவர்கள் மக்களை மிரட்டும் தொனியிலும் செயற்பட்டுள்ள நிலையிலும் மக்களின் கடும் எதிர்ப்பினால் அங்கிருந்து வெளியேறி வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்திற்கு சென்று அங்கிருந்து மீண்டும் அளவீடு செய்யும் நோக்கில் மணற்காடு நோக்கி சென்றுகொண்டிருந்த நிலையில் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கு தயாராக நின்றதை அறிந்திருந்தவர்கள் செம்பியன்பற்று பிரதேசத்திலிருந்து திரும்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த கிராம மக்கள்,

தம்மில் பலருக்கு குடியிருக்கவே காணிகள் இல்லாத நிலை உள்ளதாகவும், இந்நிலையில் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளரால் வழங்கப்பட்டது. தாம் எதிர்ப்பதாகவும் தெரிவித்ததுடன் ஒருபோதும் இவ்விடயத்தை அனுமதிக்கப் போவதில்லை என்றும் தெரிவித்தனர்.





# பிரான்சிலிருந்து துவிச்சக்கர வண்டியில் 10 ஆயிரம் கிலோ மீற்றர் பயணம் செய்து யாழ். நல்லூர் வந்தடைந்த சூரன்!

22.10.2025

பிரான்சில் இருந்து பல்வேறு நாடுகளுக்கு துவிச்சக்கர வண்டியில் பயணம் செய்து , சுமார் 10 ஆயிரம் கிலோ மீற்றர் தூரத்தை துவிச்சக்கர வண்டியில் கடந்து புதன்கிழமை (22) சூரன் என்ற இளைஞன் யாழ். நல்லூரை வந்தடைந்துள்ளார்.

யாழ்ப்பாணம் நல்லூரை பூர்வீகமாகக் கொண்ட 28 வயதுடைய சூரன் என்ற இளைஞன் இலங்கையின் மகத்துவத்தை உலகுக்கு எடுத்துச் சொல்லும் ஒரு பொறிமுறையாகவே இந்த துவிச்சக்கர வண்டி பயணத்தை முன்னெடுத்து யாழ்ப்பாணத்தை வந்தடைந்ததாக தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களை சந்தித்து தனது பயணம் குறித்து மேலும் தெரிவிக்கையில் ,

“நான் பாரிஸில் இருந்து கடந்த செப்டம்பர் 01ஆம் திகதி பயணத்தை ஆரம்பித்து, பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்திரியா, ஸ்லோவாக்கியா, ஹங்கேரி, செர்பியா, பல்கேரியா, துருக்கி, ஜார்ஜியா, கஜகஸ்தான், உஸ்பெகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் இந்தியா போன்ற பல நாடுகள் வழியாக சுமார் 10 ஆயிரம் கிலோ மீற்றர் தூரத்தை துவிச்சக்கர வண்டியில் பயணித்து இன்று எனது பூர்வீக இடமான நல்லூரை வந்த்டைத்தேன்.

யாழ்ப்பாணம் தனது பெற்றோரின் சொந்த ஊர் என்பதால் எனது பயணத்தின் இறுதி இலக்காக யாழ்ப்பாணத்தின் நல்லூர் கோயிலைத் தேர்ந்தெடுத்திருந்தேன்.

அத்துடன் இலங்கை ஒரு நாடு மட்டுமல்ல, என் பூர்வீகத்துடன் தொடர்புபட்ட உன்னத உணர்வு. எனது நோக்கம் தனது குடம்பத்துடன் மீண்டும் இணைவது மட்டுமல்லாமல்ல யாழ்ப்பாணத்தின் கலாசார முக்கியத்துவத்தை உலகிற்கு வெளிப்படுத்துவதும் ஆகும்.

மேலும் யாழ்ப்பாண தீபகற்பத்தில் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கும், பிராந்தியத்துடன் வலுவான உணர்வு மற்றும் கலாசார உறவுகளைப் பேணுகின்ற உலகளாவிய தமிழ் புலம்பெயர்ந்த சமூகத்தை ஊக்குவிப்பதற்கும் ஒரு மதிப்புமிக்க வாய்ப்பை உருவாக்குவதுமாகும்.

நான் பாகிஸ்தானுக்கும் சென்று வர முயற்சித்தேன். ஆனால் அந்நாடு அனுமதி மறுத்திருந்த்து.

அதன்பின் இந்தியா சென்று நாகப்பட்டினத்தில் இருந்து கப்பல் மூலம் காங்கேசன்துறையை வந்தடைந்து எனது இறுதி நல்லூரை வந்தடைந்துள்ளேன்

இங்கு எனக்கு சிறப்பான வரவேற்பு கிடைக்கப்பெற்றது.



அத்துடன் நான் இந்த பயணத்தில் கரடுமுரடன சவால்களை எதிர்கொண்டாலும் அந்த நாடுகளின் அரசுகளும் மக்களும் எனக்கு மிகுந்த வரவேற்பையும் ஒத்துழைப்புகளையும் தந்திருந்தனர்

அவர்களுக்கு இந்த சந்தர்ப்பத்தில் நன்றிகளை கூறுகின்றேன் என தெரிவித்திருந்தார்.

அதேநேரம் சுமார் 40 வருடங்களுகு முன்னர் பெற்றோர் பிரான்சில் குடியேறிய நிலையில் சூரானின் சரளமாக தமிழில் தனது உணர்வுகளை பகிர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

**இராணுவ ஆதிக்கத்திற்கும் அழுத்தத்திற்கும் புலிகள் இயக்கம் என்றுமே விட்டுக்கொடுத்ததில்லை கொண்ட கொள்கையில் நாம் என்றுமே வளைந்து கொடுத்ததில்லை.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக் கட்சியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் சிறீலங்காப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில் விசாரணை

22.10.2025

சிறீலங்காவின் தலைநகர் கொழும்பில் உள்ள பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் பணியகத்திற்கு வாக்குமூலம் ஒன்றை பெறுவதற்கு வரவழைக்கப்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக் கட்சியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் இன்று புதன்கிழமை (22) ஆஜராகி 5 மணித்தியாலங்கள் வாக்குமூலம் அளித்த பின்னர் வெளியேறியுள்ளார்.



மட்டக்களப்பைச் சேர்ந்த கட்சியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் வீட்டிற்கு கடந்த 18ஆம் திகதி சென்ற பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினர், முகநூலில் கட்சியின் தலைவர், விடுதலைப் புலிகளின் தலைவர் ஆகிய இருவரும் ஒன்றாக இருந்த புகைப் படத்தை முகநூலில் பதிவேற்றியதாகவும் அது தொடர்பான விசாரணைக்கு கொழும்புக்கு வருமாறும் கடிதத்தை வழங்கினர்.

இந்நிலையில் கொழும்பில் உள்ள பயங்கரவாத தடுப்பு பிரிவின் பணியகத்துக்கு இன்று காலை சென்ற அவரிடம் சுமார் 5 மணித்தியாலங்களுக்கு மேலாக விசாரணை இடம் பெற்றதாகவும் வாக்குமூலத்தை வழங்கிய பின்னர் அங்கிருந்து மாலை 3 மணியளவில் வெளியேறியுள்ளதாக தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.




# திருகோணமலை முத்துநகர் விவசாயிகளின் போராட்டம் 38ஆவது நாளாகத் தொடர்கின்றது…!

24.10.2025

திருகோணமலை - முத்துநகர் விவசாயிகள் கனமழையிலும் இன்று (24) 38 ஆவது நாளாக தொடர் உணவுத் தவிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த விவசாயிகள் தங்களது விவசாய நிலம், சூரியமின் சக்தி உற்பத்திக்கு வழங்கப்பட்டதையடுத்து, அதனை மீள பெற்றுத் தரக்கோரி உணவுத் தவிப்புப் போராட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றனர்.

திருகோணமலை மாவட்ட செயலகத்திற்கு முன்பாக குறித்த போராட்டம் இடம்பெற்று வருகிறது.

மழை காலங்களில் நனைந்து போராடுவதை நடப்பு கால அரசாங்கம் இரசிக்கிறதா? எங்களுக்கான தீர்வை இப்படி தான் தருவோம் என்பதை எழுத்து மூலமாக அறிவித்தால் என்ன? இதற்கு முன்னர் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் அவ்வளவு அதிகாரிகளுக்குள்ளும் சொல்லப்படும் விடயங்கள் சாத்தியமில்லை. அரசாங்கத்தை நம்பியே இங்கு மழையில் நனைந்து தீர்வு கேட்கிறோம்.

எமது கஷ்டத்தை உணருங்கள் ஜனாதிபதி கூறுகிறார். ஓடும் தொடருந்தில் அதே நிலையில் கைக்குழந்தையுடன் பெற்றோர்கள் வறுமையில் வாடுகின்றனர். அரசியலுக்காக அல்ல விவசாய பட்டியலை உரிய திணைக்களத்தில் பெற்று தீர்வினை பெற்றுத்தருவீர்கள் என காத்திருக்கிறோம் என கோரி



போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

# இந்திய இராணுவத்தின் கொக்குவில் இந்துக்கல்லூரி 38ஆம் ஆண்டு படுகொலையின் நினைவேந்தல்

24.10.2025

யாழ்ப்பாணம் கொக்குவில் இந்து கல்லூரியில் தஞ்சம் அடைந்திருந்த பொது மக்கள் மீது இந்திய இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 50 பேர் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களின் 38ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை கொக்குவில் இந்து கல்லூரி நுழைவாயிலில் முன்பாக இடம்பெற்றது.







நிகழ்வில் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக பொதுச்சுடர் ஏற்றப்பட்டு, அகவணக்கம் செலுத்தி அதனைத் தொடர்ந்து மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

1987 ஒக்டோபர் 11 ஆம் திகதி மற்றும் 12 ஆம் திகதிகளில் கொக்குவில் பிரம்படி பகுதிகளில் நடைபெற்ற படுகொலைகளை தொடர்ந்து கொக்குவில் இந்துக் கல்லூரியில் தஞ்சம் அடைந்திருந்த பொதுமக்கள் மீது இந்திய இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில், 26 பொதுமக்கள், படுகொலை செய்யப்பட்டனர்.



www.sangathamil.ca

# கொடிகாமத்தில் நின்ற உழவு இயந்திரத்தின் மீது பொலிசார் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள்

## படுகாயமடைந்த இளைஞனின் உறவுகள் குற்றச்சாட்டு

25.10.2025

கொடிகாமத்தில் கிணறு வெட்டிய மண்ணை, வெள்ளம் தேங்கும் இடத்தில் கொட்டிக்கொண்டிருந்த இளைஞன் மீதே பொலிசார் துப்பாக்கி சூடு நடாத்தியதாக இளைஞனின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.



அதேவேளை இளைஞனின் தந்தை ஒரு மாத காலத்திற்கு முன்பாக நோய் வாய்ப்பட்டு இறந்ததாகவும், இளைஞனே உழைத்து தனது குடும்பத்தினரை பார்த்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.



கொடிகாமம் பகுதியில் நேற்றைய நாள் வெள்ளிக்கிழமை இரவு சிறீலங்காப் பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில், அப்பகுதியை சேர்ந்த மாணிக்கவாசகர் மதுசன் (வயது 18) என்ற இளைஞரே படுகாயமடைந்து, ஆபத்தான நிலையில் , யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

குறித்த சம்பவம் தொடர்பில், படுகாயமடைந்த இளைஞனின் உறவினர்கள் தெரிவிக்கையில்,

அப்பகுதியில் கிணறு ஒன்று தோண்டப்பட்டு வருவதாகவும் ,



அங்கு சேர்ந்த மண்ணை, அருகில் உள்ள கடை ஒன்றின் முன்பாக வெள்ள நீர் தேங்கி நிற்பதனால , அவ்விடத்தில் அந்த அதனை கொட்டுவதற்காக உழவு இயந்திரத்தில் ஏற்றி வந்து அந்த மணலை பறித்துக்கொண்டு இருந்தவேளையே கடற்கரையில் நின்று பொலிசார் இளைஞன் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர்.

பொலிசார் அவ்விடத்தில் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ள வேண்டிய தேவை இல்லை. சந்தேகம் எனில் அருகில் வந்து விசாரணை செய்திருக்கலாம்.

தற்போது பொலிசார் கூறுகின்றனர். உழவு இயந்திரத்தில் தப்பி செல்ல முற்பட்டவர் மீது துப்பாக்கி பிரயோகம் செய்தோம் என. உழவு இயந்திரம் மணிக்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்க கூடிய வாகனமா? அதில் மணலை ஏற்றியவாறு தப்பியோட முடியுமா? பொலிசார் இலகுவாக துரத்தி பிடித்து விடுவார்கள்.



ஆனால் அதனை செய்யாது கிணறு வெட்டிய களிமண்ணை பறித்துக்கொண்டு இருந்த உழவு இயந்திரம் மீதே சரமாரியாக துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

உழவு இயந்திரத்தை துரத்தி சுடுவது எனில் பின் பகுதியில் இருந்தே துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு இருக்க வேண்டும். ஆனால் உழவு இயந்திரத்தின் பக்கவாட்டில் இருந்தே துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. உழவு இயந்திரத்தின் சில்லுகளில் பக்க வாட்டில் இருந்து துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்ட அடையாளங்கள் காணப்



படுகின்றன.

அதேவேளை படுகாயமடைந்த மதுசனின் இடுப்பிலும் துப்பாக்கி சூட்டு காயங்கள் காணப்படுகின்றன.

நின்ற உழவு இயந்திரத்தின் மீது துப்பாக்கி பிரயோகத்தினை



மேற்கொண்டு விட்டு, தப்பியோடியவர் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதாக பொலிசார் பொய்யான தகவல்களை ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணைகள் முன்னெடுக்க வேண்டும். தந்தையை இழந்து தனது குடும்ப பாரத்தை சுமக்கும் 18 வயதான இளைஞன் மீதான பொலிசாரின் வன்முறை தொடர்பில் நீதியை பெற்று கொடுக்க அனைத்து தரப்பினரும் குரல் கொடுக்க வேண்டும் என இளைஞனின் உறவுகள் கோரியுள்ளனர்.

# யாழில் சுற்றுலா மேம்பாடு எனும் போர்வையில் காணி அபகரிப்பு

25.10.2025

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு மணல்காடு பகுதியில் 600 ஏக்கர் காணிகளை சுற்றுலா மேம்பாடு எனும் போர்வையில் அபகரிக்கும் முயற்சியை கைவிடுமாறு மணக்காடு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு மணக்காட்டு பகுதியில் கற்கோவளத்திற்கும் மணல்காட்டுக்கும் இடைப்பட்ட பகுதியில் 300 ஏக்கர் காணியும், மணக்காட்டுக்கும் பொற்பதி கிராமத்துக்கும் இடைப்பகுதியில் 300 ஏக்கர் காணியிலும் சுற்றுலா தேவைகளுக்காக அபகரிப்பு நடவடிக்கைகள் இடம்பெற உள்ளன.

இதனை உடனடியாக கைவிடுமாறு மணக்காடு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மணக்காடு கிராம மட்ட அமைப்புகள் இன்றைய தினம் (25.10.2025) நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

மணக்காடு கிராமத்திலுள்ள மக்கள் பலருக்கு குடியிருக்க காணியில்லாத நிலையில், தனியார்களுக்கு இவ்வாறு காணிகளை வழங்கும் முயற்சி ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் இதனை தாங்கள் கடுமையாக எதிர்ப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சம்பந்தப்பட்ட தரப்புகள், உரிய கவனமெடுத்து குறித்த 600 ஏக்கர் காணிகள் பொறுப்பு நடவடிக்கையை உடனடியாக கைவிட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.



**எமக்கு ஒரு நாடு வேண்டும், எமது மக்களுக்கு விடுதலை வேண்டும், எமது இனம் சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற ஆக்ரோசமான இலட்சிய வேட்கையுடனேயே மாவீரர்கள் களத்தில் விழுகிறார்கள். எனவே எமது மாவீரர்கள் ஒவ்வொருவரது சாவும் எமது நாட்டின் விடுதலையை முரசறையும் வீர சுதந்திரப் பிரகடனமாகவே சம்பவிக்கிறது.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.ca

# தமிழீழம் – விசுவமடு மாவீரர் துயிலுமில்ல சிரமதானப் பணி தொடங்கியது...!

26.10.2025

தமிழீழம் - விசுவமடு தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் நாள் நிகழ்வுகளை நினைவுகூரப்படுவதற்காக இன்று சிரமதான பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இன்று (26.10.2025) காலை மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தப்பட்டு சிரமதான பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டதை தொடர்ந்து மாவீரர் துயிலும் இல்லத்தின் முன்பகுதிக்கான வேலி அமைக்கும் பணிகள் ஆரம்பித்து இடம்பெற்று வருகின்றன.

தேராவில் மாவீரர் துயிலும் இல்ல வளாகம் சிறீலங்கா சிங்கள இராணுவத்தினரின் ஆக்கிரமிப்புக்குள் காணப்படுகின்ற நிலைமையில் துயிலும் இல்லத்தில் ஒரு சிறிய பகுதியிலேயே குறித்த நினைவேந்தல் நிகழ்வுகள் வருடந்தோறும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையிலே குறித்த வளாகத்தின் முன் பகுதிக்கான வேலி அமைக்கும் பணிகள் இன்று முன்னெடுக்கப்பட்ட வேளையில் குறித்த இடத்தில் சிறீலங்கா இராணுவத்தினர் வருகைத்தந்து தமது முகாமுக்கு அருகில் உள்ள பகுதியில் வேலி கம்பங்களை அமைக்க வேண்டாம் என அறிவித்துள்ளனர்.






# தீவகம் சாட்டி மாவீரர் துயிலும் இல்ல சிரமதானப் பணி தொடக்கம்...! – 26.10.2025








# கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் சிறீலங்கா இனவழிப்பு இராணுவம் நிலைகொண்டுள்ள படியால், மாவீரர் நினைவுக்காக அருகில் உள்ள திடலில் துப்பரவுப் பணி ஆரம்பம் – 26.10.2025





# வன்னிவிளாங்கும் மாவீரர் துயிலுமில்ல சிரமதானப் பணிகள் ஆரம்பம்

28.10.2025

ஆயிரமாயிரம் மாவீரர்களினதும் கல்லறை அமையப்பெற்று கொடுங்கோலர்களால் அழிக்கப்பட்ட வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலுமில்ல சிரமதானப்பணிகள் மான மாவீரர் களுக்கு சுடரேற்றி இன்று 28.10.2025 செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டன.





# மன்னார் மக்களின் குரல்களுக்கு வலுச் சேர்ப்பதற்காக மக்களுடன் நாம் இருப்போம்

## இலங்கை மெதடிஸ்த் திருச்சபையின் முகாமைக் குரு கந்தையா ஜெகதாஸ்

28.10.2025

மன்னார் காற்றலை மின் உற்பத்தி ஆலை விவகாரம் மக்களின் நலன்களுடன் அவர்களது கருத்துக்களுக்கும் முதன்மை கொடுக்கப்பட வேண்டும் என இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் முகாமைக் குரு கந்தையா ஜெகதாஸ் தெரி வித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் செவ்வாய்க்கிழமை (28) நடைபெற்ற ஊடக சந்திப்பில் இதனை தெரிவித்தார்.

செம்மணி புதை குழி விவகாரம் மன்னார் மக்களின் காற் றாலை விடயங்களில் பாதிக்கப்பட்டவர்களுடன் நாமும் இருக் கின்றோம். அவர்களுக்காக தொடர்ந்தும் இருப்போம் என் பதற்காக இன்று யாழ்ப்பாணத்திலும் மன்னாருக்கும் சென்று மக்களுடன் போராடப்போகின்றோம் இதனை வெளிப்படுத்திம் விதமாக இந்த ஊடக சந்திப்பில் கலந்து கொள்கின்றோம் .

குறிப்பாக மன்னார் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுள் ஒன்றாக இந்த காற்றலை விவகாரம் மாறியுள்ளது. அரசு கூறுகின்றது குறித்த திட்டத்துக்கு அனுமதி கொடுக்கப்பட்டு விட்டது, அது நடைமுறைப் படுத்தப்படும் என்று.

மன்னார் ஆயருடன் ஜனாதிபதி சந்தித்த போதும் இதையே கூறியிருந்தார். ஆனால் மன்னார் ஆயர் இன்றும் மக்களின் விருப்பத்தின் பக்கமே இருக்கின்றார்.

உலக நாடுகள் பலவற்றில் இன்றைய காலச் சூழலில் இயற்கை மின் உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுத்துவருகின்றன. அதனால் அவர்கள் தங்கள் நாடுகளில் மக்கள் வாழிடம் அற்ற பகுதிகளில்தான் இவ்வாறான திட்டங்கதை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

இதே நேரம் இந்த திட்டம் மன்னாரின் இயற்கையையும் சுற்றுச் சூழலையும் கடல் உயிரினங்களையும் பாதிக்கும் என எமது புவியியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளார்கள் .

எனவே மக்களின் கோரிக்கை இன்று 80 நாள்களை கடந்து போராட்டமாக முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் மக்களின் நலன்களில் நாமும் பங்காளர்களாக இருந்து அவர்களது




போராட்டத்தையும் கோரிக்கையையும் வலுச்சேர்க்க முடிவு செய்துள்ளோம் என்றார்.

# இனப்பிரச்சினை பற்றி ஒரு வார்த்தை கூட தெரியாத அரசிடம் தீர்வினை எதிர்பார்க்க முடியாது

## இலங்கை திருச்சபையின் யாழ். குரு முதல்வர் செல்வன்

28.10.2025

நாட்டில் நிலவும் இனங்களுக்கு இடையேயான பிரச்சினை பற்றி ஒரு வார்த்தை கூட தெரியாத இன்றைய அரசு, தீர்வு தரும் என நம்புவது சாத்தியமற்ற ஒன்று என சுட்டிக்காட்டிய இலங்கை திருச்சபையின் யாழ். குரு முதல்வர் செல்வன், செம்மணி படுகொலைக்கான நீதி கிடைக்க மக்களாகிய நாமே முழுமையாக முயற்சிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.





செம்மணிப் படுகொலைக்கு நீதி வேண்டி இன்று (28) மெதடிஸ்த திருச்சபையினரால் செம்மணி அணையா தீபம் முற் றத்தில் அடையாளப் போராட்டம் நடத்தப்பட்டது.

இதன்போது ஊடகங்களுக்கு மேற்கண்டவாறு தெரிவித்த குரு முதல்வர் செல்வன் மேலும் கூறுகையில்,

செம்மணி என்பது இனப்படுகொலை நடத்தப்பட்டதன் அடை யாளம் மட்டுமல்ல, அது ஒரு சாட்சியுமாகும். இந்த சாட்சியமே இன்று இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றது என் பதையும் அதற்கான நீதி வேண்டும் என்பதையும் சர்வ தேசத்துக்கு எடுத்துச் சொல்கிறது.

எனவே அதற்கான வலுப்படுத்தலை நாம் ஒவ்வொருவரும் முன்னெடுப்பது அவசியமாகும். அதற்காகவே மெதடிஸ்த திருச்சபை இந்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளது.

இதேநேரம் கொல்லப்பட்டவர்களின் குருதிகள், தமக்கான நீதியை பெற்றுத்தாருங்கள் என எங்கள் ஒவ்வொருவரிடமும் ஓலமிட்டவண்ணம் இருக்கின்றன. அந்த ஓலங்களுக்கு நாம் நீதியை இலங்கையில், இந்த அரசிடமிருந்தும் எதிர்பார்க்க முடியாது.

எனவே சர்வதேசத்திடம் இதற்கான நீதியை கோரி நிற்கின் றோம் என்றும் தெரிவித்தார்.

இப்போராட்டத்தில் இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் முகா மைக் குரு கந்தையா ஜெகதாஸ், அருள்பணி அருளானந்தம் சமுவேல் சுபேந்திரன், வேலன்சுவாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

# யாழ். செம்மணிப் புதைகுழிக்கு நீதிகோரிப் போராட்டம்

28.10.2025

செம்மணிப் புதைகுழிக்கு நீதிகோரி, யாழ்ப்பாணம் செம்மணி வளைவுக்கு அருகில் செவ்வாய்க்கிழமை (28) போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.





இலங்கை மெதடிஸ்த திருச்சபை மற்றும் நீதிக்கும் சமாதானத் துக்குமான பணிக்குழு ஆகியவை இணைந்து முன்னெடுத்த போராட்டத்தில் மத தலைவர்கள், பாதிக்கப்பட்ட மக்கள் கலந்து கொண்டு செம்மணி புதைகுழிக்கு நீதி கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# யாழ். பல்கலைக்கழக முன்றலில் யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் போராட்டம்

28.10.2025

ஆளணி வெற்றிடங்களை நிரப்புமாறு கோரி யாழ்.பல்கலைக் கழக ஊழியர் சங்கத்தினர் இன்றைய தினம் செவ்வாய்க் கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.






யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கல்விசாரா ஊழியர்களின் பிரச்சினைகளுக்கும் மாணவர் நலன்சார்ந்த பிரச்சினை களுக்கும் பல்கலைக்கழக நிர்வாகம் தீர்வு காணவேண்டும் என கோரியே இப்போராட்டம் இடம்பெற்றது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கல்வி சாரா பணியாளர் வெற்றிடங்கள் 355 காணப்படுகின்ற பொழுதிலும் 117 வெற்றிடங்களே நிர்வாகத்தினால் கோரப் பட்டுள்ளது.

அத்துடன் பல்கலைக்கழக சுற்றுநிருபத்திற்கு முரணாக தனி யார் நிறுவனங்களூடாகவும் ஊழியர்கள உள்வாங்கப்பட்டு சேவை ஒப்பந்தத்தினூடாக நியமனம். செய்யப்படுவது தவறு எனவும் சுட்டிக்காட்டி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஏற்கனவே இந்த முறைகேடு தொடர்பாக பல்கலைக்கழக மானி யங்கள் ஆணைக்குழுவிற்கும் பல்கலைக்கழக பேரவைக்கும் எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டும் அவை புறக்கணிக்கப்பட்டதால் இன்று போராட்டத்தில் இறங்கியுள்ளதாக போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

# வட. கிழக்குப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றத்தின் பின்னால் இசுரவேல்! சிங்களப் பேராசிரியர் புன்சர அமரசிங்க வெளியிட்ட தகவல்

29.10.2025

20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கையின் சிங்கள குடியேற்றக் கொள்கைகளுக்குப் பின்னால் உள்ள இசுரவேலிய செல்வாக்கு குறித்து இலங்கையின் பேராசியர் ஒருவர் ஆய்வு செய்துள்ளதாக சர்வதேச ஊடகம் ஒன்று கூறுகிறது.

குறிப்பாக மகாவலி அபிவிருத்தித் திட்டத்தில் இந்த திட்டம் நடை முறைப்படுத்தப்பட்டதாக அந்தப் பேராசியர் குறிப்பிட்டுள்ளார்.

புன்சர அமரசிங்க என்ற இந்த பேராசியரின் “இலங்கையில் குடியேறியவர்களின் கொள்கையின் பின்னால் இஸ்ரேலின் நிழல்கள்” என்ற தலைப்பிலான நூலில் குறித்த விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன.

இசுரவேலிய விவசாய மற்றும் இராணுவ மாதிரிகள், இலங்கையின் மீள்குடியேற்ற உத்திகளுக்கு குறிப்பாக தமிழர் தாயகத்தில், இராணுவ மயமாக்கப்பட்ட இனப்பரம்பலை மாற் றும் செயற்பாட்டை உட்பொதித்து, இன்றுவரை தொடர்கின்றன என்று அவர் கூறியுள்ளார்.

இசுரவேலிய குடியேற்ற விரிவாக்கத்திற்கும், இலங்கையின் வடக்கு கிழக்கின் சிங்களக் குடியேற்றத்திற்கும் இடையிலான ஒற்றுமைகளை கோடிட்டு, தேசத்தைக் கட்டியெழுப்பும் போர்வையில் அபிவிருத்தி, இடப்பெயர்வு மற்றும் இராணுவ மயமாக்கல் எவ்வாறு ஒன்றோடொன்று இணைக்கப்பட்டன என்பதையும் இந்த ஆய்வை பேராசிரியர் புன்சர அமரசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் ஆற்றல் மற்றும் மீள்குடியேற்ற இலக்குகள் Amy Yar என்ற இசுரவேலிய முகவரால் உருவாக்கப்பட்டது

ஜே ஆர்.ஜயவர்தனவின் நிர்வாகத்துடனான அவரது நெருங் கிய உறவுகளின் விளைவாக, விவசாய நிபுணர் என்ற போர்வையில் இந்த திட்டம் உருவாக்கப்பட்டதாகவும் பேரா சிரியர் புன்சர அமரசிங்கவின் ஆய்வு குறிப்பிட்டுள்ளது.

இசுரவேலிய கட்டிடக்கலை நிபுணர் உல்ரிக் பிளெஸ்னர் 1981 ஆம் ஆண்டு மலைநாட்டில் உள்ள மகாவலி குடியிருப்புகளில் புதிய நகரங்களைத் திட்டமிடுவதற்காக இலங்கைக்கு வந்தார்



என்றும் அந்த ஆய்வு தெரிவித்துள்ளது.

பாலஸ்தீனத்தில் யூத குடியேற்றங்களை நினைவூட்டும் அடிப் படை திட்டமிடல் கொள்கைகளை பிளெஸ்னர் இந்த திட்டத் துக்குள் இணைத்தார் என்றும் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

www.sangathamil.ca

# அணையா விளக்கு சுற்று வட்ட பகுதியில் ‘செம்மணி உடனிருப்பு வேண்டுதல்’

30.10.2025

தேசிய கிருஸ்தவ மன்ற ஆயர் பேரவையினரால் இனப்படு கொலைக்கு நீதி வேண்டி ‘செம்மணி உடனிருப்பு வேண்டுதல்’ இன்றைய தினம் வியாழக்கிழமை யாழ். வளைவுக்கு அருகில், அணையா விளக்கு சுற்றுவட்ட பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.







இந்தப் அடையாளப் போராட்டத்தில் இலங்கையின் பல்வேறு மாவட்டங்களின் மறைமாவட்ட ஆயர்கள் அருட் சாகோதரர்கள் என பல கத்தோலிக்க பிரமுகர்கள் பங்கெடுத்திருந்தனர்.

முன்பதாக அணையா விளக்கு தூபிக்கு மலர் மாலை அணிவித்து வணக்கம் செலுத்திய தேசிய கிருஸ்தவ மன்ற ஆயர் பேரவையினர் அங்கிருந்து ஊர்வலமாக, மனித புதைகுழி காணப்படும் சிந்துபாத்தி இந்து மயான நுழைவாயிலைக்கு சென்று அங்கும் வணக்கம் செலுத்தியிருந்தனர்.

இதன்போது, செம்மணி புதைகுழி அகழ்வில் சர்வதேச தொழில்நுட்ப ஆதரவின் அவசியத்தை சர்வதேச சட்ட வல்லுநர்கள் ஆணையம் வலியுறுத்தியுள்ளது, அத்தகைய உதவியை தாமதமின்றி நாடுமாறு அரசாங்கத்தை கோருவதாக தேசிய கிருஸ்தவமன்ற ஆயர்பேரவை அழைப்புவிடுத்துள்ளது.






# ஈழத் தமிழர்களின் வாழ்வியலில் கார்த்திகை மாதம் தனித்துவமானது!

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன்

31.10.2025

வருடத்தில் எத்தனையோ நாட்களில் நாம் பொங்கி அமுதுண்டாலும் இயற்கையைப் போற்றி வழிபடுகின்ற தைப்பொங்கலே தமிழர்களின் தேசியப்பொங்கல் திருநாளாகக் கொண்டாடப்படுகின்றது.

அதேபோன்று, வருடத்தில் எல்லா நாட்களிலும் மரங்களை நடுகைசெய்ய இயலுமெனினும் கார்த்திகை மாத மரநடுகையே தமிழர்களின் தேசிய அடையாளத்துடன் கூடியதாகும். கார்த்திகையில் மரங்களை நடுகை செய்தல் தேசத்தைக் குளிரச் செய்யும் சூழலியற்செயல் மாத்திரமல்ல் அது தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும் ஒரு தேசிய செயற்பாடும் ஆகும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் தீர்மானத்துக்கு அமைவாக 2014 ஆம் ஆண்டு முதல் கார்த்திகை மாதம் வடமாகாண மரநடுகை மாதமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு பொ. ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பூமி விரைந்து சூடேறி வருவதால் காலநிலையில் படுபாதகமான மாற்றங்கள் ஏற்படத் தொடங்கியுள்ளன. அதிவேகத்துடன் நீண்ட நேரம் நின்று தாக்கும் சூறாவளிகள், காலம் தப்பிக் கொட்டித் தீர்க்கும் அடை மழை, காடுகளில் தீ மூட்டும் கடும் வறட்சி, உயர்ந்து செல்லும் கடல் மட்டம், உயிரினங்களின் பேரழிவு என்று காலநிலை மாற்றத்தின் விளைவுகளை நாம் தற்போது அனுபவிக்கத் தொடங்கியுள்ளோம். இதனால், வெப்பநிலை அதிகரிப்புக்குக் காரணமான கரியமில வாயுவை உறிஞ்சி அகற்றுவதற்கு மரங்களின் நடுகையை ஒரு பேரியக்கமாக முன்னெடுக்க வேண்டிய கட்டாய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

மரநடுகையைப் பெருமளவில் மேற்கொள்வதற்கு கூடுதலான மழைவீழ்ச்சியைப் பெறும் கார்த்திகை மிகப் பொருத்தமான மாதமாகும். ஈழத் தமிழர்களின் வாழ்வியலிலும் கார்த்திகை மாதம் தனித்துவமான இன்னுமொரு சிறப்பினைக் கொண்டுள்ளது. இம்மாதத்திலேயே மண்ணுக்காக மரணித்த மறவர்களைக் கூட்டாக நினைவிற்கொள்ளும் நாள் அடங்குகிறது. மரவழிபாட்டைத் தமது ஆதி வழிபாட்டு முறையாகக்கொண்ட தமிழர்கள், இறந்தவர்களின் நினைவாக மரங்களை நடுகை செய்து, அவற்றை உயிருள்ள நினைவுச்சின்னங்களாகப் போற்றிய பண்பாட்டு மரபைக் கொண்டிருக்கின்றனர்.




தேசியம் என்பது வெறுமனே தட்டையான ஓர் அரசியற் சொல்லாடல் அல்ல. இது ஒரு இனத்தின் வாழ்புலம், மொழி, வரலாறு, பண்பாடு, மத நம்பிக்கைகள் ஆகிய கூறுகளின் திரட்சியான ஒரு வாழ்க்கை முறையாகும்.

www.sangathamil.ca




# கனடாவில் இந்தியர்களை இனரீதியாக விமர்ச்சித்த கனேடியப் பெண்: பொலிசார் நடவடிக்கை

16.10.2025

இந்தியர்களைக் குறிவைத்து இனவெறுப்பு செயலில் ஈடுபட்ட கனேடிய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.




கனடாவின் கிரேட்டர் ரொரான்ரோ பகுதியில், Mississauga நகரில் அமைந்துள்ள சிறுவர் பூங்கா ஒன்றில், இந்தியர்களை இனரீதியாக மோசமாக விமர்சிக்கும் வாசகம் ஒன்று எழுதப் பட்டிருந்தது.

இந்நிலையில், அந்த விடயம் தொடர்பில் Freda Looker-Rilloraza (29) என்னும் கனேடியப் பெண்ணை பொலிசார் கைது செய்துள்ளார்கள்.

கனடாவில் சமீப காலமாக, இந்தியர்களுக்கு எதிரான இன வெறுப்பு அதிகரித்துவருகிறது. சமீபத்தில், இந்திய வம்சாவளி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரே இனவெறுப்பு தாக்குத லுக்கு உள்ளானார்.

இந்திய வம்சாவளி நாடாளுமன்ற உறுப்பினரான ஹர்தீப் க்ரேவால் (Hardeep Grewal), தனது குடும்பத்துடன் Muskoka



என்னுமிடத்தில் ஐஸ்கிரீம் சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது, சிலர் அவரை இனரீதியாக மோசமாக விமர்சித்ததுடன், உன் நாட்டுக்குத் திரும்பிப் போ என்றும், நீங்களெல்லாரும் சாக வேண்டும் என்றும் கூறியது குறிப்பிடத்தக்கது.

# படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜன் மயில்வாகனம் அவர்களின் நினைவுழியா 25ஆம் அண்டு நினைவேந்தல்

18.10.2025

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜன் உள்ளிட்ட 39 தமிழ் ஊடகவியலாளர்களிற்கும் நீதி கோரி நிமலராஜனின் மகள்மார் மற்றும் மாமனிதர் தராகி சிவராமின் மகள்மார் இணைந்து விசாரணை அறிக்கைகளை கனடாவில் வெளியிட்டுள்ளனர்.






கனடாவில் நடைபெற்ற நினைவேந்தலில் நிமலராஜனை ஊடகத்துறைக்கு அறிமுகம் செய்த மூத்த ஊடக ஆசிரியர் திருச்செல்வம், நிமலராஜனோடு நெருங்கிப்பழகிய மூத்த ஊடகவியலாளர், எழுத்தாளர் வாசகன் இரட்ணதுரை, சமகாலத்தில் பணியாற்றிய முன்னாள் வீரகேசரி மூத்த ஆசிரியர் வீ.தேவராஜ் மற்றும் சுயாதீன ஊடகவியலாளர் உதயன் எஸ்.பிள்ளை, நிமலராஜனின் சகோதரி செல்வராணி நிரஞ்சன் ஆகியோர் நேரடி




உரைகளை ஆற்றியிருந்தனர்.

அதேவேளை நிமலராஜனது நண்பரும் ஊடகவியலாளரும், யாழ்.ஊடக அமைய நிறுவகருமான இரத்தினம் தயாபரன், நிமலராஜனுடன் நெருங்கிப் பணியாற்றிய முன்னாள் பிபிசி சந்தேசிய மூத்த தயாரிப்பாளர் சந்தன கீர்த்தி பண்டார மற்றும் முன்னாள் பிபிசி சர்வதேச நிருபரும் தற்போது மனித உரிமைச செயற்பாட்டாளருமான பிரான்சிஸ் ஹரிசன் உள்ளிட்டோர் காணொளி வழியேயும் உரைகளை ஆற்றியிருந்தனர்.




நிகழ்வில், இலங்கைத்தீவில் மறுக்கப்பட்ட உள்ளக நீதி பற்றியும், கொலையாளிகளைப்பாதுகாத்த அரசு தொடர்பாகவும், சர்வதேச நீதியின் முக்கியத்துவம் குறித்தும், நிமலராஜனின் கொலையைத் தொடர்ந்து கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் பற்றிய விபரங்களை உள்ளடக்கியதுமாக, சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டம் - இலங்கை என்ற அமைப்பு வெளியிட்டுள்ள நூல் வடிவிலான அறிக்கையும் வெளியிடப்பட்டிருந்தது.

போர் சூழலில் யாழில் இருந்து ஊடகப்பணியாற்றிய மயில்வாகனம் நிமலராஜன். பி.பி.சி.யின் தமிழ் மற்றும் சிங்கள சேவை, வீரகேசரி, ராவய, ஜபிசி வானொலி சூரியன் உள்ளிட்ட பல ஊடகங்களில் பணியாற்றி இருந்தார்.

அந்நிலையில் 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19ம் திகதி யாழ்.மாவட்டத்தில் ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்த வேளை இவரது வீட்டு வளவினுள் புகுந்த ஆயுததாரிகள், அவர் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர். அதன் போது அவர் எழுதிக்கொண்டு இருந்த கட்டுரை மீது வீழ்ந்தே உயிர் துறந்தார்.

கொலையாளிகள் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு நிமலராஜனை படுகொலை செய்த பின்னர், வீட்டின் மீது கைக்குண்டு தாக்குதலையும் மேற்கொண்டனர்.

அதன் போது வீட்டில் இருந்த நிலமராஜனின் தந்தை சங்கரப்பிள்ளை மயில்வாகனம், தாய் லில்லி மயில்வாகனம் மற்றும் மருமகன் ஜெகதாஸ் பிரசன்னா ஆகியோர் படுகாயமடைந்து இருந்தனர்.

இந்த படுகொலை சம்பவம் நடைபெற்று 25ஆண்டுகள் கடந்துள்ள போதிலும், இதுவரையில் குற்றவாளிகள் கண்டறியப்படவில்லை. நிமலராஜன் படுகொலைக்கு நீதி கோரி யாழ் . ஊடக அமையம் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் தொடர்ச்சியாக குரல் கொடுத்தே வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

www.sangathamil.ca



**“நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது.”**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

# கனேடிய இராணுவத்தில் ஆளணி பற்றாக்குறை!

## கனடாவின் கணக்காய்வாளர் நாயகம் கரென் ஹோகன்

21.10.2025

கனேடிய இராணுவம் தனது செயல்பாட்டு தேவைகளை பூர்த்தி செய்ய போதுமான அளவில் புதிய உறுப்பினர்களை ஆட்சேர்ப்பு செய்து, பயிற்சி அளிக்க முடியாமல் தவித்துவருவதாக கனடாவின் கணக்காய்வாளர் நாயகம் கரென் ஹோகன் சமர்ப்பித்த புதிய ஆய்வறிக்கையில் தெரியவந்துள்ளது.



2022 முதல் 2025 வரையிலான காலத்தில் கனேடிய ஆயதப் படைகள் (CAF) 19,700 புதிய உறுப்பினர்களை ஆட்சேர்ப்பு செய்யத் திட்டமிட்டிருந்தன.

ஆனால் அந்த காலகட்டத்தில் 1.92 இலட்சம் பேர் விண்ணப்பித்திருந்தபோதிலும், வெறும் 15,000 பேரையே சேர்த்துக்கொள்ள முடிந்தது.

ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கானோர் விண்ணப்பித்தாலும், சராசரியாக 13 பேரில் ஒருவர் மட்டுமே அடிப்படைப் பயிற்சியைத் தொடங்குவதாக அறிக்கை குறிப்பிடுகிறது.

மேலும், ஆட்சேர்ப்பு செயல்முறை 100 முதல் 150 நாட்களில் முடிக்கப்பட வேண்டும் என்ற இலக்கு இருந்தபோதும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அதற்கு இரட்டிப்பு நேரம் எடுத்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

அதிகாரிகள் தாமே ஒப்புக்கொண்டபடி, ஆட்சேர்ப்பு இலக்கை அடைந்திருந்தாலும், புதிய இராணுவ வீரர்களுக்கு தேவையான அடிப்படைப் பயிற்சியை அளிக்கும் திறன் இராணுவத்தில் இல்லை.

கடந்த ஆண்டில் கூடுதல் பயிற்சி குழுக்கள் உருவாக்கப்பட்டு, தற்காலிக பயிற்சியாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தாலும், அது நீண்டகாலத் தீர்வாக அமையாது என கனடிய ஆயுதப்படைகள் ஏற்றுக்கொண்டுள்ளது.

அதே சமயம், பைலட்டுகள், குண்டு தொழில்நுட்ப நிபுணர்கள் போன்ற முக்கிய துறைகளில் திறமையான பணியாளர்களை ஈர்த்து வைத்திருக்க இராணுவம் சிரமப்படுவதாகவும், பல பயிற்சி பெற்ற வீரர்கள் பணியை விட்டு வெளியேறுவதையும் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை என்றும் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.



மேலும், ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சி தொடர்பான ஐ.டி. அமைப்புகள் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்படாமல், கைமுறை தரவு உள்ளீடுகள் தேவைப்படுவதும், பாதுகாப்பு சோதனைகள் பெருமளவில் நிலுவையில் இருப்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெண்கள் மற்றும் நிரந்தர குடியிருப்பாளர்கள் ஆட்சேர்ப்பிலும் இலக்கை அடைய முடியாமல் இருப்பது கூடுதல் பிரச்சினையாகும்.

# இசுரவேல் பிரதமர் கனடாவில் கால் வைத்தால் கைது செய்யப்படுவார்

## கனடாப் பிரதமர் மார்க் கார்ணி

21.10.2025

இசுரவேல் பிரதமர் கனடாவில் கால் வைத்தால் கைது செய்யப்படுவார் என கனடா பிரதமரான மார்க் கார்ணி அறிவித்துள்ளார்.



சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இசுரவேல் பிரதமரான பெஞ்சமின் நெத்தன்யாஹுவுக்கு எதிராக கைது வாரண்ட் பிறப்பித்துள்ள நிலையில், இசுரவேல் பிரதமர் கனடாவில் கால் வைத்தால் அவர் கைது செய்யப்படுவார் என கனடா பிரதமரான மார்க் கார்ணி தெரிவித்துள்ளார்.

காசா மோதல்களின்போது பட்டினியை ஆயுதமாகப் பயன்படுத்தியது முதலான போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்காக, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் நெத்தன்யாஹு மீது கைது வாரண்ட் பிறப்பித்தது.

2024ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 21ஆம் திகதி இந்த கைது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது.

கனடா, சர்வதேச குற்றவியல் அமைப்பின் உறுப்பினர் என்னும் வகையில், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் கைது வாரண்ட் தொடர்பில் நடவடிக்கை எடுக்க கடமைப்பட்டுள்ளது.



இப்படிப்பட்ட சூழலில் இசுரவேல் பிரதமர் கனடாவில் கால் வைத்தால் அவர் கைது செய்யப்படுவார் என கனடா பிரதமரான மார்க் கார்ணி கூறியுள்ள விடயம் மனித உரிமைகள் அமைப்புகளின் பாராட்டைப் பெற்றாலும், தூதரக உறவுகளில் பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடும் என்ற கவலையும் உருவாகியுள்ளது.

# அமெரிக்கா அல்லாத நாடுகளுடன் ஏற்றுமதி அதிகரிக்கப்படும்

## கனடாப் பிரதமர் மார்க் கார்ணி

23.10.2025

பல தசாப்தங்களாக நீடித்துவந்த அமெரிக்காவுடனான நெருக்கமான பொருளாதார உறவு முடிந்தது என்று கூறியுள்ளார் கனடா பிரதமர்மார்க் கார்ணி.

கனடா பிரதமரான மார்க் கார்ணி, நேற்று புதன்கிழமை, Ottawa பல்கலைக்கழக மாணவ மாணவியரிடையே உரையாற்றினார்.

அப்போது அவர், பல தசாப்தங்களாக நீடித்துவந்த அமெரிக்காவுடனான நெருக்கமான பொருளாதார உறவு முடிந்தது என்று கூறினார்.

அத்துடன், அமெரிக்கா அல்லாத பிற நாடுகளுக்கு செய்யப்படும் ஏற்றுமதி அடுத்த பத்து ஆண்டுகளில் இரு மடங்காக அதிகரிக்கப்படும் என்றும், அதே நேரத்தில் உள் நாட்டு முதலீடும் உள் கட்டமைப்பும் வரும் பட்ஜெட்டில் அதிகரிக்கப்படும் என்றும் கூறினார் மார்க் கார்ணி.

பல தசாப்தங்களாக நீடித்துவந்த அமெரிக்காவுடனான நெருக்கமான பொருளாதார உறவு முடிந்ததன் விளைவாக, அமெரிக்காவுடன் நெருக்கமாக இருந்ததால் நமது வலிமை என கருதப்பட்ட பல விடயங்கள் இப்போது நமது பலவீனங்களாக மாறிவிட்டன என்றும் அவர் கூறினார்.

மேலும், உண்மையாகக் கூறினால், அடுத்த சில மாதங்களுக்குள் எளிதாக நமது பொருளாதாரத்தை நம்மால் மாற்றிவிட முடியாது. அதற்கு கொஞ்சம் காலமும் பிடிக்கும், அத்துடன், கனேடியர்கள் அதற்காக சில தியாகங்களையும் செய்யவேண்டியிருக்கும் என்றார் மார்க் கார்ணி.




## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

www.sangathamil.ca

# கனடாவின் கியுபெக் மாகாணப் பகுதி மக்கள் தனிநாடு கோரிப் பேரணி

26.10.2025

கனடாவின் கியுபெக் மாகாணத்தை தனி நாடாக பிரடகனம் செய்ய வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மொன்ட்ரியால் நகரின் மையப்பகுதியில் சனிக்கிழமை நூற்றுக் கணக்கான மக்கள் தெருக்களில் பேரணியாக இறங்கி இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.




இந்த பேரணி, 1995 ஆம் ஆண்டு அக்டோபர் 30 அன்று நடைபெற்ற சுயாட்சிக் கருத்துக்கணிப்பின் 30 ஆம் ஆண்டு நினைவாக முன்னெடுக்கப்பட்டது. இன்று இளைஞர்கள் பெருமளவில் இயக்கத்தில் இணைந்து வருகிறார்கள்.

Z தலைமுறை அமைப்புசார்ந்த மாற்றத்தைக் கேட்கிறது அவர்களுக்கு சுதந்திரம் அதற்கான தீர்வாகத் தோன்றுகிறது என OUI Québec அமைப்பின் தலைவர் கமீல் கோயெட்-கிங்ராஸ் குறிப்பிட்டுள்ளார்.

1995 இல் நடைபெற்ற கருத்துக்கணிப்பில் தனிநாட்டு கோரிக்கைக்கு எதிரானவர்கள் 50.58% வாக்குகளால் மிகக் குறைந்த வித்தியாசத்தில் வென்றனர். இதற்கு முன்னர் 1980 இல் நடைபெற்ற முதல் கருத்துக்கணிப்பில் 40.44% பேர் மட்டுமே சுயாட்சிக்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

தற்போது பார்டி கெபெகொயிஸ் (PQ) கட்சி கருத்துக்கணிப்பில் முன்னிலையில் இருந்து, 2030 க்குள் மூன்றாவது கருத்துக் கணிப்பை நடத்தும் எதிர்பார்ப்புடன் செயற்பட்டு வருகின்றது.

இது ஒரு குடிமக்கள் வழிநடத்தப்படும், கட்சி சார்பற்ற இயக்கம். இன்னும் சில ஆண்டுகளில் புதிய கருத்துக்கணிப்பை நடத்தும் அளவுக்கு இது பெரிதாக வளரும் என்று நம்புகிறேன் என கோயெட்-கிங்ராஸ் குறிப்பிட்டுள்ளார்.

இளைஞர்கள் பலரும் காலநிலை மாற்றம் போன்ற பிரச்



சினைகளுக்கு தீர்வாக சுயாட்சியைக் காண்கிறார்கள் என தெரிவித்துள்ளார். கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், 1980 மற்றும் 1995 இல் நடந்த கருத்துக்கணிப்புகளில் பங்கேற்ற மூத்த தலைமுறையினருடன் சேர்ந்து நடைபயணத்தில் இணைந்தனர்.

சுயாட்சியை ஆதரிக்கும் கேபெக் சோலிடெயர் கட்சியின் எம்.என்.ஏ.க்கள் மனோன் மாசே மற்றும் ரூபா கஜால் ஆகியோரும் பேரணியில் கலந்து கொண்டனர்.

# அமெரிக்காவிற்குள் பிரவேசிக்கும் கனடியர்களை புகைப்படம் எடுக்கும் புதிய திட்டம்

27.10.2025

அமெரிக்கா பிரவேசிக்கும் கனடியர்களை புகைப்படம் எடுக்கும் புதிய திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் இடையில் அண்மைய நாட்களாக கடுமையான முரண்பாட்டு நிலைமைகள் காணப்படுகின்றன.

வர்த்தக ரீதியான போராட்டங்கள் கடுமையான நிலையை அடைந்துள்ளது. இவ்வாறான ஓர் பின்னணியில் அமெரிக்காவிற்குள் பிரவேசிக்கும் கனடியர்கள் எல்லை பகுதிகளில் வைத்து புகைப்படம் எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் ரொரான்ரோவின் பிரபல மனநல நிபுணர் வாரன் ஷெபெல் அமெரிக்காவிலிருந்து திரும்பிய போது சீருடை அணிந்த அமெரிக்க அதிகாரிகள் அவரை புகைப்படம் எடுத்தனர் என தெரிவித்துள்ளார்.

விமானம், கடல் மற்றும் தரைவழி போக்குவரத்து ஊடாக அமெரிக்காவிற்குள் பிரவேசிக்கும் கனேடியர்களின் முகங்கள் படம் எடுக்கப்பட்டு பதிவு செய்யப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க சுங்கம் மற்றும் எல்லை பாதுகாப்பு நிறுவனம் ஏற்கனவே பயோமெட்ரிக் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பயணிகளின் முகத்தை சரி பார்க்கும் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

குறிப்பாக பயணிகளின் கடவுச் சீட்டுடன் அவர்களது முகத்தையும் ஒப்பிட்டு பார்க்கும் முறை ஆகும்.

எதிர்வரும் 2026 ஆம் ஆண்டுக்குள் இந்தத் திட்டம் முழுமையான அளவில் அமெரிக்காவில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.

முதலில் விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களில்



இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

அமெரிக்க பிரஜைகள் அல்லாத கனடியர்கள் உள்ளிட்ட ஏனைய அனைத்து வெளிநாட்டு பிரஜைகளின் முகப் படங்களும் பதிவு செய்யப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோத குடியேற்றத்தை தடுப்பதற்கும் பாதுகாப்பு நோக்கங்களுக்காகவும் இவ்வாறு அமெரிக்க அதிகாரிகள் பயணிகளை புகைப்படம் எடுப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்த நடவடிக்கையானது மக்களின் தனியுரிமையை பாதிக்கக் கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# ரொரான்ரோ லேக்சோர் கிழக்கு தொடரி வழித்தடத்தில் 'கோ' தொடலிச் சேவை அதிகரிப்பு

30.10.2025

அக்டோபர் 27 முதல், ரொரான்ரோ லேக்சோர் கிழக்கு தொடரி வழித்தடத்தில் போக்குவரத்து நெரிசல் அதிகமான நேரங்களில் ஆறு புதிய தொடரிகளை இயக்கவுள்ளோம். இது, ஸ்காபரோ வாழ் மக்களுக்கு நாளாந்தாம் விரைவானதும் நம்பகத்தன்மை வாய்ந்ததுமான சேவையை வழங்கும். அதிகூடிய போக்குவரத்து நெரிசல் நேரங்களில் இப்போதுள்ள 15 நிமிடங்களுக்கு ஒருமுறையான சேவை, 10 நிமிடங்களுக்கு ஒரு தொடரி என அதிகரித்து இயக்கப்படும். இதனால், வேலை மற்றும் பாடசாலைகளிலிருந்து வீடு திரும்புவோர் விரைவாக வீட்டிற்குச் செல்ல முடியும். அதிகூடிய போக்குவரத்து நெரிசலுள்ள நேரங்களாக காலை 7 மணி முதல் 8:30 மணி வரையும், பின்நேரம்



4 மணி முதல் 6 மணி வரையுமாக வரையறுக்கப்பட்டுள்ள நேரங்களில், மக்களுக்கு வசதியான சேவைகளை இது உறுதிப்படுத்துகிறது.

இந்தச் சேவை அதிகரிப்புகள், ஸ்காபரோவில் பொதுப்போக்குவரத்தை மேம்படுத்துவதற்கும், மக்களின் அன்றாட பயண நேரங்களைக் குறைத்து அவர்களின் பயணங்களை இலகுவாக்குவதற்குமான எமது உறுதியான நிலைப்பாட்டின் ஓர் அங்கமாகும். பயண நேரங்களிடையே குறைந்த காத்திருப்பு நேரத்தில், நகரின் பல பகுதிகளையும் எளிதாகச் சென்றடையக்கூடியதான முன்னெப்போழுதுமில்லாதளவான சிறந்த சேவை இப்போது வழங்கப்படுகிறது.

**தேசிய ஒற்றுமையையும் - இன ஒருமைப்பாட்டினையும் ஒரு வலுவான அத்திவாரத்தில் கட்டியெழுப்புவதென்றால், எம் மத்தியில் நிலவும் ஏற்றத்தாழ்வுகள் ஒழிக்கப்பட வேண்டும்; சமூக முரண்பாடுகள் நீக்கப்பட வேண்டும்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# தமிழக செய்திகள்



## தமிழகத்தில் புதிதாக 26 இடங்களில் ‘தோழி’ விடுதிகள்

20.10.2025

தமிழகத்தில் 26 இடங்களில் மகளிருக்கான ‘தோழி’ தங்கும் விடுதிகள் அமைக்கப்பட்டு வருவதாக சமூகநலன், மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பி.கீதாஜீவன் தெரிவித்தார்.

தூத்துக்குடியில் செய்தியாளர்களிடம் அவர் நேற்று கூறியதாவது,
புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் இதுவரை கலை - அறிவியல், பொறியியல், தொழிற்படிப்பு, மருத்துவப் படிப்பு பயிலும் 5,29,728 மாணவிகள் பயன் பெற்றுள்ளனர். தமிழ்ப் புதல்வன் திட்டத்தின்கீழ் 3,92,449 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டத்தின் கீழ் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய 75 ஆயிரம் குழந்தைகள் கண்டறியப்பட்டு, குழந்தைகளின் தாய்மார்களுக்கு ரூ.22 கோடியில் ஊட்டச்சத்து பெட்டகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் மகளிருக்கான 6 புதிய ‘தோழி’ தங்கும் விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. தூத்துக்குடி, திருநெல்வேலி உள்ளிட்ட இடங்களில் உள்ள 10 தங்கும் விடுதிகள் சீரமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இதுதவிர, ஆதிதிராவிடர் நலத்துறையில் இருந்து பெறப்பட்ட 3 மகளிர் தங்கும் விடுதிகளும் சீரமைக்கப்பட்டு செயல்படுகின்றன. தற்போது மொத்தம் 19 விடுதிகள் செயல்பட்டு வரும் நிலையில், புதிதாக 26 ‘தோழி’ தங்கும் விடுதிகள் கட்டும் பணிகள் பல்வேறு நிலைகளில் நடந்து வருகின்றன.

போக்சோ வழக்குகளில் பாதிக்கப்பட்ட 6,999 பேருக்கு ரூ.103.63 கோடி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. முதல்வரின் காலை உணவுத் திட்டத்தில் இதுவரை 34,987 பள்ளிகள் சேர்க்கப்பட்டு 20 இலட்சம் குழந்தைகளும், அன்புக் கரங்கள் திட்டத்தின் கீழ் 6,910 குழந்தைகளும் பயன்பெற்று




வருகின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

## புதுச்சேரியில் படுகை அணையைக் கட்டாததால் வீணாகக் கடலில் கலக்கும் மழைநீர்

22.10.2025

படுகை அணையை உடைந்து 4 ஆண்டுகளாகியும் புதிதாக செல்லிப்பட்டு - பிள்ளையார்குப்பம் படுகை அணையை கட்ட அரசு நடவடிக்கை எடுக்காததால் கனமழை பொழிந்தும் தேக்கி வைக்க முடியாமல் மழைநீர் கடலில் சேர்வது தங்களுக்கு கண்ணீரை வரவழைப்பதாக கிராம விவசாயிகள், பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.



புதுச்சேரியில் செல்லிப்பட்டு - பிள்ளையார்குப்பம் இடையே சங்கராபரணி ஆற்றின் குறுக்கே பிரெஞ்சுக்காரர்கள் காலத்தில் கடந்த 1906-ம் ஆண்டு படுகை அணை கட்டப்பட்டது. பழமையான இந்த படுகை அணையில் தேக்கி வைக்கப்படும் தண்ணீரின் மூலம் சுற்றுவட்டாரப் பகுதியில் 30 கிராமங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்று வந்தது.

போதிய பராமரிப்பு இல்லாததால் கடந்த 2011ஆம் ஆண்டு பெய்த மழையால் படுகை அணையின் நடுப்பகுதி மற்றும் கீழ்தளம் முற்றிலும் சேதமடைந்தது. இதனால் அணை உடையும் அபாயம் ஏற்பட்டதால் கற்களை கொட்டி தற்காலிகமாக சீரமைக்கப்பட்டது. அணையை முழுமையாக சீரமைக்க வேண்டும் என்று விவசாயிகள் தொடர்ந்து அரசுக்கு கோரிக்கை விடுத்தனர்.

ஆனால் அணை பராமரிக்கப்படாததால் 2021ஆம் ஆண்டு



நவம்பரில் பெய்த கனமழை மற்றும் வீடூர் அணை திறப்பால் சங்கராபரணி ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் அணையின் பெரும்பகுதி முற்றிலும் உடைந்து போனது. இதனால் பல்லாயிரம் கனஅடி நீர் வெளியேறி வீணாகக் கடலில் சென்று சேர்ந்தது.

## தமிழகத்தில் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி: கவனிக்க வேண்டிய ஆறு முக்கிய அம்சங்கள் என்னென்ன?

28.10.2025

பீகாரில் ‘எஸ்.ஐ.ஆர்.’ நடத்தப்பட்டதன் மூலம் 65 இலட்சம் பேர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டனர். அதில் 35 இலட்சம் பேர் பீகாரை விட்டு வெளியேறியவர்கள். 22 இலட்சம் பேர் உயிரிழந்தவர்கள்.

7 இலட்சம் பேர் 2 இடங்களில் பட்டியலில் பெயர் இருந்தவர்கள். ஒரு இலட்சம் பேரை அடையாளம் காண முடியவில்லை என்று தேர்தல் கமிஷன் கூறியது. அதில் இடமாற்றம் செய்ததாக சொல்லி நீக்கப்பட்ட 35 இலட்சம் பேர் விவகாரத்தில் நாடு முழுவதும் பெரும் பிரச்சினை கிளம்பியது.

இந்த நிலையில், தமிழ்நாடு, புதுச்சேரி உள்பட 12 மாநிலங்களில் சிறப்பு வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப்பணி (எஸ்.ஐ.ஆர்.) 4ஆம் திகதி தொடங்குவதாக தேர்தல் கமிஷன் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் ‘எஸ்.ஐ.ஆர்.’ தொடங்குவதால் ஆறு முக்கிய அம்சங்களை கவனிக்க வேண்டி உள்ளது.

அதன் விவரம் வருமாறு:- * வாக்காளர் பட்டியலில் இருந்து இறந்தவர்கள் பெயர்கள் முழுமையாக நீக்கப்படும். * 2 தொகுதிகளில் பெயர் இருந்தால், அதில் ஒரு தொகுதியின் பெயர் நீக்கப்படும்.

* ஒரு வாக்காளர் எங்கு குடியிருக்கிறாரோ, அந்த சட்டசபை தொகுதியில் உள்ள வாக்காளர் பட்டியலில்தான் அவரது பெயர் இருக்க வேண்டும்.

மாறாக சொந்த ஊரில், அவரது பெயர் இருந்தால் அது நீக்கப்படும். எனவே சென்னை உள்பட நகரங்களில் வசிப்பவர்கள் தங்களது பெயரை சொந்த ஊரில் இருந்து நீக்கி வசிக்கும் இடத்தில் உள்ள வாக்காளர் பட்டியலில் சேர்க்கும் நிலை உருவாகும்.

* வேறு தொகுதி அல்லது வேறு மாவட்டங்களுக்கு குடிபெயர்ந்தவர்கள் வாக்காளர் அடையாள அட்டையில் முகவரி மாற்றம் செய்து கொள்ளவேண்டும்.

* தமிழகத்தில் வேலை பார்க்கும் பீகார், உத்தரபிரதேசம் உள்ளிட்ட வெளிமாநில தொழிலாளர்கள் தமிழகத்தின் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கான கதவுகள் திறக்கப்பட்டுள்ளது.

* பீகார், வங்காளதேசம் எல்லையை ஒட்டி இருப்பதால் ஏராளமான வங்காளதேசத்தினர் வாக்காளர் பட்டியலில் இருந்தனர். அவர்கள் பெயர்கள் ‘எஸ்.ஐ.ஆர்.’ மூலம் தற்போது நீக்கப்பட்டு



உள்ளது.

அதேபோல தமிழகத்தில் இலங்கையில் இருந்து அகதிகளாக வந்தவர்கள் இருக்கிறார்கள். ஒருவேளை அவர்கள் வாக்காளர் பட்டியலில் சேர்ந்து இருந்தால் நீக்கப்படுவார்கள்.

**எமது தேசத்தின் வளத்தின் அடிப்படையில் எமது தேசிய பொருளாதாரம் சுயநிறைவு காணவேண்டும்.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# உலக செய்திகள்

## மடகஸ்காரில் ஆட்சியை கைப்பற்றிய இராணுவம்

15.10.2025

தென்கிழக்கு ஆபிரிக்க நாடான மடகஸ்காரின் ஜனாதிபதி ஆண்ட்ரி ரஜோலினா அரசுக்கு எதிராக இளைஞர்கள் கடந்த மாதம் 25ஆம் திகதி முதல் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

ஊழல், வறுமை, மின்சாரம் மற்றும் தண்ணீர் தட்டுப்பாடு உட்பட பல்வேறு பிரச்சினைகளால் ஜென் இசட் தலைமுறையினர் தங்களது போராட்டத்தை கடந்த சில நாட்களாக தீவிரப்படுத்தினர்.

இதில் பாதுகாப்பு படையினருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே நடந்த மோதலில் 22 பேர் கொல்லப்பட்டனர். இதற்கிடையே இளைஞர்களின் போராட்டத்துக்கு இராணுவத்தின் ஒரு பிரிவினர் ஆதரவு தெரிவித்தனர்.

இதனால் இராணுவம் மூலம் ஆட்சியை கவிழ்க்க சதி நடப்பதாக ஜனாதிபதி ஆண்ட்ரி ரஜோலினா குற்றம் சாட்டினார்.

இந்த நிலையில் அவர் நாட்டைவிட்டு தப்பி ஓடி உள்ளார். இராணுவ கிளர்ச்சியைத் தொடர்ந்து தனது உயிருக்கு பயந்து நாட்டைவிட்டு வெளியேறியதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் கூறும் போது, என் உயிரைப் பாதுகாக்க ஒரு பாதுகாப்பான இடத்தைக் கண்டுபிடிக்க வேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்பட்டது என்றார்.

அவர் தனது உரையில், ஜனாதிபதி பதவியை ராஜினாமா செய்வதாக சொல்லவில்லை.

எனினும் நாட்டை விட்டு அவர் வெளியேறியுள்ளதால் அவரை பதவியில் விலக்குவதற்கு அந்த நாட்டு நாடாளுமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இதனை அடுத்து மடகஸ்காரில் ஆட்சியை இராணுவம் கைப்பற்றியுள்ளது. இந்த அறிவிப்பை வெளியிட்ட இராணுவ கேர்



னல் மைக்கேல் ராண்ட்ரியானிரினா, விரைவில் மக்கள் அரசாங்கத்தை அமைக்க பிரதமர் நியமிக்கப்படுவார் என தெரிவித்துள்ளார்.

## பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் லூவர் அருங்காட்சியகத்தில் கொள்ளைக் கும்பல் கைவரிசை

19.10.2025

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் உள்ள, உலகின்புகழ்பெற்ற லூவர் அருங்காட்சியகத்தில் இன்று காலை ஒரு துணிகரக் கொள்ளைச் சம்பவம் அரங்கேறியுள்ளது. 'மூன்று அல்லது நான்கு' பேர் கொண்ட கும்பல், 'ஏழே நிமிடங்களில்' மதிப்பிட முடியாத பாரம்பரிய மதிப்பு கொண்ட நகைகளைக் கொள்ளை




யடித்துத் தப்பியோடியது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இன்று காலைச் சுமார் 9:30 மணியளவில், அருங்காட்சியகம் திறக்கப்படுவதற்கு சற்று முன்னர் இந்தக் கொள்ளைச் சம்பவம் நடந்துள்ளது. கொள்ளையர்கள் மிகவும் நூதனமான முறையில், கட்டிடத்தின் வெளிப்புறத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு பார வூர்தியில் இருந்த மின்தூக்கியைப் (Nacelle) பயன்படுத்தி, அருங்காட்சியகத்தின் புகழ்பெற்ற 'அப்பல்லோ கூடத்திற்குள்'




(Galerie d'Apollon) நேரடியாக நுழைந்துள்ளனர்.

உள்ளே நுழைந்த அவர்கள், இரண்டு கண்ணாடிப் பேழைகளை மட்டும் குறிவைத்து, அதில் இருந்த பழங்கால நகைகளைக் கொள்ளையடித்துள்ளனர். இந்த மொத்த சம்பவத்தையும் வெறும் ஏழு நிமிடங்களில் முடித்துவிட்டு, ஸ்கூட்டர்களில் ஏறித் தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பிரான்சின் உள்துறை அமைச்சர் லாரன்ட் நுனெஸ், செய்தியாளர்களிடம் பேசுகையில், "கொள்ளையடிக்கப்பட்ட நகைகள் பணத்தால் மதிப்பிட முடியாதவை் அவை நமது நாட்டின் முக்கியமான பாரம்பரியச் சின்னங்கள். இது ஒரு மிகப்பெரிய இழப்பு. கொள்ளையர்கள் மிகவும் திட்டமிட்டு இச்செயலைச் செய்துள்ளனர்" என்று வேதனையுடன் தெரிவித்தார்.

சம்பவ இடத்திற்கு வந்த கலாச்சார அமைச்சர் ரஷீதா தாதி, "இந்தச் சம்பவத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்பது மட்டுமே ஆறுதலான விடயம்" என்று கூறினார்.

இந்தக் கொள்ளை தொடர்பாக, திட்டமிட்ட குற்றச்செயலில் ஈடுபட்ட கும்பல்மீது பாரிஸ் அரசு வழக்கறிஞர் அலுவலகம் வழக்குப் பதிவு செய்துள்ளது. இந்த வழக்கை, பாரிஸ் காவல்துறையின் கொள்ளைத் தடுப்புப் பிரிவான BRB (Brigade de répression du banditisme) மற்றும் கலாச்சாரப் பொருட்கள் கடத்தலைத் தடுக்கும் சிறப்புப் பிரிவான முஊடீஊ (Office central de lutte contre le trafic des biens culturels) ஆகியவை இணைந்து விசாரித்து வருகின்றன. கொள்ளையர்கள் தப்பிச் செல்லப் பயன்படுத்திய ஸ்கூட்டர் ஒன்று பின்னர் கண்டெடுக்கப்பட்டது.



இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, லூவர் அருங்காட்சியகம் 'சிறப்பு காரணங்களுக்காக' இன்று முழுவதும் மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. உலகப் புகழ்பெற்ற அருங்காட்சியகத்தில் பட்டப்பகலில் நடந்த இந்தத் துணிகரக் கொள்ளை, பாரிஸ் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

**முக்கிய அறிவித்தல்**

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

www.sangathamil.ca

# கூகிள் குரோமுக்கு போட்டியாக ஓபன் ஏஐ உலாவியை அறிமுகப்படுத்துகிறது

22.10.2025

கூகிளின் பிரபலமான குரோம் உலாவிக்கு போட்டியாக, அமெரிக்க செயற்கை நுண்ணறிவு நிறுவனமான ஓபன் ஏஐ செவ்வாயன்று தனது சொந்த வலை உலாவியான அட்லஸை







அறிமுகப்படுத்துவதாகக் கூறியது .

கலிபோர்னியாவை தளமாகக் கொண்ட இந்த நிறுவனம், மக்கள் இணையத்தைப் பயன்படுத்தும் விதத்தில் புரட்சியை ஏற்படுத்தப் பார்க்கும்போது, அட்லஸ், OpenAI இன் பிரபலமான சாட்பாட் ChatGPT ஆல் இயக்கப்படும் .

தாவல்கள் சிறப்பாக இருந்தன. ஆனால் அதன் பிறகு நாங்கள் அதிக உலாவி கண்டுபிடிப்புகளைக் காணவில்லை என்று செவ்வாயன்று ஒளிபரப்பான வீடியோ விளக்கக்காட்சியில் OpenAI தலைமை நிர்வாக அதிகாரி சாம் ஆல்ட்மேன் கூறினார். ஒரு உலாவி எதைப் பற்றியது மற்றும் அதை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை மறுபரிசீலனை செய்வதற்கான அரிய, தசாப்தத்திற்கு ஒரு முறை கிடைக்கும் வாய்ப்பு என்று பேசினார்.

உதாரணமாக, பாரம்பரிய உலாவிகளின் மையத்தில் உள்ள கிளாசிக் URL தேடல் பட்டியை AI சாட்பாட் இடைமுகத்தால் மாற்றலாம் என்று ஆல்ட்மேன் பரிந்துரைத்தார்.

இந்த உலாவி ஆரம்பத்தில் ஆப்பிளின் மேக் கணினிகளுக்கு மட்டுமே கிடைக்கும் என்று நிறுவனம் கூறியது. பயனர்கள் நகலெடுத்து ஒட்டாமல் அல்லது பக்கத்தை விட்டு வெளியேறாமல் பணிகளை முடிக்க உதவும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

அட்லஸ் உலாவியின் மற்றொரு முக்கிய அம்சம் அதன் முகவர் பயன்முறை என்று அழைக்கப்படுகிறது, இது பயனரின் சார்பாக தானாகவே இணையத்தில் உலாவுகிறது, ஒரு நபரின் உலாவி வரலாற்றைக் கொண்டு அவர்கள் எந்த வகையான தகவலைத் தேடுவார்கள் என்பதைக் கணிக்க உதவுகிறது.

2008 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதிலிருந்து, கூகிள் குரோம் உலகளவில் சுமார் 3 பில்லியன் பயனர்களைக் குவித்துள்ளது, மைக்ரோசாப்டின் இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரர் மற்றும் பின்னர் எட்ஜ் உலாவிகள் போன்ற போட்டியாளர்களை வீழ்த்தியுள்ளது.

ஆனால் ChatGPT போன்ற AI சாட்பாட்கள் இணையத்தில் உள்ள தகவல்களை மிகவும் திறமையாகச் சுருக்கமாகக் கூறுவதால், பல பயனர்கள் உலாவியால் பரிந்துரைக்கப்படும் இணைப்புகளைக் கிளிக் செய்யும் பாரம்பரிய நடைமுறையை விட அவற்றை நோக்கித் திரும்புகின்றனர்.

ChatGPT ஏற்கனவே 800 மில்லியனுக்கும் அதிகமான பயனர்களைக் கொண்டுள்ளது என்று OpenAI தெரிவித்துள்ளது, அதே நேரத்தில் இந்த ஆண்டு AP சார்பாக நடத்தப்பட்ட ஒரு கணக்கெடுப்பில் சுமார் 60% அமெரிக்கர்களும் - 30 வயதுக்குட்பட்டவர்களில் 74% பேரும் - குறைந்தபட்சம் சில நேரங்களிலாவது தகவல்களைக் கண்டறிய AI ஐப் பயன்படுத்துகின்றனர்.

குரோம் போன்ற உலாவிகள் தங்கள் தேடல் முடிவுகளில் AI சுருக்கங்களை ஒருங்கிணைத்துள்ளன, பொதுவாக முதல் இணைப்பிற்கு மேலே உள்ள முடிவுகள் பக்கத்தின் மேலே தெரியும், இருப்பினும் இந்தத் தகவலின் துல்லியம் குறித்து கவலைகள் எழுப்பப்பட்டுள்ளன.

# ஸ்கொட்லாந்த் நாடாளுமன்றம் ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட இனப்படுகொலைக்கு வழங்கிய அதிகாரபூர்வ நீதியும் ஆதரவும்

24.10.2025

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்டது இனப்படுகொலைதான் என்பதையும், தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான அங்கீகாரத்தை ஆதரிப்பதாகவும் (அதாவது தமிழர்கள் விரும்பினால் ஐ.நா வாக்கெடுப்பின் ஊடாக தமிழீழத்தை உருவாக்க ஆதரவு) ஸ்கொட்லாந்து நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்காக பாடுபட்ட அனைவருக்கும் நன்றிகள்.



தீர்மானத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள அதன் அதிகாரபூர்வ இணைப்பு முதல் விமர்சன பகுதியில் கீழே ஆங்கில வடிவில் இணைக்கப்பட்டுள்ளது.

"ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளால் ஆவணப்படுத்தப்பட்டபடி, குறிப்பாக மே 2009 இல் நடந்த ஆயுத மோதலின் இறுதிக் கட்டங்களின் போது, 70,000 முதல் 146,000 வரையிலான தமிழ் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக மதிப்பிடப்பட்ட, இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்டதாகக் கூறப்படும் பாரிய அட்டூழியங்களை நாடாளுமன்றம் அங்கீகரிக்கிறது;

The Scottish Parliament
Pàrlamaid na h-Alba

2011 இல் இலங்கையில் பொறுப்புக்கூறல் குறித்த ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கை, 2015 இல் இலங்கை மீதான ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உயர் ஆணையர் அலுவலகம் (OISL) மற்றும் போர்க்குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் தமிழர்களுக்கு எதிரான முறையான துன்புறுத்தல் ஆகியவற்றின் நம்பகமான குற்றச்சாட்டுகளை எடுத்துக்காட்டும் தொடர்ச்சியான ஐ.நா மனித உரிமைகள் கவுன்சில் தீர்மானங்கள் ஆகியவற்றின் கண்டுபிடிப்புகளை ஒப்புக்கொள்கிறது;

இனப்படுகொலை குறித்து சர்வதேச விசாரணை நடத்தவும், பொது வாக்கெடுப்பு மூலம் தமிழ் மக்கள் தங்கள் அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்கும் உரிமையை அங்கீகரிக்கவும் தமிழ் புலம்பெயர்ந்தோர் மற்றும் சிவில் சமூகம் தொடர்ந்து அழைப்பு விடுப்பதைக் குறிப்பிடுகிறது, மேலும் சர்வதேச சட்ட தரநிலைகள் மற்றும் மோதலுக்குப் பிந்தைய சூழல்களில் மக்களின் சுயநிர்ணய உரிமைகளை அங்கீகரிக்கும் கடந்த கால ஐ.நா. தீர்மானங்களுக்கு இணங்க, இலங்கையின் வடகிழக்கில் தமிழர் சுயநிர்ணய உரிமை குறித்து ஐ.நா.வின் மேற்பார்வையில் பொது வாக்கெடுப்பு நடத்த ஐக்கிய நாடுகள் சபையில் வாதிட இங்கிலாந்து அரசாங்கத்தை வலியுறுத்துகிறது.

ஆதரவு தெரிவித்தவர்கள்: கரேன் ஆடம், கிளேர் ஆடம்சன், ஸ்டெஃபனி கல்லகன், பாப் டோரிஸ், கோர்டன் மெக்டொனால்ட், ஃபுல்டன் மெக்ரிகோர், ஸ்டூவர்ட் மெக்மில்லன், கரோல் மோச்சன், கெவின் ஸ்டீவர்ட், மெர்சிடிஸ் வில்லல்பா

**Recognition of the Tamil Genocide and Support for Self-determination**

.

Submitted by: Bill Kidd, Glasgow Anniesland, Scottish National Party.

.

Date lodged: Thursday, 09 October 2025
Motion type: Standard Motion
Motion reference: S6M-19300

.

That the Parliament recognises the reported mass atrocities committed against the Tamil people in Sri Lanka, particularly during the final stages of the armed conflict in May 2009, which resulted in the deaths of an estimated 70,000 to 146,000 Tamil civilians, as documented by the UN and international human rights organisations; acknowledges the findings of the UN panel of experts' report on accountability in Sri Lanka in 2011, the Office of the United Nations High Commissioner for Human Rights (OHCHR) Investigation on Sri Lanka (OISL) in 2015, and successive UN Human Rights Council resolutions highlighting credible allegations of war crimes, crimes against humanity and systemic persecution against Tamils; notes the continuing calls from the Tamil diaspora and civil society for an international investigation into the genocide and for recognition of the Tamil people's right to determine their political future through a referendum, and calls on the UK Government to advocate at the UN for a UN-monitored referendum on Tamil self-determination in the north-east of Sri Lanka, in line with international legal standards and past UN resolutions recognising peoples' rights to self-determination in post-conflict contexts.

.

Supported by: Karen Adam, Clare Adamson, Stephanie Callaghan, Bob Doris, Gordon MacDonald, Fulton MacGregor, Stuart McMillan, Carol Mochan, Kevin Stewart, Mercedes Villalba

Link: https://www.parliament.scot/chamber-and-committees/votes-and-motions/S6M-19300

# நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் 'செம்மணிப் படுகொலை' மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டதற்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு பிரித்தானிய அரசாங்கத்திடம் வேண்டுகோள்

24.10.2025

பிரித்தானிய பாராளுமன்ற அமைச்சர் மாண்புமிகு பீற்றர் கெய்ல் (Peter Kayle) மற்றும் மாண்புமிகு சிபோன் மக்டோ (Dame Siobhain McDonagh) ஆகியோரிடம் நாடுகடந்த தமிழீழ அரசாங்க உறுப்பினர்கள் "செம்மனி மனித புதைகுழி" மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதிக் கோரிக்கை முன்வைப்பு. செம்மனி படுகொலை மற்றும் காணாமல் ஆக்கப் பட்டோர் பின்னனியில் சிறீலங்கா சிங்கள படைகளின் ஆட்கடத் தல்களில் ஈடுபட்ட தமிழின நபர்களான கருணா, டக்ளஸ் தேவா னந்தா மற்றும் பிள்ளையான் போன்றவர்கள் மீது சர்வதேச தடைகள் கொண்டுவருமாறு நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வலியுறுத்தல்.





ஜப்பசி 13ம் திகதி Tamils for Labour அமைப்பின் தலைவர் திரு சென் கந்தையா(Mr. Sen Kandiah) அவர்களின் ஒருங்கமைப் பில் பல்நாட்டு மக்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். லேபர் கட்சியின் மூத்த உறுப்பினரும் தமிழ் மக்களுக்காக பிரித்தானிய பாராளுமன்றில் குரல் கொடுத்த மாண்புமிகு சிபோன் (Dame Siobhain McDonagh) மற்றும் பிரித்தானிய அரசின் முக்கிய அமைச்சர் மாண்புமிகு (Peter Kayle, Secretary of State for Business and Trade) ஆகிய இருவருடனும் நாடுகடந்த தமிழீழ அரசாங்க உறுப்பினர்கள், செம்மனி மனித புதைகுழி மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக நடவடிக்கை எடுக்கு மாறும் கேட்டுக் கொண்டனர்.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் இங்கிலாந்தின் வட மேற்கு பிர தேசத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமதி கபில்டன் தர்சிகா அவர்கள் இரு அமைச்சர்களுக்கும் தனது வாழ்க்கை வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களால் எவ்வாறு பாதிக்கப் பட்டது என விளக்கமாக எடுத்துரைத்தார். மேலும் செம்மனியில் குழந்தை தாயுடன் புதைக்கப்பட்ட கொடுமைகள் பற்றியும் விளக்கினார். பின்னர் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் உறுப்பினர்கள் மாண்புமிகு அமைச்சர்களிடம் செம்மனி மனிதப் புதைகுழி அறிக்கையை சமர்பித்தனர். மாண்புமிகு அமைச் சர்கள் அங்கு கூடியிருந்த 200க்கு மேற்பட்ட பல் நாட்டு மக்களின் முன்பு உரை நிகழ்த்தும் போது இன்று நாம் காசா (Gaza) நகரில் நடந்த கொடுமை சம்பவங்கள் போன்றே சிறீ லங்காவிலும் வெளி உலகிற்கு மூடி மறைக்கப்பட்டு 80000ற் கும் மேற்பட்ட தமிழ் பொது மக்கள் 15 வருடங்களுக்கு முன்னர் கொன்று குவிக்கப்பட்டதாகவும் ஆனால் அவர்களுக்கு இன்றும் நீதி கிடைக்கவில்லை என்பதையும் மாண்புமிகு சிபோன் கூறி னார். தான் தற்போதைய அமைச்சர்களுடன் பேசி இன்னும் ஒரு வருடத்திற்குள் காணாமல் ஆக்கப்பட்டோர்கள் மற்றும் செம்மணி மனிதப் புதைகளுக்கு பின்னனியில் இருந்த இராணுவ அதிகாரிகளுக்கு மட்டுமின்றி அவர்களுக்கு உதவிய தமிழ் குழுக்களின் தலைமைகள் டக்லஸ் தேவானந்தா போன் றவர்கள் மீதும் சர்வதேச தடைகளை விதிக்க உடனடியாக நட வடிக்கை எடுக்க உழைப்பேன் என்று வாக்குறுதி அளித்தமை மிக வரவேற்கத்தக்க விடயமாகும்.

# பிரான்சில் இடம்பெற்ற லெப். கேணல் நாதன் மற்றும் கப்டன் கஜன் ஆகியோரின் 29ஆம் ஆண்டு நினைவேந்தல்

26.10.2025

பிரான்ஸ் தலைநகர் பாரிசில் வைத்து 26.10.1996 அன்று சிறீ லங்கா அரச கைக்கூலிகளின் தாக்குதலில் வீரச்சாவைத் தழு விக்கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலக நிதிப்பொறுப்பாளர் லெப்.கேணல் நாதன் மற்றும் ஊடகப் போராளியும் ஈழமுரசின் நிறுவக ஆசிரியருமான கப்டன் கஜன் ஆகியோரின் 29ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று (26.10.2025) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 15.00 மணியள வில் இம் மாவீரர்களின் கல்லறை அமைந்துள்ள பிரான்சு பந்தன் துயிலும் இல்லத்தில் இடம்பெற்றது.

ஆரம்ப நிகழ்வாக குறித்த மாவீரர்களின் கல்லறை மீது தமிழீழத் தேசியக்கொடி போர்த்தப்பட்டது.

பொதுச்சுடரினை மாவீரர் பணிமனை செயற்பாட்டாளர் திரு. குமார் அவர்கள் ஏற்றிவைத்தார்.

கப்டன் கஜன் அவர்களின் கல்லறைக்கு அவரது சகோதரர்கள் ஈகைச்சுடரேற்றி மலர் மாலை அணிவித்தனர்.

லெப்.கேணல் நாதனின் கல்லறைக்கு கப்டன கஜன் அவர் களின் சகோதரர்கள் ஈகைச்சுடரேற்றி மலர் மாலை அணி வித்தனர்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்துகொண்ட அனைவரும் சுடர் ஏற்றி மலர்வணக்கம் செலுத்தினர்.

நினைவுரையினை தமிழர் ஒருங்கிணைப்புக்குழு செயற்பாட் டாளர் திரு.சத்தியதாசன் அவர்கள் ஆற்றி இருந்தார்.

தொடர்ந்து தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் என்ற தாரக மந்திரத்தோடு நிகழ்வு நிறைவடைந்தது.







**எத்தனை தடைகள் ஏற்பட்டபோதும் எத்தனை துன்பங்கள் ஏற்பட்டபோதும் கொண்ட கொள்கையில் நம்பிக்கையும், அந்த நம்பிக்கையின் அத்திவாரத்தில் கட்டப்பட்ட உறுதியும், அந்த உறுதியின் நெருப்பாக எரியும் விடுதலை வேட்கையும் எம்மிடம் உள்ளவரை, எமது இலட்சிய பயணம் வெற்றியில் முடியும் என்பது நிச்சயம்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# இலங்கையில் இடம்பெற்ற இனவழிப்பு தொடர்பில் சர்வதேச விசாரணையை முன்னெடுக்க ஒத்துழையுங்கள்

## சுவிற்ஸர்லாந்து சமூக ஜனநாயகக் கட்சி எகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றம்

29.10.2025

இலங்கையில் இடம்பெற்ற இனவழிப்பு தொடர்பில் சர்வதேச விசாரணை மேற்கொள்வதற்கு சுவிற்ஸர்லாந்து அரசாங்கம் முழுமையான ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும், பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகளுக்கு ஆதரவளிக்கவேண்டும் எனவும் சுவிற்ஸர்லாந்து சமூக ஜன நாயகக் கட்சி அதன் மாநாட்டில் ஏகமனதாகத் தீர்மானம் நிறை வேற்றியுள்ளது.

சர்வதேச மட்டத்தில் இயங்கிவரும் அரச சார்பற்ற அமைப்பான “இலங்கையில் சமத்துவம் மற்றும் விடுதலைக்கான மக்கள்” எனும் அமைப்பினால் தமிழர்களுக்கு எதிரான இனவழிப்பு தொடர்பில் கடந்த வருடம் வெளியிடப்பட்ட சட்ட அறிக்கையில் உள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு வரையப்பட்டி ருக்கும் மேற்படி தீர்மானத்தில் “ஈழத்தமிழர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுவரும் கட்டமைக்கப்பட்ட வன்முறைகள், படுகொலைகள், மிகமோசமான மனித உரிமை மீறல்களை வன்மையாகக் கண்டிக்கிறோம்” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை அத்தீர்மானத்தில் இலங்கையில் இடம்பெற்ற மீறல்களை ஐக்கிய நாடுகள் இனவழிப்புப் பிரகடனத்தின்படி இனவழிப்பாகக் கருதமுடியுமா என்பது பற்றி சர்வதேச கட் டமைப்புக்களின் ஒத்துழைப்புடன் ஆராயுமாறு சுவிற்ஸர்லாந்து அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு தமிழ் புகலிடக்கோரிக்கையாளர்களின் பாதுகாப்பு, சுவிற்ஸர்லாந்தில் வாழும் புலம்பெயர் தமிழர்களின் ஒத்து ழைப்பு, மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் என்பன உறுதிப்படுத்தப்படுவதை முன்னிறுத்தி பல தசாப்தகாலமாக அவர்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் என் பவற்றை உள்வாங்கக்கூடியவகையில் மிகத்தெளிவான மனித உரிமைகள்சார் சுவிற்ஸர்லாந்து வெளிநாட்டுக்கொள்கை இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்றும் அத்தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற் றங்கள் தொடர்பில் சுயாதீன சர்வதேச விசாரணைகளை முன்னெடுப்பதற்கும், பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற் கான முயற்சிகளுக்கும் சுவிற்ஸர்லாந்து அரசாங்கம் முழுமை யான ஒத்துழைப்பை வழங்கவேண்டும் எனவும் அதில் கோரப்பட்டுள்ளது.

மேலும் வருடாந்தம் மேமாதம் 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தன்று நடைபெறும் நிகழ்வு உள்ளிட்ட நினைவுகூரல் நிகழ்வுகள் எவ்வித இடையூறுமின்றி முன்



னெடுக்கப்படுவதற்கு இடமளிக்கப்படவேண்டும் எனவும், சுவிற் ஸர்லாந்தில் உள்ள தமிழ் புகலிடக்கோரிக்கையாளர்களின் பாதுகாப்பும், நீதியும் உறுதிப்படுத்தப்படும் வரை அவர்களை மீண்டும் இலங்கைக்குத் திருப்பியனுப்புவது தவிர்க்கப் படவேண்டும் எனவும் அத்தீர்மானத்தில் வலியுறுத்தப் பட்டுள்ளது.

# அவுஸ்திரேலியாவில் சிறீலங்காவைச் சேர்ந்த பௌத்த துறவி பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக சிறைத்தண்டனை!

12.10.2025

அவுஸ்திரேயாவில் சிறீலங்காவைச் சேர்ந்த பௌத்த துறவி ஒருவர் சிறுமிகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச் சாட்டில் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இலங்கையை சேர்ந்த கீஸ்பரோவில் உள்ள தம்ம சரண கோவிலின் தலைமை துறவியான 70 வயதான நாவோ துன்னே விஜிதா என்பவரே குற்றச்சாட்டுக்களை எதிர் கொள்கிறார்.

மெல்போர்ன் வசித்து வரும் அவருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்படவுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட் டுள்ளன. மெல்போர்ன் விகாரையில் ஆறு சிறுமிகளுக்கு எதிரான வரலாற்று பாலியல் குற்றங்களில் தேரர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டுள்ளார்.

1994 மற்றும் 2002 க்கு இடையிலான காலப்பகுதியில் இந்தக் குற்றங்களைச் செய்ததாக இன்றையதினம் கவுண்டி நீதிமன்ற நடுவர் மன்றம் தீர்ப்பளித்தது.

வயதான தேரரால் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான அனைத்து சிறுவர்களும் விகாரையில் சமய நெறி கற்க சென்றவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



**தமிழர் வரலாற்றில் என்றோ மாண்டுபோன வீரமரபு மீண்டும் மறுபிறப்பு எடுத்தது; அடிமைத்தனத்தின் அமைதியைக் கலைத்துக் கொண்டு ஒரு புயல் எழுந்தது; சருகாக நெரிபட்ட தமிழன், மலையாக எழுந்து நிமிர்ந்தான்; அடிமை விலங்குகளால் பிணைக்கப்பட்டு, நீண்ட நெடுங்காலமாகத் தூங்கிக்கொண்டிருந்த தமிழ்த் தேசம் விழித்துக்கொண்டது; இந்தத் தேசிய எழுச்சிக்கு மூச்சாக இருப்பவர்கள் எமது மாவீரர்கள்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-







சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்**
**சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# காலத்தால் சாகாத சிரஞ்சீவிகள்

–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –



எமது வீர சுதந்திர வரலாறு, எம் மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டிருக்கின்றது. இவர்களது இறப்புக்கள் அர்த்தமற்ற இழப்புக்கள் அல்ல; இந்த வீரர்களின் சாவுகள், எமது சரித்திரத்தையே இயக்கும் உந்து சக்தியாக, எமது போராட்டத்தின் உயிர்மூச்சாக, எமது போராளி களின் உறுதிக்கு உத்வேகமளிக்கும் ஊக்குசக்தியாக அமைந்து விட்டது. இந்த மாவீரர்கள் காலத்தால் சாகாத சிரஞ்சீவிகள், சுதந்திரச்சிப்பிகள், எமது மண்ணிலே ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச்சென்ற வீரமறவர்கள். எமது இனத்தின் சுதந்திரத்திற்காக, கௌரவத்திற்காக, பாதுகாப்பிற்காக தமது இன்னுயிரை அர்ப்பணித்துள்ள இந்த மகத்தான தியாகிகள், காலம் காலமாக எமது இதயக்கோவிலில் பூசிக் கப்பட வேண்டியவர்கள்.

ஒரு விடுதலை வீரன் சாதாரண வாழ்க்கையை வாழும் ஒரு சாதாரண மனிதப்பிறவி அல்ல; அவன் ஒரு இலட்சியவாதி. ஒரு உயரிய இலட்சியத்திற்காக வாழ்பவன். தனக்காக வாழாமல் மற றவர்களுக்காக வாழ்பவன். மற்றவர்களின் விடிவுக்காக, விமோசனத்திற்காக வாழ்பவன். சுயநலமற்ற, பற்றற்ற அவனது வாழ்க்கை உன்னதமானது, அர்த்தமுள்ளது. சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக அவன் தனது உயிரையும் அர்ப்பணிக்கத் துணிகிறான். எனவே விடுதலை வீரர்கள் அபூர்வமான மனிதப்பிறவிகள், அசாதரணமான பிறவிகள்.

சிங்கள ஆயுதப்படைகளையும் உலகின் மிகப் பெரிய இந்தியப் படைகளையும் எதிர்த்து, தனித்து நின்று போராடி எமது மாவீரர்கள் படைத்த மகத்தான சாதனைகள் இன்று உலக வரலாற்றில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறது. நீண்டதும், கடினமானதும், அபாயகரமானதுமான இந்த போர்களில் எமது விடுதலை வீரர்கள் சந்தித்த இன்னல்களை, இடையூறுகளை, துன்பங்களை எழுத்தில் விபரிக்க முடியாது. இரும்பையொத்த இலட்சிய உறுதியுடன், எதையும் தாங்கும் இதயத் துடன், சாவுக்கு அஞ்சா வீரத்துடன் எமது வீரர்கள் போராடி னார்கள்; போர்க்களத்தில் வீரமரணத்தைத் தழுவினார்கள்.

நான் உயிருக்கு உயிராக நேசித்த தோழர்கள், என்னுடன் தோளோடு தோள் நின்று போராடிய தளபதிகள், நான் பல்லாண்டுகாலமாக வளர்த்தெடுத்த போராளிகள் களத்தில் வீழ்ந்தபோதெல் லாம் எனது இதயம் வெடிக்கும். ஆயினும் சோகத்தால் நான் சோர்ந்து போவதில்லை. இந்த இழப்புக்கள் எனது இலட்சிய உறுதிக்கு மேலும் மேலும் உரமூட்டியிருக்கிறன. இந்த மாவீரர்களை நான் கௌரவிக்கின்றேன். அவர்களுக்குச் சிரம் தாழ்த்தி வணக்கம் செலுத்துகிறேன். அவர்களது தியாகத்தையும், வீரத்தையும், விடுதலைப்பற்றையும் எண்ணிப் பார்க்கும்போது எனது உள்ளம் பெருமை கொள்கிறது.

இந்த மண்ணின் மைந்தர்களைப் பெற்றெடுத்த பெற்றோர்களையும் நான் போற்றுகிறேன். உங் களது குழந்தைகள் தமது உயிருக்கும் மேலாக, தமது தாய்நாட்டின் சுதந்திரத்தை நேசித்தார்கள். இந்த உத்தமமானவர்களை ஒரு புனித இலட்சியத்திற்கு உவந்தளித்த பெற்றோராகிய நீங்கள் நிச்சயம் பெருமை கொள்ளவேண்டும். உங்களது குழந்தைகள் சாகவில்லை; சரித்திரமாகிவிட் டார்கள்.

எமது தாய்நாடு விடுதலை பெறவேண்டும். எம்மைப் பிணைத்திருக்கும் அடிமை விலங்குகள் உடைத்தெறியப்பட வேண்டும். எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழ வேண்டும். இந்த இலட்சியம் ஈடேறவேண்டுமாயின் நாம் போராடித்தான் ஆகவேண்டும். இரத்தம் சிந்தித் தான் ஆகவேண்டும். மரணத்தின் நிழலில் வாழத்தான் வேண்டும்.

நாம் ஒரு இலட்சிய விதையை விதைத்திருக்கிறோம்; அதற்கு எமது வீரர்களின் இரத்தத்தால் நீர் பாய்ச்சி வளர்க்கிறோம். அந்த விதை வளர்ந்து விருட்சமாகி எமது மாவீரர்களின் கனவை ஒரு நாள் நனவாக்கும்.


Lucksme
Gold House
Traditional of Trust & Quality
416 - 587 - 8000
மின்னும்
பொன் நகை
மிந்தும் புன்னகை
காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6
சிங்கப்பூர் மற்றும் டுபாய் நகைகள் மிகவும் மலிவு விலையில்..
உங்கள் இராசிக்கேற்றபடி அதிஸ்டக்கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் குறிப்பிட்ட நேரத்தில் செய்து தரப்படும்


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
NORITZ
25
Install Included
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
WHY UPGRADE TO TANKLESS
Endless Supply of Water, SAVE UP to Save Up To 40%
25 YEARS WARRANTY
FREE ESTIMATE
Sale & Service
Repair & Installation
S.Kumar @ (416-993-8001
Airehvac70@gmail.com


K
★ திருமணம்
★ பூப்புனித நீராட்டு விழா
★ பிறந்தநாள்
★ பரதநாட்டிய அரங்கேற்றம்
மற்றும் எல்லாவித
வைபவங்களுக்கான தலை, முக
அலங்காரங்கள் உங்கள்
விருப்பத்திற்கேற்ப
சிறந்த முறையில் ...
Kurinchi
Beauty Creations
Bridal ★
Non- Bridal ★
Saree Pleating & ★
Draping
Hair Flowers & ★
Bouquet
and more.
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu

# மண்மீட்க மாண்டவர் மாவீரர் தாமே

பாய்கின்ற புலிமறவர் வீழ்ச்சி கண்டும்
பதறார்கள், கொடியோர்கள், மானமில்லார்!
தீயன்ன இவர்க்குந்தான் வாழ்வு வேண்டிச்
செருக்களத்தில் உயிர்தந்தார்கள் யாவர் என்போம்?

மொழிகட்கெல் லாமுந்திப் பிறந்தாள், தாயாய்
முதன்மையுற்றாள், ஒப்பற்ற வடிவே டுத்தாள்,
எழிலுற்ற திருக்குள்தொல் காப்பியத்தை
எவ்வுலகும் போற்றிடத்தா மெனக்கே யீந்தாள்!
பழியுற்று வாழ்வாயோ தமிழா! ஈன்ற
பைந்தமிழாள் வாடுமடா களத்தில் வாடா!
விழியன்ன இவள்தழைக்க தற்கொ டுத்த
வெற்றிமிகு மாவீரர் வழியில் வாடா!

பெண்ணென்றும் ஆணென்றும் பார்ப்ப தில்லை,
பிள்ளையென்றும் பெரியரென்றும் பார்ப்ப தில்லை
திண்ணென்ற வலிபடைத்தோர் மான முள்ளோர்
திரண்டெழுந்தாற் சிங்களமா வெல்லும்! இல்லை
குன்றொன்று நின்றன்ன தலைவன் நின்றான்
கூற்றுவனே வரின்வரட்டும் தமிழா வாடா!
மண்தன்னை மீட்கமொழி காக்க மாண்ட
மாவீரர் திருவடிக்கே சென்னி சேர்ப்போம்!

வாசலிலே முகங்காட்ட அஞ்சி னாரும்,
மாற்றார்கள் எம்மண்ணில் நின்ற நாளில்
தூசெழுந்து மூக்கினிலே புகுந்து விட்டால்
தும்முதற்கே அஞ்சினரும், வல்லி ருட்டில்
வீசுகின்ற ஒளியஞ்சி விளக்கேற் றாமல்
விழுந்தெழுவா ரையுந்தாம் கண்டோம்! அந்நாள்
மாசிதுதான் தமிழர்க்கென றெழுந்து பொங்கி
மறப்போரில் உயிர் தந்தார் யாவர் என்போம்?

செத்தோர்கள், ஊறுற்றோர், இல்லி ழந்தும்
திருவிழந்தும் ஏதிலிய ரானோர், மற்றுப்
பித்தாகி அலைவோர்கள், பிறராவர்! நாம்
பிழைத்திருப்போம், பல்லறிவும் திறனும் நன்கு
கற்றோராய்ப் பெருமைகொள்வோம் என்ப ராகிக்
கல்விமன்றிற் போய்வருவார் உண்டோ! இந்நாள்
பற்றோடு பிறர்துன்பங் கண்டி ரங்கிப்
படுகளத்தில் உயிர்தந்தார் யாவர் என்போம்?

தாய்மண்ணின் அவலங்கள் கண்டு நாணார்,
தந்நலமே கருதியிங்கு வாழ்வார், எந்தப்
பேய்கொண்டு தந்தாலும் வாங்கி யுண்பார்
பிறருழைப்பில் நயங்காண்பார், நாட்டைக்க காக்க

–பண்டிதர் பரந்தாமன் – 27.11.1995






# இலங்கைத் தீவின் பூர்வீகக் குடிகள் யார்?

**முந்தி வந்த செவியைப் பிந்தி வந்த கொம்பு மறைக்கிறது என்பது பழமொழி. இலங்கைத்தீவின் பூர்வீக குடிமக்கள் யார்? தமிழரா அல்லது சிங்களவரா? என்ற கேள்வி இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து தீவிரமாக அலசப்பட்டு வருகிறது.**

இலங்கைத் தீவின் வரலாறு கி.மு. 483 இல் இன்றைய கலிங்கம் அல்லது வங்காளத்திலிருந்து வந்து குடியேறிய விஜயனும் அவனது எழுணூறு தோழர்களோடு தொடங்குகிறது என்றும் இலங்கைத்தீவு அவன் பரம்பரையினரான சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தமான நாடு என்பது சிங்கள - பௌத்த தீவிரவாதிகளது திரிபுவாதமாக இருந்து வருகிறது.

அதுமட்டும் அல்லாது தமிழர்கள் வந்தேறு குடிகள், காலத்துக்கு காலம் இலங்கை மீது படையெடுத்து வந்த பாண்டிய சோழ மன்னர்களால் கொண்டுவந்து குடியேற்றப்பட்டவர்கள் அவர்கள் சிங்களப் பெரும்பான்மை மக்களது தயவில் வாழுகின்றவர்கள் என்பதும் இந்த சிங்கள - பௌத்த இனவாதிகளது வாதமாகும்.

இந்த வாதத்துக்குத் துணாயாக மகாவம்சம், சூழவம்சம் போன்ற பவுத்த இதிகாசங்கள், சிங்கள பௌத்த தேசியத்தின் முன்னோடியென கொண்டாடப்படும் அநகாரிக தர்மபால போன்ற சிங்கள தேசியவாதிகளது எழுத்துக்கள் மேற்கோள்களாக எடுத்துக் காட்டப்படுகின்றன.

“போர் என்பது வேறுவழிகளில் முன்னெடுக்கப்படும் அரசியல்“ (‘war is an extension of politics by other means’) என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். இன்றைய தமிழர் - சிங்களவருக்கு இடையிலான ஈழப்போரை இலங்கைத் தீவு யாருக்குச் சொந்தம் என்ற அரசியல் கேள்விக்கு வேறு வழிகளில் பதில் காண முனையும் முயற்சி என்று வர்ணிப்பதில் தவறில்லை என்றே சொல்லலாம்.

தமிழ் மக்களும் சிங்கள மக்களும் இலங்கைத்தீவின் மக்கள். எண்ணிக்கையில் குறைந்தவர்களாக இருக்கும் தமிழர்களுக்கும் எண்ணிக்கையில் பெரும்பான்மையாக இருக்கும் சிங்களவர்களுக்கும் நாட்டில் ஒத்த உரிமை, சொந்தம் இருக்கிறது என்று ஒத்துக் கொண்டால் இனச் சிக்கல் இருக்காது. வடக்கும் - கிழக்கும் தமிழ் மக்களது தாயக பூமி, தெற்கும் மேற்கும் மத்தியும் சிங்கள மக்களது தாயக பூமி என்ற யதார்த்தம் ஒப்புக் கொள்ளப் பட்டால் ஒரு தீவில் இரண்டு நாடுகள் இரண்டு மக்கள் சமாதானமாக வாழ்ந்திருக்கலாம். ஆனால் இந்த யதார்த்தத்தைச் சிங்கள - பவுத்த இனவாதிகள் ஒத்துக் கொள்ளத் தயாராயில்லை. தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்பதையோ அவர்களுக்கும் சிங்களவர் போன்றே ஆட்சியுரிமையில் பங்கு இருக்கிறது என்பதையோ இந்த சிங்கள - பவுத்த தீவிரவாதிகள் ஒத்துக் கொள்ளப் பிடிவாதமாக மறுக்கிறார்கள்.

**சிங்கள பௌத்த தீவிரவாதிகளில் ஒருவரான சனாதிபதி சந்திரிகா, தமிழர்கள் இலங்கையைச் சேர்ந்தவர்கள் அல்லர். இந்த [சிறிலங்கா] நாட்டைச் சேராதவர்கள் எப்படி தனிநாடு கோர முடியும் என தென்னாபிரிக்க நாட்டுத் தொலைக்காட்சிக்குக் கொடுத்த செவ்வியில் கூறி உள்ளார். கொஞ்சக் காலத்துக்கு முன் சிறிலங்கா ஒரு பௌத்த நாடென்றும் நாடுமொன்று மக்களுமொன்று என்று சந்திரிகா அனுராதபுரத்தில் நடந்த ஒரு வைபவத்தில் பேசி இருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது**

இந்த சிங்கள - பௌத்த தீவிரவாதிகளில் ஒருவரான சனாதிபதி சந்திரிகா தமிழர்கள் இலங்கையைச் சேர்ந்தவர்கள் அல்லர். இந்த (சிறீலங்கா) நாட்டை சேராதவர்கள் எப்படி தனிநாடு கோர முடியும் என தென்னாபிரிக்க நாட்டுத் தொலைக் காட்சிக்குக் கொடுத்த செவ்வியில் கூறியுள்ளார். இதில் அதிசயம் எதுவும் இல்லை. அநகாரிக தர்மபால, எஸ். டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்கா, ஏ.இ.குணசிங்கா, கோனார் இராசரத்தினா, மேத்தானந்தா, சிறில் மத்தியூ, ஜே.ஆர். ஜெயவர்த்தனா, டி.பி. விஜயதுங்க போன்றவர்கள் எழுதியும் பேசியும் வந்ததையே சனாதிபதி சந்திரிகாவும் சொல்லியிருக்கிறார். கொஞ்சக் காலத்துக்கு முன் சிறீலங்கா ஒரு பவுத்த நாடென்றும் நாடும் ஒன்று மக்களும் ஒன்று என்று சந்திரிகா அனுராதபுரத்தில் நடந்த ஒரு வைபவத்தில் பேசியிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.




சனாதிபதி சந்திரிகா தமிழர்கள் இந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் அல்லர் என்று கூறியதையிட்டு கொழும்பில் அரசியல் வியாபாரம் செய்து பிழைக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி மறுப்புத் தெரிவிக்கவில்லை, ஏனைய தமிழ்க் குழுக்கள் எதுவும் மறுப்புத் தெரிவிக்கவில்லை. நக்கினார் நாவிழந்தார் என்பது போல இந்தத் தமிழ்க் குழுக்களின் தலைவர்கள் வாயைத் திறக்காமல் மவுனிகளாக இருந்துவிட்டார்கள்.

அகில இலங்கை காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் ஒருவரே சனாதிபதியின் கூற்றை மறுத்து அறிக்கை விட்டுள்ளார்.

ஒரு நாடும் அந்த நாட்டு மக்களும் பொருளாதாரத் துறையில், நவீன தொழில் நுட்பத்துறையில் முன்னேற வேண்டுமென்றால் இன, மத, மொழி வேறுபாடுகளை மறந்து எல்லா மக்களும் ஒரு தாய்வயிற்றுப் பிள்ளைகள் போல் ஒத்த உரிமை, ஒத்த நிறை, ஒத்த விலை உடையவர்களாக வாழ்வதற்குரிய அரசியல் ஆட்சிமுறை இருக்க வேண்டும். அப்போதுதான் நாட்டில் சமாதானம், செழுமை, அரசியல் கட்டுப்பாடு நிலவும். இதற்கு கனடா நல்ல எடுத்துக் காட்டாக விளங்குகிறது. இதற்கு முற்றிலும் மாறாக சிறீலங்கா விளங்குகிறது. நல்லாட்சிக்குப் பதில் காட்டாச்சியே அங்கு நடைபெறுகிறது. செங்கோல் ஆட்சிக்குப் பதில் கொடுங்கோல் ஆட்சியே இடம்பெற்றுள்ளது. இதனால் அந்த நாடு குட்டிச்சுவராக நாளும் பொழுதும் தேய்ந்து போய்க் கொண்டிருக்கிறது.

சிங்கள - பௌத்த இனவாதிகள் விஜயனது வருகையோடுதான் இலங்கைத் தீவின் வரலாறு தொடங்குகிறது என எண்ணி நடக்கிறார்கள். ஆனால் இந்தக் கதையைக் கூறும் மகாவம்




சமே விஜயனது வருகைக்கு முன்னர் இலங்கைத்தீவில் நாகர், இயக்கர் அரக்கர் புலிந்தர் இருந்தனர் என்றும் அவர்கள் கொற்றமும் கொடியோடும் அரசாட்சி செய்தார்கள் என்றும் கூறுகிறது.

மகாவம்சம் 6ஆம் நூற்றாண்டில் மகாநாம என்ற புத்ததேரர் ஒருவரால் பாளி மொழியில் எழுதப்பட்ட இதிகாசம் ஆகும். மகாவம்சம் என்றால் 'பெருங்குடியினர்' என்பது பொருளாகும். வம்சம் தமிழ்ச் சொல்லாகும். இது இலங்கைபற்றிய கர்ணபரம்பரை கதையோடு ஆரம்பித்து மகாசேனன் ஆட்சியோடு (கி.பி. 334-362) முடிவுறுகிறது. இதன் இரண்டாவது பாகம் சூழவம்சம் எனப் பெயர் பெறும். இதன் முதல் பிரிவு 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தர்மகீர்த்தி என்ற புத்ததேரலால் எழுதப்பட்டது என நம்பப்படுகிறது. மகாவம்சத்தின் கதைநாயகன் துட்டகைமுனு வென்றால் (கி.மு. 101-77) சூழவம்சத்தின் கதைநாயகன் தாது சேனன் ஆவான். (கி.பி. 1137 - 1186).

தமிழ்மன்னன் எல்லாளன் அனுராதபுரத்தில் நீதி தவறாத செங்கோலாட்சியை நடாத்தினாலும் அவன் 'புன்னெறி' கொண்டவன் என்ற காரணத்தாலேயே அவன் மீது துட்டகைமுனு படையெடுத்தான் என மகாவம்சம் தெரிவிக்கிறது. அதுமட்டுமல்லாது எல்லாளன் - கைமுனு யுத்தத்தத்தை தமிழர்களுக்கு எதிராக சிங்களவர் நடாத்திய புனிதயுத்தம் எனக் காட்ட மகாவம்சம் முயன்றுள்ளது. ஆனால் எல்லாளன் - துட்டகைம்முனு யுத்தத்தின்போது எல்லாளன் தரப்பில் மட்டுமல்ல துட்டகைமுனுவின் படையிலும் தமிழர்கள் இருந்திருக்கிறார்கள். கைமுனுவின் படைத்தளபதிகளில் ஒருவனானக நந்தமித்தன் இருந்திருக்கிறான். இவனது நெருங்கிய உறவினன் எல்லாளன் படையின் சேனாதிபதியாக இருந்திருக்கிறான். அது மட்டும் அல்லாது உருகுணையிலிருந்து அனுராதபுரத்துக்கு படையெடுத்து வந்த கைமுனு இடையில் சிற்றரசர்களாக இருந்த 32 தமிழரசர்களைப் போரில் வென்றான் என்று மகாவம்சம் குறிப்பிடுகிறது. இது கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் முழு இலங்கையிலும் தமிழர்கள் பரவி வாழ்ந்தார்கள் என்பதைக் காட்டுகிறது.

இலங்கைத் தீவுக்கு புத்தபெருமான் மும்முறை வந்ததாக மகாவம்சம் குறிப்பிடுகிறது. முதல்முறை வந்தபோது ஆட்சியுரிமை பற்றி தங்களுக்குள் மோதிக்கொண்ட இரண்டு இயக்க அரசர்களிடையே சமாதானத்தை நிலை நாட்டினார் என்று குறிப்பிடுகிறது.

இரண்டாவதுமுறை வந்த போது புத்தர் நாகதீவில் இறங்கி அரசுரிமைபற்றி தங்களுக்குள் போர்புரிந்த இரண்டு நாகவரசர்களது பிணக்கைத் தீர்த்து, அந்த அரசர்கள் உரிமைவேண்டிப் போர்புரிந்த மணித்தவசில் அமர்ந்து மூன்று கோடி நாகர்களுக்கு புத்த தருமத்தைப் போதித்தாரென மகாவம்சமும் புத்த மத காப்பியமான மணிமேகலையும் குறிப்பிடுகின்றன.

மூன்றாவது முறை புத்தர் வந்தபோது இன்று களனி என்று அழைக்கப்படும் கல்யாணியில் அரச உரிமைக்காக சண்டை பிடித்துக் கொண்டிருந்த இரண்டு நாகவரசர்களுக்கிடையில் நிலவிய பிணக்கைப் போக்கினார் என்று மகாவம்சம் கூறுகிறது.

மகாவம்சம் இலங்கையின் ஆதிக்குடிகள் என தரச்சர்லம்புக் காணர் (முயல் அல்லது ஆடு) பாலிபோஜகர் (காகம்) மோரியர் (மயில்) புலிங்தர் இவர்களைக் குறிப்பிடுகிறது. மகாவம்சத்தின் கதைப்படி வேடர் விஜயனுக்கும் குவேனிக்கும் பிறந்த பிள்ளைகள் எனச் சொல்லப்பட்டுள்ளது. சிங்களவர் காலத்தால் வேடர்களுக்கு முந்தியவர்கள் எனக் காட்டவே மகாவம்ச ஆசிரியர் இந்த புனைந்துரையை புகுத்தியுள்ளார். வேடர்கள் பெருமளவில் இலங்கையில் குடியேறிய ஆரியர்களோடு நாளடைவில் மணவுறவு மூலம் கலந்தார்கள் என 'இலங்கையின் பழைய வரலாறு' என்ற நூலில் ஜி.சி. மெண்டிஸ் குறிப்பிடுகிறார். கண்டிச்சிங்களவர் தென்புலத்தோர்க்கு படையல் படைக்கும் வழக்கம் வேடர்களது கலப்பினால் ஏற்பட்டதென கலாநிதி செலிக்மன் அபிப்பிராயப் படுகிறார்.

இந்த நாகர்கள், இயக்கர்கள், வேடர்கள் ஆதிதிராவிட இன மக்கள் என்பதும் அவர்கள் சிறந்த நாகரிகம் படைத்தவர்கள் என்பதும் கவனிக்கத்தக்கது. (சங்ககாலப்புலவர்களில் சிலர் வேடர் இனத்தைச் சார்ந்தவர்களாக இருந்திருக்கிறார்கள்.)

இப்போது குடாநாடாக விளங்கும் யாழ்ப்பாணம் முன்னொரு காலத்தில் அதாவது கிறித்து பிறப்பதற்கு அநேக ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இரண்டு தீவுகளாக இருந்தது. மேற்கே நாகதீபம், மணிநாகதீபம், மணிபுரம் மணிபல்லவம் என்னும் பெயர்களால் வழங்கப்பட்ட பெருந்தீவும், கிழக்கே எருமை முல்லைத்தீவு என்று பெயர்பெற்ற சிறுதீவும் இருந்தன.

இவை காலத்துக்குக் காலம் இடம்பெற்ற கடற்கோள்களினால் பெரும் பகுதி அழிந்து போயின. இன்று யாழ்பாணக்குடா நாட்டைச் சுற்றியிருக்கும் புங்குடுதீவு, அனலைதீவு, மண்டைதீவு போன்ற தீவுகள் அப்பெருந்தீவகத்தின் மிஞ்சிய பகுதிகளேயாகும்.

கி.மு. வட இந்தியாவை ஆண்ட பாண்டவர்களில் ஒருவனான அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை மேற்கொண்டபோது இன்றைய கீரிமலையான நகுலமலையைக் கொண்ட மணிபுரத்துக்கு வந்தானென்றும், அந்த நாட்டு நாகவரசனனின் மகள் சித்திராங்கதையைக் கண்டு காதல் கொண்டு அவளை திருமணம் செய்தானென்றும் பாரதக்கதையில் சொல்லப்படுகிறது. அருச்சுனன் - சித்திராங்கதை இருவருக்கும் பிறந்த சித்திரவாகன் என்பான் தனது தந்தையாகிய அருச்சுனனைப் போரில் வென்றான் என்றும் அவனது கொடி சிங்கக் கொடியென்பதும் மகா பாரதத்தால் அறியப்படும்.

இந்தச் சிங்கக் கொடியே விஜயனின் சந்ததியோடு நாகர்கள் மணவுறவு வைத்து இரண்டறக் கலந்தபோது சிங்களவரின் கொடியாகப் பின் மாறியது.

குவேனியை மணந்த விஜயன் அவளைக் கைவிட்டு பின் பாண்டிய இளவரசியை மணந்து கொண்டான் என்று மகாவம்சம் குறிப்பிட்டாலும் குலப் பின்னணி எதுவும் இல்லாத விஜயனுக்கு மூவேந்தர்களில் ஒருவனாகிய பாண்டியன் பெண் கொடுத்திருக்க மாட்டான் என்றும் நாககன்னிகை ஒருத்தியையே விஜயன் மணமுடித்திருக்க வேண்டும் என்று முதலியார் சி. இராசநாயகம் அவர் எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரம் என்றும் நூலில் கூறியுள்ளார்.

**விஜயன் இலங்கையில் தரை இறங்கியபோது இன்றுள்ள ஐந்து ஈசுவரங்களான திருக்கேதீசுரவம், நகுலேசுவரம், திருக்கோணசுவரம், மாமாங்கேசுவரம் மற்றும் முன்னேசுவரம் என்ற சிவலாயங்கள் அப்போதும் இருந்திருக்கின்றன. இவற்றில் திருக்கேதீசுவரமும் திருக்கோணேசுவரமும் 06ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்த நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் இருவராலும் தேவாரப் பாடல் பெற்ற திருக்கோயில்களாகும்.**

நாகர், இயக்கர், அரக்கர், வேடர் இவர்கள் எல்லோரும் முன் குறிப்பட்டது போல் இனத்தால் திராவிடர்களே. சமயத்தால் சைவர்களே. இதேபோல் கலிங்கத்திலிருந்து இலங்கை வந்த விஜயனும் அவனோடு வந்த கலிங்கர்களும் சமயத்தால் சிவ வழிபாட்டினரே.

நாகர், இயக்கரை மனிதரல்லாதோர் அல்லது அரைமனிதர்க






ளாக மகாவம்சம் சித்தரிப்பதன் நோக்கம் சிங்களவரே ஆதிக் குடியென்ற மாயயை தோற்றுவிப்பதற்கேயாகும்.

விஜயன் இலங்கையில் தரையிறங்கியபோது இன்றுள்ள ஐந்து ஈசுவரங்களான திருக்கேதீசுவரம், நகுலேசுவரம், திருக் கோணேசுவரம், மாமாங்கேசுவரம் மற்றும் முன்னேசுவரம் போன்ற சிவாலயங்கள் அப்போதும் இருந்திருக்கின்றன. இவற் றில் திருக்கேதீசுவரமும், கோணேசுவரமும் ஆறாம் நூற் றாண்டில் வாழ்ந்த திருஞனசம்பந்த நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் இருவராலும் தேவாரப் பாடல்பெற்ற திருக்கோவில்க ளாகும்.

மேல்குறிப்பிட்ட ஐந்து ஈசுவரங்களைவிட தென்னிலங்கையில் புகழ்பெற்ற கதிர்காமம் தேவேந்திரமுனையில் சந்திரமௌவீசு வரர் போன்ற சைவசமய ஆலயங்களும் மத்தியில் சிவனொளி பாத மலையும் இருந்திருக்கின்றன.

இலங்கையை ஆண்ட இயக்கர்குல மன்னனான இராவணன் மிகச் சிறந்த சிவபக்தனாக விளங்கியவன். திருஞானசம்பந்தர் 'இராவணன் மேலது நீறு' என்று திருநூற்றுப் பதிகத்தில் இவனை போற்றிப் பாடியுள்ளார். எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த மாணிக்கவாசகர் இராவணனின் பட்டத்தரசியை ஆர் கலி சூழ்தென்னிலங்கை அழகமர் மண்டோதரிக்குப் பேரருள் இன்பம் அளித்த பெருந்துறை மேயபிரானை சீரியவாயால் குயிலே தென்பாண்டிநாடனைக் கூவாய் என குயில்பத்தில் சிறப்பித்துப் பாடியுள்ளார். 'பெருந்துறை மேயபிரான்' என்று தூய தமிழில் நாளும் தமிழ்வளர்க்கும் ஞானசம்பந்தர் குறிப்பிட்டது மாதோட்டத்து திருக்கேதீசுவரத்தில் எழுந்தருளி இருக்கும் சிவ னையே. மா என்றால் பெரியது என்று பொருள். தோட்டம் என் றால் துறை என்று பொருள். இந்த மாதோட்டமே பன்னெடுங் காலமாக இலங்கையின் முக்கிய துறைமுகமாக விளங்கியது. வங்காளக்குடாக் கடலுக்கூடாக கீழைத்தேசங்களுக்குப் பய ணம் செய்யும் மரக்கலங்களும், சீனதேசத்திலிருந்து வரும் மரக்கலங்களும் மாதோட்டம் வழியாகவே போய்வந்தன.

திருக்கோணேசுவர மலையில் காணப்படும் ஆழமான பெரிய வெட்டு இராவணன் வெட்டென்றே இன்றும் அழைக்கப் படுகிறது. திருகோணமலைக்கு வடக்கே உள்ள கன்னியாவில் காணப்படும் வெந்நீர் ஊற்றுக் கிணறுகள் இராவணன் தனது தாயாரின் நினைவாக வெட்டினான் என்ற ஐதீகமும் இன்று வரை தமிழ்மக்களிடையே இருந்துவருகிறது.

இராமாயண காலத்தில், இலங்கையின் மேற்குக் கரையோரத் தில் இப்போது மாதோட்டம் (மன்னார்) என்று அழைக்கப்படும் மாந்தை என்னும் நகரைத் தலைநகராகக் கொண்டுநாகர் வகுப்பைச் சேர்ந்த ஓவிய குலத்தவரும், தேவசிற்பியுமாகிய விசுவகர்மாவின் வம்சத்தவராகிய கம்மியர் ஆட்சிசெய்து வந் தார்கள். இலங்கை வேந்தன் இராவணன் தேவி மண்டோ தரியும், அவன் சிறிய தந்தையாகிய குபேரன் தேவி சித்திர ரேகையும், இம்மாந்த நகரைஆண்ட தேவகம்மிய அரசகுல வம்சத்துப் பெண்களே. முருகக் கடவுளால் ஆட்கொள்ளப்பட்ட அசுரர்கோனாகிய சூரபதுமனுடைய தேவி பதுமகோளையும் மாந்தை நகரத்தவளே.

மாந்தையை ஆண்ட அரசர் காந்தக்கோட்டையென்று பல தேசத்தாரால் போற்றப்பட்டதும் தூங்கெயில் என்று புறநானூற் றில் சிறப்பிக்கட்டதுமான இரும்புக் கோட்டையை உடையவர் களாகவும், வாணிபச் செழிப்புற்றவர்களாகவும், வீரம் கொடை இசை சிற்பம் ஓவியம் போன்றவற்றில் சிறப்புற்றவர்களாகவும் விளங்கினார்கள்.

மாந்தையில் வாழ்ந்த ஓவிய குலத்தாரின் சித்திரத் தொழிலின் சிறப்புக்காரணமாகவே ஓவியம் என்ற சொல் தமிழில் வழங் குகிறது.

எபிரேபிய மொழியில் யானையின் தந்தத்துக்கும் குரங்குக்கும் அகிலுக்கும் மயிலுக்கும் உரிய சொற்கள் இபம் கபி அகில் தோகை என்னும் தமிழ்ச் சொற்களே. இதேபோல் கிரேக்க மொழியில் அரிசி இஞ்சிவேர் கறுவா என்னும் பண்டங்களைக் குறிக்கும் சொற்கள் தூய தமிழ்ச் சொற்களே.

ஓவியரல்லாத மறுநாகர் வம்சத்து அரசர்கள் கதிரமலை இன்று முல்லைத்தீவு என்று அழைக்கப்படும் எருமை முல்லைத் தீவிலும் குதிரைமலையிலும் இருந்து அரசாண்டு வந்தார்கள். அல்லியரசாணியும் எழினியும் பிட்டங்கொற்றானும், குமண னும் குதிரமலையிலும் ஆந்தை ஆதனழிசி நல்லியக்கோடன் வில்லியாதன் என்பார் மாந்தையிலும், எருமையூரன் எருமை முல்லைத்தீவிலும் அரசாண்டதாக புறநானூறு - அகநானூற் றுப் பாடல்களால் அறிய முடிகிறது.

இந்தக் கதிரமலையே போத்துக்கேயர் கபலத்தில் கந்தர்குடை என்றும் ஒல்லாந்தர் காலத்தில் கந்தரோடை என்றும் ஓடைக் குறிச்சி என்றும் திரியலாயிற்று.

விஜயன் ஒன்றில் மாந்தையில் அல்லது கீரிமலையில் கரை வந்து இறங்கியிருக்க வேண்டும். யாழ்ப்பாண வைபமாலை விஜயன் கதிரமலையில் வந்திறங்கியதாகவே சொல்கிறது. "கதிரமலையில் வசித்த நாகவரசனுடன் நட்புக் கொண்டு இலங் கையில் பாழடைந்துகிடந்த கோவில்களைப் புதுப்பித்தும் புதிய கோவில்களைக் கட்டிவித்தும் வந்தான்" என்னும் கர்ணபரம் பரக் கதையைத்தான் மயில்வாகனப் புலவர் தாம் எழுதிய யாழ்ப்பாண வைபவமாலையில் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

விஜயனுக்குப்பின் சில தலைமுறைக்குள் இலங்கையரசர்கள் கலிங்ககுலம் நீங்க நாகர் குலத்தவரானார்கள். அதாவது தமிழர்களானார்கள்.

அசோகச் சக்கரவர்த்தி (கி.மு. 274 – 237) இலங்கையில் புத்த மதத்தைப் பரப்ப அனுப்பிய அவனது மகள் சங்கமித்தையும், மகன் மகிந்தனும் வந்திறங்கிய இடம் இன்றைய கீரிமலை யாகும். அப்போது அனுராதபுரத்தை ஆண்டு கொண்டிருந்த மன்னனான தேவநம்பிய தீசன் (கி.மு.247 - 207) நாக வம்சத்து அரசனாவான். அவன் சிங்கள அரசனல்லன். அவ னது பெயர் சிங்களப் பெயரன்று. தேவநம்பிய தீசன் என்றால் தேவனை நம்பிய தீசன் என்பது பொருளாகும். தீசன், நாகன் நாகவம்சப் பெயர்களாகும். அவனது தந்தையின் பெயர் மூத்த சிவன். சுத்தமான தமிழ்ப் பெயர். தேவநம்பியதீசனின் பின் அரியணை ஏறிய அவனது சகோதரர்களது பெயர்கள் முறையே உத்தியன் மகாசிவன் என்பதாகும். இவர்களுக்குப் பின் சோர நாகன் இளநாகன் அபயநாகன் சிறீநாகன் குட்டநாகன் மகா நாகன் எனப் பல நாகர்குல அரசர்கள் இலங்கையை ஆண்டி ருக்கிறார்கள்.

நாகவணக்கம் தமிழர்கள் மத்தியில் (சிங்களவர்களும் நாகர் களின் பரம்பரையாதலால் அவர்கள் மத்தியிலும் நாகவணக்கம் பரவலாக இருந்திருக்கிறது. நாகர்கோவில், நாகதம்பிரான் கோவில்கள் நாகவழிபாட்டோடு தொடர்புடைய சைவ ஆலயங்க ளாகும். தமிழர்களது பெயர்கள் பல நாகத்தோடு தொடர்புடைய தாக இருப்பது அவதானிக்கத்தக்கது. நாகநாதன் நாகராசா, நாகம்மா, நாகேசுவரி போன்ற பெயர்கள் இன்றும் வழக்கத்தில் இருக்கிறது.

இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த கிரேக்க வானியலாளர் தொலமி நாகர்களை குறிப்பிடும்போது பின்வருமாறு வர் ணிக்கிறார்:

"ஆண்களதும் பெண்களதும் காதுகள் பெரிதாக இருக்கும். இவர்கள் (நாகர்கள்) இரண்டு காதுகளிலும் பெரிய துளை போட்டு முத்துக்கள் பதித்த தோடுகளை அணிவார்கள்" பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் காதுக்குத் தோடு போடும் வழக்கம் மிக அண்மைக்காலமாக தமிழர்கள் மத்தியில் இருந் திருக்கிறது. (நானும் ஆங்கிலப்பள்ளிக்குப் போன பின்னரும் காதில் தோடுபோட்டிருந்தேன்.)

இதே தொலமி தான் வரைந்த உலகப் படத்தில் இலங்கையை யும் வரைந்துள்ளார். மேற்கே சிலாபம் தொடக்கம் கிழக்கே திருகோணமலைக்குக் கீழேயுள்ள பிரதேசத்தை அவர் 'நாகதீப' (Nagadipa) என்றே குறிப்பிடுகிறார்! வடமேற்குப் பகுதியை தமிழ் சொல்லான தாமிரபரணி அரபு மொழியில் ஒலிமாற்றம் செய்யப்பட்ட தப்பிரேபேன் என்ற பெயரால் குறிக்கிறார். கரை யோர நகரங்களை தமிழ்ப் பெயரான பட்டினம் என்ற வார்த் தையால் குறிப்பிடுகிறார். மேலும் இலங்கையை சாலிகே (சாலியூர்) என்றும் சிவனொளி பாதமலையை Oulipada என் றும் குறிப்பிடுகிறார். ஏனைய ஊர்ப்பெயர்கள் தமிழில் அல்லது அதன் நேரிடையான கிரேக்க மொழிபெயர்ப்பில் காணப் படுகிறது.

சங்க இலக்கியங்களில் ஒன்றான பட்டினப்பாலை இரண்டா யிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழகத்திற்கும் ஈழத்துக்கும் இடையில் நிலவிய வாணிக உறவை தெளிவாக்குகிறது.

'நீரின் வந்த நிமிர் பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூட்டையும்
வட மலைப் பிறந்த ஆரமும் அகிலும்...

கங்கைவாரியும் காவிரிப் பயனும்
ஈழத்துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகி'
(பட்டினப்பாலை 185-193)

மேலும் தமிழகம் - ஈழம் இரண்டுக்கும் இடையிலான உறவை உறுதிசெய்வதுபோல சங்கப் புலவர்கள் பட்டியலில் ஈழத்துப் பூதந்தேவனார் என்ற புலவர் பெயரும் இடம் பெறுவது குறிப் பிடத்தக்கது.

கி.மு.483இல் இருந்து கி.பி. 896 வரை அதாவது விஜயன்




முதல் காசியப்பன்வரை சுமார் 1,400 ஆண்டுகள் இலங்கையை ஆண்ட மன்னர்களில் யாருமே தனிச் சிங்களவர் இல்லை. காரணம் சிங்கள இனமும் சிங்களமொழியும் கி.பி. 7 அல்லது 8 ஆம் நூற்றாண்டளவிலேயே உருவாக்கப்பட்டு அடையாளம் காணப்படுகிறது. இதனாலேயே இலங்கைத் தீவுக்கு சிங்களத்தில் பெயர் யாதும் இல்லை. சிறீலங்கா என்பது கிரந்த (திருந்தாத சமஸ்கிருதம்) மொழிச் சொல்லாகும். சிங்கள தீப என்ற சொல் மகாவம்சத்தில் இருமுறையும் சூழவம்சத்தில் ஒரேயொருமுறையும் இலங்கையைக் குறிக்க அதன் ஆசிரியர்களால் எடுத்தாளப்படுகிறது.

இதற்குக் காரணம் இருக்கிறது. இலங்கை எப்போதும் மூன்று அல்லது அதற்கு மேலான பகுதிகளாக ராஜரட்டை, மாயரட்டை, உருகுணரட்டை, யாழ்ப்பாணம் பிரிக்கப்பட்டு அரசர்களால் ஆண்டுவந்தபடியால் “ஏக இலங்கை” என்ற உணர்வு பிறக்க வழியில்லாது போயிற்று. துட்ட கைமுனு முதலாம் பராக்கிரமபாகு முதலாம் விஜயபாகு இவர்கள் மட்டுமே முழு இலங்கையையும் தங்கள் ஆட்சிக்குள் கொண்டுவந்ததாக நம்பப்படுகிறது.

விஜயபாகு கி.பி. 1038அஇல் இராஜாதிராஜன் என்ற சோழ மன்னலால் கொல்லப்பட்ட சிங்கைநகர் அரசனான மானபரணனின் மகளான திலகசுந்தரியைத் திருமணம் செய்து தனது பட்டத்தரசியாக்கினான். மானபரணின் மகனே முதலாம் பராக்கிரமபாகு ஆவான். தவனது தாயார் பெயர் இரத்தின வல்லி. அவன் சிங்கபுரத்தில் பிறந்ததாக இராட்சதகுளத்தருகே அவனால் வெட்டப்பட்ட சாசனம் கூறும். யாழ்ப்பாண சிங்கையாரிய சக்கரவர்த்திகள் இராமேசுவரத்தை ஆண்ட பிராமண குலத்தரசருடன் சம்பந்தம் செய்து ஆரிய அரசப் பெயர் புனைந்து உபவீதமுந்தரிந்திருந்தார்கள். அது போலவே பராக்கிரமபாகுவுக்கும் உபநயனச் சடங்கு செய்யப்பட்டது. எனவே பராக்கிரமபாகு தந்தைவழியிலும் தாய்வழியிலும் தமிழனும் சைவனும் ஆவான்.

பண்டைக்காலத்தில் இலங்கையில் வசித்த நாகரும் இயக்கரும் ‘எலு’ என்ற மொழியையே பேசினார்கள். இது பின்னர் ‘ஈழு’ என வழங்கப்பட்டது. இதன் காரணமாகவே இலங்கைக்கு ‘ஈழம்’ என்ற பெயர் உண்டாயிற்று. ‘ஈழம்’ ‘சீழம்’ என மருவிச் பின் ‘சிஹழும்’ ‘சிங்களம்’ என மாறியது. ‘சிஹ’ என்ற பாலிமொழிச் சொல்லின் பொருள் ‘சிங்கம்’ என்பதாகும். விஜயன் சிங்கத்தின் வழித்தோன்றல் என்பதால் அவன் சந்ததியினர் சிங்களவர் என்று அழைக்கப்பட்டார்கள் என மகாவம்ச ஆசிரியர் குறிப்பிடுவது அவரது கற்பனையே.

சிங்கள மொழியின் தாய்மொழியான ஈழமொழி பேசிவந்த படியாற்றான் யாழ்ப்பாணத்திலுள்ள சில ஊர்களின் பெயர்களும், காணித் தோம்புகளின் பெயர்களும் ‘சிங்களப் பெயர்களாக’ தோற்றமளிக்கின்றன. அப்பெயர்கள் விஜயன் இலங்கைக்கு காலடி எடுத்து வைக்கு முன்னரே வழக்கில் இருந்தன என்பதில் எந்த அய்யமும் இல்லை. இதே சமயம் குருநாக்கல் கேகாலை போன்ற சிங்கள ஊர்களின் தோம்புகள் தமிழில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இன்றைய சிங்களமொழி பாலி, சமஸ்கிருதம் தமிழ் எலு மொழிகளின் கலப்பினால் உருவாகிய ஒரு கதம்ப மொழியாகும். சிங்கள மொழியில் காணப்படும் சொற்களில் மூன்றில் ஒரு பங்கு தமிழ்ச் சொற்களை வேராகக் கொண்டவையே. சிங்கள மொழியின் எழுத்து வடிவம் பெரும்பாலும் தெலுங்கு கன்னட மொழிகளை ஒத்து இருச்கிறது. காரணம் சிங்கள மொழிக்கு எழுத்து வடிவமும் அமைத்தவர்கள் தென்நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்த நாகார்க்சுனர்போதிதத்துவர் போன்ற திராவிட புத்த தேரர்களே.

பாண்டுவாசனது ஆட்சியில் மகதநாட்டிலிருந்து வந்த அனுராதன் என்ற அரசகுமாரன் என்பவனே தனது பெயரால் அனுராதபுரியை தலைநகராக்கினான்.

அனுராதபுரத்து அரசர்கள் கதிரமலையை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த யாழ்ப்பாண அரசர்களோடு நட்புரிமை கொண்டு வாழ்ந்ததோடு மணவுறவும் வைத்துக் கொண்டார்கள். சில சிங்கள அரசர்கள் சைவசமயிகளாகவும் இருந்திருக்கிறார்கள். அது போலவே தமிழ் மக்கள் சிலரும் பவுத்தர்களாக இருந்திருக்கிறார்கள். 1946 ம் ஆண்டு எடுக்கப்பட்ட புள்ளி விபரத்தின்படி 2. 6 விழுக்காடு இலங்கைத்தமிழர் தங்களைப் புத்தசமயத்தினர் என தெரிவித்து இருந்தார்கள்.

மேலே குறிப்பிட்டதுபோல் தேவநம்பியதீசனின் தாயாரும் மூத்தசிவனின் பட்டத்தரசியும் நாகவம்சத்தவளே. அக்காரணம் பற்றியே ‘நாகன்’ ‘திஸ்ஸன்’ என்னும் பெயர்கள் மூத்தசிவனின் பிள்ளைகளுக்கு இடப்பட்டது.

மகதநாட்டு அசோகனும் தேவநம்பியதீசனும் சமகாலத்தவராவார். புத்த மதத்தை இலங்கையில் பரப்ப அசோகன் தனது மகள் சங்கமித்தை, மகன் மகிந்தன் (அசோகனது வரலாற்றுப்படி அவனுக்கு மகன் இருந்ததற்கு ஆதாரம் இல்லை) இருவரையும் புத்தர் ஞானம் பெற்ற வெள்ளரசு மரத்தின் கிளையோடு அனுப்பி வைத்தான். அவர்களை ஏற்றிவந்த கப்பல் யாழ்ப்பாணத்து வடகரையில் இப்பொழுது சம்புத்துறையென அழைக்கப்படும் சம்பு கோளத்தில்தான் வந்திறங்கின.

தேவநம்பியதீசனைப் போன்றே கதிரமலையை ஆண்ட அரசர்களும் புத்தமதத்தைத் தழுவி புத்த பள்ளிகளையும் தாதுகர்ப்பங்களையும் கட்டுவித்தார்கள். யாழ்ப்பாணத்தில் உள்ள கந்தரோடையில் அகழ்வாராய்ச்சியின் போது கண்டெடுக்கப்பட்ட புத்தமத வழிபாட்டுச் சின்னங்கள் இந்த அரசர்களாலும் அதற்குப் பின்னரும் கட்டப்பட்ட விகாரைகளின் அழிபாடுகளே.

தமிழர்கள் நான்கு அல்லது ஐந்து நூற்றாண்டு காலமாக சமண புத்தசமயத்தவர்களாக இருந்திருக்கிறார்கள். சங்ககாலப் புலவர்கள் பலர் சமண, புத்தமதத்தவராவர். கோவலன் அநியாயமாகக் கொல்லப்பட்டபின் மாதவியும், அவளது மகள் மணிமேகலையும், கோவலன் தாய்தந்தையரும் (மாநாய்க்கன்) புத்தமதத்தை தழுவினார்கள் என மணிமேகலை கூறுகிறது. அதே சமயம் கண்ணகியின் பெற்றோர் (மாசாத்தான்) சமண மதத்தை தழுவினார்கள்.

தமிழில் உள்ள ஐம்பெரும் காப்பியங்களில் மணிமேகலையும் குண்டலகேசியும் புத்தமத காப்பியங்களாகும். சிந்தாமணி சமணமத காப்பியம். சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோ அடிகள் சமணமுனிவராவர். வளையாபதி அழிந்தொழிந்து போனதால் அதன் ஆசிரியர் பற்றிய குறிப்பு எதுவும் தெரியவில்லை.

அனுராதபுரத்தரசர்கள் வலிமை குன்றிய காலத்தில் சுயாதீனமாகவும், வலிமை மிக்க காலத்தில் திறைசெலுத்தியும் அரசு புரிந்து வந்தார்கள். அனுராதபுரம் கதிரமலையன்றி மேற்கே கல்யாணியிலும் (களனி), கிழக்கே கொட்டியாராத்திலும், தெற்கே திசமகாரமையிலும் மாத்தளைக்கு வடக்கே லேனதொறை என்னும் இடந்திலும் நாக இராகதானிகள் இருந்தன.

அனுராதபுரத்தில் விஜயனின் சந்ததி ஐந்து தலைமுறைக்குள் அற்றுப்போக கலிங்கரும் நாகரும் கலந்த மிசிரகுலத்தவரே அதன்பின் அரசாண்டு வந்தார்கள். பாண்டி நாட்டிலிருந்து பல தடவை படையெடுத்து வந்த தமிழரசர்களும் அனுராதபுரத்தை கைப்பற்றி அரசாண்டு வந்தார்கள். அப்போது மேலும் பல தமிழ்க் குடிகளும் இலங்கையில் குடியேறின.

நாகரும், இயக்கரும், கலிங்கரும், வேடரும், தமிழரும் கலந்தே சிங்கள இனம் உருவாகியது. தெற்கே மாத்தறை தொடக்கம் வடக்கே சிலாபம்வரை வாழுகின்ற கரையோர மக்கள் எல்லோரும் தமிழ்நாட்டிலிருந்து குடிபெயர்ந்து நாளடைவில் சிங்களவர்களான தமிழர்களேயாவர். அண்மைக் காலத்தில்கூட நீர்கொழும்பு சிலாபத்தில் தமிழ்நாட்டிலிருந்து குடிபெயர்ந்த பரவர் மதமாற்றம் காரணமாக தமிழை விடுத்து சிங்களத்தை கற்கை மொழியாகப் புகுத்தியதினால் சிங்களவர்களாக மாறினவர்களே. இதேபோல் வாணிக நிமித்தமாக கொழும்புக்கு வந்து குடியேறிய தமிழ்நாட்டு செட்டிமார், நாளடைவில் கொழும்புச் செட்டிகளாக மாறி இன்று முழுச் சிங்களவர்களாக மாறி விட்டார்கள்.

சிங்கள அரசர்கள் தங்களுக்குள் அரியாசனத்துக்கு மோதிக் கொண்ட போதெல்லாம் பாண்டிய சோழநாட்டு மன்னர்களின் உதவியையே நாடினார்கள். அங்கிருந்து பெரும் படைகளை திரட்டி ஆட்சியில் இருந்தவர்களைத் துரத்திவிட்டு ஆட்சியைக் கைப்பற்றினார்கள் இவர்களால் கொண்டுவரப்பட்ட படையினர் இலங்கையில் தங்கி நாளடைவில் சிங்களவர்களாகவும் பௌத்தர்களாகவும் மாறினார்கள்.

சாளுக்கிய மன்னனான ஆறாவது விக்கிரமாதித்தனுக்கு விஜயபாகுவால் அனுப்பப்பட்ட தூதுவர்களை சோழர்கள் அவமதித்தார்கள் என்பதற்காக சோழர் மீது படையெடுக்க விஜயபாகு முனைந்தபோது அவனது வேளக்காரப்படை அதற்கு எதிராகக் கிளர்ச்சி செய்தது.

சிங்கள அரசர்கள் காலத்துக்கு காலம் பாண்டிய சோழ இளவரசிகளை திருமணம் செய்து கொண்டதால் அந்த இளவரசிகளைத் தொடர்ந்து பிராமணர்படைத்தலைவர்கள் வேலைக்காரர்கள் குடிபெயர்ந்தார்கள். இவர்களும் நாளடைவில் சிங்கள சமூகத்தோடு சங்கமமானார்கள்.

**இன்றைய கண்டிய பிரபுத்துவ குடும்பங்களான ரத்வத்தை, அலு விகாரை, எகலபொல, மொன்றாவெல, பிலிமத்தலாவ, கெப்பட்டிப்பொல அசல் தமிழ்ப் பெயர்களின் திரிபே.**

**ரத்வத்தை என்பது ரதவாதயன் என்ற சொல்லை அடியாகக் கொண்டது. அதாவது அரசனி கட்டளைப்படி கசையடித் தண்டனையை நிறைவேற்றுபவன். அலுவிகாரை என்பது அளவுகாரன் அதாவது நிலத்தை அளப்பவன். எகலபொல என்பது எல்லைப்பாதுகாவலனைக் குறிக்கும். மொன்றாவல தமிழ் சொற்களான மண்வேலை என்பதன் திரிபாகும். மண்வேலைக்குப் பொறுப்பாக இருப்பவன். புலவர் சக தலைவன் சமன் பிலிமத்தலாவ – தலைமைப் புலவர். இதேபோல் கெப்பெட்டிப்பொல கல் சக வேலை சக பாலன் – அதாவது கல்லாலான கட்டிட வேலையை மேற்பார்வை (பாலனம்) செய்பவன். பண்டாரநாயக்க என்ற பெயர் அரண்மனை பொக்கிசத்துக்கு தலைவனாக இருப்பவனைக் குறிக்கும். சிங்களவரின் பரம்பரையை பின்னோக்கிப் பார்த்தால் அது ஒரு தமிழன் அல்லது தமிழச்சியின் ஆரம்பத்தில் போய் முடிவதைப் பார்க்கலாம்.**

கண்டிராஜ்யத்தின் கடைசி நான்கு நாயக்க மன்னர்கள் காலத்தில் தமிழ்நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட படைத்தளபதிகள், மந்திரிபிரதானிகள் காலப்போக்கில் சிங்களவர்கள் ஆனார்கள். கண்டி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட கண்டிய தலையாரிகளில் அரைவாசிப்பேர் தமிழிலேயே கையெழுத்திட்டார்கள்.

இன்றைய கண்டிய பிரபுத்தவ குடும்பங்களான ரத்வத்தை, அலுவிகாரை, எகலபொல, மொன்றாவெல, பிலிமத்தலாவ, கெப்பட்டிப்பொல அசல் தமிழ்ப் பெயர்களின் திரிபே.

அலுவிகாரை என்பது அளவுகாரன் அதாவது நிலத்தை அளப்பவன். எகலபொல என்பது எல்லைப் பாதுகாவலனைக் குறிக்கும். ரத்வத்தை என்பது ரதவாதயன் என்ற சொல்லை அடியாகக் கொண்டது. அதாவது அரசனின் கட்டளைப்படி கசையடித் தண்டனையை நிறைவேற்றுபவன். மொன்றாவல தமிழ்ச்சொற்களான மண்வேலை என்பதன் திரிபாகும். மண்வேலைக்குப் பொறுப்பாக இருப்பவன். புலவர் சக தலைவன் சமன் பிலிமத்தலாவ . தலைமைப்புலவர். இதே போல் கெப்பெட்டிப்பொல கல் சக வேலை சக பாலன் - அதாவது கல்லாலான கட்டிட வேலையை மேற்பார்வை (பாலனம்) செய்பவன்.

பண்டாரநாயக்க என்ற பெயர் அரண்மனை பொக்கிஷத்துக்கு தலைவனாக இருப்பவனைக் குறிக்கும்.

சிங்களவரின் பரம்பரையை பின்னோக்கிப் பார்த்தால் அது ஒரு தமிழன் அல்லது தமிழச்சியின் தொடக்கத்தில் போய் முடிவதைப் பார்க்கலாம்.

எனவே நாகர், இயக்கர், இயம்பர், வேடர், தமிழர் போன்ற திராவிட இனத்தவரே வரலாற்று அடிப்படையிலும், இதிகாச அடிப்படையிலும் இலக்கிய அடிப்படையிலும் இலங்கையின் பூர்வீக குடிமக்களாவர். ஆட்சித்தலைவர் சந்திரிகாவும் மற்றும் சிங்கள - பௌவுத்த இனவாதிகள் கூறுவதுபோல் வந்தேறு குடிக ளான சிங்களவர் அல்ல.

நன்றி: களத்தில் 04.11.199 - நக்கிரன்

www.sangathamil.ca



# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# திருமலை – மூதூர் கடற்கரைச்சேனைப் படுகொலை 08, 09, 10. நவம்பர் 1985

1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் எட்டாம், ஒன்பதாம், பத்தாம் திகதிகளில் கடற்படையினர், விமானப் படையினர், இராணுவத்தினர் கூட்டாக இணைந்து மூதூர் கடற்கரைச்சேனைப் பகுதி மீது தாக்குதல் நடத்தினார்கள். இத்தாக்குதலில் தரை வழியாற் சென்ற இராணுவத்தினரால் ஆலயங்களில் தஞ்சமடைந்திருந்த பொதுமக்கள் மோசமாகத் தாக்கப்பட்டார்கள். வீடுகளிலிருந்த பலர் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தார்கள். உயிரிழந்தவர்களின் உடல்களை இராணுவத்தினர் வீடுகளுடன் சேர்த்து எரியூட்டினர். ஆலயங்களிற் தங்கியிருந்த எழுபதிற்கும் மேற்பட்டவர்களைக் கைது செய்து அழைத்துச் சென்றனர். இவர்கள் இதுவரை திரும்பி வரவில்லை. மூன்று நாள் தாக்குதலில் இருபதிற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தார்கள். பலர் காயமடைந்திருந்தனர். நூறிற்கும் மேற்பட்ட வீடுகள் எரிக்கப்பட்டன.



# தம்பலகாமம் படுகொலை 12.11.1985

1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பன்னிரண்டாம் திகதி திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமத்தில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பின் போது ஒன்பது தமிழர்கள் சுடப்பட்டனர். தம்பலகாமத்தில் இதே இடத்தில் நவம்பர் மாதம் இருபத்தாறாம் திகதி (1985) அன்று இராணுவத்தினர் மூன்று விவசாயிகளைச் சுட்டனரர். பின்னர் அவர்கள் எரியூட்டப்பட்டனர்.

தம்பலகாமம் கோயிலடியில் நடந்த வேறொரு சம்பவத்தில் ஐந்து தமிழர்கள் கடையினுள் வைத்து உயிருடன் எரிக்கப்பட்டனர். இதில் குபேந்திரன், நவரட்ணம் என்போர் உயிரிழந்தனர். மிகுதி மூவரும் எரிகாயத்துடன் மீட்கப்பட்டனர்.

# கந்தளாய் படுகொலை 09.11.1985

கந்தளாய்ப் பிள்ளையார் கோயிலடியில் வசித்த திரு. மயில்வாகனம் என்பவரது வீட்டிற்கு 09.11.1985 அன்றிரவு ஆயுதம் தரித்த சிங்கள இராணுவ படைகள் சென்று வீட்டிலிருந்த ஆறு பேரையும் ஆயுத முனையில் கடத்திச் சென்றார்கள். பின்னர் இவர்களின் உயிரற்ற உடல்கள் அல்லை வீதியில் நான்காம் கட்டைப் பகுதியில் மிகவும் மோசமான நிலையிற் காணப்பட்டன. கடத்திச் செல்லப்பட்ட ஆறு பேரில் மயில்வாகனத்தின் இரண்டு மகள்களும் அடங்குவர். இவர்கள் இரண்டு பேரின் பிரேத பரிசோதனையின் படி இவர்கள் மோசமான முறையில் பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்ட பின்னரே படுகொலை செய்யப்பட்டடுள்ளார்கள் என்பது தெரியவந்தது.



# மூளாய் வைத்தியசாலைப் படுகொலை 05.11.1987





மூளாய்க் கிராமம், யாழ். மாவட்டத்தில் வலிகாமம் மேற்கு சங்கானைப் பிரதேசசெயலர் பிரிவினுள் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் வசிக்கும் மக்களுக்கு மருத்துவ வசதியினை வழங்கும் இடமாக மூளாய் வைத்தியசாலை அமைந்துள்ளது.

பெரும் இன்னல்களுக்கும், பெரும் மருத்துவ நெருக்கடிகளுக்கும் மத்தியில் வாழ்ந்த மூளாய்க் கிராமத்து மக்கள், 1987 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஐந்தாம் திகதி சிகிச்சைக்காக மூளாய் வைத்தியசாலையில் இருந்தபோது இந்திய இராணுவத்தினரின் பீரங்கித் தாக்குதலிற்குள்ளாகினர். ஐந்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்ததுடன், பலர் காயமடைந்தார்கள். மருத்துவமனையும் சேதமடைந்தது.

05.11.1987 அன்று மூளாய் வைத்தியசாலைப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்

1. நாகர் மகேந்திரன் (44)
2. கந்தையா மகாதேவன் (48)
3. கந்தசாமி சிறீதரன் (18)
4. ஜயாத்துரை பேரின்பநாயகம் (58)
5. யோசேப் யோகராசா (35)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# நெடுங்கேணிச் சந்திப் படுகொலை 11.11.1987

வவுனியா மாவட்டத்தின் வடக்கே அமைந்துள்ள வவுனியா வடக்குப் பிரதேசெயலர் பிரிவின் பிரதான நகரமாக நெடுங்கேணி உள்ளது. இங்க வாழ்கின்ற மக்கள் பெரும்பாலானோர் விவசாயத்தையும் கூலித்தொழிலையுமே பிரதான தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வந்தார்கள். 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபரில் விடுதலைப்புலிகளிற்கும் இந்திய இராணுவத்திற்கும் இடையில் மோதல் தொடங்கிய பின் முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை, தண்ணீரூற்றுப் போன்ற பிரதேசங்களில் இந்திய இராணுவத்தின் இராணுவ நடவடிக்கை நடைபெற்ற போது, அக்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பெருமளவானோர் இடம்பெயர்ந்து நெடுங்கேணியிலும் தஞ்சம் புகுந்தனர். இவ்வாறு தஞ்சமடைந்த மக்கள் பாடசாலைகள், கோயில்கள், பொது இடங்கள் என்பவற்றில் தங்கினார்கள். மக்கள் செறிவாகத் தங்கியிருந்த கட்டிடங்கள் மீது இந்திய இராணுவத்தின் உலங்குவானூர்திகள் நடத்திய றொக்கற் தாக்குதலில் பதினைந்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்ததுடன், இருபத்தைந்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

**நெடுங்கேணி, மாறாஇலுப்பையைச் சேர்ந்த ட. தவமணி சம்பவம் பற்றி விபரிக்கையில்:**

"என்னுடைய மகள் நந்தினிக்கும் சுகயீனம் என்ற காரணத்தால் நெடுங்கேணி வைத்தியசாலையில் தங்கி நின்று சிகிச்சை பெறவேண்டி வந்தது. அதனால் நானும் அங்கு நின்றிருந்தேன். அன்றைய நாள் மாலை 05 மணியிருக்கும் இந்திய இராணுவத்தின் எம்.ஐ.ரக உலங்குவானூர்தி ஒன்று வைத்தியசாலையைச் சுற்றி வந்தது. அங்கு கூடி நின்ற மக்கள் அனைவரும் வைத்தியசாலை என்பதால், குண்டு போட மாட்டார்கள் என்ற எண்ணத்தில் வைத்தியசாலைக்குள் ஓடி வந்தார்கள். அதை அவதானித்த உலங்குவானூர்தி வைத்தியசாலையின் முன்பக்கத்தில் குண்டுகளை வீசியது. இதனால் குண்டுச் சன்னங்கள் எங்கும் பட்டு கண்ணாடி யன்னல்கள் அனைத்தும் நொருங்கி வீழ்ந்தது. அந்த நேரந்தான் எனக்குத் தலையிற் காயம் பட்டது. இதன் போது காயமடைந்தவர்கள் விழ ஏனையோர் கலவரப்பட்டு ஓடினார்கள். மகளைக் கூட்டிக்கொண்டு பின்புறமாக ஓடலாமென எத்தனித்த போது மகளின் காலால் இரத்தம் வழிவதை அவதானித்தேன். அத்துடன் மகளும் மயக்கமுற்று வீழ்ந்துவிட்டார். பின்னர் துணைக்கு எவரும் இல்லாத நிலையில் கையில் அகப்பட்ட துணியால் நானே மகளின் காலுக்குக் கட்டுப்போட்டதுடன், எனது காயத்திற்கும் கட்டுப் போட்டேன். வைத்தியசாலையிலிருந்த மருத்துவர்கள் அனைவரும் பாதுகாப்புத் தேடி ஓடிவிட்டதால் மருந்து கட்டக்கூட ஒருவரும் இருக்கவில்லை. இதனால் தனியார் மருத்துவமனை வைத்தியரின் உதவியுடன் இரவு 10:00 மணியளவில் எங்களுக்கு மருந்து கட்டப்பட்டது. அதன்பின்னர் அடுத்தநாள் ஊரடங்குச் சட்டம் போடப்பட் டிருந்ததால், வாகனங்கள் எதுவும் இருக்கவில்லை. பின்னர் பயணிகள் பேருந்து ஒன்றின் மூலமாக வவுனியா மருத்துவமனையிற் சேர்க்கப்பட்டோம். அதன் பின்னர் மூன்று மாதங்கள் தங்கிச் சிகிச்சை பெற்றோம். தற்போது கூட எனது தலையில் குண்டுச் சன்னம் உள்ளதால் பெரியளவில் ஒருவித வேலையும் செய்யமுடியாதுள்ளது. அதே போன்று தான் மகளின் நிலையும் உள்ளது. மேற்படி சம்பவத்தின் போது நெடுங்கேணி வைத்தியசாலையில் நின்றிருந்த பதினைத்து பேர் இறந்தனர். இருபத்தைந்து பேர் காயமடைந்ததாகக் கேள்விப்பட்டோம்."




**இச்சம்பவம் தொடர்பாக முள்ளியவளையைச் சேர்ந்த சிவ ராசா யோகரத்தினம் தெரிவிக்கையில்:**

"1987 ஆம்ஆண்டு இந்திய இராணுவம் தண்ணீரூற்று முள்ளியவளைப் பிரதேசத்தில் தாக்குதல்களை மேற்கொண்ட நேரத்தில் அங்கிருந்த மக்கள் பீதி காரணமாக இடம் பெயர்ந்துகொண்டிருந்தார்கள். அந்த நேரம் எமது கிராம சேவையாளராக இரந்த சிதம்பரப்பிள்ளைக்கு உதவியாளராகக் கடமையாற்றிக்கொண்டிருந்தேன். இந்தவேளை இடம்பெயர்ந்த மக்களுக்கு எங்களால் முடிந்த வாகன உதவிகளைச் செய்து நெடுங்கேணிக்கு கொண்டுசென்று பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் தங்க வைத்து நிவாரணப் பணிகள் செய்துகொண்டிருந்தோம். அன்றைய நாள் மாலை 5:00 மணியிருக்கும் இந்திய இராணுவத்தின் முதலைக் கெலி என்றழைக்கப்படும் எம். ஐ. 24 ரக உலங்குவானூர்தி வானத்திற் சுற்றிக்கொண்டிருந்தது. இதனாற் பயமடைந்த நாங்கள் பாதுகாப்புத் தேடி ஒளிந்துகொண்டோம். அந்த நேரம் நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு முன்னால் முதலாவது குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அதன்போது இடம்பெயர்ந்த மக்களுக்கு சமைத்த உணவு வழங்குவதற்காக அகப்பை வாங்க வந்த எமது பகுதி இலங்கை போக்குவரத்துக் கழக பேருந்துச் சாரதியான பொன்னம்பலம் இராமநாதன் என்பவர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டார். நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் கரியாலயத்தில் வேலை செய்த மகாதேவன் என்பவரின் மகன் மகேந்திரன் ஒரு உழவு இயந்திரத்தில் வந்துகொண்டிருந்தார். அவரும் அவ்விடத்திலேயே மரணமானார். அதே போன்று குளவிசுட்டானைச் சேர்ந்த உதவி அரசாங்க அதிபர் கரியாலயத்தில் வேலை செய்யும் சிவராசா என்பவரின் சகோதரன் தம்பி ஐயா அண்ணை என்பவரும் இடம் பெயர்ந்த மக்களை வாகனத்தில் ஏற்றியிறக்க உதவிபுரிந்த பாரவூர்திச்சாரதி துரைச்சாமி என்பவரும் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டார்கள். அதன்பின்னர் இரண்டாவது தாக்குதல் இடம் பெயர்ந்து வந்து நெடுங்கேணி மகாவித்தியாலயத் தில் தஞ்சமடைந்திருந்த மக்கள் மீது நடத்தப்பட்டது. இதன் போது பல பொது மக்கள் உடல் சிதறிய நிலையில் இறந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. அதன் பின்னர் இறந்தவர்கள் காயமடைந்தவர்களென அனைவருக்கும் நெடுங்கேணிப் பகுதியில் தனியார் வைத்தியசாலை நடத்தி வந்த வைத்தியர் ஜெயநாதன் மற்றும் வைத்தியர் கஜேந்திரா என்பவர்களுடன் அரச வைத்திய அதிகாரியும் இணைந்து சிகிச்சை செய்து மேலதிக சிகிச்சைக்காக வவுனியாவிற்கும் இறந்தவர்களை வீடுகளிற்கும் அனுப்பி வைத்தோம். இச்சம்பவம் நடந்து பல வருடங்கள் கடந்த நிலையிலும், அதனை நினைக்கும்போது அனைத்துச் சம்பவங்களும் நேற்றைய தினம் நடந்ததுபோல் கண்முன்னே வருமளவிற்கு அந்த நிகழ்ச்சி எனது மனதில் மாறாவடுவாகவுள்ளது."




**11.11.1987 அன்று நெடுங் கேணிச் சந்திப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:**

1. கந்தையா சிறிதரன் (22)
2. கதிர்காமு கார்த்திகேசு (44)
3. தம்பையா நற்குணம் (31)
4. மகாதேவன் மகேந்திரன் (31
5. முகமதுசரிபு றகீம் (26)
6. முத்தையா துரைராசா (64)
7. அப்துல்காதர் முகமது லிமாஸ் (24)
8. பொன்னம்பலம் இராம நாதன் (-)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடிய வில்லை.



# யாழ். குருநகர் புனித யாகப்பர் ஆலயம் மீதான சிறீலங்கா சுப்பர் சொனிக் விமானக் குண்டு வீச்சு 13.11.1996






குருநகர்க் கிராமம் யாழ்ப்பாண நகரத்திலிருந்து தெற்குப் புறமாக இரண்டு மைல் தூரத்தில் கடற் கரையோரமாக அமைந்துள்ளது. குருநகர்ப் பகுதியில் 1861 ஆம் ஆண்டு அடிக்கல் நட்டப்பட்டு 1881 ஆம் ஆண்டு புனித யாகப்பர் ஆல யம் அமைக்கப்பட்டது. இவ்வாலயச் சூழலில் 1973 ஆம் ஆண்டு இறந்த “அருட்திரு யோசவ் றேயை” அவர் கள் ஆலயத்தில் அடக்கம் செய்யப் பட்ட நினைவுக்கல்லும் உள்ளது.



13.11.1993 அன்று சனிக்கிழமை காலை 7:20 மணிக்கு அவ்வூர் மக்கள் இறைவழிபாட்டுக்காக ஆல யத்தில் ஒன்று கூடியிருந்த நேரம் குடாநாட்டு வான்பரப்பிற்குள் பிர வேசித்த சிங்கள விமானப்படை யின் சீன நாட்டுத் தயாரிப்பான “சுப்பர்சொனிக்” விமானங்கள் இரண்டு குருநகர் புனித யாகப்பர் ஆலயம் மீது இரு குண்டுகளை வீசின. இவ்வாலயத்தில் வழிபாடு செய்து கொண்டிருந்தவர்களில் பதின்மூன்று பேர் உயிரிழக்க, இருபத்தைந்திற்கும் மேற்பட்டவர் கள் காயமடைந்ததுடன், தேவலாய மும் சேதமடைந்தது.

குருநகர் புனித யாகப்பர் தேவா லயம் மீதான தாக்குதலை அரசியற் தலைவர்களோடு உலக நாடுகள் பலவும் கண்டித்திருந்தன. தேவா லயத்தின் மீதான் குண்டு வீச் சினால் மண்டபத்தினைத் தாங்கிய தூண்கள் துண்டங்களாகின. அந் தத் தூண்கள் இன்றும் யாகப்பர் சிலையின் அருகே ஞாபகச் சின்ன மாக வைக்கப்பட்டுள்ளன. புனித யாகப்பர் ஆலயத்தில் உயிர் நீத்த மக்களின் நினைவாக குருநகர் மக்களால் ஆலயப் படிக்கட்டில் “நீதிக் கான நினை வாலயம்” என்னும் நினைவுச் சின்னம் பொறிக்கப்பட் டுள்ளது.







**13.11.1996 அன்று புதின யாகப்பர் தேவாலயத்தில் படுகொலையில் கொல்லப்பட்டடோர் விபரம்:**

1. குரூஸ் அக்கினேஸ் (60)
2. கபிரியஸ் அன்ரன் (48)
3. அன்ரன் புஸ்பலீலா (41)
4. அன்ரன் அஞ்சலா (40)
5. அக்கினேஸ் குருசுப் பிள்ளை (80)
6. ஆரோக்கியநாதர் சில் வன் சஜீவன் (18)
7. ஜோன்லூத்து சேவியர் (45)
8. தோமஸ் பெனடிற் (55)
9. மேரி ஜெயசீலி தாசியஸ் (50)
10. மேரிசிந்துயா மதுர நாயகம் (2.5)
11. மேரிவெண்ணிலா அந் தோனிப்பிள்ளை (27)
12. சிங்கராயர் ஜானி கனோஜி (08)
13. சிங்கராசா யூஜின் காமலிற்றா (15)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங் களையும் பெறமுடியவில்லை.



# பாலிநகர் படுகொலை 03.11.1999

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப் பிரதேசசெயலர் பிரிவில் வவுனிக்குளத்தினை அண்மித்த பகுதியிற் பாலிநகர்க் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராம மக்கள் விவசாயம் மற்றும் வியாபாரத் தொழில்களில் ஈடுபட்டுவந்தனர். பாலிநகரைப் பொறுத்தவரை அது 1999 ஆம்ஆண்டு காலப்பகுதிகளில் அதிகளவு மக்கள் தொகையை கொண்டிருந்தது. அம்மக்களில் பெரும்பாலனோர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, நெடுங்கேணி, ஒட்டுசுட்டான், மாங்குளம் போன்ற பல்வேறு பகுதிகளிலுமிருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து அகதிகளாக வாழ்ந்து வந்தவர்களாவர். பாலிநகர்ச் சந்தி இக்காலப் பகுதியில் சிறு நகரப் பண்பு கொண்டதாகவும், அதிக மக்கள் செறிவைக் கொண்ட தாகவும் காணப்பட்டது.

03.11.1999 அன்று பாலிநகர் மக்கள் தமக்கு நடக்கவிருக்கும் அவலத்தை அறியாதவர்களாக தமது வழமையான செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். அன்று காலை பாலிநகர்ச் சந்தியில் மக்கள் தமது பல்வேறு பட்ட தேவைகளுக்காகக் கூடிநின்ற போது, காலை 11:30 மணியளவில் சிங்கள விமானப்படையின் "கிபிர்" விமானங்கள் குண்டுத்தாக்குதல்களை நடத்தின.

பாலிநகர்ச் சந்தியில் விமானம் குண்டுத்தாக்குதலை மேற்கொண்டு விட்டது என்பதை அறிந்த மக்கள், தமது உறவினர்களைத் தேடித் தாக்குதல் நடந்த இடத்துக்கு ஓடிச் சென்று கொண்டிருந்தபோது அம் மக்கள் மீதும் "கிபிர்" விமானங்கள் மீண்டும் தாக்குதலை நடத்தின. அன்றைய விமானத் தாக்குதலில் ஆறு பொதுமக்கள் உடல் சிதறி உயிரிழந்ததுடன், எட்டுப் பேர் காயமடைந்தனர்.

**03.11.1999 அன்று பாலிநகர் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:**

1. பெருமாள் சுரேஸ்குமார் (18)
2. வீரையா துரைராசா (55)
3. தாமோதரம் பிள்ளை கிருஸ்ணராசா (60)
4. வைத்திலிங்கம் சுதாகர் (17)
5. கிருஸ்ணராசா ஜெயசீலன் (-)
6. குமாரவேலு புண்ணியலிங்கம் (42)

குறிப்பு:- இச்சம்பவத்திற் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# கிளிநொச்சி மருத்துவமனை அருகாமைப் படுகொலை 02.11.2006



கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வளாகத்தை அண்மித்த பகுதிகளில் சிறீலங்கா விமானப் படைக்குச் சொந்தமான கீபிர் விமானங்கள் 2006 நவம்பர் 02 ஆம் நாள் பிற்பகல் 2 மணியளவில் நான்கு தடவைகள் குண்டத் தாக்குதல்களை மேற்கொண்டன. அதன்போது 16 குண்டகள் வீசப்பட்டன. இவற்றில் 15 குண்டுகள் வெடித்துள்ளன. இதன்போது பொது வைத்தியசாலைக்கு அருகிலிருந்த ஐவரும் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் இருவர் பாடசாலை மாணவர்கள். குண்டு வீச்சுத் தாக்குதல் காரணமாக உயிரிழந் தவர்களின் வீடு முழுமையாகச் சிதைவடைந்ததுடன் மேலும் கால்நடைகள் பலவும் பலியாகிய தோடு பயன்தரு மரங்கள் பலவும் அழிவடைந்தன.

அத்தோடு கிளிநொச்சி மாவட்டப் பொதுமருத்துவமனை வளாகத்தில் மேற்கொண்ட குண்டு வீச்சுத் தாக்குதலில் வைத்தியசாலை பலத்த சேதமடைந்தது. இங்கு வைத்தியசாலை ஊழியர்கள் மூவரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த மூன்று நோயாளர்களும் காயமடைந்துள்ளனர். விமானக் குண்டுச் சன்னங்கள் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக் கட்டடத்தின் நோயாளர் விடுதிகளையும் தாக்கியுள்ளன. வைத்தியசாலையின் கர்ப்பிணிப் பெண்களுக்கான பிரசவ விடுதி மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் என்பவற்றை குண்டுச் சன்னங்கள் தாக்கியுள்ளன. அதனால் அவற்றின் கூரைப் பகுதிகள் மிக மோசமாகச் சேதடைந்துள்ளன. இதேவேளை சத்திர சிகிச்சைக் கூடம் உட்பட வைத்தியசாலையின் பல்வேறு பகுதிகளிலும் கண்ணாடிகள் நொருங்கியுள்ளன.

இத்தாக்குதலையடுத்து வைத்தியசாலை விடுதிகளிற் தங்கிநின்று சிகிச்சைபெற்றுவந்த 300 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள், வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்கென வந்த 700 இற்கும் மேற்பட்ட நோயாளர்களும் வைத்தியசாலை வளாகத்தை விட்டுச் சிதறி ஓடினர். நடக்கமுடியாத நோயாளரை உறவினர்கள் வந்து கூட்டிச்சென்றனர். இத்தாக்குதலையடுத்து வைத்தியசாலையின் செயற்பாடுகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்தன.

இத்தாக்குதலின் காரணமாக பாடசாலை மாணவர்கள், மக்கள் என்பலரும் பெரும் அச்சத்துடன் வீதிகளிற் சிதறி ஓடினர். கிளிநொச்சி நகரப் பகுதி உட்பட கிளிநொச்சிப் பிரதேசத்தை அண்டிய பகுதிகளில் வாழ்கின்ற மக்களும் பாடசாலை மாணவர்களும் பெரும் அச்சமடைந்து வீதிகளிற் சிதறி ஓடினர். இதன் காரணமாக ஏ-09 நெடுஞ்சாலை மற்றும் உள் வீதிகள் அனைத்திலும் சன நெருக்கடி அதிகரித்திருந்தது. தாக்குதல் நடைபெற்ற இடத்தையும் இறந்தவர்களின் உடல்களையும் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரும் நேரிற் சென்று பார்வையிட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக சிறீலங்காவிற்கு நிதி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் (ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், நோர்வே மற்றும் அமெரிக்கா) தூதுவர்கள் தமது கவலையினை வெளியிட்டுள்ளனர்.

**இதில் உயிரிழந்தவர்களின் பெயர் விபரம் வருமாறு:**

1. முருகேசு சண்முகரத்தினம் (56)
2. சண்முகரத்தினம் சசி (20)
3. சண்முகரத்தினம் கிரிசாந் (18)
4. முருகேசு மார்க்கண்டு (62)
5. இரத்தினம் சரஸ்வதி (-)














JATHU
KITCHEN & RENOVATION
உங்கள் கனவுகளை
அடைய நாங்கள்
உதவுகிறோம்..
வீடு சீரமைப்பு
சேவைகளுக்கு
அழையுங்கள்
Custom Kitchen
Kitchen Counter Top
Kitchen Cabinets
Plumbing
Washroom Full Work
Electrical
Pot Light
Painting
Ground Moulding
Basement
Flooring
Free! ESTIMATES
Stairs
Tiles
Windows
Garage Door
Patio Door
Carpet
Cell: 647.532.4162
Off: 647.821.0356
RASAN
rassan311@gmail.com www:jathurenovation.com


அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சிணை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203


The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The ESTATE BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Broken Glass...?
We will fix it within 24 hour.
Free Estimate!
Call today
$50 OFF
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com




# யாழ்ப்பாணத் தீபகற்பத்திற்குச் சமீபத்திலுள்ள ஆதிக்குடியேற்றங்கள்

***இந்தத் தொடரில் ஆய்வு செய்யப்படும் யாழ்ப்பாணப் பகுதி தொல்லியல் மையங்கள்:***




1. கந்தரோடை 2. ஆனைக்கோட்டை 3. யாழ்ப்பாணம் கோட்டை 4. வல்லிபுரம் 5. பூநகரி 6. காரைநகர் 7. வேலணை: அல்லைப்பிட்டி - சாட்டி 9. புங்குடுதீவு 10. நயினாதீவு 11. நெடுந்தீவு

யாழ்ப்பாணத் தீபகற்பத்திற்குச் சமீபத்திலுள்ள ஆதிகாலக் குடியிருப்புகள் அமைந்த நிலங்களை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம்:

I. யாழ்ப்பாணத்திற்கு மேற்கே பாக்கு நீரிணையிலுள்ள சிறிய தீவுகள்.

II. யாழ்ப்பாணக் கடலேரிக்குத் தெற்கே இலங்கையின் பெரு நிலத்திலுள்ள பூநகரி.

## I.
## சிறிய தீவுகளில் ஆதிக்குடியேற்றங்கள்

### *காரைநகர்*

யாழ்ப்பாணத் தீபகத்திற்கு மேற்கே பாக்கு நீரிணையில் உள்ள தீவுகளில் மிகவும் வடக்கு நோக்கி அமைந்திருப்பது காரைநகர். முற்காலத்தில் இது காரைதீவு என அழைக்கப்பட்டது. இத்தீவின் கிழக்கு, தெற்குக் கரைகள் யாழ்ப்பாணக் கடல்நீரேரியின் நுழைவாயிலைக் கட்டுப்படுத்தியும், மேற்குக் கரையோரம் பாக்கு நீரிணையை நோக்கியும் காணப்படுகின்றன. கிறிஸ்தாப்த காலத்திற்குரிய ஜாதகக் கதைகள் இத்தீவை காரதீப எனவும், இத்தீவிற்கும் காவிரிப்பட்டினத்திற்கும், வங்காளத்திலிருந்த தாம்ரலிப்திக்கும் இடையே இருந்த கடல் தொடர்புகளைப் பற்றியும் பேசுகின்றன. காரைநகரின் களபூமிப் பகுதியில் அமைந்த சந்திராந்தை, பெருங்கற் பண்பாட்டுப் புதையல்களைக் கொண்ட ஒரு தொல்லியல் மையமாகும்.

**சந்திராந்தை பெருங்கற் பண்பாட்டு மையம்**
***தொல்லியல் அகழ்வாய்வுகள் - 1981***

சந்திராந்தை பெருங்கற் பண்பாட்டு மையம் காரைநகர் தீவில் களபூமி என்னும் பகுதியில் உள்ளது. சந்திராந்தையில் இன்றைய சுந்தரமூர்த்தி வித்தியாலயம் எனப்படும் சிறுவர் பாடசாலைக்குச் சமீபமாக பெருங்கற்காலப் புதையல்களைக் கொண்ட மையம் 10 ஏக்கர் பரப்பளவில் அமைந்திருக்கிறது. நெல் வயல்களை அடுத்து மேடாக உள்ள இந்நிலம் முன்னர் அமெரிக்க மிஷனரிமார்களின் சொத்தாக இருந்து, பின்னர் ஐந்து பங்காகப் பிரிக்கப்பட்டு தனியார் நில உடைமையாளர்களுக்கு விற்கப்பட்டது. இவர்கள் புதிய கட்டடங்கள் கட்டுவதற்காக அத்திவாரம் தோண்டிய பொழுதில் அவ்விடத்தில் புதைக்கப்பட்டிருந்த சடலங்கள் வெளிவந்ததாக ஊர்ப் பேச்சுகள் வெளிவந்திருந்தன.

1980 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள், கலாநிதி இரகுபதியினதும் அவரது சகாக்களினதும் தலைமையில் இவ்விடத்தில் மேலாய்வுகளை மேற்கொண்ட பொழுதில் திரு. கந்தசாமி என்பவருக்குச் சொந்தமான நிலத்தில் டிராக்டர் மண்ணை அகழ்ந்த குழிகளில் பலதரப்பட்ட ஆரம்ப கால முறிவளைவு கொண்ட கறுப்பு - சிவப்பு மட்பாண்ட ஓடுகள் காணப்பட்டன. இவ்விடத்திலுள்ள தொல்பொருள் சான்றுகள் முற்றாக அழிக்கப்படும் முன்னர் இங்கே ஒரு தொல்லியல் மீட்பாய்வு (Rescue Operation) மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது (Ragupathy, P. 1987: 43-44, 128).

இது விரைவாகச் செய்து முடிக்க வேண்டிய ஒரு செயற்பாடாக இருந்தமையால் குழிகள் அவசரமாகத் தோண்டப்பட்டன. பேராசிரியர் இந்திரபாலாவின் வழிநடத்தலில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் துறைக் குழுவினர் ஜனவரி 1981 இல் முதலாவது (A) குழியையும், ஒக்ரோபர் 1981 இல் இரண்டாவது (B) குழியையும் அகழ்ந்தார்கள்.



**முதலாவது அகழ்வாய்வுக் குழி**
Image Source - Dr P. Ragupathy

**முதலாவது குழி**

இங்கே அகழ்வாய்வு செய்யப்பட்ட முதலாவது குழி (Trench A) 10 × 10 அடி சதுரத்தில் திரு. கந்தசாமியின் காணியின் வடமேற்கு மூலையிலிருந்த உயர்ந்த மேட்டில் அகழப்பெற்றது. மேட்டின் உச்சிப் பகுதியிலிருந்து 5 அடிக்கும் கீழே, அருகிலிருந்த நெல் வயல்களுக்கு 3 அடிக்கு மேலே அகழ்வுக்குழி ஆரம்பிக்கப்பட்டது. ஏற்கனவே இவ்விடத்தில் மண் அகழப்பெற்ற ஒரு மீட்பாய்வு அகழ்வாக இது இருந்தமையால் இதில் காணும் மண் மட்டங்களை சரியான அடுக்கமைவுப் படுகை எனக் கூற இயலாது.

மேலிருந்து கீழாக மூன்று நில அடுக்குகள் இனம் காணப்பட்டன. மேலிருந்த முதலாவது அடுக்கில் மண் ஐதாகவும், மென்மையான மண்ணிறத்திலும் இருந்தது. இந்த அடுக்கில் ஒரு தனியான மண்டை ஓடு, மற்றைய தொடர் எலும்புகள் சிலவற்றோடு கண்டெடுக்கப்பட்டது. இரண்டாவது அடுக்கு இரண்டடி ஆழம்வரை சென்றது. இந்த அடுக்கில் எலும்புப் பகுதிகளும், ஈமப் பொருட்களும் கண்டெடுக்கப்பட்டன. அடுத்து வந்த மூன்றாவது அடுக்கு அடியிலிருந்த சுண்ணாம்புக்கல் மட்டம் வரை சென்றது.

**ஈமப் புதையல்**

முதலாவது குழியில் இரண்டு மண் அடுக்குகளில் இரு எலும்புப் பகுதிகள் காணப்பட்டன. இரண்டாவது அடுக்கில் காணப்பட்ட எலும்புகள் முற்றாக அழுகிய நிலையில் இருந்தமையால் அவற்றின் மிகுதிப் பகுதிகள் (Residues) மட்டுமே காணப்பட்டன. இவற்றோடு மட்பாண்டங்களும், ஈமப் படையற் பொருட்களும் காணப்பட்டன. ஈம வழிபாட்டு படையற் பொருட்கள் ஆனைக்கோட்டை அகழ்வுகளில் கண்டது போல மீன் எலும்புகள், நண்டு ஓடுகள், சிப்பிகள், பலவகை மிருக எலும்புகள், கால்நடைகளின் பற்கள் என்பனவாகும். இவை மட்பாண்டங்களினுள்ளே வைத்துப் புதைக்கப்பட்டிருந்தன. இந்த மட்பாண்டங்கள் கிண்ணங்கள், வட்டில்கள், பானைகள் ஆகியனவாகும். இவற்றோடு ஒரு நுண்கற் சீவலும் காணப்பட்டது (Ragupathy, P. 1987: 128-132).

**இரண்டாவது குழி**

1981 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் அகழப்பெற்ற இரண்டாவது ஆய்வுக் குழி திரு. கந்தசாமியின் காணியில் தென் பக்கத்தில் அங்கிருந்த வீட்டிற்கும் எல்லை வேலிக்கும் இடைப்பட்ட பகுதியில் இருந்தது. இங்கிருந்த நிலம் கடைசித் தொற்றுநோய் பரவற்கால புதையற்களால் போலும் கிளறப்பட்டிருந்தது. இவ்விடத்தில் 10 × 10 அடிச் சதுரக் குழி தோண்டப்பட்டது. இக்குழியில் எட்டு முழுமையான எலும்புக்கூடுகளும், ஏனைய




முதலாவது குழியிற் கண்ட பெருங்கற்கால ஈமப் படையல்
Image Source - Dr P. Ragupathy




முதலாவது குழியிற் கண்ட பெருங்கற்கால மட்பாண்ட ஓடுகளும் அவற்றிற் கண்ட குறியீட்டு எழுத்துக்களும்.
Image Source - Dr P. Ragupathy



முழு எலும்புக்கூட்டையும் காட்டும் இரண்டாவது குழி

Image Source - Dr P. Ragupathy

எலும்புகளின் பகுதிகளும் ஓர் ஒழுங்கில்லாமல் தாறுமாறாகப் புதைக்கப்பட்டிருந்தன. இதில் கலைக்கப்பட்ட மண் அடுக்குகளில் ஆரம்பகால கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள், மற்றும் ஆரம்பகால மட்கலன்கள், கல்மணிகள் என்பன காணப்பட்டன (Ragupathy, 1987: 128-132).

**கண்டுபிடிப்புகள்**

இரண்டாவது குழியில் கண்டெடுக்கப்பட்ட ஆரம்பகால முறிவளைவு கொண்ட கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஆறு ஆதிகால மையங்களில் கண்டெடுத்த மட்பாண்டங்கள் போன்றவையாகும். ஆனாலும் இந்த மட்பாண்டங்கள்கள் கந்தரோடை, ஆனைக்கோட்டை மட்கலன்களைப் போல மிருதுவாக, வழவழப்பாக இல்லை; சற்றுக் கரடுமுரடாகவே உள்ளன.

முதலாவது குழியிற் கண்ட மட்பாண்ட ஓடுகளில் மூன்றில் எழுத்து வடிவங்கள் காணப்பட்டன. ஒன்றில் 'ம' எனும் பிராமி எழுத்து வடிவமும் மற்றதில் இரட்டைச் சூல வடிவமும், மூன்றாவதில் அடைப்புக் குறிக்குள் கோட்டு வடிவமான மீன் சின்னமும் காணப்படுகின்றன.

இத்தொல்லியலகத்தில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களின் மிகச் சரியான காலத்தை நவீன கதிரியக்கச் சாதனங்களின் துணையின்றிக் கண்டுபிடிப்பது கடினமான காரியம். ஆனாலும் இதில் கண்டெடுக்கப்பட்ட கரடுமுரடான ஆரம்பகால முறிவளைவு கொண்ட கறுப்பு - சிவப்பு மட்பாண்ட ஓடுகளும், ஈமப் படையலாக வைக்கப்பட்டிருந்த நுண்கற் சீவலும் இவற்றின் காலத்தை கி.மு. முதலாம் நூற்றாண்டிற்கு எடுத்துச் செல்கின்றன. இவ்விடத்திலுள்ள மண்மேட்டில் மேற்கொள்ளப்படும் முறையான தொல்லியல் அகழ்வாய்வும், அறிவியல் ரீதியிலான கதிரியக்கத் தேதிக் கணிப்புகளுமே இம்மையத்தில் ஆதிக்குடியேற்றங்கள் பற்றிய சரியான தகவல்களைத் தரும் (Ragupathy, P. 1987: 130).

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு மேற்கே, காரைநகருக்குத் தெற்கே அமைந்தீருக்கும் தீவு ஊர்காவற்துறை (Kayts). இத்தீவு வேலணைத்தீவு எனவும் அழைக்கப்படுகிறது. இத்தீவில் வேலணை, அல்லைப்பிட்டி, மண்கும்பான், சரவணை, புளியங்கூடல், சுருவில், நாரந்தனை, கரம்பொன் ஆகிய கிராமங்கள் உள்ளன. யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு அருகாமையில் அமைந்த தீவகங்களில் ஆரம்பகால மக்கள் குடியேற்றங்கள் ஏற்பட்ட இடங்களில் இது முக்கியமானதொன்றாகும். இது மிகப் பரந்த விவசாய நிலங்களையும், புல் நிறைந்த மேய்ச்சல் நிலங்களையும், ஆண்டு தோறும் எல்லாப் பருவங்களிலும் கிடைக்கும் நன்னீர் வளங்களையும், கடல்நீரேரியில் மீன்பிடித்



அம்மன்னீஸ் கோட்டை (Fort Hammenhiel)

Image Source - A. Sivalingam

தொழில் மேற்கொள்ளும் வாய்ப்பு வளங்களையும், கடல்வழி வர்த்தகத்தைக் கொண்டு நடத்தும் ஆற்றலையும் கொண்டிருக்கிறது.

இந்தத் தீவின் வடமுனையிலிருந்த ஊர்காவற்துறைத் துறைமுகம் யாழ்ப்பாணக் கடலேரிக்கும் மற்றைய தீவுகளுக்கும் செல்லும் கடல்வழிப் பாதையைக் கட்டுப்படுத்துவதாகவும், போர்த்திற நடவடிக்கைகளுக்குப் பயன்படக்கூடிய கேந்திர மையத்தில் அமைந்திருப்பதாகவும் மத்திய காலப் பதிவேடுகளும், கல்வெட்டுகளும் குறிப்பிடுகின்றன (Ragupathy, P. 1987: 26; Indrapala, K. 1969; Pieris, P.E. 1920).

ஊர்காவற்துறைக்கு வடக்கே ஊர்காவற்துறைக்கும் காரைநகருக்கும் இடையே அமைந்த சிறிய தீவில் 17 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணக் குடாவின் கடல்வழி நுழைவாயிலைப் பாதுகாக்கும் பொருட்டு ஒரு கோட்டையை அமைத்து அங்கே தங்கள் போர் வீரர்களைத் தங்க வைத்தார்கள். அதற்கு 'அரச கோட்டை' (Fort Royal) எனப் பெயரிட்டார்கள். 1658 இல் இக்கோட்டையை போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றிய டச்சுக்காரர், இதைத் திருத்தியமைத்து, கோட்டை வாசல்வரை செல்லக்கூடிய கடல்வழியையும் அமைத்து, அதற்கு 'அம்மன்னீஸ் கோட்டை' (Fort Hammenhiel) எனப் பெயரிட்டார்கள். அங்கே ஓர் இராணுவப் பிரிவையும் நிறுத்தியிருந்தார்கள். இக்கோட்டையை டச்சுக்காரரரிடமிருந்து கைப்பற்றிய பிரித்தானியர்கள் இதை முதலில் ஓர் உச்சவரம்புப் பாதுகாப்புச் சிறைச்சாலையாகவும், பின்னர் ஒரு தொற்றுநோய் மருத்துவ நிலையமாகவும் உபயோகித்தார்கள். இக்கோட்டை டச்சுக்காரரர் கொடுத்த பெயரினாலேயே இன்றுவரை அழக்கப்பட்டு வருகிறது. இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் முதலில் ஒரு சிறைச்சாலையாக உபயோகப்படுத்தப்பட்ட இக்கோட்டை சமீபகாலங்களில் இலங்கை கடற்படையினரால் ஒரு சுற்றுலாப் பயணிகளின் விடுதிமனையாக நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

வேலணைச் சந்திக்கு வடகிழக்கே பரந்திருக்கும் வயல்களுக்கிடையே காணப்படும் கும்புருப்பிட்டி, சோழவத்தை, நித்தில், ஆவராந்துலா என்பன தொல்லியல் மையங்களாகும். இவற்றுள் கும்புருப்பிட்டி 10 - 15 ஏக்கரில் பரந்திருக்கும் மேட்டு நிலம். இங்குள்ள ஒரு மேட்டில் காணப்படும் வெட்டப்பட்ட சுண்ணாம்புக்கல் தகடுகளும், பவளப்பாறைக் கற்களும் (Coral Stones) இவ்விடத்தில் ஒரு தாதுகோபம் இருந்திருக்கலாம் என்பதை எடுத்துக்காட்டுகின்றன. இவ்விடத்தில் காணப்படும் பல வகையான மட்பாண்டங்களும் மற்றும் தொல்பொருட்களும் இந்த மையத்தின் முக்கியத்தைக் காட்டி நிற்கின்றன (Ragupathy, P. 1987: 25).

*சாட்டி*

வேலணைக் கடற்கரையில் அல்லைப்பிட்டியிலிருந்து மண்கும்பான்வரை நீண்டு கிடக்கும் மணல் பரப்பு 6 கி.மீ. தூரத்திற்கு நீண்டு செல்கிறது. அல்லைப்பிட்டியிலுள்ள சாட்டி முற்காலத்தில் ஒரு துறைமுகமாக இருந்ததை அங்கே கண்டெடுத்த ஆரம்பகால முறிவளைவு கொண்ட கறுப்பு - சிவப்பு மட்பாண்ட ஓடுகள், ஆரம்பகால சிவப்பு மட்கல ஓடுகள், உரோம ரௌலெற்றெட் மட்கல ஓடுகள் என்பன காட்டி நிற்கின்றன. இவற்றைத் தவிர இரும்புத் தண்டுகள், இரும்புக் கசடுகள், கருங்கல் தேய்கற்கள், பள்ளமிட்ட ஓடுகள் என்பன கண்டெடுக்கப்பட்டன (Ragupathy, P. 1987: 25).



ஒரு கிண்ணத்தின் அடித்தட்டு

Image Source - John Carswell



சரிவான பக்கங்களைக் கொண்ட கிண்ணம்

Image Source - John Carswell

*அல்லைப்பிட்டி அகழ்வுகள் - 1977*

1977 ஆம் ஆண்டில் வீடு கட்டும் ஒப்பந்தக்காரர்கள் அல்லைப்பிட்டி கடற்கரையில் மணலை அகழ்ந்தெடுத்த சமயம் பலவகையான சீனப் பீங்கான்களை வெளிக்கொணர்ந்தார்கள். இதைத் தொடர்ந்து அச்சமயம் இலங்கை வந்திருந்த சிக்காகோ பல்கலைக்கழகப் பேராசிரியரும், இலண்டன் (SOAS) பல்கலைக்கழக இணைப் பேராசிரியருமான ஜோன் காஸ்வெல் தலைமையில், இலங்கைத் தொல்லியல் துறையினரின் அனுமதியுடன் அவ்விடத்தில் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. பேராசிரியர் காஸ்வெல் தனது அகழ்வாய்வை இவ்வாறு பதிவு செய்திருக்கிறார்:

"அவ்விடத்தில் பெருந்தொகையான சீன சிங் - பாய் வட்டில்களும், மற்றைய வகைப் பீங்கான்களும் வெளிக்கொணரப்பட்டன. இக்கண்டுபிடிப்பு ஊரில் விரைவாகப் பரவியதனால் மக்கள் அவ்விடத்தில் கூட ஆரம்பித்தார்கள். நாங்கள் அதிகாலையில் அங்கே சென்றபோது மணல் அகழ்ந்தெடுக்க வந்தவர்கள் ஏற்கனவே மணற்கும்பிகளுக்கூடாக மேலோட்டமாக ஒரு நீண்ட குழியை வெட்டியிருந்தார்கள். அங்கே கண்டெடுத்த பீங்கான் துண்டுகளை அவர்கள் வெளியே போட்டிருந்தார்கள். இவ்விடத்தில் மீதமிருந்த மட்பாண்டங்களை பாதுகாத்து வெளிக்கொணர ஒரு மீட்பகழ்வாய்வு (Rescue Dig) செய்ய வேண்டியிருந்தது." (Carswell, J. 1978: 37).

"முதலில் வெட்டப்பட்டிருந்த குழியில் நேர் செங்கோடாகச் சுத்தப்படுத்தி, அங்கே காணப்பட்ட கலத்துண்டுகளைச் சேகரித்தோம். அந்த அடுக்கு எவ்வாறு அங்கே கலன்கள் பரவியிருந்தது என்பதைக் காட்டியது. சமீபத்தில் பெய்த மழையினால் பல பீங்கான் துண்டுகள் குழியின் அடியில் சேர்ந்திருந்தன. சுத்தப்படுத்தப்பட்ட குழியின் பக்கச் சுவரிலிருந்து அந்த கலன்கள் சுத்தமான

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு.
விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும்.
அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.
விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு 437.345.4203




அல்லைப்பிட்டி மீட்பாய்வுக் குழியின் நிலவரைப் படம்

Image Source - John Carswell

மணலில் கைவிடப்பட்டிருப்பதையும், அதற்கு மேலாக ஓர் அடுக்கு சுத்தமான மணல் இருப்பதையும், மேலே கருமை பிடித்த மணலில் மேலே வளர்ந்திருந்த செடிகளின் வேர்களையும் காண முடிந்தது.”

“இந்த மணல் படுகை அடுக்கமைவை உறுதிப்படுத்திய பின்னர் மணல் மேல் மட்டத்திலிருந்து இரண்டு மீட்டர் ஆழத்தில் கலன்களின் அடுக்குத்தளம் வரை சுத்தப்படுத்தினோம். பீங்கான் கலன்கள் 5 மீட்டர் விட்டம் கொண்ட, சுமாராக வட்ட வடிவில் புதைந்திருந்தன. இந்தப் புதையலில் அரைவாசிக்கு மேல் மணல் அகழ்வோரால் குழப்பப்பட்டிருந்தது”

“மீதமிருந்த கலத்துண்டுகள் இது கைவிடப்பட்ட ஒரு கலக் குவியல் அல்ல என்பதைக் காட்டின. ஒரு பீங்கான் கலனின் உடைந்த துண்டுகள் நீண்ட தூரத்திற்குப் பரவிக் கிடப்பது இத் துண்டுகள் புதைக்கப்பட முன்னர் குழப்பியிருப்பதைக் காட்டியது. இதை விட்டுச் சென்றவர்கள் இவற்றை முதலில் துருவித் தேடிய பின்னர் புதைத்திருப்பதாகப்பட்டது. எனது எண்ணத்தில் உதித்த சம்பவம் இது: ஒரு சீன மட்பாண்டக் கப்பல், சரக்குப் பெட்டியை கரைக்குக் கொண்டு வந்தவர்கள், அவற்றில் பல பழுதடைந்திருப்பதைக் கண்டு அவற்றை அலசி அவற்றில் முழுமையானவற்றை எடுத்துக்கொண்டு மிகுதித் துண்டுகளை இங்கே சுத்தமான மணலில் புதைத்திருக்கிறார்கள்.” (Carswell, J. 1978: 39).



வெளிப்புறம் வளைந்த விளிம்பு கொண்ட பீங்கான் கிண்ணம்.

Image Source - John Carswell



வெளிப்புறம் வளைந்த விளிம்பு கொண்ட பீங்கான் கிண்ணம். உள்பக்கம் மெல்லிய இலைகளின் பதிப்பு. நடுவில் ஒரு பூ.

Image Source - John Carswell



வளைந்து வளைந்து செல்லும் அணிவகையுள்ள விளிம்பைக் கொண்ட கிண்ணம்

Image Source - John Carswell



வளைந்து வளைந்து செல்லும் விளிம்பு கொண்ட குவளை

Image Source - John Carswell



பலவகைப் பாண்டங்களின் பகுதிகள்

Image Source - John Carswell



சரிவான பக்கங்களைக் கொண்ட கிண்ணம்

Image Source - John Carswell



வெளிப்புறம் வளைந்த விளிம்பைக் கொண்ட பாலேட்டு நிற (cream coloured) பீங்கான் கிண்ணம்

Image Source - John Carswell



பூக்கள், இலைகள் மற்றும் பலதரப்பட்ட உருவரைப் படங்களைக் (designs) கொண்ட பல வகையான கிண்ணங்களின் வரை படங்கள்.

Image Source - John Carswell

இப்பீங்கான் துண்டுகள் அனைத்தும் யாழ்ப்பாணம் கோட்டைக்கு எடுத்துக்கொண்டு போய் சுத்திகரிக்கப்பட்டு, அடுத்த இரு வாரங்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கட்டடக்கலை மாணவர்கள் நால்வரின் உதவியோடு, அதிக பிரயாசையின் பேரில் ஒன்றுசேர்க்கப்பட்டு, வச்சிரப்பசை கொண்டு ஒட்டப் பெற்றன. மொத்தத்தில் 443 பீங்கான் கலன்கள் இனம் காணப் பட்டன. இவற்றுள் பலவகையான உருவ அமைப்புகள் கொண்ட கிண்ணங்கள், கோப்பைகள், குடங்கள், சாடிகள் என்பன காணப்பட்டன. இவற்றுள் இள மஞ்சள்நிற பளிங்கியற் பொருள் பூசப்பட்ட வெண்கலன்கள், வெண்ணிற சிங் - பாய் சீனப் பீங்கான்கள், மஞ்சள் நிறக் கெண்டிகள், பூக்களால் அலங்கரிக்கப்பட்ட கிண்ணங்கள் என்பன குறிப்பிடத்தக்கவை. இப் பாண்டங்கள் அனைத்தும் கி.பி. 1100 ஆம் ஆண்டிற்குரிய சீனாவின் வடக்கு - சுங் காலத்தவையாகும் (Northern Sung Period) (Carswell, J. 1978:39-41).

### *புங்குடுதீவு*

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மேற்குப் பக்கத்தில் வேலணைக்குச் சற்று அப்பால், பல கிராமங்களைக் கொண்டது புங்குடுதீவு. யாழ்ப்பாணக் குடாநாட்டுடன் இத்தீவு கடலினூடாகச் செல்லும் வீதியினால் இணைக்கப்பட்டிருக்கிறது. மகாவம்சத்தில் இது புவங்குதீப என்றும், 12 ஆம் நூற்றாண்டின் சிங்கள மன்னன் நிசங்கமல்லனின் இராமேஸ்வரம் கல்வெட்டில் புவங்குதிவெய்ன எனவும் கூறப்பட்டிருக்கிறது.

புங்குடுதீவின் கிழக்குக் கரையிலுள்ள திகழி என்ற பகுதி இத் தீவின் ஆரம்பகால மனிதக் குடியேற்றங்கள் இடம்பெற்ற பகுதியாகும். இதைக் கவனிக்குமிடத்து இக்குடியேற்றங்கள் கந்தரோடையை மையமாகக் கொண்ட யாழ்ப்பாணக் குடாவிலிருந்து இடம்பெயர்ந்ததாகக் கருத இடமிருக்கிறது. திகழியில் காணப்படும் ஆரம்பகாலக் கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள் 5 - 10 ஏக்கர் அளவிற்குப் பரந்திருப்பது இங்கே கணிசமான அளவு மக்கள் குடியேற்றம் இடம்பெற்றிருப்பதைக் காட்டி நிற்கிறது. இத்தீவிலுள்ள பெரியகுளம், மற்றும் திகழிக்குளம் என்பன இங்கே பெரிய அளவில் நெற்பயிர் செய்வதற்கு ஏதுவாக இருந்திருக்கின்றன (Ragupathy, P. 1987: 23-24; Thiagarajah, S. 2016: 134).

பாளி நூலான மகாவம்சம் இப் பியங்குதீபம் புத்த பிக்குகளைக் கொண்டிருந்த ஒரு பிரசித்திபெற்ற பௌத்த மையம் எனப் பதிவு செய்திருக்கிறது. இங்குள்ள ஒரு மக்கள் மரபுக் கோயிலின் (Folk Temple) முன்பக்கத்தில், சடங்கு முறையாகத் தேங்காய் உடைக்கும் கல்லாக புத்தரின் உருவக்கற்சிலையின் மேலுடற் பகுதி உபயோகிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது (Ragupathy, P. 1987: 23-24).

### *நயினாதீவு*

நயினாதீவு என்னும் இத்தீவின் பெயர் முற்காலத்தில் இத்தீவில் வாழ்ந்த நயினார் அல்லது நாக இன மக்களைக் குறிப்பிடுவதாகும். முதலாம் நூற்றாண்டின் கிரேக்க நிலப்படதாரியான குளோடியஸ் தொலமி தனது வரைபடத்தில் தப்ரொபான தீவின் வடபகுதியை நாகதீப எனவும், அப்பெரிய தீவின் சமீபத்தில் உள்ள சிறிய தீவை நாகதீப (Nagadiba) என்ற பெயராலும் குறிப்பிடுகிறார். இச்சிறிய தீவு நயினாதீவைக் குறிப்பதாகக் கருத இடமிருக்கிறது. இத்தீவானது புராதன தாய்த் தெய்வமான நாக பூசணி அம்மன் கோயிலையும், பௌத்த ஆலயமான நாக விகாரையையும் கொண்டிருக்கிறது.

சில நூல்களும், சில எழுத்தாளர்களும், வலைத்தளக் கட்டுரைகளும் குறிப்பிடுவது போல நயினாதீவு மணிமேகலை குறிப்பிடும் மணிபல்லவமோ அல்லது மகாவம்சம் குறிப்பிடும் நாக தீபமோ அல்ல. மணிமேகலைக் காப்பியம் பண்டைய யாழ்ப்பாண அரசை நாகநாடு எனக் குறிப்பிடுகிறது. மணிபல்லவம் என்ற தீவின் பெயர் நயினாதீவைக் குறிப்பிடுவதாக இருந்தால், நாகநாடு மணிபல்லவத்தின் கிழக்கே கடலுக்கு அப்பாலுள்ள நாகநாடு என இக்காப்பியம் குறிப்பிட்டிருக்கும். ஆனால் மணிமேகலையோ நாகநாடு மணிபல்லவத் தீவின் ஒரு நிலப்பகுதி என்றே கூறுகிறது. மணிமேகலையில் வரும் “மணிபல்லவத்தின் கீழ்நில மருங்கின் நாகநாடாளும்” (மணிமேகலை, VIII: 54) என்ற அடிகள் கவனிக்கப்பட வேண்டியவை. ‘மணிபல்லவம்’ என்பது இங்கே யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதையும் குறிப்பிடுகிறது. மணிபல்லவத்திற்கும் நாகநாட்டிற்குமிடையே உள்ள தொடர்பு மணிமேகலையில் இந்த ஓர் இடத்தில் மட்டுந்தான் கூறப்படுகிறது. இதை ஆராய்ந்த வரலாற்றாசிரியரான சுவாமி ஞானப்பிரகாசர் மணிபல்லவம், நாகநாடு இரண்டும் நாகதீபம் எனப்படும் யாழ்ப்பாணக் குடாநாட்டையே குறித்தன எனப் பதிவு செய்திருக்கிறார் (ஞானப்பிரகாசர், 1928: 23-36).

மகாவம்சம் ‘நாகதீப’ என்ற பெயரால் இலங்கையின் வடபகுதி முழுவதையும் குறிப்பிடுகிறது. மேலும், வல்லிபுரப் பொற்சாசனமும் ‘நகதிவ’ என யாழ்ப்பாணத் தீபகற்பத்தைக் குறிப்பிடுகிறது. ‘யம்புகோளப் பட்டின’ இங்கிருந்த முக்கியமான பெரிய வர்த்தகக் கப்பல் துறை என்பதையும், வல்லிபுரத்தில் ‘பல்லவத்துறை’ என்ற பெயரில் ஒரு துறைமுகம் இருந்ததையும் மகாவம்சம் குறிப்பிடுகிறது (Mahavamsa, XIX: 23, 69: XXVI: 42-44). இப்படியான பெரிய வர்த்தகக் கப்பல் துறை ஏதும் நயினாதீவில் கிடையாது.

(இவ்விவரங்கள் ஏற்கனவே ‘வரலாறு மற்றும் இலக்கியப் பதிவுகளில் நாகநாடும் நாகர்களும்’ என்ற பகுதியில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது).

### *நெடுந்தீவு*

யாழ்பாணக் குடாநாட்டின் மேற்குத் தொலைக்கோடியில் உள்ள தீவான நெடுந்தீவு (Delft) தமிழ்நாட்டின் இராமநாதபுரம் மாவட்டத்திற்கும் யாழ்ப்பாணத் தீவகற்பத்திற்கும் நடுவே அமைந்திருக்கும் தீவு. தமிழ்நாட்டிலிருந்து வடஇலங்கை நோக்கி வரும் கப்பல்கள் ஊர்காவற்துறையை அடையும் முன்னர் நெடுந்தீவைக் கடந்து வரவேண்டும். இதை மனதில் கொண்டு டச்சுக்



ஊர் நோக்கி - புங்குடுதீவு



நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்



நயினாதீவில் சமீப காலங்களில் கட்டப்பட்ட நாக விகாரை



நெடுந்தீவிலுள்ள டச்சுக்காரக் கோட்டையின் அழிபாடுகள்.



நெடுந்தீவில் வெடியரசன் கோட்டையில் காணப்படும் பௌத்த ஸ்தூபத்தின் திடல்

Image Source - Dr P. Ragupathy

காரர் (ஒல்லாந்தர்) நெடுந்தீவில் ஒரு பெரிய கடற்கோட்டையை அமைத்திருந்தர்கள். அவர்களின் ஆட்சிக்காலத்தின் பின்னர் கவனிப்பாரற்ற நிலையில் அது அழிவடைந்துவிட்டது. இத் தீவின் மேற்குக் கரையோரமாகக் காணப்படும் கட்டட இடி பாடுகள் கொண்ட தொல்லியல் மையம் வெடியரசன் கோட்டை என அழைக்கப்படுகிறது. யாழ்ப்பாணக் கிராமிய வரலாற்றுக் கதைகளில் வெடியரசன் வியப்பார்வமளிக்கிற ஒரு கதாநாயகன் ஆவார்.

இன்றைக்கு வெடியரசன் கோட்டை எனக் கூறப்படும் திடல் பவளப்பாறைக் கற்களால் (கோறல் கற்கள்) வட்டவடிவில் அமைக்கப்பட்ட பௌத்த ஸ்தூபத்தின் அடித்தளமாகும். அதன் மேல் இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தினர் மூன்று சிறிய ஸ்தூபங்களை அமைத்துள்ளனர். இத்திடல் அமைந் திருக்கும் கடற்கரை இன்றைக்கும் 'பெரியதுறை' என அழைக் கப்படுவதனால், முற்காலத்தில் இது முக்கியமான ஒரு வர்த்தகத் துறையாக இருந்திருக்க வேண்டும். பண்டைய வர்த்தகர்கள் ஆதரவளித்த ஒரு பௌத்த வழிபாட்டுத் தலமாக இவ்விடம் விளங்கியிருக்கலாம்.

இவ்விடத்தில் கண்டெடுத்த மட்பாண்டங்களை ஆய்வு செய்த தில் அவற்றினிடையே ஆரம்பகால கறுப்பு - சிவப்பு மட்பாண் டங்கள், உரோம ரௌலெற்றெட் மட்பாண்டங்கள், பிற்காலத் தைய பள்ள விளிம்பு கொண்ட கலன்கள் என்பன காணப்பட் டன. இவற்றிலிருந்து கிறிஸ்தாப்தத்திற்கு முற்பட்ட காலங்களி லிருந்து இவ்விடத்தில் ஆரம்பிக்கப்பட்ட மக்கள் குடியேற் றங்கள், பிற்கால யாழ்ப்பாண இராச்சிய காலங்கள் வரை நீடித் ததை அறிய முடிகிறது. இவற்றோடு பலவகையான செப்புத் துண்டுகள், இரும்பு ஆணிகள், இரும்புக் கசடுகள், கற்குழ விகள், வரிப்பள்ளமிட்ட ஓடுகள், 20 மாலை மணிகள், சூதுபவள (கார்னிலியன்) உருண்மணிகள், தேய்வடைந்த செப்பு நாணயங்கள், ஸ்ரீமத் சாகஸமல்ல என்னும் பெயர் பொறித்த ஒரு செப்பு நாணயம் ஆகியன கண்டெடுக்கப்பட்டன (Ragupathy, P. 1987: 17-21).

II.

**பூநகரித் தொல்லியலாய்வு**

இலங்கையின் பெருநிலப்பரப்பின் வடபகுதியில் யாழ்ப்பாணக் கடலேரிக்கருகில் அமைந்த புராதன நகரம் பூநகரி. பூநகர் என்ற ஆதிப்பெயரே காலப்போக்கில் பூநகரி என மருவியுள்ளது. வரன் முறையான மரபில் ஆதியிலிருந்தே பூநகரி யாழ்ப்பாணத்தின் ஒரு பகுதியாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது. பெருநிலப்பரப்பின் வடமுனையில் உள்ள ஒரு நில நீட்சியின் கடற்கரையில், போர்த்திற நடவடிக்கைகளுக்குப் பயன்படக்கூடிய ஒரு மையத்தி லிருந்த இப்பட்டினத்துறை யாழ்ப்பாணத்தின் பண்டைய முக் கியமான துறைமுக நகரங்களில் ஒன்று.



தேரி மணற்தொடர்

Image Source - Dr S.U. Deraniyagala

தொல்லியல் ரீதியாக பூநகரி வட இலங்கையின் இரணைமடு தேரிமணற் தொடர் வலயத்தில் அமைந்திருக்கும் ஒரு நில மாகும். இந்தச் செம்மணல் வல யம் இலங்கையின் வடகிழக்கே கடற்கரைக்குச் சமீபமாக முல்லைத்தீவில் ஆரம்பித்து இரணைமடு, பூநகரி உள்ளிட்ட வடபகுதி வழியாகச் சென்று, வடமேற்குக் கரைவழியாகத் தொடர்ந்து குதிரைமலை வரை செல்கிறது.

இந்தத் தேரிமணற் தொடர் வலயத்தில் இற்றைக்கு 125,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இலங்கையில் ஆதிகால மக்கள் வாழ்ந்தமைக்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன. இந்த வல யத்தில் தொல்லியல் ஆய்வுகளை மேற்கொண்ட இலங்கையின் தலையாய தொல்லியலாளர் அமரர் சிரான் தெரணியகல இந்த வலயத்திற்கு இரணைமடு தேரிமணற் தொடர் வலயம் எனப் பெயர் சூட்டியிருக்கிறார் (Deraniyagala, S.U. 1992). இது பற்றி பின்னர் ஓர் இயலில் விரிவாகப் பேசப்படும்.

1982 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும், இலங் கைத் தொல்பொருள் துறையும் இணைந்து மேற்கொண்ட மேலாய்வில் பூநகரியின் வடக்கு முனைவரை நுண்கல் ஆயு தங்கள் கண்டெடுக்கப்பட்டன. பூநகரியின் மேற்கிலுள்ள மணற் திட்டியான மண்ணித்தலையில் கலாநிதி இரகுபதியும் அவரது சகாக்களும் பல நுண்கல் ஆயுதங்களைக் கண்டெடுத்திருக் கிறார்கள். பெரும்பாலும் குவாட்ஸ் கற்களினாலும், சில சேட் கற் களினாலுமான இக்கல்லாயுதங்கள் கல்முனை, மண்ணித் தலை, வெட்டுக்காடு ஆகிய இடங்களிலிருந்து பெறப்பட்டன (Ragupathy, P. 1987: 179). இலங்கையில் நுண்கற் கருவிகளின் ஆரம்பகாலம் கி.மு. 33,000 ஆண்டாகக் கணிக்கப் பெற்றிருக் கிறது (Deraniyagala, S.U. 1992: 695-70). இக்காலத்தையக் கற்கருவிகளை உபயோகித்த மக்கள் பூநகரியில் கல்முனை, வெட்டுக்காடு, மண்ணித்தலை ஆகிய பகுதிகளில் வாழ்ந்திருக் கிறார்கள்.

**பெருங்கற் பண்பாட்டுத் தொல்பொருட் சான்றுகள்**

இரும்புக் காலத்தைய பெருங்கற் பண்பாட்டைப் பேணிய மக்கள் இப்பகுதியில் வாழ்ந்தார்கள் என்பதற்கான ஆதாரங்கள் 1989 - 90 ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தைச் சேர்ந்த விரிவுரையாளராக இருந்த (பிந்நாள் பேராசிரியர்) கலாநிதி பரமு புஷ்பரட்ணம் அவர்கள் பூநகரிப் பகுதியில் மேற் கொண்ட தொல்லியல் ஆய்வுகளில் பெறப்பட்ட தொல் பொருட்-கள் காட்டிய சான்றுகளாகும். இவை 1993 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வெளியிட்ட 'பூநகரி - தொல் பொருளாய்வு' என்னும் நூலில் கூறப்பட்டிருக்கிறது. இக் கட்டுரையில் இனிக் கூறப்படும் தகவல்கள் பரமு புஷ்பரட்ணத் தின் இந்த ஆய்வின் பெறுபேறுகளாகும்.

பூநகரிப் பிராந்தியத்தில் மண்ணித்தலை, வெட்டுக்காடு ஆகிய இடங்களில் மேற்கொண்ட மேலாய்வுகளில் ஆரம்பகால முறி வளைவு கொண்ட கறுப்பு - சிவப்பு மட்பாண்டப் பகுதிகள் கண்டெடுக்கப்பட்டன. இவ்வகையான மட்பாண்டங்கள் கி.மு. 1500 ஆண்டிற்கும் - கி.மு. 300 ஆண்டுகளுக்கும் இடைப் பட்டவை ஆகும். இதிலிருந்து கி.மு. ஆயிரத்தாண்டு காலத் திலேயே இப்பெருங்கற் பண்பாட்டுப் பாத்திரங்களை உப யோகித்த மக்கள் இப்பகுதிகளில் வாழ்ந்திருக்கிறார்கள் என அறிய முடிகிறது. இந்தக் கண்டுபிடிப்பு ஏற்கனவே இப்பகுதியில் வாழ்ந்த நுண்கற்கால மக்களின் வம்சாவழியினரே பிற்காலத் தில் பெருங்கற் பண்பாட்டு அம்சங்களை மேற்கொண்டிருக் கிறார்கள் என்பதையும் அறியத்தருகிறது (புஷ்பரட்ணம் 1993: 16).

வெட்டுக்காடு, மண்ணித்தலை ஆகிய இடங்களில் கறுப்பு - சிவப்பு மட்பாண்ட ஓடுகள் நிலத்தின் மேல் மட்டங்களிலேயே பெருவாரியாகக் காணப்பட்டன. மண்ணித்தலையில் யாழ்ப் பாணப் பல்கலைக்கழகக் குழுவினர் பல வகையான கறுப்பு மட்பாண்டங்கள், சிவப்புநிற மற்றும் சாம்பல்நிற மட்பாண்ட ஓடுகளைக் கண்டெடுத்தார்கள். இவற்றில் முக்கியமான அம்சம் அந்த ஓடுகளில் காணப்பட்ட கீறல் எழுத்துகளும், தமிழ்ப்பிராமி எழுத்துகளுமாகும்.

மற்றைய தொல்பொருட்களில் சுடுமண் பொம்மைகளில் கண்ட தாய்த் தெய்வ உருவங்கள், சூளையிற் சுடப்பட்ட களிமண்



மண்ணித்தலையில் கண்ட இரும்பு வேல்

Image Source - Dr P. Pushparatnam



தாய்த்தெய்வம் சுடுமண் பொம்மை

Image Source - Dr P. Pushparatnam

விளக்குகள், இரும்பு ஆணிகள், இரும்பினால் செய்யப்பட்ட தூண் டில் முட்கள், பலதரப்பட்ட உருண்மணிகள், உருண் மணிக் கழுத்து மாலைகள், கை வளையல்கள் என்பன குறிப் பிடத்தக்கவை. இவற்றுள் மண்ணித்தலையிலும், வெட்டுக்காட் டிலும் கண்டெடுக்கப்பட்ட இலை வடிவான இரும்பு வேல்கள் முக்கியமானதொரு கண்டுபிடிப்பு. இம்மாதிரியான வேல் வடி வங்கள் புராதன 'பெருங்கற் பண்பாட்டு மதச் சின்னங்கள்' (Symbols of a Megalithic Religion) என வரலாற்றாசிரியர் நீல கண்ட சாஸ்திரி கூறியதும் இங்கே குறிப்பிடத்தக்கது (Nilakanta Sastri, K.A. 1958: 55).

பூநகரிப் பகுதியில் மண்ணித்தலை, வெட்டுக்காடு, பல்லவ ராயன் ஆகிய இடங்களில் களி மண்ணினால் செய்யப்பட்டு சூளை யிற் சுடப்பட்ட லிங்க உருவங்கள் கண்டெடுக்கப்பட்டன. இந்த உருவங்கள் அநுராதபுரம், பொம்பரிப்பு, இரணைமடு, மாமடுவ, சிகிரியா, அம்பாறை ஆகிய இடங்களில் கண்ட சூளை யிற் சுட்ட உருவங்களுடன் (Deraniyagala, P.E.P. 1953: 133-138) ஒப்பிடத்தக்கவை.

**ஈமப் புதையல்கள்**

இவ்விடங்களிலுள்ள நிலம் பெரும்பாலும் மணல் வகையான படியினால், இறந்தோரை தாழிகளில் வைத்தே அடக்கம் செய் தார்கள். இவ்வகையான அடக்கங்கள் குன்றுகளில் அல்லது சிறிய ஏரிகளுக்கு அருகாமையில் தியாகம், குதிரைகட்டின தீவு, பல்லவராயன் ஆகிய இடங்களில் காணப்பட்டன. குழப்பப்பட்ட சில புதைகுழிகளில் பெரிய தாழிகளும், அவற்றிற்கு அருகில் சிறிய குடங்களில் உருண்மணிகளும், சுடுமண் உருவங் களும், வளையல்களும் ஈமப் படையற் பொருட்களாகக் காணப் பட்டன. நாட்டின் பௌதிகச் சூழலுக்கு ஏற்ப தாழிகளோடு குழிப் புதையல்களும் காணப்பட்டன. தென்னிந்தியாவில் இப்பண் பாட்டு மக்கள் வாழ்ந்த இடங்களில் வதிவிடம், இடுகாடு, குளம், வயற்பரப்பு ஆகிய நான்கும் முக்கிய அம்சங்களாக விளங்கியது போன்றே பூநகரிப் பகுதிகளிலும் இப்பண்பாட்டு அம்சங்களைக் காணக்கூடியதாக இருந்தது.

ஈழவூரில் ஒரு கிணறு தோண்டிய சமயம் நீளக் கிடத்தி அடக்கம் செய்யப்பட்ட ஓர் எலும்புக்கூடு கிடைக்கப்பெற்றது. அதனோடு, கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள், கை வளையல்கள், உருண் மணிகள், இரும்பு ஆணிகள் என்பனவும் காணப்பட்டன. இது ஓர் ஈமப்புதையல் மையமாக இருந்தமையால் கிணறு தோண் டுவது அத்துடன் நிறுத்தப்பட்டது (புஷ்பரட்ணம், ப. 1993: 20-35).

நன்றி: எழுநா – சிவ. தியாகராஜா



மண்ணித்தலை : இரும்பு ஆணிகள், தூண்டில் முட்கள்

Image Source - Dr P. Pushparatnam



கைவளையல்கள்

Image Source - Dr P. Pushparatnam



உரோம நாட்டு அரிற்றைன் மற்றும் ரௌலெற்றெட் மட்பாண்டங்கள்

Image Source - Dr P. Pushparatnam



'லோமா' எனப் பதித்த கலவோடு

Image Source - Dr P. Pushparatnam



பூநகரியில் புராதன உரோம நாணயங்கள்

Image Source - Dr P. Pushparatnam



'ஈழ' என்ற தமிழ்ப் பிராமிப் பதிவு

Image Source - Dr P. Pushparatnam



பரமன்கிராயில் கண்டெடுத்த 'வேளான்' என்னும் தமிழ்ப் பிராமிப் பதிவைக் கொண்ட கலவோடு

Image Source - Dr P. Pushparatnam



அரேபிய மட்பாண்டங்கள்

Image Source - Dr P. Pushparatnam



புராதன இந்திய முத்திரை நாணயங்கள்

Image Source - Dr P. Pushparatnam



சீன மட்கலன்கள்

Image Source - Dr P. Pushparatnam



மண்ணித்தலை உருண்மணி மாலை

Image Source - Dr P. Pushparatnam



பள்ளிக்குடாவில் கிடைத்த அடிப்பகுதி வளைந்த முழுமையான 'அம்போரா' மதுச்சாடி.

Image Source - Dr P. Pushparatnam



இராஜராஜ சோழன் நாணயங்கள்

Image Source - Dr P. Pushparatnam



பாண்டியர் கால நாணயங்கள்

Image Source - Dr P. Pushparatnam



பல்லவ நாணயம் - பின், முன் பக்கங்கள்

Image Source - Dr P. Pushparatnam




நவம்பர் 27

# மாவீரர் நாள்

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

**www.sangathamil.ca**

# 30வது ஆண்டில்
# வலிசுமந்து, வழிதேடிய துயரம்: 1995 அக்டோபர் யாழ் இடப்பெயர்வு

ஐங்கரன் விக்கினேஸ்வரா

29.10.2025



1995ஆம் ஆண்டு அக்டோபர் 30இல் அவலமிகு யாழ் இடப்பெயர்வின், 30வது ஆண்டின் நினைவு வலிகளை சுமந்து, தமிழர் வழி தேடிய துயரமிகு நாட்களின் நினைவாக இக்கட்டுரை பிரசுரமாகிறது

உலக வரலாற்றில் எந்த ஒரு இனமும் சந்தித்திராத பாரிய இடப்பெயர்வை யாழ் மக்கள் சந்தித்தார்கள். 1995-ம் ஆண்டு அக்டோபர் 30-ந் தேதி இந்த மாபெரும் அவலமிகு இடப்பெயர்வு நடந்தது.

யாழ்ப்பாண இடப்பெயர்வு மானுட வரலாற்றில் வலிசுமந்த வரலாறாகவே என்றும் நிலைத்து நிற்கின்றது. யாழ்ப்பாண குடாநாட்டில் அப்போதிருந்த அண்ணளவான மக்கள் தொகை ஐந்து இலட்சம் ஆகும். குடாநாட்டினை வடபகுதியின் மற்றைய பிரதேசங்களுடன் இணைத்திருந்த இரண்டு வீதிகளினூடாக ஐந்து இலட்சம் மக்கள் ஓர் இரவு விடிவதற்குள் கடந்து சென்ற கொடிய நாட்களை யாரும் மறக்க மாட்டார்கள்.

மிகச்சரியாக இன்றைக்கு 30 வருடங்களின் முன் யாழ் இடப்பெயர்வானது 1995 அக்ரோபர் 30இல் நீதி மறுக்கப்பட்ட மக்களாக தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல் அன்று அறுக்கப்பட்டது. அன்றைய கொடூர நாட்கள் மிகப்பெரும் மனித அவலத்தை சுமந்தது.

எத்தனையோ ஆண்டு காலமாக தங்கள் சொந்த மண்ணில் வாழ்ந்த மக்கள் ஒரே இரவில் ஒன்றாய்க் கூடி வாழ்ந்த மண்ணைவிட்டு இடம்பெயர்வார்கள் என எவரும் நினைத்திருக்க மாட்டார்கள்.

## துயர வலிசுமந்த வரலாறு :

இந்த துயரத்தை எக்காலத்தினாலும் அழிக்க முடியாது. பாதிக்கப்பட்ட மக்களின் துயரங்கள் இன்னமும் மக்கள் மனதில் நிலைத்து நிற்கின்றது.

யாழ் இடம்பெயர்வின் போது, இனி வீடு வருவோமோ என்று உடைந்து போனவர்கள், எங்கே போவது என்ற திசை தெரியாதவர்கள், வயதான அம்மா அப்பா என வீட்டிலே விட்டு வந்தவர்கள், நிறைமாத கர்ப்பிணிகள், முதியவர்களைச் சுமந்தவர்கள் என வீதியில் ஒரு அடி எடுத்து வைப்பதற்கு ஒரு மணி நேரம் எடுத்த கோரமான நாட்களாகும்.

சொந்த மண்ணிலிருந்து துரத்தப்பட்ட அந்தக் கொடூரம் மிக்க நாட்களை யாரும் மறக்க மாட்டார்கள். தண்ணீர் கேட்டு அழுத குழந்தைகளுக்கு பெய்த மழையை குடையில் ஏந்தி பருக்கியவர்கள், வீதி வாளிகளில் தொங்கும் தண்ணீரை எடுத்து குடித்தவர்கள், வீதியில் இறந்த முதியவர்களை அந்த சதுப்பு நிலத்தில் குழி தோண்டி புதைத்த கொடுமை மிக்க காலமாகும்.



## வலிகள் சுமந்து வழி தேடிய இடப்பெயர்வு :

'சூரியக் கதிர்' இராணுவ நடவடிக்கைகள் போல தமிழ் பேசும் மக்கள் மீது தொடுக்கப்பட்ட கொடுமையான ஆக்கிரமிப்புக்கள் இன்று நேற்று மட்டும் நடந்தது அல்ல. இந்த சூரியக்கதிர் நடவடிக்கை 1995 அக்டோபர் 17 இல் தொடங்கப்பட்டது. பலாலி, காங்கேசன்துறை போன்ற படைத்தளங்களிலிருந்து முழு யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றும் நோக்கில் படைத்தரப்பினர் போரினைத் தொடங்கியிருந்தார்கள். எங்கும் வான்வழித் தாக்குதல்களும் ஷெல் வீச்சுக்களும் துப்பாக்கிச் சூடுகளும் சரமாரியாக நடத்தப்பட்டன.

பலாலி இராணுவ முகாமிலிருந்து யாழ்ப்பாணத்தினை கைப்பற்ற இராணுவத்தினர் தாக்குதலை நடாத்தி பாரிய இன அழிப்பு நடவடிக்கையை இராணுவம் மேற்கொள்ள இருப்பதாக கருதி பாதுகாப்பான பிரதேசங்களான தென்மராட்சி வடமராட்சி வன்னிப் பகுதிகளுக்கு மக்கள் இடம்பெயர்ந்தனர்.

யாழ்ப்பாணத்தில் மின்சாரம் இல்லாத அந்தக் காலத்தில், அன்றைய கும்மிருட்டினில் அத்தனை மக்களும் தங்கள் சொந்த வாழ்வின் வேர்கள் பிடுங்கி எறியப்பட்டு, எங்கே போவது, என்ன செய்வது என்னும் எந்தச் சிந்தனையும் இன்றி உயிர் பிழைக்க வேண்டும் என்ற நோக்கோடு செம்மணியால் நடந்தார்கள். விமான குண்டு வீச்சினாலும் ஆயிரக்கணக்கில் மக்கள் மடியும் நிலையிலிருந்தும், வெட்ட வெளிகளில் பல மணிநேரங்களிற்கும் மேலாக நடக்க வேண்டியிருந்தனர். மூட்டை முடிச்சுக்களை கட்டி மக்கள் எல்லோரும் வீதிகளில் இறங்க வீதிகளும் இறுகிப்போனது. நடந்தும் தங்க இடமெதுவும் இன்றி ஆலயங்கள், தேவாலயங்கள், பேருந்து நிலை யங்கள் என கண்ணில் பட்ட இடங்களில் மக்கள் தங்கள் நாட்களை கழித்தனர்.

## வலிசுமந்த வரலாற்றை யார் மறப்பர்?

அன்றைய யாழ் மக்களின் இரவு மிகப்பெரும் மனித அவ லத்தை சுமந்தது. இனி வீடு வருவோமோ என்று உடைந்து போனவர்கள், எங்கே போவது என்ற திசை தெரியாதவர்கள், சொந்தங்களை தொலைத்து விட்டு வந்தவர்களாக, காலங் காலமாய் வாழ்ந்த மண்ணை விட்டு ஒரே இரவினில் அவதிக் குள்ளான வலி முடிவடையாமல், இன்னமும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.



உலக வரலாற்றில் யாழ் மக்களின் துயரமிகு இடப்பெயர்வைப் போல வேறு எந்த உலக நாட்டு மக்களும் சந்தித்திருக்க மாட்டார்கள்.

ஆர்மேனிய மக்களின் வரலாற்றில் நடந்த மிகப்பெரிய துயரமான 1915 இனப்படுகொலை சம்பவங்கள் போல் 1995 யாழ் இடப்பெயர்வு தமிழ் மக்களின் துயர வரலாற்றில் இடம்பெற்றது.




1995 சூரியக்கதிர் நடவடிக்கை எனும் அந்தக் கொடிய யுத்தத்தால், யாழ்ப்பாணம் தீவிர யுத்த காயங்களுக்கு உள்ளானது. இன்றுவரை ஆறாத காயங்களும் சிதைவுகளும் மக்கள் மனதில் ஏற்பட்டுக் கொண்டேதானிருக்கின்றன.

காலங்காலமாய் வாழ்ந்த மண்ணை விட்டு ஒரே இரவினில் நிர்ப்பந்தங்களால் துரத்தப்பட்ட அந்த வலி, அதே வலி இன்னமும் தமிழ் மக்கள் மனதிலிருந்து நீக்கப்படவில்லை.

எத்தனை ஆண்டு காலமாக போராட்டங்கள் தொடர்ந்து கொண்டிருந்தாலும் தமிழர்கள் இன்னும் விடுதலைக்காய் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்.



# யாழ். மக்களின் வலி நிறைந்த இடம்பெயர்வு

# 30.10.1995




# ஊர்வலம்

எப்படியும் ஊர்வலம் தொடங்க ஒன்பது மணியாகிவிடும். எட்டே முக்காலுக்கு முருகன் கோவிலடிக்குப் போனால் போதும். செய்வதற்கு ஏராளம் அலுவல் இருக்கிறது. ஆனால் ஒன்றையும் செய்ய இயலவில்லை.

வெகுநேரமாய் குடிசைத் திண்ணையில் அமர்ந்து தெருவைப் பார்த்துக் கொண்டிருந் தான். நாலைந்து பேராக ஆட்கள் தொடர்ச் சியாய் போய்க் கொண்டிருந்தார்கள். இவர்கள் எல்லாம் ஊர்வலத்திற்குப் போகிறவர்களாகத்தான் இருக்கவேண்டும். அவனும் ஊர்வலத்துக்குப் போவதற்குத் தான் காத்துக் கொண்டிருக்கிறான். எந்த ஊர்வலமானாலும் அதில் கலந்து கொள்ளாமல் அவனால் இருக்கமுடியாது. அது சிறுவயதிலிருந்து அவனுடன் ஒன்றிப்போய் விட்ட இயல்பு.

இன்றைக்கு காலையிலிருந்தே நல்ல வெய்யில் எறிக்கிறது. இப்போதே சூடேறி விட்டது. அவன் காலை மடித்து வைத்து மரக்கப்புடன் சாய்ந்து கொண்டான்.

நாலு நாள் தாடி அவன் முகத்தில் இருந்தது. கைகளால் பரபரவென்று முகத்தைத் தேய்த்துக் கொண்டான். கண்களில் பசிக் களைப்பு இருந்தது. காலையிலிருந்து எதுவும் வாய்க்குள் விடவில்லை.

“மல்லிகா. ஏதும் தண்ணி வென்னி இருக்குதே குடிக்க..” காட்டுத் தடிகளினால் வரையப்பட்ட குடிசையின் ஒரு பகுதியைப் பார்த்துக் கேட்டான். “வாறன் கொஞ்சம் பொறுங்கோ…” உள்ளிருந்து குரல் மட்டும் கேட்டது.

காலையில் இருந்த சில்லறைக் காசுகளைப் பொறுக்கி அரைறாத்தல் பாண் வாங்கி சின்னனுகளுக்கு கொடுத்தாகி விட்டது. மூத்தவன் பதினேழு வயது பவுண் அதிகாலையிலேயே விறகு வெட்டி கட்டிவர முட்கொம்பன் காட்டுக்குப் போய் விட்டான்.

மீசை அரும்பத் தொடங்குகின்ற இந்த வயதில் அவன் குடும்பச் சுமையில் பாதியைத் தாங்குகின்றான் பள்ளிக்கூடப் பக்கமே போவதில்லை. டயர் தேய்ந்த ஒரு பழைய சைக்கிளில் எந்நேரமும் திரிந்து கொண்டேயிருப்பான்.

மறுபடி தெருவைப் பார்த்தான் தொடர்ந்து எத்தனை பேர் போய்க் கொண்டிருக்கின்றார்கள் அவனும் போகவேண்டும்.

குடிக்க ஒரு தேநீராவது கிடைக்காதா என்ற எதிர்பார்ப்பில் பார்வையை அலைய விட்டுக்கொண்டிருக்கையில் எதிர் வீட்டு யோகன் “ரத்தினண்ணை! ஊர்வலம் தொடங்க கொஞ்சம் நேரமாகும் போல கிடக்கு. இப்பதான் சுலோகம் எழுதுகினம். சனம் இப்பவே நிறைய வந்திட்டுது” எட்டிச் சொல்லி விட்டுப் போனான்.

சுலோகம் என்றதும் அடுக்கடுக்காய் வார்த்தைகள் மனதுக்குள் கோர்த்துக் கொண்டு நின்றன. அந்த நாட்களில் அவன் அடுக்கு தமிழில் எத்தனை சுலோகங்கள் எழுதியிருப்பான்.

குரல் அடைக்க உச்சத்தில் முழங்கிக் கொண்டு ஊர்வலங்களின் முன் வரிசைகளில் நடந்திருப்பான்….

எத்தனை ஊர்வலங்களை தன்வாழ் நாளில் அவன் பார்த்து விட்டான். அவனுடைய ஞாபகப்பரப்பில் எழுபதாம் ஆண்டுகளின் நினைவுகள்கூட அழியாது பதிந்திருக்கின்றன. அப்போது அவனுக்கு பதினேழு வயது. மெல்லிய உயரமான தோற்றத்தில் இருந்த அவனுக்கு மெலிதாய் மீசை அரும்பத் தொடங்கிய வயது…. நாடெங்கும் தேர்தல்கள் சூடு பறந்த நேரம்

“தமிழ்” “தமிழ்” என்று மேடையெல்லாம் அடுக்கு வசனங்களில் பேசியவர்களை தலைவர்களாக நினைத்த காலங்கள்.

வேட்டி சட்டை அணிந்து. யாரைக் கண்டாலும் இரு கைகளையும் தமது இடது தோளுக்குமேல் துக்கி கூப்பி வணக்கம் சொல்லி வசீகரமாக சிரிக்கும் தலைவர்களின் வெற்றிக்காக அவனும் அவனின் நண்பர்களும் ஓடி ஓடி உழைத்த காலங்கள் அடுக்கு வசனங்கள் எழுதி சுவரொட்டி ஒட்டுவது கூட்டங்களுக்கு வீடு வீடாகப் போய் ஆட்கள் சேர்ப்பது … கூட்டங்களை ஒழுங்கு படுத்துவது… ஒலிபெருக்கி வாகனத்தில் ஒழுங்கை ஒழுகையாய் அலைவது… என்று எத்தனை வேலைகள்…

மாபெரும் ஊர்வலத்துடனான பொதுக் கூட்டம் ஒருநாள் நடக்கும். இரவு பகல் உறக்கமில்லாமல் அலைவார்கள். பரந்தன் சந்தியிலிருந்து கிளிநொச்சி றொற்றிக்கோ மைதானம் வரை தெருவின் இரண்டு பக்கமும் தோரணம் கட்டுவார்கள் மூன்று மணிக்கு தொடங்கும் ஊர்வலம் மைதானம் வர ஆறமணியாகிவிடும்.

கணபதி நேர்த்தியாக லாவகமாக நிலபாவாடை விரித்துக் கொண்டு போவான். தெரு நீளத்துக்கும் ஊர்வலம் முழுவதும் கணபதி வெறும் கால்களுடன் ஓடி ஓடி நிலபாவாடை விரிக்க அதில் தலைவர்கள் கும்பிட்டபடி உற்சாகமாக புன்னகைத்தபடி பாதணிகளை அழுத்தி நடந்து வருவார்கள். கணபதி நிலபாவாடை விரித்த காசு கூட வாங்கிக் கொள்ளமாட்டான்.

ஊர்வலம் வந்து சேரும் போதே மின்விளக்குகள் பளிச்சிடத் தொடங்கிவிடும் மைதான வண்ணக்காகிதங்களினால் அலங்கரிக்கப்பட்ட பெரிய மேடை… பின்னணித்திரையில் பிரமாண்டமாய் கட்சிச்சின்னம்… மேடைகளில் அலங்கார நாற் காலிகள்…

பிற இடங்களிலிருந்தும் வந்திருந்த மற்றையதலைவர்கள், கட்சிப்பேச்சாளர்கள் மேடையில் அமர்ந்திருப்பார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து தலைவர் வந்திருப்பதால் கூட்டம் முக்கியத்துவம் பெறும். அந்தத் தலைவரின் அடுக்கு வசனப் பேச்சுக் கேட்க கூட்டம் அலைமோதும்.

தலைவர் பேச எழுந்ததும் உணர்வுகள் பொங்க இளைஞர் கூட்டம் மேடையை நோக்கி நகரும், முதலாவதாக அவன் தான் மேடையில் ஏறுவான், சர்ரென்று பிளேடினால் விரல்கிழித்து பொங்கிவரும் ரத்தத்துளிகளால் தலைவரின் நெற்றியில் பொட்டுவைப்பான். அவனைத் தொடர்ந்து பலர் பொட்டு வைப்பார்கள் கூட்டம் ஆரவாரித்து கைதட்டும் ஓசை வானைத் தொடும்.

தலைவருக்கு மாலைகள் போட மக்கள் வரிசையில் நிற்பார்கள். போடும் மாலைகளை தலைவர் புன்னகை முகத்தோடு கழற்றி வைத்துக் கொண்டேயிருப்பார். அந்த மாலைகள் பின்வழியாக மாற்றப்பட்டு தொடரும் வரிசைகளில் சேர்க்கப்பட்டுவிடும். மறுபடி அதே மாலைகள் மேடைக்கு வரும். தலைவருக்கு இத்தனை மாலைகளா என்று கூட்டம் பிரமிக்கும். தலைவர் பேச எழுந்ததும் கூட்டத்தில் அமைதி நிலவும்.

மழைபோல பெய்யும் வார்த்தைக் கோலங்களை கேட்டுக் கொண்டு அவன் மேடை ஓரத்தில் நிற்பான். “கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றி மூத்த தமிழ்” என்று ஆரம்பித்து “தூக்கு மேடை பஞ்சு மெத்தை…” “துப்பாக்கிக் குண்டு விளையாட்டுப் பந்து” என்று பல அடுக்கு வசனம் சொல்லித் தான் பேச்சை முடித்துக் கொள்வார்.

கைதட்டல்களால் அந்தப் பிரதேசமே அதிரும் அன்றைக்கு அந்தக் கணத்தில் அந்தக் காட்சியும் அந்தத் தலைவர்களும் அவர்களது வெற்றியுமே உலகின் முதன் மையான விடயமாக அவனுக்கு தோன்றும். அந்தத் தலைவரிடம் வேலை கேட்டு அலைந்து காசு கட்டித் தோற்றுப்போன ஒருவன் தலைவரை கேவலமாக பேசி விட்டதற்காக அவனை அடித்து விழுத்தி மோசமாக தாக்கியிருக்கிறான். “ரத்தினம் வாற திங்கள் கிளிநொச்சி கந்தசாமி கோயில்லயிருந்து மைதானம் வரை ஊர்வலம் வரவேணும் எல்லாருமாய் ஒழுங்கு செய்யுங்கோ”

தலைவர் ஒரு வார்த்தை சொன்னால் போதும். அவன் தன் நண்பர்களுடன் செய்து முடிப்பான். இளம் வயதின் வேகம் அது. எழுபத்தேழாம் ஆண்டு தேர்தல் தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைந்த தேர்தல். இருபத்திநாலு வயதில் இன்னும் அதிக திறமைகள் அவனுக்கு ஏற்பட்டிருந்தது. அப்போது கார் ஒன்று வைத்திருந்து வாடகைக்கு ஓடி உழைத்துக் கொண்டிருந்தான்.

தன் காரில் சொந்தக் காசில் பெட்ரோல் போட்டு கிளிநொச்சி எங்கும் ஒலிபெருக்கி கட்டித் திரிந்தான். இம்முறை ஊர்வலத்தில் ஊர்திகள் செய்தார்கள். வேடம் போட்டு ஆடினார்கள் உழவு யந்திரங்கள் அலங்கரிக்கப்பட்டு தலைவர்களுடன் நகர்ந்தன.

ஊர்வலத்தில் கடலாய்த் திரண்ட கூட்டத்தை கட்டுப்படுத்த சிரமப்பட்டார்கள், உணர்வு பொங்க எழுதப்பட்ட சுலோங்களை உரக்க கூவிக்கொண்டே மக்கள் வெய்யிலுக்குள் நடந்தார்கள். அன்று மேடையில் அவனும் கவிதை படித்தான். நான்கு பேருக்கு நெற்றியில் ரத்தத்திலகம் வைத்தான். அவையெல்லாம் இப்போது கனவாகிப்போன சம்பவங்களாகிவிட்டன.

அதன் பிறகு நாட்டில் எத்தனையோ மாற்றங்கள், அரசியலும் அதன் பின்னணியும் இன்னொரு விதமாய் வளர்ந்தது, எழுபத்தேழாம் ஆண்டு தேர்தலுக்குப் பிறகு உழைத்து வந்த காரும் கடனுக்குப் போய்விட்டது, பல சுமைகள் மனதை அழுத்தின, அதன் பிறகும் ஊர்வலங்கள் நடந்தன. புற சூழலின் சுமைகளை ஒதுக்கி அவன் அவற்றில் முன்னணியில் கலந்து கொண்டான். இது அவனுடைய பாமர நெஞ்சில் ஊறிப்போன விஷயமானது. கல்யாணம், பிள் ளைகள் என்று குடும்பம் வளர்ந்தது. படிப்பில்லாத காரணத்தால் கூலிவேலைதான் தொழிலாயிற்று. பிள்ளைகளுக்கும் படிப்பு அவ்வளவாக ஏறவில்லை என்பது மிகுந்த கவலையைத் தந்தது.

சொந்த இடத்தில் இருக்கும் வரை சாப்பிட வழி இருந்தது. இப்போது இடம் பெயர்ந்த பிறகு எந்தத் தொழிலும் செய்ய முடியவில்லை. அரை வயிற்றுக் கஞ்சிக்கு நாயாய் அலைய வேண்டியிருந்தது. இப் போது ஊர்வலங்களின் தேவைகளில் மிகப் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன. தவிர்க்க முடியாத சமூகமாற்றமாக அவை மாறிவிட்டன. வெய்யில் எறித்தாலும் சரி மழை கொட்டினாலும் சரி எங்கே ஊர்வலம் நடந்தாலும் அவனால் கலந்து கொள்ளாமல் இருக்க முடியாது.

இன்றைக்கும் நிவாரண வெட்டை எதிர்த்து முருகன் கோவிலடியிலிருந்து புறப்பட்டு கச்சேரிக்கு ஊர்வலம் போகிறது. அவன்




திண்ணையிலிருந்து எழுந்தான். ஒன்பது மணி ஆகியிருக்கும், மல்லிகா தேனீர் கொண்டு வந்து தரக்கூடும் என்ற எதிர்பார்ப்பில் நின்று திரும்பிப் பார்த்தான்.

“இந்தாங்கோப்பா… ஊர்வலம் முடிஞ்சு எப்பவாறீங்களோ… இதைக் குடிச்சிட்டுப் போங்கோ” மல்லிகா வெறும் தேநீரைக் கொடுத்தாள், இனிப்பு அதிகம் இல்லா விட்டாலும் மெல்லிய சூட்டில் தொண்டைக்குள் இதமாக இறங்கியது. மரக்கப்பில் தொங்கிய நைந்துபோன சட்டையை எடுத்து போட்டுக் கொண்டான். “போயிட்டு வாறன்” என்று செல்லிவிட்டு முற்றத்தில் இறங்கும் போதே மத்தியானம் சமைப்பதற்கும் மல்லிகா என்ன செய்வாள் என்ற கேள்வி நெஞ்சு வரை எழுந்தது.

“பவுண் விறகை வித்துப் போட்டு காசு கொண்டு வருவான், அதில் பார்த்து நான் வாங்கி சமைக்கிறன்” கொஞ்சம் மனம் நிம்மதியானது, இன்றைய பொழுதின் பிரச்சினை தீர்ந்த ஆறுதல். அவன் முற்றம் கடந்து வாசலுக்குப் போன போது பவுண் வெறும் சைக்கிளை தள்ளிக் கொண்டே உள்ளே நுழைந்தான். பாரம் சுமந்தே தேய்ந்து போனான்.

“கட்டி வந்த விறகை சந்தைக்குப் பக்கத்து ஒழுங்கையில் வாங்கியிட்டினம் அதுதான் வெள்ளன வந்திட்டன்.” பவுண் சைக்கிளை நிறுத்திவிட்டு மூச்சை இழுத்து விட்டுக்கொண்டான். முகத்தின் வியர்வையை கைகளால் வழித்து உதறினான் “பவுண்! ஊர்வலத்துக்கு நீயும் வாறியே…” பவுண் ஒரு வினாடி யோசித்து விட்டு “அதுக்கென்ன வாறன். ஆனால் இந்த ஊர்வலங்களை நடத்திறதால மட்டும் எங்கட பிரச்சினை தீர்ந்திடுமே” என்றான் பட்டென்று. அவன் ஒரு கணம் திகைத்துப் போய் பவுணைப் பார்த்தான் பவுணின் வார்த்தைகள் அவன் மனதை சுரீரென்று வந்து தாக்கியது. ஒரு துக்கமான உணர்வு வந்து தொண்டையை அடைத்துக் கொண்டது. அந்த அடைப்புக்குள் தனது இழப்புக்கள் அனைத்தும் சிக்கிக் கொண்டது போன்ற உணர்வு –

தன்னுடைய பதினேழு வயதில் தனக்கு ஏன் இது தோன்றாமல் போயிற்று என்று கவலையோடு நினைத்துக் கொண்டான்.

– தாமரைச்செல்வி: களத்தில்,18.11.1999

# போதைப்பொருள்: யாருடைய சூழ்ச்சி? யாருடைய இயலாமை?

27.10.2025



“உயிர்கொல்லி போதைப்பொருள் விற்பனை தொடர்பான தகவல்களை நீங்கள் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு வழங்க வேண்டாம். நேரடியாக எனக்கு வழங்குங்கள் என்று வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர், அன்றைய நாளில் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு முன்னால் குறிப்பிட்டிருந்தார். அந்தளவு தூரத்துக்கு இந்த உயிர்கொல்லி போதைப்பொருளுடன் தொடர்புடைய வலைப்பின்னல் இருக்கின்றது. “இப்படித் தெரிவித்திருப்பவர் யார் தெரியுமா? வட மாகாண ஆளுநர் வேதநாயகன். யாழ்.மாவட்டச் செயலகமும் “மாற்றம்” அறக்கட்டளையும் இணைந்து, அருட்கலாநிதி டேவிட் வின்சன் பற்றிக் அவர்கள் எழுதிய ‘விடியல்’ நூலின் வெளியீட்டு விழா யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை மாலை (23.10.2025) இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய ஆளுநர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் முன்பு யாழ் மாவட்டச் செயலராக இருந்த காலகட்டத்தில் நடந்ததைத்தான் அவ்வாறு கூறியுள்ளார். அவர் அவ்வாறு கூறுவதைத்தான் கஜேந்திரகுமார் அதே நாளில் நாடாளுமன்றத்தில் வைத்து வேறு வார்த்தைகளில் சொன்னார். போதைப்பொருள் வலைப்பின்னல் என்பது படைத்தரப்போடும் போலீசோடும் தொடர் புடையது என்று. கஜேந்திரக்குமார் உட்பட தமிழ் அரசியல்வாதிகள் கடந்த 16 ஆண்டுகளாகக் கூறிவரும் குற்றச்சாட்டு இது.

இலங்கைத் தீவின் கரையோரங்கள் நீட்டுக்கும் பயணம் செய்யும் எவரும் ஒரு விடயத்தைக் கண்டுபிடிக்கலாம். வடக்கு கிழக்கில் உள்ள கடற்கரைகள் நீட்டுக்கும் தொடர்ச்சியாகப் படை முகாம்களைக் காணலாம். இவ்வாறு தமிழ்க்கடல் நீட்டுக்கும் படை முகாம்களை வைத்துக்கொண்டு போதைப்பொருள் உள்ளே வருகிறது என்று சொன்னால் அது எப்படி வருகிறது? யாரால் கொண்டு வரப்படுகிறது? யார் அதைத் தடுக்காமல் விடுகிறார்கள்? அல்லது யார் யார் அந்த வலைப் பின்னலுக்குள் வருகிறார்கள்?

போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்பவர்கள், தாங்கள் அடையாளங் காட்டிய குற்றவாளிகள் கைது செய்யப்பட்ட பின் விடுவிக்கப் படுவதாகக் குற்றம் சாட்டுகிறார்கள். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன்வைக் கப்பட்டிருக்கின்றன. எனவே தமிழ்ப் பகுதிகளில் போதைப் பொருள் வலைக் கட்டமைப்பானது எங்கேயோ ஒரு மையத் திலிருந்துதான் இயக்கப்படுகின்றதா என்ற சந்தேகம் தமிழ் மக்கள் மத்தியில் உண்டு.

இராணுவ ரீதியாக வெற்றிக் கொள்ளப்பட்ட ஒரு மக்கள் கூட்டத்தை அரசியல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் தோற்கடிப்பதற்கு போதைப் பொருள் தேவை. அந்த மக்களை இலட்சியவாதத்திலிருந்து திசை திருப்புவதற்கு புதைப்பொருள் தேவை. அவர்களை இலட்சியப் பற்றோடு ஒன்று திரள்வதைத் தடுத்து சுய இன்பத்தில் மூழ்கும் உதிரிகளாக மாற்றுவதற்குப் போதை தேவை. இது அழிப்பின் இன்னொரு வடிவம். உலகில் ஆக்கிரமிக்கப்பட்ட எல்லாப் பிரதேசங்களிலும் கையாளப்பட்டு வரும் ஒரு பொதுவான உத்தி.

2009 க்குப்பின் வன்னிப் பெருநிலத்தில் அரசு சார்பற்ற நிறுவனங்களால் ஒழுங்கு செய்யப்படுகின்ற சந்திப்புகள், கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகளில் உரையாடும் பொழுது அங்கு பொதுவாக பொதுமக்களால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு இது. வன்னியில் சிறிய பெட்டிக் கடைகள் வரை போதைப் பொருள் வலைப்பின்னல் பரந்து காணப்படுவதாக அங்குள்ள செயற்பாட்டாளர்கள் கூறுகிறார்கள்.

எனவே தமிழ்ப் பகுதிகளில் போதைப் பொருள் பாவனை என்பது தற்செயலானதோ அல்லது இயல்பாகத் தோன்றிய ஒன்றோ அல்ல. அது திட்டமிட்டு ஒரு மையத்திலிருந்து அரசியல் உள் நோக்கங்களோடு ஊக்குவிக்கப்படும் ஒரு சமூகச் சீரழிவு.

ஆனால் கடந்த 16 ஆண்டுகளாக தமிழ் அரசியல்வாதிகளும் செயல்பாட்டாளர்களும் அதைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர அதற்கு எதிரான சுய பாதுகாப்புச் செய்முறைகள் தொடர்பாக எத்தனை பேர் சிந்தித்திருக்கிறார்கள்? தமிழ் மக்களை அரசியல் ரீதியாகவும் தோல்வியுற்ற ஒரு சமூகமாகத் தொடர்ந்து பேண விரும்பும் தரப்புகள் அவ்வாறுதான் செய்யும். அதுதான் அவர்களுடைய இராணுவ அரசியல் நிகழ்ச்சி நிரல். ஆனால் அதை எதிர்கொள்வதற்குத் தமிழ்த்தரப்பு என்ன செய்கிறது? எதிரிக்கு எதிராக குற்றஞ் சாட்டுவதோடு மட்டும் நின்று



விடலாமா? அல்லது தன்னை ஒரு தேசமாகத் திரட்டி, தனக்கு வேண்டிய சுயபாதுகாப்புக் கவசங்களைக் கட்டியெழுப்ப வேண்டாமா?

போதையில் மூழ்கும் ஒரு பகுதி தமிழ் இளையோரை இலட்சியப்பற்றுள்ள ஒரு திரட்சியாக மாற்றவேண்டியது யாருடைய பொறுப்பு? போதைக்கு பதிலாக நம்பிக்கையை, இலட்சியத்தை, நாட்டுப்பற்றைக் கட்டியெழுப்ப வேண்டியது யாருடைய பொறுப்பு? தொழில்நுட்பத்தின் கைதியாக உள்ள ஒரு தலைமுறைதான் அதிகம் போதையில் நாட்டம்கொள்கிறது. அந்தத் தலைமுறையானது எதிர்பார்ப்போடும் நம்பிக்கையோடும் இலட்சிய தாகத்தோடும் அண்ணாந்து பார்க்கின்ற ஆளுமைகள் தமிழ் சமூகத்தில் உண்டா? ஒரு தலைமுறையை அவ்வாறு வசப்படுத்தத் தவறியது யாருடைய பொறுப்பு? எனவே போதைப் பொருள் வலைப்பின்னல் எனப்படுவது தமிழ்த் தேசிய அரசியலின் இயலாமையுந்தான். தோல்வியுந்தான்.

கடந்த 16 ஆண்டுகளிலும் கிராம மட்டங்களில், அரச அலுவலகங்களில் அரசு சார்பற்ற நிறுவனங்களால் அல்லது அரச அலுவலகங்களால் ஒழுங்கு செய்யப்படுகின்ற கருத்தரங்குகள் சந்திப்புகள் பயிற்சிப் பட்டறைகளின்போது நான் ஒரு கேள்வியைக் கேட்பதுண்டு. “நீங்கள் ஒரு நாளைக்கு எத்தனை மணித்தியாலம் கைபேசியில் செலவழிக்கிறீர்கள்?” பெரும்பாலானவர்கள் ஒரு நாளைக்கு இரண்டு மணித்தியாலம் தொடக்கம் 6 மணித்தியாலம்வரை கைபேசிகளில் தங்களுடைய கண்களை ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள். யாழ்குடா நாட்டில் உள்ள விவசாயக் கிராமம் ஒன்றில் நடந்த ஒரு சந்திப்பில் கிட்டத்தட்ட 30க்கும் குறையாத பெண்கள் வந்திருந்தார்கள். எல்லாருமே குடும்பப் பெண்கள். அவர்களிடம் இதே கேள்வியைக் கேட்டபோது சராசரியாக அனைவருமே ஒரு நாளைக்கு குறைந்தது ஐந்து அல்லது ஆறு மணித்தியாளங்கள் கைபேசியில் செலவழிப்பதாகக் கூறினார்கள்.

அவர்களிடம் மேலும் சில கேள்விகளைக் கேட்டேன் “உங்களுடைய வளர்ந்த பிள்ளைகளுக்குச் சாப்பாடு கொடுக்கும் போதோ அல்லது அவர்களோடு ஆற அமர இருந்து கதைக்கும் பொழுதோ அவர்களுடைய கண்களைப் பார்த்துக் கதைப்பது உண்டா?” பெரும்பாலானவர்கள் இல்லை என்று சொன்னார்கள். உங்களுடைய பிள்ளைகளின் கைபேசிச் சேமிப்பில் யார் யாருடைய இலக்கங்கள் உண்டு? யார் யாரோடு அவர்கள் ரகசியங்களைப் பரிமாறுகிறார்கள்? யார் யாரோடு வெளியே சுற்றுகிறார்கள்? என்ற விவரங்கள் உங்களுக்குத் தெரியுமா? உங்களுடைய வளர்ந்த பிள்ளைகளின் உடல் அசைவுகளில், கண்களில், குரலில், பொதுவாக நடத்தைகளில் தோன்றும் மாற்றங்களை நீங்கள் தொடர்ச்சியாக கண்காணிப்பதுண்டா?” மிகச் சிலர்தான் ஓம் என்று பதில் சொன்னார்கள்.

தொகுத்து பேசும் போது நான் அவர்களிடம் கேட்டேன் “கைபேசியோடு சுமாராக 5 மணித்தியாலங்களை செலவழிக்கின்றீர்கள். ஆனால் உங்களுடைய வளர்ந்த பிள்ளைகளோடு அவ்வாறு





ஆற அமர ஒய்வாக இருந்து கதைப்பது குறைவு என்று கூறுகிறீர்கள். உங்களுக்கும் உங்களுடைய பிள்ளைகளுக்கும் இடையிலான இடைவெளிக்குள்தானே வாளும் போதை பொருளும் உள் நுழைகின்றன ? உங்களுக்கும் உங்களுடைய பிள்ளைகளுக்கும் இடையிலான இடைவெளிக்குள் தானே பிறத்தியார் உள் நுழைகிறார்கள்?" அந்தப் பெண்கள் அமைதியாக இருந்தார்கள்.இதுதான் யதார்த்தம். பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையே, பிள்ளைகளுக்கும் ஆசிரியருக்கும் இடையே, பிள்ளைகளுக்கும் சமூகத் தலைவர்களுக்கும் இடையே, பிள்ளைகளுக்கும் மதத் தலைவர்களுக்கும் இடையே, பிள்ளைகளுக்கும் அந்த பிள்ளைகளை வழி நடத்த வேண்டிய பொறுப்பில் உள்ளவர்களுக்கும் இடையே நெருக்கம் குறையும்போது அந்த இடைவெளிக்குள் போதைப் பொருள் வருகிறது வாள் வருகிறது.

கிராமம், கிராமமாக இருக்கும்போது அங்கே கிரீஸ் மனிதன் வர முடியாது. வாள் வர முடியாது. அதற்கு யாழ்ப்பாணத்தில் பல உதாரணங்கள் உண்டு. நடு இரவு வரை விழித்திருந்து தெருக்களில், சந்திகளில் கூடியிருந்து கதைக்கின்ற கரம் அல்லது சீட்டுக்கட்டு விளையாடுகின்ற கிராமங்களில் வாள் வெட்டுக் குழுக்களோ அல்லது கிரீஸ் மனிதர்களோ நுழைய முடியாது. அவ்வாறு நுழைந்த கிரீஸ் மனிதனை நாவந்துறை மக்கள் துரத்திக் கொண்டு போனதை இங்கே ஞாபகப்படுத்தலாம். அவ்வாறு நுழைந்த வாள் வெட்டுக் குழுவைச் சேர்ந்த நபர்களை கோணடாவில் பகுதியில் மக்கள் சுற்றி வளைத்துப் பிடித்ததை இங்கு சுட்டிக் காட்டலாம். எனவே கிராமங்கள் கிராமங்களாக இருந்தால் அவற்றுக்குள் கிரீஸ் மனிதர்களோ வாள் வெட்டுக்காரரோ வர முடியாது.

அப்படித்தான் குடும்பங்கள் குடும்பங்களாக இருக்கும்போது வளர்ந்த பிள்ளைகளை வெளியாட்கள் கையாள முடியாது. பெற்றோரால் அல்லது ஆசிரியர்களால் அல்லது பொறுப்பானவர்களால் தொடர்ச்சியாகக் கவனிக்கப்படுகின்ற பிள்ளைகள் போதைப் பொருளை நுகர்வது குறைவு. நுகரத் தொடங்கினாலும் தொடக்கத்திலேயே அதைக் கண்டுபிடித்து விடலாம்.

எனவே தமிழ் மக்களைத் தோற்கடிக்கும் நோக்கத்தோடு போதைப்பொருள் உள்ளே கொண்டுவரப்படுகிறது என்ற குற்றச்சாட்டை தொடர்ச்சியாக சொல்லிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. கைபேசி செயலிகளின் கைதிகளாக உள்ள பெற்றோரும் மூத்தவர்களும் பிள்ளைகளுக்கும் தங்களுக்கும் இடையே இருக்கக்கூடிய இடைவெளிகளை ஆகக்கூடிய பட்சம் குறைக்க வேண்டும். உதிரிகளாக இருக்கும் இளையவர்கள் தான் போதைப்பொருள் வலை பின்னலுக்குள் அதிகம் சிக்குகிறார்கள். எனவே இளையோரை ஏதாவது ஒரு இலட்சியத்தை நோக்கி அல்லது நம்பிக்கையை நோக்கித் திரட்ட வேண்டும். அதை அரசியல்வாதிகளும் ஆசிரியர்களும் செயற்பாட்டாளர்களும் சில சமயங்களில் மதத் தலைவர்களும் செய்யலாம்.

தேசியவாத அரசியல் என்பது அதுதான். அவரவர் அவரவர்க்குரிய சமூகக் கடமையை பொறுப்போடு செய்வது. சமூகத்தின் ஆகச்சிறிய நிறுவனமாகிய குடும்பத்தில் தொடங்கி கிராமங்களை, மாவட்டங்களை, மாகாணங்களை, தேசத்தை, தாயகத்தைக் கட்டியெழுப்புவது. இது ஒருவிதத்தில் கூட்டுச் சிகிச்சை. மருத்துவர்களால் மட்டும் கையாளப்பட முடியாத ஒரு விடயம். அரசியல்வாதிகள், மருத்துவர்கள், கல்விச் சமூகம், கருத்துருவாக்கிகள், மதத் தலைவர்கள், படைப்பாளிகள், ஊடகங்கள் என்று சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்புக்களும் கூட்டாகச் சேர்ந்து உழைக்க வேண்டும். வீடு வீடாக இருந்தால், ஊர் ஊராக இருந் தால் அங்கே சுய கவசங்கள் இருக்கும். தமிழ் மக்களை யாரும் தோற்கடித்துவிட முடியாது. பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே, ஆசிரியருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே, மதத் தலைவர்களுக்கும் அந்த மதத்தைப் பின்பற்றும் மக்களுக்கும் இடையே இடைவெளிகள் வளரும்போது அந்த இடைவெளிக் குள் புறத்தியார் வருவார்கள்.

ஆசிரியர்களும் மதத் தலைவர்களும் அரசியல்வாதிகளும் கருத்துருவாக்கிகளும் முன்னுதாரணங்களாக வாழும்போது இளையோர் இலட்சியத்தின்பால் ஈர்க்கப்படுவார்கள். அண்மையில் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ஒரு கருத்துத் தெரிவித்திருந்தார், போதைப் பொருள் குற்றவாளிகளைத் தூக்கில் போடவேண்டும் என்று. முகநூலில் அந்தச் செய்திக்கு கீழே ஒருவர் எழுதியிருந்தார்..."அதன் பின் எங்களுக்கு நாடாளுமன்றத்தில் 12 பேர்கள் தான் மிஞ்சுவார்கள்" என்று. அந்தப் பன்னிரண்டு பேர் ஆரெண்டு எழுதியவருத்தான் தெரியும். ஆனால் தலைவர்களும் வழிநடத்தும் பொறுப்பில் இருப்பவர்களும் முன்னுதாரணங்களாக மாறும்போது இளையோர் உதிரிகளாக போதைப்பொருள் வலைக்குள் ஈசல்களைப்போல சிக்க மாட்டார்கள். இலட்சியவாதிகளாக கழுகுகளைப் போல மேலெழுவார்கள்.

நன்றி: நிலாந்தன்




தமிழீழ
மரநடுகை மாதம்
‘கார்த்திகை’
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்
சங்கத்தமிழ்

# யாழ்ப்பாண மருத்துவமனைப் படுகொலை: 38 ஆண்டின் பின்னர் நீதிகிடைக்குமா?

– நவீனன் –

21.10.2025

யாழ்ப்பாண மருத்துவமனைப் படுகொலைகள் (Jaffna Hospital Massacre) ஈழப்போரின் போது 1987 அக்டோபர் 21இல் இடம் பெற்ற கொடூரமான நிகழ்வாகும். இந்த கோரமான படுகொலை நிகழ்ந்து, 38ஆண்டுகளின் பின்னர் நீதி கிடைக்குமா என்பது சந்தேகமே.

1989 ஆகஸ்ட் வல்வை படுகொலைகளுக்காக 450 கோடி இழப்பீடாக இந்தியா வழங்க வேண்டும் என்று சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயல்திட்டம் பரிந்துரை செய்துள்ளது. ஆனாலும் யாழ் மருத்துவமனை படுகொலைகளுக்காக இந்திய அரசு எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதே வேதனையான உண்மையாகும்,

1987இல் யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலையில் நுழைந்த இந்திய அமைதிப் படை இராணுவத்தினர் சரமாரியாகச் சுட்டதில் நோயாளிகள், தாதிகள், மருத்துவர்கள், மற்றும் பணியாளர்கள் 90 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.

மனித உரிமைக் அமைப்புக்கள் இந்த படுகொலைகளை இனப் படுகொலை எனக் கூறியுள்ளன. அதே நேரத்தில் புலிகளுக்கும், இந்திய இராணுவத்தினருக்கும் இடையில் இடம்பெற்ற சண்டைகளில் இடையில் அகப்பட்ட பொதுமக்களே கொல்லப்பட்டனர் என இந்திய இராணுவத்துக்குப் பொறுப்பான லெப். ஜெனரல் தெபிந்தர் சிங் தெரிவித்திருந்தார்.

## யாழ் மருத்துவமனை படுகொலை:

யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலை வட மாகாணத்தில் மக்கள் அடர்ந்து வாழும் யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களுக்கு அடிப்படை மற்றும் உயர்தர மருத்துவ வசதிகளை வழங்கும் ஒரேயொரு மருத்துவமனை ஆகும்.

போர்க்காலங்களில் இப்பகுதி போரில் ஈடுபடுபவர்கள் அணுகாத வண்ணம் பாதுகாக்கப்பட்ட ஒரு மருத்துவமனையாக இயங்கி வந்தது. 1987 அக்டோபர் 21 தீபாவளி விடுமுறை நாளாகும். அன்றும் முதல் நாட்களிலும் குடாநாட்டின் பல்வேறு பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்ற இந்திய இராணுவத்தினரின் ஏவுகணை வீச்சுகளில் இறந்த 70 இற்கும் அதிகமான பொதுமக்களின் இறந்த உடல்கள் மருத்துவமனையின் பிணவறையில் வைக்கப்பட்டிருந்தன.





**1989 ஆகஸ்ட் வல்வை படுகொலைகளுக்காக 450 கோடி இழப்பீடாக இந்தியா வழங்க வேண்டும் என்று சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயல்திட்டம் பரிந்துரை செய்துள்ளது. ஆனாலும் யாழ் மருத்துவமனை படுகொலைகளுக்காக இந்திய அரசு எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதே வேதனையான உண்மையாகும்.**

விடுதலைப் புலிகளுக்கும், இந்திய அமைதிப் படையினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலை அடுத்து, யாழ் நகரை இந்திய இராணுவம் கைப்பற்றும் என்ற அச்சம் நிலவியது. இதனால் மருத்துவமனையின் ஊழியர்கள் சிலர் அச்சத்தில் பணிக்குச் செல்லத் தயக்கமடைந்த நிலையிலும் பலர் தமது கடமைகளுக்குச் சென்றிருந்தனர்.

அக்டோபர் 21, 1987 காலையில் யாழ் கோட்டைப் பகுதியில் இருந்து மருத்துவமனைப் பகுதியை நோக்கி பீரங்கிக் குண்டுத் தாக்குதல்களும், உலங்கு வானூர்திகளில் இருந்து குண்டுத் தாக்க்குதல்களும் நடாத்தப்பட்டன.

அன்று மாலை இந்திய இராணுவத்தினர் மருத்துவமனையின் முன்பக்கமாக உள்ளே வந்தனர். நடைபாதை வழியாக உள்ளே வந்த அவர்கள் அங்கிருந்த அனைவரையும் உள்ளே செல்லுமாறு பணித்தனர். அதன் பின்னர் மேற்பார்வையாளரின் அலுவலகத்தினுள்ளும் ஏனைய அறைகளுள்ளும் சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்தினர் என நேரில் கண்டவர்களின் கூற்றுப் படி, பல பணியாளர்கள் இறந்து வீழ்ந்தனர்.

இவர்களில் மேற்பார்வையாளர், மற்றும் முதலுதவி வண்டி சாரதியும் அடங்குவர். ஒரு படையினன் பணியாளர் ஒருவரை நோக்கி கிரனேட்டு எறிந்ததில் பலர் கொல்லப்பட்டனர். இன்னும் ஒருவரின் கூற்றுப் படி, இந்திய இராணுவத்தினர் ஊடுகதிரியல் அறைக்குள் நுழைந்து அங்கிருந்த பலரைச் சுட்டுக் கொன்றனர்.

அதேவேளை எட்டாம் இலக்க வார்டில் இருந்து நோயாளிகள் பலர் இங்கு பாதுகாப்புக்காக தங்கியிருந்தனர். இறந்து விட்டதாகத் தரையில் படுத்திருந்த சிலர் உயிர் தப்பினர்.

இரவு முழுவதும் துபாக்கிச் சூடுகளும் எறிகணை வீச்சுகளும் இடம்பெற்றன என நேரில் கண்டவர்களின் சாட்சியங்கள் தெரிவிக்கின்றன.

## அடுத்த நாள் அக்டோபர் 22, 1987

காலையில் மருத்துவர் சிவபாதசுந்தரம் மேலும் மூன்று தாதிகளுடன் மருத்துவமனையில் இருந்து வெளியேறினர். அவர்கள் தமது கைகளை மேலே தூக்கியவாறு “நாம் சாதாரண மருத்துவர்களும் தாதிகளும். நாம் சரணடைகிறோம்,” எனக் கத்தியபடி சென்றனர். அவர்கள் மீதும் துப்பாக்கிச் சூடுகள் நடத்தப்பட்டன. மருத்துவர் சிவபாதசுந்தரம் அங்கே கொல்லப்பட்டார், தாதிகள் மூவரும் கடும் காயங்களுக்குள்ளானார்கள்.

இதன்பின் 11:00 மணியளவில் இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் வார்டு ஒன்றினுள் நுழைந்தார். ஒரு பெண் மருத்தவர் எதிரில் எதிர்ப்பட்டார். அவர் இராணுவ அதிகாரிக்கு நிலைமையை விளக்கிய பின்னர் அவர் ஏனைய பணியாளர்களை கைகளைத் தூக்கியவாறு வெளியேறி வருமாறு கூறினார்.



அங்கு உயிருடன் இருந்த 10 பேர் வெளியேறினர். வெளியேறும் போது அவர்கள் மருத்துவர் கணேசரத்தினம் இறந்து கிடப்பதைக் கண்டனர். அன்று மாலை இறந்தவர்கள் அனைவரினதும் உடல்கள் சேகரிக்கப்பட்டுத் தகனம் செய்யப்பட்டன என இக்கோர நிகழ்வை நேரில் கண்டவர்களின் சாட்சியங்கள் தெரிவிக்கின்றன.

## பாரிய மனிதப் படுகொலை

ஆனாலும் யாழ் மருத்துவமனை வளாகத்தினுள் இருந்து தம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், இடையில் அகட்ட பொது மக்களே கொல்லப்பட்டனர் என்றும் இந்திய இராணுவம் தெரிவித்தது. லெப். ஜெனரல் தெப்பிந்தர் சிங் இதனை மீண்டும் வலியுறுத்தினார். ஆனால், இத்தாக்குதல் தூண்டுதல் அற்ற பொதுமக்கள் படுகொலைகள் என மனித உரிமை அமைப்புக்களும், இலங்கை அரசும் தெரிவித்தது.

இலங்கை அரசு கூட இத்தாக்குதலை மானுடத்துக்கு எதிரான குற்றங்கள் என 2008 ஆம் ஆண்டில் கூறியது. யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர்களின் மனித உரிமைகள் அமைப்பு, மற்றும் ஜோன் ரிச்சார்ட்சன் போன்ற மேற்குலகக் கண்காணிப்பாளர்கள் மற்றும் பலர் இது ஒரு மனிதப் படுகொலைகள் எனக் கூறியுள்ளனர்.



உலக வணிகம் ULAGA VANIKAM

# 2026



# LIST YOUR BUSINESS



ON OUR BUSINESS DIRECTORY

## உலக வணிகம் ULAGA VANIKAM

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படிக்கற்கள்.

**தொடர்புகளுக்கு 437.345.4203**

# ஆப்கான் – பாகிஸ்தான் மோதல்:
# புது டெல்லியின் மறைமுகப் போரா?

**– ஐங்கரன் விக்கினேஸ்வரா –**

18.10.2025

பனிப் போர் காலத்திலும், அதன் பின்னர் பல தசாப்தங்களாக, தலிபன்களை ஆதரிப்பதை பாகிஸ்தான் தேசிய நலன் சார்ந்த விஷயமாகக் கருதி வந்தது. தற்போது எங்கு தவறு நடந்தது, கடந்த காலத்திலா தற்போதா என்ற கேள்வி எழுந்துள்ளது. ஆப்கானிஸ்தான் பாகிஸ்தான் இடையே இரண்டாயிரம் கிலோமீட்டருக்கும் அதிக நீளம் கொண்ட எல்லை உள்ளது, இது டுரண்ட் கோடு (Durand Line) என்று அழைக்கப்படுகிறது. இந்த எல்லையில் தொடர்ந்தும் மோதல்கள் நடந்து வருகின்றன.

பல மாதங்களாக இரு நாடுகளின் உறவில் பதற்றம் நிலவி வந்த நிலையில், சமீபத்திய மோதல்களால் இரு நாடுகள் உறவு மேலும் மோசமடைந்திருப்பதை காட்டுகிறது.

ஆப்கானிஸ்தானில் உள்ள தலிபான் அரசு, இந்தியாவுக்காக மறைமுக போரில் ஈடுபடுவதாக பாகிஸ்தான் குற்றம் சாட்டியுள்ளது. பாகிஸ்தான் பாதுகாப்புத்துறை அமைச்சர் காவ்ஜா ஆசிப் இந்த குற்றச்சாட்டை வைத்துள்ளார்.

இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்தே ஆப்கானிஸ்தானில் செயல்படும் டிடிபி எனும் தெஹ்ரிக் இ தாலிபான் அமைப்பினருக்கும், பாகிஸ்தான் இராணுவத்துக்கும் இடையே மோதல் நீடித்து வருகிறது.

### இருமுனை போரில் பாகிஸ்தான்:

ஆப்கானிஸ்தானுடன் எல்லையில் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில், பாகிஸ்தான் இருமுனை போருக்கு தயாராக உள்ளதாக அந்நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சர் கவாஜா ஆசிஃப் தெரிவித்துள்ளார்.

மேலும் எல்லையில் இந்தியா அத்துமீற வாய்ப்பு இருப்பதாக குறிப்பிட்ட கவாஜா, அதற்கு பதில் அளிப்பதற்கான உத்திகளை பாகிஸ்தான் ஏற்கெனவே வகுத்துள்ளதாகவும் கூறினார். எனினும் இதுகுறித்து பொதுவெளியில் விவாதிக்க முடியாது எனவும், எந்தவொரு சூழ்நிலைக்கும் தாங்கள் தயாராக உள்ளதாகவும் தெரிவித்தார்.



சட்டவிரோதமாக பாகிஸ்தானில் வசிக்கும் ஆப்கானிஸ்தானை சேர்ந்தவர்களுக்கு எதிராக பாகிஸ்தான் அரசு நடவடிக்கையை தொடங்கியுள்ளதாகவும், சட்டவிரோத குடியேறிகள் வெளியேற வேண்டும் என்றும் வலியுறுத்தினார். கடந்த காலங்களில் ஆப்கானிஸ்தானின் அனைத்து ஆட்சியாளர்களும் பாகிஸ்தானில் முன்பு தஞ்சம் புகுந்ததாக குறிப்பிட்ட கவாஜா, ஆனால் அவர்கள் யாரும் பாகிஸ்தானின் உதவியை ஒருபோதும் ஒப்புக் கொண்டதில்லை என்றார். பாகிஸ்தானுக்கு, பயங்கரவாதத்தை தவிர ஆப்கானியர்கள் வேறு எதையும் தரவில்லை என்றும் கவாஜா விமர்சித்தார்.

### ஆப்கான் பாகிஸ்தான் மோதல்:

ஆப்கானிஸ்தான் பாகிஸ்தான் மோதலில், டிடிபி தலிபான் தலைவர்களை குறி வைத்து பாகிஸ்தான் இராணுவம் போர் விமானங்கள் மூலமாக தாக்குதலை நடத்தியது. எல்லை தாண்டி பாகிஸ்தான் நடத்திய இந்த தாக்குதலால் கோபமடைந்த தாலிபான்கள், பதிலடி கொடுத்தனர். இதில் பாகிஸ்தான் தரப்பில் 58 இராணுவ வீரர்கள் உயிரிழந்ததாக கூறப்படுகிறது. இரு தரப்பும் மாறி மாறி தாக்குதல் நடத்தியதால் எல்லையில் பதற்றம் ஏற்பட்டது.

இதையடுத்து சவுதி அரேபியா மற்றும் கட்டார் நாடுகள் இந்த விவகாரத்தில் தலையிட்டு மோதலை முடித்து வைக்க முயன்றன. எனினும் நீண்ட நாட்கள் இது நீடிக்கவில்லை. டெல்லி தான் காரணம் என பாகிஸ்தான் தரப்பில் கூறப்பட்டது. ஆனாலும் ஆப்கானிஸ்தானின் கந்தகார் மாகாணத்தில் உள்ள ஸ்பின் போல்டாக் மாவட்டத்தில் இருநாடுகளின் எல்லையில் தற்போது போர் வலுத்துள்ளது.

இதில் பாகிஸ்தான் தாக்குதலில் ஆப்கானிஸ்தானை சேர்ந்த 15 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 100க்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர். அதேபோல் ஆப்கானிஸ்தான் நடத்திய தாக்குதலில் பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளதாக ஆப்கான் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.






### இந்தியாவின் மறைமுக போர்?

இத்தகைய சூழலில் மீண்டும் கட்டார, சவுதி அரேபியா அரசுகள் தலிபான்கள் மற்றும் பாகிஸ்தானிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டன. இதில் ஓர் குறுகிய உடன்பாடு ஏற்பட்டதை அடுத்து பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் தாக்குதலை நிறுத்தினர். இதனால் 48 மணி நேரம் போர் நிறுத்தம் அமலுக்கு வந்தது.

ஆனாலும் இதனையடுத்தும் போர் நிறுத்தம் பேணப்படவில்லை. இதற்கு எல்லாம் டெல்லி தான் காரணம் என பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் காவ்ஜா ஆசிப் குற்றச்சாட்டு வைத்துள்ளார். இந்தியாவுக்காக மறைமுக போரை ஆப்கானிஸ்தானில் உள்ள தலிபான் அரசு, ஈடுபடுவதாக பாகிஸ்தான் தொடர்ந்து குற்றம் சாட்டியுள்ளது.

ஆயினும் போர் நிறுத்தம் நீடிக்குமா என்பதில் எனக்கு சந்தேகம் உள்ளது. ஏனெனில், ஆப்கானிஸ்தானில் உள்ள தலிபான் அரசு டெல்லி ஆதரவுடன் முடிவுகளை எடுக்கிறது. ஏனென்றால் அண்மையில் தலிபானின் ஆப்கான் வெளியுறவு அமைச்சர் அமீர் கான் முத்தகி, தனது ஆறு நாள் இந்தியப் பயணத்தின் போது சில மறைமுகமான திட்டங்களை வகுத்துள்ளார் என்று கராச்சி தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கான் அமைச்சர் வர்த்தகம் மற்றும் இருதரப்பு உறவுகளை மையப்படுத்தி இந்தியாவுக்கு சென்றதாக கூறினாலும் மறைமுக திட்டங்கள் வகுக்கப்பட்டு இருப்பதாக பாகிஸ்தான் அரசு கூறியுள்ளது.

### பல ஆண்டு மோதல் போக்கு:

கடந்த சில மாதங்களாக பாகிஸ்தான்-ஆப்கானிஸ்தான் எல்லையில் பல பகுதிகளில் இரு தரப்பினருக்கும் இடையே மோதல்கள் பதிவாகியுள்ளன. எல்லையில் உள்ள பாகிஸ்தான் சோதனைச் சாவடிகளையும் தலிபான்கள் கைப்பற்றியுள்ளனர்.

இந்நிலையில் ஆப்கானிஸ்தானை ஆட்சி செய்துவரும் தலிபான்கள் இருநாட்டு எல்லையில் கிளை அமைப்பை தொடங்கி பயங்கரவாத செயல்களில் ஈடுபடுவதாக பாகிஸ்தான் குற்றஞ்சாட்டி வருகிறது. குறிப்பாக தெஹ்ரீக் இ தலிபான் (TTP) என்ற அமைப்பு பாகிஸ்தானில் தாக்குதல் நடத்துவதாக குற்றஞ்சாட்டி வருகிறது.

மேலும், இந்த பயங்கரவாத அமைப்பை அழிப்பதாக கூறி ஆப்கானிஸ்தான் தலைநகர் காபுலில் பாகிஸ்தான் விமானப்படை கடந்த சில நாட்களுக்கு முன் தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலுக்கு ஆப்கானிஸ்தானை ஆட்சி செய்யும் தலிபான்கள் அரசு கண்டனம் தெரிவித்தது. இந்த தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கப்படும் என்று எச்சரித்தது.

### பாகிஸ்தான் – தலிபன் உறவு:

பாகிஸ்தானில் தாக்குதல்களை நடத்திய தெஹ்ரிக்-இ-தலிபன் பாகிஸ்தான் எனப்படும் TTP குழுவுக்கு தலிபன்கள் அடைக்கலம் கொடுப்பதாக பாகிஸ்தான் குற்றம் சாட்டுகிறது. இந்த விவகாரத்தால் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மோசமடைந்து வந்தன. ஆகஸ்ட் 2021இல் தலிபன்கள் ஆட்சிக்கு வந்ததில் இருந்து பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் இடையிலான பதற்றம் பல முறை வெடித்துள்ளது.

காபூலை விட்டு அமெரிக்கா வெளியேறிய பின்னர், தலிபன்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்ததை பாகிஸ்தான் தொடக்கத்தில் வரவேற்றது. இது அதன் மேற்கு எல்லையை உறுதிப்படுத்தும் என பாகிஸ்தான் நம்பியது. மேலும், தலிபனுடன் சித்தாந்த ரீதியாக தொடர்புடைய குழுவான TTPஇன் தாக்குதல்களையும் தாலிபன் கட்டுப்படுத்தும் என பாகிஸ்தான் நம்பியது.

ஆனால் வன்முறையே அதிகரித்தன. எல்லை தாண்டி TTP நடத்திய தாக்குதல்களில் நூற்றுக்கணக்கான தங்கள் இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதாக பாகிஸ்தான் கூறுகிறது.

> **ஆப்கானிஸ்தானில் உள்ள தலிபான் அரசு டெல்லி ஆதரவுடன் முடிவுகளை எடுக்கிறது என்றும், தற்போது காபூல் அரசு டெல்லியின் மறைமுக போரை நடத்தி வருகிறது எனவும் பாகிஸ்தான் குற்றம் சாட்டியுள்ளது. தலிபான்களை சமாளிக்க திணறும் பாகிஸ்தான் அரசு, இந்தியா மீது தேவையற்ற குற்றச் சாட்டை சுமத்தி வருகிறது என இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.**
>
> **அண்மையில் ஆப்கானிய தலிபானின் வெளியுறவு அமைச்சர் அமீர் கான் முத்தகி, தனது ஆறு நாள் இந்தியப் பயணத்தின் போது சில மறைமுகமான திட்டங்களை வகுத்துள்ளார் என்றும் கூறப்படுகிறது**

ஆனால், இதை மறுக்கும் ஆப்கானிஸ்தான் அரசு, பாகிஸ்தானின் இந்த குற்றச்சாட்டுகள் அரசியல் உள்நோக்கம் கொண்டவை என்கிறது.

மேலும் டுரண்ட் கோட்டில் (Durand Line) வேலி அமைப்பது தொடர்பாகவும் சமீபத்திய ஆண்டுகளில் இருதரப்பும் மோதிக் கொண்டன. ச்சமன், குர்ரம் மற்றும் பாஜோர் போன்ற பகுதிகளில் எல்லை தாண்டிய பல தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இதனால் முக்கிய வர்த்தக பாதைகளை பல சந்தர்ப்பங்களில் மூட வேண்டியிருந்தது.

### நீண்டகால பதற்றம்:

இரு தரப்பினருக்கும் இடையே நம்பிக்கையின்மை, பொருளாதார பதற்றங்கள் ஆகியவை ஒரு காலத்தில் வெளியுலகுக்கு தெரியாமல் இருந்தன. தற்போது இந்த மோதல் வெளிப்படையான விரோதமாக மாற்றியுள்ளது.

அத்துடன் பாகிஸ்தானில் பயங்கரவாத தாக்குதல்களை நடத்தும் TTPக்கு எதிராக தீர்க்கமான நடவடிக்கை எடுக்க ஆப்கான் ஆட்சி மறுப்பதால் பாகிஸ்தானுக்கு குறைந்த தேர்வுகளே உள்ளன. தலிபன்களிடம் செல்வாக்கு கொண்டிருக்கும் சீனா, சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உள்ளிட்ட நாடுகளிடமிருந்து பாகிஸ்தான் உதவியை நாடியுள்ளது. அதன் மூலம் TTPக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

மறுபுறம் பாகிஸ்தான் இராணுவத்தை நேரடியாக எதிர்த்துப் போராடும் திறன் தலிபன்களுக்கு இல்லை. மேலும் பாகிஸ்தானும் சவுதி அரேபியாவும் சமீபத்தில் ஒரு பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. அந்த ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் எதிரான எந்தவொரு தாக்குதலும் இரு நாடுகள் மீதான தாக்குதலாகவே கருதப்படும் என கூறுகிறது. எனவே இந்தப் போரில் ஆப்கான் நிலமை மோசமாகவே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.




# மாவீரன் பண்டாரவன்னியன் நினைவுக்கல்

ஆங்கிலேயருக்கு அடிபணிய மறுத்த இறுதிவரை போராடிய வன்னி குறுநில மன்னன் பண்டாரவன்னியனுக்கு ஆங்கிலத் தளபதியே இறுதி மரியாதை செலுத்தி உள்ளான். கப்டன் வொன் றிபேக் என்ற தளபதி பண்டார வன்னியனைத் தோற்கடித்த நிகழ்சியினை இந்நடுகல் காட்டுகின்றது. இவ் நடுகல் கற்சிலைமடுவில் உள்ளது. தற்போது சிறீலங்கா சிங்களப் படைகளால் உடைத்து அழிக்கப்பட்டுள்ளது.

# ஈழத் தமிழரின் சுயநிர்ணயப் போராட்டம் உலக அரசியல் சூழ்நிலையால் நிர்ணயிக்கப்படுகிறது!

**ஜூட் பிரகாஷ் – மெல்பேர்ண்**

27.10.2025

மெல்பேர்ணில் இடம்பெற்ற, ஐங்கரன் விக்கினேஸ்வரா அண்ணரின், 25.10.25இல் ஆறு நூல்கள் வெளியீட்டு விழாவில் ஆற்றிய உரையில் இருந்து…

ஐங்கரன் விக்கினேஸ்வரா, ஐங்கரன் அண்ணர், நாங்கள் இருவரும் யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரியின் பழைய மாணவர்கள். யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரி… காலங்கள் கடந்தும் எங்களைப் பிணைத்த, பிணைத்துக் கொண்டிருக்கும் அன்புப் பிணைப்பு, நாங்கள் ஆழமாக நேசிக்கும் எங்களின் 2025 ஆண்டுகளை கடந்து பயணிக்கும் பெருமைமிகு அடையாளம்.

ஐங்கரன் அண்ணர் பரி யோவானின் புகழ்பூத்த 1989 Batch காரன். அவரது 89 Batch அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் மிகவும் புகழ்பெற்றது. 1992 Batch காரர்களான நாங்கள் வியந்து பார்த்து, இவர்களைப் போல வரவேண்டும், வாழ வேண்டும், அட்டகாசம் செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்ட அதிதிறமைசாலிகளை தன்னகத்தே கொண்ட Batch தான் அண்ணரின் SJC89 Batch.

அந்தப் Batch இல் கல்வி, விளையாட்டு, இலக்கியம், இசை, காதல் என்று அனைத்திலும் சிறந்து விளங்கிய சிங்கன்கள் இருந்தனர். அண்ணரின் Batch காரன்கள் மட்டுமல்ல, அவங்கள் சுழற்றிய பெட்டைகளின் பெயர்களும் பரியோவானின் வரலாற்றில் இடம்பிடிக்குமளவிற்கு இவங்களின் காதல் சுழற்றல் கதைகள் அந்தக் காலத்தில் மிகவும் பிரபலமானவை.

1989 Batch இன் மாணவரான சுபனேசன், 1989ஆம் ஆண்டு உயர் தர Bio பிரிவில் இலங்கைத் தீவின் முதலாவதாக வந்தவர். 1989 Cricket Team பற்றி சொல்லித் தெரிய வேண்டியதில்லை. சஞ்சீவன் 1988 மற்றும் 89 ஆண்டுகளில் தலைமை தாங்கிய அணியை வெற்றி கொள்ள யாழ்ப்பாணத்தில் எந்த பாடசாலையாலும் ஏலாமல் இருந்தது.

பரி யோவானில் ஐங்கரன் அண்ணரின் வகுப்பில் படித்தவர்களில் எங்கள் தேசத்திற்கான விடுதலைப் போராட்டத்தில் இணைந்து சரித்திரம் படைத்தவர்களும் இருக்கிறார்கள். இயக்கத்தின் முதலாவது பறப்பில் பறந்த வானோடி ஒருவரும், கடலிலே காவியங்கள் எழுதிய கடலோடிகளாகவும், சரித்திரம் படைத்த அவர்களின் கதைகளை காலம் வரும் போது ஐங்கரன் அண்ணா எழுதுவார் என்று நம்புகிறேன்.

ஆனால் அந்த வெற்றிகளுக்குப் பின்னால், வேதனைகளும் இருந்தது. ஐங்கரனின் அண்ணரின் இரண்டு வகுப்புத் தோழர்கள், அகிலன் திருச்செல்வம் மற்றும் “அறிவாளி” தேவகுமார், ஈபிகாரன்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பள்ளிக்காலங்களில் ஐங்கரன் அண்ணா வெளியிட்ட இரு நூல்கள் பற்றியும் தொட்டுச் செல்லலாம். முதலாவது 1981 ஜூன் முதலாம் திகதி எரிக்கப்பட்ட யாழ்ப்பாண நூலகத்ததின் நினைவுகளை சுமந்த “அணையாத அறிவாலயம்”, இரண்டாவது அகிலன் படுகொலை செய்யபட்ட பின்னர், அகிலனின் எழுத்துக்களை தாங்கி வந்த “மரணம் வாழ்வின் முடிவல்ல” என்ற கவிதைத் தொகுப்பு.




ஐங்கரனின் எழுத்து, அந்தக் காலத்து நினைவுகளின் ஒரு பிரதிபலிப்பு. அவரது அரசியல் சிந்தனைகள், தமிழர் தாயகத்தில் நாங்கள் அனுபவித்த அனுபவங்களின் ஆழத்திலிருந்து உருவானவை. இன்று நாம் அறிமுகப்படுத்தும் முரண்பாடுகள் முற்றிய அரபுலகின் தேசிய இனங்கள் என்ற நூல், அந்த வரலாற்றின் ஒரு குரலாகவும், அந்த சிந்தனையோட்டத்திட் தொடர்ச்சியாகவுமே நோக்குகிறேன்..

இந்த நூலின் உள்ளார்ந்த நெகிழ்ச்சி, அதன் அர்ப்பணிப்பில் தொடங்குகிறது.

ஐங்கரன் விக்கினேஸ்வரா அவர்கள், இந்த நூலை, மெல்பேர்ணில் வாழ்ந்து மறைந்த, பரி. யோவான் கல்லூரியில் Primary School Headmaster Master துரைசாமி மாஸ்டர் அவர்களுக்கு அர்ப்பணித்துள்ளார். துரைசாமி மாஸ்டர் கடுமையான ஒழுக்க நெறி கொண்ட தலைமை ஆசிரியர், ஆனால் அதே நேரத்தில், தமிழ் மொழியின் மீதும் தமிழர் பண்டாடு மீதும் ஆழமான காதலை மாணவர்களிடம் விதைத்தவர். துரைசாமி மாஸ்டர் தினமும் பள்ளிக்கு வேட்டி அணிந்து வருவது வழமை.

இன்றைய உலகம், இன அடையாளங்களின் மீதான சிக்கலான அரசியல் விவாதங்களால் ஆழமாக பாதிக்கப்படுகிறது. முரண்பாடுகள் முற்றிய அரபுலகின் தேசிய இனங்கள் என்ற ஐங்கரன் அண்ணாவின் நூல், அந்தப் பாதிப்புகளின் மையத்தில் நின்று, அரபுலகில் இனங்களுக்கிடையே உருவான முரண்பாடுகளை வரலாற்று, சமூக மற்றும் அரசியல் கோணங்களில் ஆராய்கிறது.

ஐங்கரன் விக்கினேஸ்வரா, ஒரு தமிழரசியல் சிந்தனையாளர், இந்த நூலில் பன் இன அரசியலின் சிக்கல்களை மட்டும் அல்லாமல், சுயநிர்ணயத்தின் சாத்தியங்கள், இன அடையாளங்களின் மீதான உரிமை, மற்றும் பன்னாட்டு அரசியல் சூழ்நிலைகளின் தாக்கங்களை விரிவாக விவரிக்கிறார்.

இந்த நூல், எங்களிற்கு ஒரு சிந்தனையூட்டும் பயணமாகும். இது, அரபுலகின் அரசியல் சிக்கல்களைப் புரிந்து கொள்ளும் ஒரு வாய்ப்பாக மட்டுமல்ல, தமிழரசியல் சிந்தனையின் பரப்பை விரிவுபடுத்தும் ஒரு முயற்சியாகவும் பார்க்கலாம்.

இன அடையாளங்கள், சுயநிர்ணயம், மற்றும் பன் அரசியல் குறித்து ஆழமாக சிந்திக்க விரும்பும் ஒவ்வொருவரும், இந்த நூலைத் வாசிக்க வேண்டும்.

தற்காலத்தில் உலக அரசியல் சூழலில், இன அடையாளங்கள் மற்றும் தேசிய சுயநிர்ணயத்தின் மீதான விவாதங்கள் மீண்டும் முக்கியத்துவம் பெறுகின்றன. இஸ்ரேல்-பாலஸ்தீன முரண்பாடு, அந்த விவாதத்தின் மிகக் கடுமையான வெளிப்பாடாகவே பார்க்கப்படுகிறது. ஒரு பக்கம், வரலாற்று உரிமை, பாதுகாப்பு, மற்றும் இன அடையாளத்தின் மீதான உரிமை; மறுபக்கம், நிலம், சுயநிர்ணயம், மற்றும் அடக்குமுறையின் எதிர்ப்பு, இந்த இரு பார்வைகளும், உலக அரசியல் மேடையில் மோதுகின்றன.

இந்த முரண்பாட்டில், “தேசிய இனம்” என்ற கருத்து, வெறும் வரையறையாக மட்டும் இல்லாமல், ஒரு வாழ்வியல் போராட்டமாக மாறுகிறது. பாலஸ்தீன மக்களின் சுயநிர்ணயக் கோரிக்கையும், இஸ்ரேலின் பாதுகாப்பு சார்ந்த தேசிய அடை




www.sangathamil.ca



யாளமும், ஒரே நிலத்தில் இரு எதிர்மறையான சிந்தனைகளை உருவாக்குகின்றன. இந்த சூழலில், முரண்பாடுகள் முற்றிய அரபுலகின் தேசிய இனங்கள் என்ற நூல், அந்த சிக்கல்களை புரிந்து கொள்ளும் ஒரு அடித்தளமாக அமைகிறது.

இன அடையாளங்கள் மற்றும் சுயநிர்ணயத்தின் மீதான அரசியல் விவாதங்கள், ஈழத் தமிழர்களின் வரலாற்றிலும் ஆழமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், தமிழ் மக்களின் மொழி, கலாசாரம், மற்றும் அரசியல் உரிமைகள் மீதான கோரிக்கைகள், ஒரு தேசிய இனமாக அவர்களை அடையாளப்படுத்தும் முயற்சியாக, தமிழ் தேசிய சிந்தனையாக உருவெடுத்தன. தமிழ் தேசியம் எனும் அடையாளம், இலங்கைத் தீவின் அரசியல் கட்டமைப்பில் இருந்து புறக்கணிக்கப்பட்ட போது, அது எதிர்ப்பாகவும், ஆயுதப் போராட்டமாகவும் மாறியது.

“சிவபெருமானுடைய முதுகில் விழுந்த பிரம்படி எல்லோர் முதுகிலும் சுளீரிட்டதுபோல, திலீபனின் சாவு எல்லோருடைய முற்றங்களிலும் விழுந்திருக்கிறது” என்று பார்த்தீனியம் புத்தகத்தில் தமிழ்நதி அக்கா, தமிழர் தேசத்தின் உணர்வலையை படிமப் படுத்துவார்.

எங்கள் எல்லோரது முதுகில் விழுந்த திலீபனின் சாவு எனும் பிரம்படி போல, தமிழ் தேசியம் எனும் கோட்பாடும் எங்கள் எல்லோரது மனங்களிலும் ஆழகாக விதைக்கப்பட்டிருக்க வேண்டும். தமிழ் தேசியம் என்ற கோட்பாடு, எங்களில் சரியாக ஊட்டப்படாமல், விதைக்கப்படாமல் போனது, வரலாறு எங்களிற்கு இழைத்த துன்பியல் நியதி.

தமிழ் தேசியம் என்றால் என்ன? தமிழ் தேசியம் ஒரு கெட்ட வார்த்தையா? தமிழ் தேசியம் என்றால் பிரிவினையா? தமிழ் தேசியம் என்றால் அடிபாடும், போராட்டமும், ஆர்ப்பாட்டமுமா? தமிழ் தேசியம் என்றால் வாக்கு அரசியலா? தமிழ் தேசியம் என்றால் சித்தாந்தம் கதைத்துக் கொண்டிருப்பதா? தமிழ் தேசியம் என்றால் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு எதிரானதா?

இல்லையடாப்பா… தமிழ் தேசியம் என்றால், காலங்காலமாக எங்கள் மூதாதையர்கள் வாழ்ந்த மண்ணில், எங்களது அலுவல்களை நாங்களே பார்த்துக் கொள்ளும் போதுமான அதிகாரங்களுடன், எந்தவித அடக்குமுறைக்கும் ஆளாகாமல், மான ரோசத்துடன் நாங்கள் வாழ்வது தான். எங்களிற்கு விளங்குறமாதிரி சொல்ல வேண்டும் என்றால், தாயகம், சுயாட்சி, சுயநிர்ணயம்.

எந்த ஒரு இனமோ, போராட்ட அமைப்போ, அரசியல் கட்சியோ, வியாபார நிறுவனமோ, ஏன் தனிநபரோ, தனது இருப்பிற்கும் முன்னேற்றத்திற்கும் சில அடிப்படைக் கோட்பாடுகளை தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும். சரியான அடிப்படைக் கோட்பாடுகளை கொண்ட அமைப்புக்களும் இயக்கங்களும் தனிநபர்களும் தான் Built to Last வகையறாக்களுக்குள் அடங்கும்.

தமிழ் தேசியமும் அவ்வாறான ஒரு கோட்பாடே. தமிழ் தேசியம் என்பது எங்களது இனத்தின் அடையாளத்திற்கான, இருப்பைத் தக்க வைப்பதற்கான, முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு எளிய கோட்பாடு. தமிழ் தேசிய கோட்டாடு ஒரு தடைக்கல் அல்ல, தடைகளை உடைபதற்கான ஒரு திறவு கோல். தமிழ் தேசியம் இருப்பை இழப்பதற்கானதல்ல, இருப்பை தக்கவைத்துக் கொண்டு எங்களை முன்னேற்ற பாதையில் வழிநடத்தும் ஒரு கோட்பாட்டு வழிகாட்டி.

ஜேவிபி அமைப்பு தான் கொண்ட சிங்கள சோஷலிஸ தேசியவாத கொள்கையில் உறுதியாக நின்றதால் தான் கிட்டத்தட்ட 60 ஆண்டுகளிற்கு பின்னர் தனது இலக்கை இன்று அடைந்திருக்கிறது. தனது கொள்கையை ஆழ் மனதில் புதைத்து விட்டு, காலத்திற்கேற்ப தன்னை மாற்றிக் கொண்டு, உலகத்தோடு ஒத்தோடி, இன்று ஜேவிபி ஆட்சியைப் பிடித்திருக்கிறது.

பெருங் கட்சிகளோடு இணைந்து பயணித்து, அமைச்சர்களாகி, இராஜினாமா செய்து, எதிர்கட்சியில் இருந்து, இந்தியா கூப்பிடடாலும் போய் கதைத்து, சீனாவோடும் பேச பீஜிங் போய், அமெரிக்காவோடு விருந்துண்டு, என்று பல்வேறு வெளிப்புற தோற்றங்களை அந்தக் கட்சி காட்டிக் கொண்டிருக்கும் போதும், தனது அடிப்படைவாத கோட்பாட்டை மனதுக்குள் உறுதியாக பூட்டி வைத்திருந்தது, இன்னும் வைத்தருக்கிறது.

நாங்கள் என்ன செய்கிறோம்? வெளியே ஆ ஊ என்று எங்கள் கோட்பாட்டை தொண்டை கிழிய கத்திக் கொண்டு, இனம் சார்ந்து எடுக்கும் முடிவுகளில் தமிழ் தேசியம் எனும் கோட்பாட்டைக் கோட்டை விட்டு விடுகிறோம். தமிழ் தேசியம் என்பதை ஒரு குறுகிய வட்டமாக வரையறுத்து விட்டு, குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டிக் கொண்டிருக்கிறோம்.

எதிரியோடு உறுதியாக உறவாடவும், ஏன் எதிரியை பயன்படுத்தியே நமது நலன்களை பேணவும், முன்னேறவும் தமிழ் தேசிய கோட்பாட்டில் இருக்கும் உறுதி எம்மை பலப்படுத்தும், வலுச் சேர்க்கும்.

பரந்துபட்டு, வியாபித்து, அதிவேகத்தில் முன்னேறிக் கொண்டிருக்கும் உலக ஒழுங்கில் பயணிக்கவும் தமிழ் தேசிய கோட்பாடு தடையாக இராது. மாறாக, கொள்கையில், கோட்பாட்டில் உறுதியாக இருக்கும் போது, கிடைக்கும் சந்தர்ப்பங்களையும், சூழ்நிலைகளையும் சரியான முறையில் பயன்படுத்த கோட்பாடுகளே சரியான வழிகாட்டிகள், தமிழ் தேசியமும் அவ்வாறானதே.

எங்கள் இருப்பை தக்க வைக்கவும், உரிமைகளை வென்றெடுக்கவும் பொருளதார பலத்தின் அவசியத்திற்கு தமிழ் தேசிய கோட்பாடு முரணானது அல்ல. சமூக பொருளாதார பலமே தாயகத்தின் எல்லைகளை காக்கும் அரண் வேலைவாய்ப்பால் பசியின்றி இருந்தால் தான் உரிமைக்காக குரல் கொடுக்கலாம் போன்ற அடிப்படைகளை தமிழ் தேசியமும் தன்னகத்தே கொண்டே இருக்கிறது.

தமிழ் தேசிய மூலக்கருவை சிதைக்காதவண்ணம், எங்களை மூடிய அறைக்குள் மட்டுப்படுத்தாது, உலக ஒழுங்கின் பரந்துபட்ட எல்லைகளை தொட்டுச் செல்லவேண்டிய கட்டாயத்தில், தமிழ் தேசியத்தை செயலூட்டமிக்கதாக ஆக்க வேண்டிய காலகட்டதில், நாங்கள் பயணிக்கிறோம்.

ஈழத் தமிழர்களின் சுயநிர்ணயப் போராட்டம், உலக அரசியல் சூழ் நிலைகளால் நிர்ணயிக்கப்படும் ஒரு சிக்கலான பாதை. இந்தியா, ஐக்கிய நாடுகள், மற்றும் மேற்கத்திய சக்திகள் இவை அனைத்தும், அந்த போராட்டத்தின் வடிவமைப்பில் நேரடி அல்லது மறைமுக பங்குகளை வகித்தன.

முரண்பாடுகள் முற்றிய அரபுலகின் தேசிய இனங்கள் இந்நூல், அரபுலகில் நிகழும் இன அரசியல் முரண்பாடுகளை ஆராயும் போது, இலங்கைத் தமிழர்களின் அனுபவத்தையும் பிரதிபலிக்கிறது. ஒரு இனத்தின் உரிமை, அதன் அடையாளம், மற்றும் அதன் அரசியல் எதிர்காலம், இவை அனைத்தும், உலக அரசியல் மேடையில் எவ்வாறு சிக்கலாக மாறுகின்றன என்பதை முரண்பாடுகள் முற்றிய அரபுலகின் தேசிய இனங்கள் என்ற இந்த நூல் நமக்கு நினைவூட்டுகிறது.





# அநுராவின் முதலைக் கண்ணீர்: முள்ளிவாய்க்காலை அழித்துவிட்டு, காசாவிற்காக அழுவது ஏன்?

– நவீனன் –

15.10.2025

கடந்த மாதம் செப்டம்பரில் ஐ.நா பொதுச் சபையின் 80 ஆவது கூட்டத் தொடரில் சிறீலங்கா ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கலந்து கொண்டு உரையாற்றும் போது, பாலஸ்தீன மக்களுக்கான தனி அரசுக்கான பிரிக்க முடியாத உரிமையை அங்கீகரிக்கிறோம் என்று கூறினார்.




ஆனால் காசாவை விஞ்சியதாக தமிழ் இன படுகொலையான முள்ளிவாய்காலில் இடம்பெற்ற பேரவலம் ஏன் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் கண்ணுக்கு புலப்படவில்லை என்பதே முக்கியமான கேள்வியாகும்.

பாலஸ்தீனத்தை அங்கீகரிக்கும் ஜனாதிபதி தமிழ் தேசிய இனத்தை மறந்தது ஏன் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான். சர்வதேச ரீதியில் தம்மை நல்லவர்களாக காட்ட முயலும் அரசாங்கம் தமிழ் மக்களின் அரசியல அபிலாசைகளை வழங்குவதில் எவ்வித அக்கறையும் காட்டுவதில்லை என்பதை மீண்டும் தெளிவுபடுத்தி உள்ளார்.




## ஐ. நா அங்கீகாரம்:

கடந்த மாதம் செப்டம்பரில் ஐ.நா பொதுச் சபையின் என்பதாவது கூட்டத் தொடரில் ஒரு இறையாண்மை கொண்ட தனி நாடாக பாலஸ்தீனம் பல நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 81 சதவீத ஐ.நா உறுப்பு நாடுகளால் இம்முடிவு எட்டப்பட்டுள்ளது. தற்போது ஐ.நாவில் அங்கத்துவம் வகிக்கும் 193 ஐ.நா. உறுப்பு நாடுகளில் 157 நாடுகளால் பாலஸ்தீன தேசம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா பொதுச் சபையில் இதன்மூலம் 194 நாடுகள் அங்கீகாரம் பெற்றுள்ளன. இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவும் பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிப்பதற்கு ஆதரவை வழங்கியுள்ளார்.

அங்கீகரிக்கப்பட்டுள்ள பாலஸ்தீனம் இஸ்ரேலுடன் வடக்கு, மேற்கு மற்றும் தெற்கிலும், கிழக்கில் ஜோர்தானுடனும், தென மேற்கில் எகிப்துடனும் தனது எல்லைகளைப் பகிர்ந்து கொள்கிறது.

19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்தே பிரித்தானியாவின் ஆளுகையின் கீழ் இருந்த பிரதேசமாகவும் விளங்கிய பாலஸ்தீன நாடு தொடர்ந்து பேரவலங்களை சந்தித்து வருகின்றது. மேலும் அருகில் இருந்த அரபு நாடுகளிலும் அதிகம் மக்கள் பாதிக்கப்பட்டும் உள்ளனர்.

காலங்காலமாக போரால் பாலஸ்தீனம் கடும் நெருக்கடிகளை சந்தித்து வருகிறது. இஸ்ரேலிய மற்றும் பாலஸ்தீன மக்களின் நியாயமான பாதுகாப்பு மற்றும் மனிதாபிமான தேவைகளை அங்கீகரிப்பதும் அவசியம்.

1967 ஆம் ஆண்டின் எல்லை வரையறையை கொண்டு, இரண்டு நாடுகள் அருகருகே இருப்பதற்கான அடிப்படையை வழங்கிய ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களின் படி ஒரு நியாயமான மற்றும் நீடித்த தீர்வுக்காக நாம் ஒன்றுபட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

## தமிழ் தேசிய இன எதிர்காலம்:

சிறீலங்கா தீவைப் பொறுத்த வரை பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடம் இருந்து சுதந்திரம் பெற்ற நாள் முதல் தமிழ் தேசிய இனம் தமக்கு சம உரிமையை கோரி ஆரம்பித்தில் முப்பது வருடமாக அகிம்சை வழியில் போராடியது.

ஆனாலும் அதனை தென்னிலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்கள் கண்டு கொள்ளாததுடன் தமிழ் மக்கள் மீது இன வன்முறையை கட்டவிழ்தது விட்டனர். இதன்விளைவாக தமிழ் தேசிய இனத்தின் இருப்பையும், அவர்களது தேசத்தையும் பாதுகாக்க தமிழ் இளைஞர், யுவதிகள் ஆயுதமேந்திப் போராட வேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்பட்டிருந்தது.

அகிம்சை வழியில் போராடி வெற்றி பெறா நிலையில் கடந்த முப்பது வருட ஆயுதப் போராட்டம் ஈழத்தில் நடந்தது.

ஆனால் ஆயுதப் போராட்டம் 2009 ஆம் ஆண்டு மௌனிக்கப்பட்ட பின்னர் மீண்டும் 16 வருடங்களாக நீதி கேட்டும், சமவுரிமை கேட்டும் தமிழ் மக்கள் ஜனநாயக ரீதியாக போராடி வருகின்றனர்.

ஆக, தனது நாட்டிற்குள் சிங்கள தேசிய இனத்தைப் போல் இன்னொரு இனமான தமிழ் தேசிய இனமும் சுதந்திரமாக வாழ்வதற்காக 76 வருடத்திற்கு மேலாக சொல்லண்ணா, துன்ப துயரங்களுடன் போராடி வருகின்றது.

அதற்காக தமிழ் தேசிய இனம் கொடுதத விலைகள் அதிகம். நாட்டில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அதிகம். பாலஸ்தீன மக்களின் துயரத்தை புரிந்து கொண்ட ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க சொந்த நாட்டில் நீதிக்காக ஏங்கும் மக்களின் போராட்டத்தையும், அவர்களது வலியையும் புரிந்து கொள்ளாமை கடந்த ஆட்சியாளர்களின் மனநிலையில் தான் தேசிய மக்கள் சக்தியும் இருக்கின்றதா என்ற கேள்வியை எழுப்புகிறது.

வேடிக்கை என்னவென்றால் ஒருபுறம் பாலஸ்தீனம் மீது கருணை காட்டும் ஐ.நா சபை, தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகைளையும், அவர்கள நீதிக் கோரிக்கைகளையும் நீதியான முறையில் அணுகி தீர்வைப் பெற்றுக் கொடுக்க தவறியுள்ளது என்பதை மறுக்க முடியாது.

மேலும் ஐ.நாவில் உலகில் எந்த நாடும் போரை விரும்பவில்லை. போர் அல்லது மோதல், அது எங்கு, எப்படி நடந்தாலும், அது ஒரு சோகம் என்பதை யாவரும் அறிவார்கள். இப்போதும் கூட அந்த சோகத்தின் வலி உலகின் பல பகுதிகளிலும் உணரப்படுகிறது. மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக போரின் கசப்பான அனுபவத்தை அனுபவித்த ஒரு நாடாக, அதன் அழிவை தமிழர்கள் நாங்கள் நன்கு அறிவோம்.

தமிழர் தாயகத்தில் மே18 இல் முள்ளிவாய்க்கால் இனப் படுகொலை நினைவு கூறப்பட்ட வேளையில், சிங்கள தேசத்தில் போர் வெற்றி தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இந்த போரில் இறந்த ஆயிரக்கணக்கான மக்களின் நினைவுச் சின்னங்களுக்கு முன், அவர்களின் பெற்றோர், குழந்தைகள் மற்றும் மனைவிகள் எழுப்பிய வேதனையான வேண்டுகோள்களைப் பார்க்கும் எவரும், போரைக் கனவு காணக்கூட மாட்டார்கள் எனவும் தெரிவித்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்திருந்தார்.




**காசாவை விட அதிகளவில், முள்ளிவாய்காலில் இடம்பெற்ற பேரவலம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் கண்ணுக்கு ஏன் புலப்பட வில்லை என்பதே மிகப்பெரும் கேள்வியாகும். சர்வதேச ரீதியில் தம்மை நல்லவர்களாக காட்ட முயலும் சிங்கள சிறீலங்கா அரசாங்கம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்ற கூடாது என்பதில் உறுதியாக உள்ளதை அநுரவும் நிரூபித்துள்ளார்.**

**தமிழ் தேசிய இனம், தேசிய விடுதலைக்காக கொடுத்த விலைகள் அதிகம். தமிழர் தாயகத்தில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அதிகம். பாலஸ்தீன மக்களின் துயரத்தை புரிந்து கொண்ட ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நீதிக்காக ஏங்கும் தமிழ் மக்களின் போராட்டத்தையும், அவர்களது வலியையும் புரிந்து கொள்ளாமை கடந்த ஆட்சியாளர்களின் மனநிலையில் தான் தேசிய மக்கள் சக்தியும் இருக்கின்றதா என்ற கேள்வியை எழுப்புகிறது.**

காசா பகுதியில் இடம்பெற்ற மனித பேரவலம் குறித்தும் அது துயரமான திறந்தவெளி சிறைசசாலையாக உள்ளதாகவும் கவலை வெளியிட்ட அநுர தமிழர் தாயக நிலையை ஒருபோதும் எண்ணிப் பார்ப்பதில்லை.

காசாவை விட அதிகளவில், முள்ளிவாய்காலில் இடம்பெற்ற பேரவலம் ஏன் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் கண்ணுக்கு புலப்படவில்லை என்பதே மிகப்பெரும் கேள்வியாகும். சர்வதேச ரீதியில் தம்மை நல்லவர்களாக காட்ட முயலும் சிங்கள சிறீலங்கா அரசாங்கம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்ற கூடாது என்பதில் உறுதியாக உள்ளதை அநுரவும் நிரூபித்துள்ளார்.



# உள்முரண்களால் சிதையும் பாலஸ்தீனம்: காசா யுத்த நிறுத்தம்: டிரம்பின் நோபல் பரிசுக்கா?

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

15.10.2025

நீண்ட காலத்தின் பின்னர் காசாவில் போர் நிறுத்தம் ஆரம்பமாகிய நிலையில், இஸ்ரேலியர்கள் பணயக்கைதிகள் பலர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை காசாவில் உள்நாட்டு வன்முறை அச்சம் நிலவும் சூழல் உருவாகியுள்ளது. இதனால் ஹமாஸ் அமைப்பினர் தங்கள் போராளிகளை திரும்ப அழைத்துள்ளனர்.

கடந்த வார இறுதியில் 'டோக்முஷ்' (Doghmush) சமூகத்தினர் ஹமாஸுக்கு எதிராக தாக்கியதில் குறைந்தது 32 பேர் கொல்லப்பட்டனர். இஸ்ரேலியப் படைகள் காசா பிரதேசத்தின் பல பகுதிகளில் இருந்து பின்வாங்கியதைத் தொடர்ந்து மீண்டும் உள்நாட்டு வன்முறை ஏற்படும் என்ற அச்சம் நிலவி வருகிறது. இந்நிலையில் காசா மீதான கட்டுப்பாட்டை மீண்டும் நிலைநாட்ட ஹமாஸ் பல்லாயிரம் போராளிகளைத் திரும்பப் பெற்றுள்ளது.

அதேசமயம் உள்முரண்பாடுகளால் சிதையும் பாலஸ்தீனத்தில் இந்த போர் நிறுத்தம் டிரம்பின் நோபல் பரிசுக்கா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. முக்கியமாக இருக்கும் கேள்வி என்னவென்றால் காசா மண்ணில் இந்த அமைதி எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதேயாகும்.

காசா போர் நிறுத்தம் ஏற்பட்டதன் விளைவாக காணாமல் போன பாலஸ்தீனியர்களின் உடல்களைக் கண்டுபிடிக்க இடிபாடுகளைத் தோண்டி வருவதாக காசாவின் ஹமாஸ் நடத்தும் சிவில் பாதுகாப்பு நிறுவனம் கூறுகிறது. மேலும் 9,500 மக்கள் இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

**பணயக் கைதிகள் விடுதலை:**

அக்டோபர் 7, 2023 அன்று நடந்த தாக்குதலுக்குப் பிறகு காசாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பணயக்கைதிகள் பலர் விடுவிக்கப்பட்டனர். ஹமாஸுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான போர்நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகள்-கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, அக்டோபர் 13, 2025 அன்று தெற்கு காசா பகுதியில் உள்ள கான் யூனிஸில், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் (ICRC) பலர் ஒப்படைக்கப்பட்டனர்.

ஆனால் காசா பகுதியில் உள்ள கான் யூனிஸில் ஹமாஸுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான கைதிகள் பரிமாற்றத்தின் பின்னர் பாலஸ்தீன போராளிகள் இடையே உள்முரண்பாடுகள் தற்போது அதிகரித்துள்ளன.

இஸ்ரேலிய துருப்புக்களால் சமீபத்தில் வெளியேறிய பிறகு, காசாவின் பகுதிகளின் மீது மீண்டும் கட்டுப்பாட்டை நிலைநாட்ட ஹமாஸ் தனது பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த அனைத்து உறுப்பினர்களை திரும்ப அழைத்துள்ளதாக கூறப்படுகிறது.

ஆயுதமேந்திய ஹமாஸ் பிரிவுகள் ஏற்கனவே பல மாவட்டங்களில் நிலைநிறுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. சிலர் பொதுமக்கள் உடைகளிலும், மற்றவர்கள் காசா காவல்துறையின் நீல நிற சீருடையிலும் உள்ளனர். ஆனால் ஹமாஸ் ஊடக அலுவலகம் "தெருக்களில் போராளிகளை" நிறுத்தவில்லை என்று மறுத்து வருகிறது.

தற்போது காசா மீதான இஸ்ரேலிய வான்வழித் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டிருக்கலாம், இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான கைதிகள் பரிமாற்றம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் தலைமறைவாக ஹமாஸுக்கும் ஆயுதக் குழுக்களுக்கும் இடையே காசாவில் பதட்டங்கள் உருவாகி வருகின்றன.

கடந்த வார இறுதியில் ஆயுதமேந்திய குழுவிற்கும் ஹமாஸ் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே மோதல்கள் வெடித்தன. இதில் எட்டு ஹமாஸ் உறுப்பினர்கள் உட்பட குறைந்தது 32 பேர் கொல்லப்பட்டனர் என்று காசாவில் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

காசா நகரத்தின் சப்ரா பகுதியில் அல் ஜசீரா அரபிய நிருபர், ஆயுதமேந்திய போராளிக்குழு – ஹமாஸ் இடையேயான மோதல்களை செய்தி வெளியிட்டுக் கொண்டிருந்த 28 வயதான பாலஸ்தீன பத்திரிகையாளர் சலே அல்ஜஃபராவி இந்த மோதலில் சிக்கி உயிரிழந்தார்.

காசாவில் உள்ள போராளிக்குழுக்கள் இதுதானா? இந்த ஆயுதமேந்திய கும்பல்கள் யார்? அவர்களின் இலக்குகள் என்ன? அவர்கள் உண்மையில் இஸ்ரேலுடன் தொடர்புடையவர்களா? என்ற பல கேள்விகளுக்கு பதில் இல்லை.



**காசாவில் போர் நின்ற பின் ஹமாஸுடன் தற்போது மோதுவது யார் என்ற கேள்வி எழுந்துள்ளது. இதேவேளை காசா யுத்த நிறுத்தம் டிரம்பின் நோபல் பரிசுக்காகவா உருவாக்கப்பட்டதா என்ற ஐயப்பாடும் உள்ளது. இதேவேளை இன்று, நேற்றல்ல நீண்டகாலமாகவே உள்முரண்களால் சிதையும் பாலஸ்தீனம் அழிந்து கொண்டிருக்கிறது**

**இஸ்ரேல் தொடர்புள்ள 'டோக்முஷ்'**

காசாவின் மிக முக்கியமான குழுக்களில் ஒன்றான டோக்முஷ் அமைப்பினர், ஹமாஸுடன் நீண்ட காலமாக பதட்டமான உறவைக் கொண்டுள்ளனர். மேலும் அதன் ஆயுதமேந்திய உறுப்பினர்கள் கடந்த காலங்களில் பல சந்தர்ப்பங்களில் அந்தக் ஹமாஸ் குழுவுடன் மோதியுள்ளனர்.

தற்போது அங்கே ஹமாஸால் நடத்தப்படும் உள்துறை அமைச்சகம், அதன் படைகள் ஒழுங்கை மீட்டெடுக்க முயற்சிப்பதாகக் கூறியுள்ளது. மேலும் எதிர்ப்பின் கட்டமைப்பிற்கு வெளியே எந்தவொரு ஆயுத நடவடிக்கையும் உறுதியாகக் கையாளப்படும் என்று எச்சரித்தும் உள்ளனர்.






காசா நகரில் ஹமாஸை எதிர்த்துப் போராடும் டோக்முஷ், 2008 ஆம் ஆண்டு ஜெய்ஷ் அல்-இஸ்லாம் குழு இஸ்ரேலிய வீரர் கிலாட் ஷாலிட்டைக் கைப்பற்றியதில் மொம்தாஸ் டோக் முஷ் ஈடுபட்டிருந்தார். மற்ற உறுப்பினர்கள் ஹமாஸ் அல்லது பாலஸ்தீன அதிகாரசபையுடன் இணைந்த குழுக்களில் இருந் துள்ளனர்.

இதேவேளை ஹமாஸுடன் போரிட்ட டோக்முஷ் இஸ்ரேலுடன் இணைந்தவர்கள் என்று சில தகவல்கள் கூறுகின்றன. ஆனால் காசாவில் இருந்து வந்த பிற வட்டாரங்கள் இஸ்ரேலுடனான தொடர்பை மறுக்கின்றன.

உள்துறை அமைச்சகத்துடன் இணைந்த ஆயுதப் பிரிவான சஹேம் பிரிவு, காசா நகரத்தில் உள்ள ஜோர்டான் கள மருத்துவமனைக்கு அருகில் ஹமாஸின் ஆயுதப் பிரிவான கஸ்ஸாம் படைப்பிரிவின் எதிர்ப்புப் போராளிகளை கொன்றபோது மோதல்கள் தொடங்கியதாகக் கூறியது.

மேலும் டோக்முஷ் துப்பாக்கிதாரிகள் பதுங்கியிருந்த ஒரு குடியிருப்புத் தொகுதியைத் தாக்கியதாகவும், அவர்களில் 32 உறுப்பினர்கள் கொல்லப்பட்டதாக பாலஸ்தீன பாதுகாப்பு வட்டாரம் தெரிவித்து உள்ளது.

இச் சம்பவத்தில் ஊடகர் அல்ஜஃபராவியும் கொல்லப்பட்டார். அல்ஜஃபராவியின் கொலை குறித்து பல கண்டனங்கள் எழுந்தன. இதற்கு முன்னராக அல் ஜசீரா நிருபரான அல்-ஷெரிப் கடந்த ஆகஸ்ட் 10 அன்று இஸ்ரேலால் கொல்லப்பட்டார். அல்-ஷெரிப்பைப் போலவே அல்ஜஃபராவியும் தனது செய்திக்காக இஸ்ரேலியர்களால் பலமுறை அச்சுறுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

**டோக்முஷ் இஸ்ரேல் துணைப்படை?**

டோக்முஷ் உண்மையில் இஸ்ரேலால் ஆதரிக்கப்படுகிறதா என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. பல முரண்பட்ட தகவல்கள் உள்ளன. காசாவில் இருந்து சில தகவல்கள், இவர்களுக்கு இஸ்ரேலிய தொடர்பு இருப்பதாகக் கூறின, ஆனால் குழுவின் தலைவர்கள் அதை மறுத்துள்ளனர்.

ஆனால் அக்டோபர் தொடக்கத்தில், காசா நகரத்தில் உள்ள இக்குழுவின் தலைவரான நிஜார் டோக்முஷ், காசா நகரில் மனிதாபிமான மண்டலம் என்று அழைக்கப்படுவதை நிர்வகிக்க இஸ்ரேலிய இராணுவத்தால் தன்னைத் தொடர்பு கொண்டதாகக் கூறினார்.

ஆனால் அதனை அவர் மறுத்துவிட்டதாக செய்தித்தாளிடம் கூறிய அவர், பின்னர் இஸ்ரேலிய இராணுவம் காசா நகரில் உள்ள தனது சுற்றுப்புறத்தின் மீது குண்டுவீசி, படையெடுத்து வீடுகளை திட்டமிட்டு அழித்ததாகவும் கூறினார்.

டோக்முஷ் மற்றும் ஹமாஸ் ஒருவருக்கொருவர் குரோத விரோதப் போக்கைக் கொண்டுள்ளனர். இது கடந்த காலத்தில் நீடித்தமையால் பாரிய உயிர் இழப்புகளை ஏற்படுத்தியுள்ளன.

**சிக்கலான இறுதி கட்டம்:**

இந்த போர் நிறுத்த ஒப்பந்தத்தின் இறுதி கட்டம் காசா பாதுகாப்பு ஆகும். அது எந்தவொரு மீண்டும் எழுச்சி பெறும் பயங்கரவாத அச்சுறுத்தலிலிருந்தும் காசா சரியாகப் பாதுகாக்கப்படும் வரை இருக்கும் என்பதை உறுதி செய்ய இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து கோரியுள்ளன.

மேலும் இந்த போர் நிறுத்த ஒப்பந்தத்தில் உள்ள வார்த்தைகள் தெளிவற்றவையாக உள்ளன. முக்கியமாக இஸ்ரேலிய படைகள் முழுமையாக திரும்பப் பெறுவதற்கான தெளிவான காலக்கெடுவை வழங்கவில்லை. ஹமாஸ் அமைப்பு இந்த விஷயத்தில் உறுதியாக இருப்பதாக கூறியுள்ளது. காலக்கெடுவை தெளிவுபடுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது.

இஸ்ரேலுடன் போர் நிறுத்தம் ஆரம்பமாகிய நிலையில், காசாவில் உள்நாட்டு வன்முறை அச்சம் நிலவுகிறது. இதனால் ஹமாஸ் போராளிகளை திரும்ப அழைத்துள்ளதால் மீண்டும் இஸ்ரேல் இராணுவத்துடன் முறுகல் நிலைமை ஏற்படலாம் என கூறப்படுகிறது.

இஸ்ரேலியப் படைகள் காசா பிரதேசத்தின் சில பகுதிகளில் இருந்து பின்வாங்கியதைத் தொடர்ந்து மீண்டும் உள்நாட்டு வன்முறை ஏற்படும் என்ற அச்சம் நிலவி வரும் நிலையில், காசா மீதான கட்டுப்பாட்டை மீண்டும் நிலைநாட்ட ஹமாஸ் பல்லாயிரம் போராளிகளைத் திரும்பப் பெற்றுள்ளது.

போர் முடிந்ததும் காசாவை யார் ஆட்சி செய்வார்கள் என்பது குறித்த நிச்சயமற்ற தன்மை அதிகரித்து வரும் நிலையில், இந்த அணிதிரட்டல் பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது. இது டிரம்பின் திட்டத்தின் பிந்தைய கட்டங்களுக்கு ஒரு முக்கிய தலையிடியான விடயமாகும்.






"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்



# தனித்து விடப்படும் முதியவர்கள்

18.10.2025

புலம்பெயர்ந்த தமிழர் ஒருவர் அண்மையில் ஊருக்கு வந்திருந்தார். அவருடைய ஊரில் அவருக்குத் தூரத்து உறவான ஒரு முதிய பெண் தனித்து வசிக்கிறார். பெரிய வீடு; வசதியான குடும்பம்; ஆனால் பிள்ளைகள் இல்லை. காசு உண்டு. ஆனால் பராமரிக்க ஆளில்லை. அவருடைய வீட்டுக்கு அருகில் உள்ள ஒரு படை முகாமில் இருப்பவர்கள் அவருக்குச் சாப்பாடு கொடுக்கிறார்கள். ஆனால் அவர் பல நாட்கள் குளித்திருக்கவில்லை என்றும் அவருடைய சுத்தம் சுகாதாரத்தைத் தொடர்ச்சியாகக் கவனிப்பதற்கு அங்கே ஆட்கள் இல்லையென்றும் நண்பர் சொன்னார். அப்படியென்றால் அவரை அழைத்துக் கொண்டு வந்து ஒன்றில் அரச முதியோர் இல்லத்தில் சேர்க்கலாம் அல்லது கட்டணத்தோடு முதியோரைப் பராமரிக்கும் இல்லங்களில் இணைக்கலாம். போதியளவு பணம் இருந்தாலும் பராமரிக்க ஆளில்லாமல் தவிக்கும் முதியோரை கட்டணம் பெற்றுக் கொண்டு பராமரிக்கும் இல்லங்களில் சேர்க்கலாம். எனவே அந்த முதிய பெண்ணை ஏதாவது ஒரு முதியோர் இல்லத்தில் இணைத்தால் என்ன என்று நண்பரிடம் கேட்டேன்.

அதற்கு நண்பர் சொன்னார், “குறிப்பிட்ட மூதாட்டிக்கு 80 வயதுக்கு மேலாகிறது. இனி அவர் தனது வீட்டிலிருந்து வேரைப் பிடுங்கிக்கொண்டு வேறொரு இடத்துக்கு வரத் தயாராக இல்லை. எல்லாவிதமான அசௌகரியங்கள், பற்றாக்குறைகளோடும் தான் பிறந்து, வளர்ந்து, திருமணம் செய்து சந்தோஷமாக வாழ்ந்த அந்த வீட்டிலேயே இருந்து இறந்து போகத்தான் விரும்புவார் என்று தோன்றுகிறது. அவரை இந்த வயதில் வேரை அறுத்துக் வெளியே எடுப்பது சாத்தியமா?” என்று.

அது சாத்தியமா இல்லையா என்பதல்ல பிரச்சினை. அவருடைய “குவாலிட்டி ஒஃப் லைஃப்” - வாழ்க்கைத் தரம் உயர்வானதா? என்பதுதான் இங்கு பிரச்சனை. அவரைப் போன்ற பல முதியவர்கள் தாங்கள் பிறந்து வளர்ந்த ஊரை விட்டு வெளியே வரத் தயாராக இல்லை. தாங்கள் பிறந்து வளர்ந்த அந்த வீட்டுக்குள் எல்லா விதமான பற்றாக்குறைகளோடும் ஆபத்துக்குகளோடும் சீவிப்பதில் அவர்கள் மன நிறைவடைகிறார்கள். இங்கே அடிப்படைக் கேள்வி ஒன்று எழுதுகிறது. “குவாலிட்டி ஒஃப் லைஃப்” என்பது மனதால் அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதா? அல்லது உடலால் நவீன மருத்துவத் தராதரங்களுக்கு ஏற்ப பராமரிக்கப்படுகிறவர்களாக இருப்பதா? எனக்குத் தெரிந்த பல முதியவர்கள் குறிப்பாக 80 வயதுக்கு மேலானவர்கள் தாம் பிறந்து வளர்ந்த வீட்டிலேயே இருந்து சாவதைத்தான் தமது வாழ்க்கை தரத்தில் உயர்ந்த நிலை என்று கருதுவதாகத் தெரிகிறது.

ஆனால் பராமரிப்பின்றி தனிமையில் உழல்வதை விடவும் முதியோர் இல்லங்களில் சக வயதினரோடு இருப்பது சந்தோஷமானது என்று கருதும் முதியோரும் உண்டு. ஓர் ஆசிரியை வெளிநாட்டுக்குப் போகும்போது தன் தகப்பனை அரசு முதியோர் இல்லத்தில் இணைத்துவிட்டுச் சென்றார். நாடு திரும்பியதும் தகப்பனை வீட்டுக்கு அழைத்து வரச் சென்ற போது தகப்பன் மறுத்துவிட்டார். இங்கே எனது வயதொத்தவர்களோடு சந்தோஷமாக இருக்கிறேன். இது எனக்கு விருப்பமாக இருக்கிறது. என்று கூறி அந்த முதியவர் அங்கேயே தங்கி விட்டார். ஆனால் இது மிகச் சிறிய தொகை.

பைபிளில் கூறப்படுவது போல “பிள்ளைகள் இருக்கவும் மலடுகளாய்போன பெற்றோரின்” தொகை அதிகமுடைய ஒரு சமூகம் இது. போர் பிள்ளைகளைத் தின்றுவிட்டது. புலப்பெயர்ச்சி பிள்ளைகளைப் பெற்றோரிடம் இருந்து பிரித்துவிட்டது. பெற்றோர் பிள்ளைகளுக்கு இறுதிக் கிரியைகளைச் செய்யும் ஒருகாலம் வந்தபோது பிள்ளைகள் தூர தேசத்திலாவது உயிர் பிழைத்திருக்கட்டும் என்று பெற்றோரே அனுப்பி வைத்தார்கள். எனவே முதியோர் தனித்துவிடப்படுதல் என்பது போரின் நேரடி விளைவுதான். தவிர குடும்பங்களில் விழுமியங்கள் சீரழிந்ததன் விளைவுந்தான்.

இங்கு மூன்று உதாரணங்களைக் கூறலாம். முதலாவது உதாரணம், வன்னியில் நடந்தது. அங்குள்ள முன்னணிப் பாடசாலை ஒன்றுக்கு பழைய மாணவர்கள் சிலர் இணைந்து ஒரு சிற்றுண்டிச் சாலையைக் கட்டிக் கொடுத்தார்கள். அந்த சிற்றுண்டிச் சாலையை தமது பள்ளிக் காலத்தில் தமது வகுப்பு தோழர்களாக இருந்து பின்னர் போரில் நாட்டுக்காக தங்கள் உயிரைக் கொடுத்த தியாகிகளுக்கு அர்ப்பணித்திருந்தார்கள். அப்பழைய மாணவர்களில் ஒருவர் என்னைச் சந்தித்தார். அவரிடம் நான் கேட்டேன் “அந்த சிற்றுண்டிச் சாலையைத் திறக்கும் வைபவத்திற்கு குறிப்பிட்ட தியாகிகளின் பெற்றோரை அழைத்தீர்களா?” என்று. அப்பொழுதுதான் ஒரு விடயம் தெரியவந்தது. அந்தத் தியாகிகளில் ஒருவருடைய பெற்றோர் எங்கே இருக்கிறார் என்று யாருக்கும் தெரியாது.

அந்தத் தியாகி ஒரு சிறந்த உதைப்பந்தாட்ட வீரர். அவரைத் தவிர ஏனைய சகோதரர்கள் ஏற்கனவே புலம்பெயர்ந்து விட்டார்கள். அவர்தான் பெற்றோருக்கு உதவியாக இருந்தார். கடைசிக் கட்டப் போரில் கட்டாய ஆட் சேர்ப்பின்போது அவர் போருக்குள் இணைக்கப்பட்டார். போர்க்களத்தில் உயர்நீத்தார். தாயும் போரில் கொல்லப்பட்டு விட்டார். தனித்து விடப்பட்ட தந்தையை புலம்பெயர்ந்து வாழும் ஒரு பிள்ளை உறவினர் ஒருவருக்கூடாக முதியோர் இல்லத்தில் சேர்த்து விட்டார். மேற்படி தகவல்களைச் சேகரித்த பழைய மாணவர்கள் அந்த முதியோர் இல்லத்துக்கு வந்துவிட்டார்கள். ஆனால் அவர் விடுமுறையில் சென்று விட்டதாக முதியோர் இல்லத்தில் கூறப்பட்டது. விசாரித்த போது தெரிந்தது, வெளிநாட்டில் வாழும் ஒரு பிள்ளை தாயகத்துக்கு வந்திருந்தபடியால் தகப்பனைப் பார்ப்பதற்காக முதியோர் இல்லத்தில் இருந்து அவரை தான் இருக்கும் இடத்துக்கு எடுத்திருக்கிறார். பழைய மாணவர்களில் ஒருவர் அந்தப் பிள்ளையின் கைபேசி இலக்கத்தை எடுத்து அவரோடு கதைத்திருக்கிறார். அவரையும் முதியவரையும் சந்திப்பதற்காக வரப்போவதாகவும் கூறியிருக்கிறார். ஆனால் அதன்பின் அந்தப் பிள்ளை தொடர்பு எடுக்கவில்லை மட்டுமல்ல, தகப்பனைக் கொண்டு வந்து இல்லத்தில் சேர்த்துவிட்டு வெளிநாட்டுக்குப் போய் விட்டார்.

இரண்டாவது உதாரணம், ஒரு பேராசிரியர். பல மாதங்களுக்கு முன்பு அவர் இறந்தபொழுது அவருடைய உடலை யாழ் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துக்கு கொடுக்குமாறு கேட்டிருந்தார். அவரும் அவருடைய மனைவியும் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு முதியோர் இல்லத்தில்தான் வசித்து வந்தார்கள். யாழ்ப்பாணத்தின் உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் பீடாதிபதியாக இருந்தவர் அவர்.

மூன்றாவது உதாரணம், ஓர் அரசியல் செயற்பாட்டாளர். ஈழ விடுதலைப் போராட்டத்தின் முக்கிய மொழி பெயர்ப்பாளர். நோர்வியின் அனுசரணையுடனான சமாதான முயற்சிகளின்போது பெரும்பாலான எல்லாப் பேச்சுவார்த்தைகளிலும் அவருடைய முகம் உண்டு. அவருக்கு ஒரே பிள்ளை. அவரும் புலம் பெயர்ந்து விட்டார். 2009க்கு பின் அவரை தன்னுடன் வந்து இருக்குமாறு பிள்ளை அழைத்திருக்கிறார். ஆனால் இந்த முதியவர் தாயகத்தை விட்டு வெளியேபோக விரும்பவில்லை. எனவே அவருடைய பிள்ளை அவரை மாதாந்தம் பெருந்தொகை பணத்தை அறவிடும் தனியார் முதியோர் இல்லம் ஒன்றில் சேர்த்து விட்டார். அந்த மொழிபெயர்ப்பாளர் அந்த முதியோர் இல்லத்தில்தான் உயர்நீத்தார்.

நான்காவது உதாரணம், சில மாதங்களுக்கு முன் நடந்தது. புலம்பெயர்ந்து ஐரோப்பாவில் வசிக்கும் எனது நண்பர், ஓர் அரசியற் செயற்பாட்டாளர், அண்மையில் தனது தகப்பனாரைப் பராமரிப்பதற்கு யாரையாவது ஒழுங்கு செய்ய முடியுமா என்று கேட்டார். இந்த விடயத்தில் முதியோர் இல்லத்துக்குப் போக விரும்பாத முதியவர்களைப் பராமரிப்பதற்கு ஊரில் யாராவது உதவியாளரைக் கண்டுபிடித்தால் அது நல்லது.

இரண்டாவது தெரிவு, மானிப்பாயில் உள்ள மருத்துவர் கிரீன் ஞாபகார்த்த மருத்துவமனையில் முதியோரைப் பராமரிப்பதற்கான ஒரு கட்டமைப்பு உண்டு. அங்கு பயிற்றப்பட்ட தாதியர்கள் உண்டு. அவர்களைச் சம்பளத்துக்கு வேலைக்கு அமர்த்தலாம்.

மூன்றாவது தெரிவு, செக்யூரிட்டி நிறுவனங்களிடம் தொடர்பு கொண்டு வீட்டுக்கு ஒரு செக்யூரிட்டியை வேலைக்கு அமர்த்தலாம். இந்த ஏற்பாடு எல்லா முதியவர்களுக்கும் பொருந்தாது. தன்னுடைய அலுவல்களைத் தானே கவனிக்கக்கூடிய அளவுக்குத் தெம்பாக உள்ள முதியவர்களுக்குத்தான் பொருந்தும்.

நான்காவது ஏற்பாடு, வீட்டில் கண்காணிப்புக் கமராவைப் பொருத்துவது. இதுவும் தானாக இயங்கும் முதியவர்களுக்குத்தான் பொருந்தும். ஆனால் கமரா சரிவர இயங்கவில்லை என்றாலோ அல்லது கமராவின் கண்காணிப்பு வீச்சுக்கு வெளியே முதியவர் போய்விட்டாலோ அதன் பின் அவருடைய நடமாட்டங்களைக் கவனிக்க முடியாது. இதில் கமராவைத் தொடர்ச்சியாக அடிக்கடி பார்க்க வேண்டியிருக்கும். யாழ்ப்பாணத்தில் ஒரு வீட்டில் அவ்வாறு கமரா பொருத்தப்பட்டிருந்தது. பிள்ளைகள் முதியோரின் நடமாட்டத்தைக் கமரா மூலம் கண்காணிக்க முடிந்தது. ஆனால் ஒருநாள் முதியவரைக் காணவில்லை. இரண்டாம் நாளும் காணவில்லை. பிள்ளைகள் அயலவர்களோடு தொடர்புகொண்ட பொழுது ஆயலவர்கள் வீட்டு வளவில் கமராவின் கண்காணிப்பு வீச்சுக்கு வெளியே முதியவர் விழுந்து கிடக்கக் கண்டுபிடித்தார்கள். ஆனால் கண்டுபிடித்தபொழுது முதியவருக்கு உயிர் இருக்கவில்லை. அவர் இறந்து இரண்டு நாட்களாகி விட்டது.

இந்த ஏற்பாடுகளில் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்யும்படி எனது நண்பரிடம் சொன்னேன். தனித்து விடப்பட்ட முதியவர்களுக்காகக் காசு செலவழிக்கத் தயாராக இருப்பவர்களுக்குத்தான் இந்தத் தெரிவுகள். இல்லையென்றால் ஏதாவது முதியோர் இல்லத்துக்குத்தான் போக வேண்டும்.

Geriatrician என்று அழைக்கப்படுகின்ற முதியோர் துறைசார் மருத்துவர்கள் தமிழில் மிகக்குறைவு. அதுமட்டுமல்ல முதியோரைப் பராமரிப்பதற்கான பயிற்றப்பட்ட தாதியர்களும் தமிழ்பகுதிகளில் குறைவு. இக்கட்டுரையில் முன்பு குறிப்பிடப்பட்ட மானிப்பாய் கிரீன் ஞாபகார்த்த மருத்துவமனையில் முதியோர் பராமரிப்புக்கென்று பயிற்சிகளை வழங்கும் (Institute of Medical Sciences) “மருத்துவ விஞ்ஞான நிறுவனம்” என்ற நிறுவனம் உண்டு. 2013 இலிருந்து முதியோரைப் பராமரிப்பதற்குரிய தொழில்சார் பயிற்சிகளை வழங்கிவருகிறது. இங்கு வழங்கப்படும் தொழில்சார் பயிற்சியானது இலங்கைத் தீவின் தேசிய தொழில்சார் தகமை மட்டத்தில் நான்காவது மட்டத்துக்குரியது. ஐந்தாவது தொழிற்சார் தகமை மட்டும்தான் டிப்ளமோ. அப்படிப் பார்த்தால் தமிழ்ப்பகுதிகளில் இப்பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் முதியோரைப் பராமரிக்கும் தாதியர்கள் அனைவருமே குறைந்தபட்சம் டிப்ளோமா தரத்துக்குரிய தொழில் தகமையைக்கூட கொண்டிருக்கவில்லை. ஆனால் மேற்கத்திய நாடுகளில் அது நான்கு ஆண்டுகாலப் பட்டப்படிப்பாகவும் காணப்படுகிறது.

வடக்கில் மானிப்பாய் கிரீன் ஞாபகார்த்த மருத்துவமனையில் மட்டும்தான் அவ்வாறான கற்கை நெறி உண்டு. அதேசமயம் முதியோரியல் துறைக்குரிய மருத்துவ நிபுணர்களின் தொகையும் குறைவு.

ஆனால் தமிழர் தாயகத்தில் வடக்கில் மட்டும் 60வயது கடந்த முதியோர் மொத்தம் இரண்டு இலட்சத்து 29 ஆயிரத்து 867 பேருக்கு மேல் உண்டு. இதில் யாழ்ப்பாணத்தில் மட்டும் ஒரு இலட்சத்து 54 ஆயிரத்து 626 முதியோர் உண்டு. வடக்கில் மட்டும் மொத்தம் 28 முதியோர் இல்லங்கள் உண்டு. இவற்றுள் ஆகப் பெரியது கைதடியில் உள்ள அரச முதியோர் இல்லந்தான். அங்கே 200க்கும் குறையாத முதியோர் உண்டு. அதாவது வடக்கில் மட்டும் மொத்த ஜனத்தொகையில் கிட்டத்தட்ட 20 விகிதம் முதியவர்கள்.

எனக்குத் தெரிந்து புலம் பெயர்ந்துபோன பிள்ளைகளில் ஒரு பகுதியினர் தமது முதிய பெற்றோரைப் பராமரிப்பதற்காக ஊரில் குறிப்பிட்ட காலத்துக்கு வந்து தங்கி நிற்கிறார்கள். அதிகம் பிள்ளைகளைப் பெற்ற பெற்றோருக்கு தொடர்ச்சியாக யாராவது ஒரு பிள்ளை வீட்டில் நிற்கின்றது. அது ஒரு கொடுப்பினை. ஆனால் எல்லாருக்கும் இல்லை.

எனவே தமிழ் மக்கள் இது தொடர்பில் வேகமாக முடிவெடுக்க வேண்டும். தாயகத்தில் உள்ள அரசியல் கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் புலம் பெயர்ந்த தமிழர்களும் சேர்ந்து இது தொடர்பாக பொருத்தமான முடிவுகளை எடுக்கலாம். இது விடயத்தில் பின்வரும் விடயப்பரப்புகளின் மீது கவனத்தைக் குவிக்க வேண்டும். முதலாவதாக எத்தனை முதியவர்கள் தனித்து விடப்பட்டிருக்கிறார்கள் என்பது தொடர்பாக சரியான புள்ளி விபரங்களைச் சேகரிப்பது. இரண்டாவது, முதியோரை பராமரிப்பதற்கான நிறுவனங்களைக் கட்டியெழுப்புவது. மூன்றாவது, பராமரிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் கற்கை நெறிகளை குறைந்தபட்சம் தனியார் கல்விக் கட்டமைப்புகளுக்கு ஊடாகத் தொடங்குவது. இது ஒரு தேசியக் கடமை.

முதியோர் இல்லங்களைக் கட்டியெழுப்புவது என்பது தமிழ்த் தேசிய நோக்கு நிலையில் இருந்து பார்த்தால் தேச நிர்மாணத்தின் ஒரு பகுதிதான். முதியோரைப் பராமரிப்பதற்கு மட்டுமல்ல கைவிடப்பட்ட முன்னாள் இயக்கத்தவர்கள், விதவைகள், மாற்றுத் திறனாளிகள், மனநலம் பாதிக்கப்பட்டவர்கள், போதைப் பொருள் பாவனையாளர்கள் போன்ற எல்லாத் தரப்பினரையும் பராமரிப்பதற்கான கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும். இவையாவும் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான கட்டமைப்புகள்தான்.

இனப்பிரச்சனைக்குத் தீர்வு வரும் வரையிலும் இந்தக் கட்டமைப்புகளை ஒத்தி வைக்க முடியாது. பராமரிக்கப்பட வேண்டிய பிரிவினர் பராமரிக்கப்படாமல் அனாதைகளாக விடப்படுவது என்பது ஒரு தேசிய அவமானம். எனவே தேசத்தைக் கட்டியெழுப்புவதன் ஒரு பகுதியாக மேற்கண்ட நிறுவனங்களைக் கட்டியெழுப்ப வேண்டும். நான் இந்தக் கட்டுரையை எழுதி முடிக்கும்போது எங்கேயோ ஒரு தொலை கிராமத்தில் யாரோ ஒரு முதியவர் உதவிக்கு ஆளில்லாமல் இறந்து போயிருக்கலாம்.

நன்றி: நிலாந்தன்

# நிமலராஜன் 25 ஆண்டு நினைவுகள்:
# நீதி மறுக்கப்பட்ட ஊடகனின் உரிமைக் குரல்

– நவீனன் –

15.10.2025

சிறீலங்காவில் ஊடகத்துறையில் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்கு முறைகளையும் ஒடுக்கு முறைகளையும் வெளிக் கொண்டு வந்த ஊடகவியலாளர்கள் பலர் படுகொலை செய்யப் பட்டிருக்கின்றார்கள். அது போன்று சுயாதீனமாக கருத் துக்களை வெளிக்கொண்டு வந்த சிங்கள, ஆங்கில ஊடக வியலாளர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

ஊடகவியலாளர்களான நிமலராஜன், ஐயாத்துரை நடேசன், தர்மரட்னம் சிவராம், சுப்பிரமணியம் சுகிர்தராஜன், செல்வ ராஜா ரஜீவர்மன், லசந்த விக்கிரமதுங்க, பரணிரூபசிங்கம் தேவகுமார், என சுதந்திர ஊடகத்துறையை காக்கவென அய ராது உழைத்த எத்தனையோ பத்திரிகையாளர்கள் கொல்லப் பட்டிருக்கின்றார்கள். அத்துடன் சுப்பிரமணியம் ராமச்சந்திரன், பிரகித் எக்னலிய கொட என எத்தனையோ ஊடகவியலாளர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.






போர்க்களத்தின் ஊடகவியலாளரான நிமலராஜன் 2000 அக்டோபர் 19இல் படுகொலை நினைவாக இக்கட்டுரை பிரசுரமாகிறது. ஊடகர் நிமலராஜன் படுகொலையாகி 25 ஆண்டுகளாகியும் இதுவரை ஒருவித நீதியும் வழங்கப்படவில்லை. இதேவேளை சிறீலங்காவில் தமிழ் ஊடகங்கள் மீதான அடக்கு முறை இன்னமும் தொடர்கிறது...

ஈழத்தில் சுயாதீன ஊடகங்களை அடக்குவதற்கு வன்முறை யைப் பயன்படுத்துவதிலும், அரச படைகளின் கொடூர தாக் குதல்களும் நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கின்றது.

1981இல் ஈழநாடு எரிப்புமுதல், பின்னர் இந்திய இராணுவத் தால் முரசொலி, ஈழமுரசு, நிதர்சனம் தகர்க்கப்பட்டதில் இருந்து தமிழ் ஊடகங்களின் மீதான அடக்குமுறை பல்வேறு காலங் களில் ஆதிக்க சக்திகளினால் பிரயோகிக்கப்பட்டது.

## ஊடகர் நிமலராஜன் படுகொலை:

பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் யாழ்ப்பாணத்திலிருந்து செய்திகளை வழங்கி வந்த நிமலராஜன் கடந்த 2000 ஆண்டு அக்டோபர் 19ஆம் திகதி கொல்லப்பட்டார். ஈழப் போரின் மையப் புள்ளியாக இருந்த யாழ்ப்பாணத்திலிருந்து செய்திகளை வழங்கி கொண்டிருந்த மயில்வாகனம் நிமலராஜன் 25 வரு டங்களுக்கு முன்பு அவரது வீட்டில் வைத்து கொலை செய்யப் பட்டார்.

கொடூரமான போரால் இலங்கையில் பதற்றமான சூழல் நில விக் கொண்டிருந்த வேளையில் பலத்த ஆபத்துகளுக்கு மத்தி யில் தொடர்ந்து போர் குறித்தும், மனித உரிமை மீறல்கள் மற் றும் அரசியல் நிகழ்வுகள் குறித்தும் பிபிசி தமிழ் உட்பட பல ஊட கங்களுக்கு செய்திகளை வழங்கி கொண்டிருந்தவர் நிமல ராஜன்.

## அச்சுறுத்தல் மிகுந்த பணி

நிமலராஜனுக்கு அச்சுறுத்தல்கள் வருவது ஒரு தொடர்கதை யாக இருந்தது. ஆனால் அதையும் தாண்டி ஊடகவியலில் அவ ருக்கு இருந்த ஆர்வத்தால் அவர் தனது பணியை தொடர்ந்து செய்து வந்தார்.

யாழ்ப்பாணத்தில் கிட்டதட்ட எல்லாரையும் அவருக்கு தெரியும், அவருக்கும் அனைவரையும் தெரியும் என்கிறது அவர் இறப்பு குறித்து வெளியான பிபிசியின் இரங்கல் செய்தி.

நிமலராஜனின் ஊடகப்பணி என்பது கடுமையான பணியாக தான் இருந்தது. அந்த சமயத்தில் மின்சார இணைப்பும் இல்லை. அவர் சைக்கிளில் சென்றுதான் செய்திகளை சேக ரித்து வந்தார். அந்த சமயத்தில் அவருக்கு ஆபத்துகளும் அதிகம் இருந்தன. பலதரப்பட்ட அரசியல் அச்சுறுத்தல்களும் இருந்தன.

## இருளில் நடந்த கொலை

போர்க்காலத்தில் இலங்கையில் நடைபெற்ற பொதுதேர்தலில் ஏற்பட்ட வன்முறைகள் குறித்து அவர் செய்தி வழங்கினார். அதில் தற்போது இலங்கையில் அரசியல் கட்சியாக இருக்கும் ஓர் கட்சி மோசடி செய்ததாகவும், மனித உரிமை மீறல்களில் ஈடு பட்டதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

நிமலராஜன் கொல்லப்பட்ட அன்றும் பத்திரிகை செய்தி ஒன்றை எழுதி கொண்டிருந்தார். அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் வீட்டிற்குள் புகுந்து நிமலராஜனை துப்பாக்கியால் சுட் டனர். நிமலராஜன் கொலை தொடர்பாக சில கைது நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் இன்று வரை இந்த கொலை குற்றம் யார் மீதும் நிரூபிக்கப்படவில்லை.

## சமூக விடுதலைக்கான நடேசன் குரல் :

2004 மே 31ஆம் திகதி நடேசன் படுகொலை செய்யப்பட்ட துயர நாள். தான் வாழ்ந்த சமூகத்தின் நீதிக்காக அரசியல் சமூக விடுதலைக்காக குரல் கொடுத்த பத்திரிகையாளன் ஒருவனுக்கு அதற்கு பரிசாக நடு வீதியில் சுட்டு வீழ்த்தப்பட்ட நாள்.

கிழக்கு பல்கலைக்கழக பொருளியல் துறை தலைவர் தம்பை யாவின் படுகொலை பற்றி அந்த கொலை நடந்த அடுத்த ஞாயிறு தனியார் பத்திரிகை ஒன்றில் நடேசன் எழுதிய கட்டுரை வெளி யாகியிருந்தது. மிக காரசாரமானதும் துணிச்சலோடு பல விட யங்களையும் சொல்லிய கட்டுரையாக அது அமைந்திருந்தது.

2004 மே மாதம் 31ஆம் திகதி காலை ஊடகவியலாளர் ஐயாத் துரை நடேசன் தனது அலுவலகத்திற்கு செல்லும் வேளையில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பத்திரிகையாளர் மரணத்தை எதிர்பார்த்த வேளையிலும் பேனாவை கீழே வைப்பதற்கு மறுத்தவர் நடேசன்.

“நான் செத்தாலும் பரவாயில்லை. புற முதுகில் சூடுபட்டுச் சாகக் கூடாது. நெஞ்சில் குண்டு பாய்ந்து வித்தாக விதைக்கப்படு வதையே விரும்புகின்றேன்” என்பது நடேசனின் வாசகங்கள். நடேசனின் இந்த கருத்து நிதர்சனமானது என்பது தமிழ் பத்திரிகை உலகம் பின்னர் கண்ட உண்மை.

## சிவராமின் ஆங்கிலப் புலமை :

தமிழர்களின் போராட்டம் ஒரு நியாயமற்ற, காட்டுமிராண்டித் தனமான பயங்கரவாதம் எனச் சிங்கள மற்றும் ஆங்கில ஊட கங்கள் சிங்கள மக்களுக்குப் போதித்துக் கொண்டிருந்த காலகட் டத்தில் தமிழர்களின் போராட்ட நியாயத்தையும், அவர்களுக்கு உரிமைகள் வழங்கப்படுவதால் மாத்திரமே இலங்கைத் தீவில் அமைதி நிலவும் என்ற யதார்த்தத்தையும் தர்க்க நியாயங் களோடு சிங்களவர்களுக்கும் புரியக் கூடியவாறு சிவராம் ஆங் கிலத்தில விளக்கினார். சிவராமுடைய எழுத்தின் போக்கை மட்டுமன்றி அன்றைய காலகட்டத்தில் பணியாற்றிய பெரும் பாலான தமிழ் எழுத்தாளர்களின் போக்கையும் மாற்றி யமைத்தது.

பத்திரிகைகளில் அவர் எழுதிய கட்டுரைகளுக்கு அப்பால் சிங்களத் தேசியம் பேசிய ஊடகவியலாளர்களுடனும் அவர் திரைமறைவில் தர்க்கிக்க வேண்டியிருந்தது. எவருமே துணிந்து செய்ய முன்வராத ஒரு காரியத்தை கொழும்பில் இருந்து கொண்டே செய்ய முன்வந்த சிவராமின் துணிச்சல் பாராட்டப்பட வேண்டியது.

சிவராம் பத்திரிகைகளில் முன்வைத்த கருத்துக்களுக்காக நேரில் கேள்வி எழுப்பப்பட்ட போதுகளில் அவற்றுக்கு அவர் ஆணித்தரமாகப் பதில் கூறவேண்டி ஏற்பட்டது.

தனது கருத்துக்களுக்காக சிங்கள ஊடகவியலாளர்களுடன் மோதவேண்டிய சூழல் உருவான போதிலும் அவர்களுடனான தொழில்முறை உறவை வளர்த்துக் கொள்ள சிவராம் தவற வில்லை.

அது மட்டுமன்றி சிங்களப் பேரினவாதத்தை எதிர்த்து நிற்கும் மாற்றின ஊடகவியலாளர்களுடனும் பல்வேறு தளங்களில் அவர் கரங் கோர்த்துக் கொண்டார்.

மறுபுறம், தமிழ் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கிய பல பிரச் சினைகள் சிங்கள ஊடக அமைப்புக்களால் கண்டு கொள் ளாமல் விடப்பட்டபோது ‘இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம்’ என்ற அமைப்பை உருவாக்குவதில் முன்னோடி யாக நின்றும் செயற்பட்டார். பின்னர் 28 ஏப்பரல் 2005 அன்று சிவராம் கடத்தப்பட்டு கொல்லப்பட்டார்.



www.sangathamil.ca

brampton.ca/EN/City-Hall/

BRAMPTON

Protocol Office

| | | | |
|---|---|---|---|
| November 21, 2025 | 9:00 AM | Tamil Eelam National Flag | Tamil Eelam National Flag Day |



## உலகத்தமிழர் உரிமைக் குரல் அமைப்பினரால் பிரம்டன் நகரசபையின் ஆதரவுடன் தமிழீழத் தேசியக் கொடி நாளை முன்னிட்டு, தமிழீழத் தேசியக் கொடி ஏற்றும் விழா நடைபெறுகிறது

**Voice of Global Tamil Rights proudly announces the Tamileelam National Flag Hoisting Ceremony in commemoration of Tamileelam National Flag Day, with the soupport of the City of Brampton.**

## இந்த முக்கியமான நிகழ்வில் கலந்துகொள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

**We warmly welcome everyone to join and participate in this meaningful event.**

**Date: November 21, 2025**
**Time: 9:00 A.M - 10:00 A.M.**
**Location: Ken Whillans Square, Brampton Community Flag Pole**
**41 Main St., South, Brampton, L6W 2C4**

உலகத்தமிழர் உரிமைக் குரல் Voice of Global Tamil Rigths

# ஆசியான் மாநாடு: இந்திய அரசின் வகிபாகமும் சீன – அமெரிக்க முரண் உறவும்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

29.10.2025

உலகளாவிய சவால்களை எதிர்கொள்வதில், ஆசிய நாடுகளின் முன்னுரிமைகளை ஆதரிப்பதுடன், கூட்டு முயற்சிகளை மேற் கொள்ள ஆசியான் (ASEAN) ஒத்துழைப்பு கூட்டமைப்பு உறுதி பூண்டுள்ளது.




புரூணே, மியான்மர், கம்போடியா, இந்தோனேசியா, லாவோஸ், மலேசியா, பிலிப்பின்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, வியட்நாம் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய 'ஆசியான்' (தென் கிழக்கு ஆசிய நாடுகள்) கூட்டமைப்பின் 47-ஆவது உச்சி மாநாடு, மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் அக்டோபர் 26 ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது.

இக்கூட்டமைப்புடன் ஒத்துழைக்கும் நாடுகளாக இந்தியா, அமெரிக்கா, ரஷ்யா, சீனா, ஜப்பான், அவுஸ்திரேலியா, கனடா, நியூஸிலாந்து, தென்கொரியா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிரிட்டன் உள்ளன. ஆசியான் மாநாட்டில் பங்கேற்க அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் உள்ளிட்ட உலகத் தலைவர்கள் பலர் மலேசியாவுக்கு வந்தனர்.

உலக அளவில் நிச்சயமற்றத் தன்மை அதிகரித்துள்ள தற் போதைய சூழலிலும், ஆசியான் நாடுகள் இடையிலான விரி வான வியூகக் கூட்டாண்மை நிலையான முன்னேற்றம் கண்டு வருகிறது. பலதரப்பு ஆழமான பொருளாதார, கலாசார உற வுகளும் வலுவடைந்துள்ளன.

### மலேசிய ஆசியான் உச்சிமாநாடு:

மலேசியாவின் தலைமையிலான 2025 ஆசியான் உச்சி மாநாடு வெற்றிகரமாக நிறைவடைந்ததாக மலேசிய அரசு தெரி வித்துள்ளது. இந்த மாநாட்டின் மூலம் பல முக்கிய மைல்கற்கள் எட்டப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கோலாலம் பூர் அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானதன் மூலம் பிராந்திய நிலையிலான மோதல்களைத் தீர்ப்பதில் ஆசியானின் மத்தியப் பங்கை உறுதிப்படுத்துகிறது.




26 ஆண்டுகளுக்குப் பிறகு ஆசியான் வட்டாரத்தின் ஒருமைப் பாட்டை வலுப்படுத்தும் விதமாக, கிழக்குத் திமோர் புதிய உறுப் பினராக இணைந்துள்ளது. மேலும் அமெரிக்காவுடன் இரு தரப்பு வர்த்தக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. ஆசியான் நாடு களில் முதன்முறையாக, மலேசியா இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இது முதலீட்டாளர் நம் பிக்கையை அதிகரித்து, மலேசியாவில் சாதகமான இயக்கத் தைக் கொண்டு வந்துள்ளது.

அத்துடன் உலகளாவிய அங்கீகாரமாக, அமெரிக்கா, சீனா, ஐ.நா. பொதுச்செயலாளர், பிரிக்ஸ் (BRICS), ஜி20 (G20), ஐரோப்பிய ஒன்றியம் (EU) போன்ற உலகத் தலைவர்களின் பங்கேற்பு, உலக அரங்கில் மலேசியாவின் வளர்ந்து வரும் முக் கியத்துவத்தை எடுத்துக் காட்டியுள்ளது. மேலும் ஃபிஃபா ஆசி யான் கோப்பை அறிமுகம் (FIFA ASEAN Cup) செய்யப்பட் டுள்ளது. விளையாட்டு, மற்றும் பிராந்திய நிலையிலான ஒற் றுமை, சுற்றுலாத் திறனை மேம்படுத்தும் புதிய முயற்சியாகும்.

இவை ஒருமைப்பாட்டையும், எதிர்காலத்தையும் உறுதி செய்த







முக்கிய முடிவுகள் என மலேசிய அரசு தெரிவித்துள்ளது. இந்த உச்சி மாநாடு, ஆசியான் வட்டாரத்தின் ஒற்றுமையையும், உலகளாவிய சவால்களை எதிர்கொள்ளும் திறனையும் உறு திப்படுத்திய ஒரு வரலாற்றுத் தருணம் என்று தெரிவிக்கப் படுகிறது.

### கடல்சார் ஒத்துழைப்பு மேம்பாடு:



கடல்சர் பாதுகாப்பு மற்றும் நீலப் பொருளாதாரத்தில் பரஸ்பர ஒத் துழைப்பு வேகமாக வளர்ந்து வருகிறது. அந்த அடிப்படையில், 2026-ஆம் ஆண்டை ஆசியான்-இந்தியா கடல்சர் ஒத் துழைப்பு மேம்பாட்டுக்கான ஆண்டாக இந்திய அரசு அறிவித் துள்ளது.

தற்போதைய இருபத்தோராம் நூற்றாண்டு இந்தியா-ஆசியான் நாடுகளுக்கானது. உலக மக்கள் தொகையில் நான்கில் ஒரு பங்கை பிரதிநிதித்துவப்படுத்தும் இந்தியா, தெற்குலகின் கூட் டாளிகளாக விளங்குகிறது. உறுதியான கூட்டாண்மை, உலக ளாவிய ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சிக்கு ஆற்றல் மிக்க அடித்தளமாக இந்த அமைப்பு உருவெடுத்துள்ளது.

ஒவ்வொரு தருணத்திலும், ஆசியான் நட்பு நாடுகளுக்கு இந் தியா உறுதுணையாக இருந்து வருகிறது. இந்திய - பசிபிக் பிராந்தியம் குறித்த ஆசியான் நாடுகளின் கண்ணோட்டம் மற்றும் மையத்தன்மைக்கு இந்தியா எப்போதும் முழு ஆதர வளிக்கிறது. இந்தியாவின் கிழக்கு நோக்கிய கொள்கையில் ஆசியான் முக்கியத் தூணாகும் என இந்திய பிரதமர் நரேந்திர மோடி மேலும் தெரிவித்துள்ளார்.

ஒட்டுமொத்த மனிதகுலத்தின் எதிர்காலத்தை பிரகாசமாக்க, ஆசியானுடன் தோளோடு தோளாக ஒத்துழைக்க இந்தியா தயாராக உள்ளது.

கல்வி, சுற்றுலா, அறிவியல், தொழில்நுட்பம், சுகாதாரம், பசுமை எரிசக்தி, இணையப் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளி லும் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் பகிரப்பட்ட கலாசார பாரம் பரியத்தைப் பாதுகாக்கவும், மக்கள் ரீதியிலான தொடர்புகளை வலுப்படுத்தவும் தொடர்ந்து பணியாற்றுவோம் என்று இந்திய அரசின் சர்பில் பிரதமர் மோடி உறுதி அளித்துள்ளார்.

### சீன– அமெரிக்க முரண் உறவு:

அமெரிக்க சீன அதிபர்கள் இந்த மாநாட்டின் பின்னர் சந்திக்க உள்ள நிலையில், இரு தரப்பு வர்த்தக அரசியல் குறித்தும் விவாதிக்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது. சீனாவும் அமெரிக் காவும் தமக்கிடையிலான உறவுகளை மீள ஆய்வு செய்யும் ஒரு முக்கியமான தருணத்தில் உள்ளதாக கூறப்படுகிறது.

பொருளாதார உறவுகளைப் பொறுத்தவரை இருநாடுகளும் நன்றாக பிணைக்கப்பட்டு இருந்தாலும், இந்த ஆண்டின் டிரம் பின் வரிவிதிப்புகளால் இரு நாட்டு உறவில் ஏற்பட்டுள்ள பின் னடைவு குறித்து இந்த சந்திப்பில் விவாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் சமரச முயற்சிகள் குறித்த அனைத்து பேச்சுவார்த்தைகளையும் பொறுத்தவரை அதில்,

கேந்திர முரண்தன்மைக்கு மிகவும் யதார்த்தமான சாத்தியம் இருக்கிறது என்று எமது இராஜ்ஜிய விவகாரங்களுக்கான ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

உக்ரேனிய போரால் ஏற்பட்டிருக்கும் கொந்தளிப்புகளின் காரணமாக சீனாவின் மீதான தாக்கத்தை அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கடுமையாக அதிகரித்து வருகிறார்.

ஆனாலும் சீனாவும், அமெரிக்காவும் ஒருவர் அடுத்தவரது அரசியல் முறையை விரும்ப வேண்டும் என்பதில் உறுதியாக இல்லை. ஆனால் சீன- அமெரிக்க பொருளாதார உறவு மேம் பட இருதரப்பும் இணைந்து செயல்பட முனைகின்றன. டிரம் பின் ஆட்சிக்கு முன்னராக இரு தரப்பு வர்த்தக உறவுகள் வலு வாக இருந்தன. அத்தகைய வர்த்தக உறவு எதிர்காலத்தில் மேலும் வலுவடையுமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். ஏனெனில் டிரம்பின் அரசின் கடுமையான வரி விதிப்பால், சிக்கலான உறவு நிலையே நீடிக்கும் என்ற கேள்வி எழுந்துள்ளது.

### வல்லரசாகும் சீனா:

இதேவேளை தனது கடந்தகால மனித உரிமைச் செயற்பாடுகள் குறித்த அமெரிக்காவின் விமர்சனத்துக்கு சீனா கடுமையாக பதிலளித்து வருகிறது. அமெரிக்காவை பொறுத்தவரை கலாச் சார மற்றும் பொருளாதார முன்னேற்றத்தில் தாம் வேறு ஒரு படிநிலையில் இருப்பதாக சீனா கூறியுள்ளது.



சீனாவின் மனித உரிமைகள் முன்னேற்றம் என்பது ஒரு புறவயப்பட்ட உண்மை என்றும், அமெரிக்காவுடனான பேச்சு வார்த்தைகள் என்பது, சமத்துவம் மற்றும் இருதரப்பும் ஒரு வரை ஒருவர் மதித்தல் என்பவற்றை அடிப்படையாகக்கொண்டு நடத்தப்பட வேண்டும் என்றும் சீன அரசு தெரிவித்துள்ளது.

கடந்த தசாப்த காலத்தில் அமெரிக்காவின் கேந்திர ரீதியிலான கவனம் எல்லாம் மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளில் குவிக்கப்பட்டிருந்ததாக சீனாவில் ஒரு கருத்து நிலவுகிறது.

தற்போது அமெரிக்காவின் கவனம் சீனா நோக்கி முனைப் புக்கள் அதிகரித்து வருவதாக சீனா தெரிவித்துள்ளது. இதில் சீனாவின் கவலை என்னவென்றால், இந்த நிலைமைகளில் அமெரிக்காவின் கவனம் இனிமேல் ஆசிய பசுபிக் பிராந்தியத் தின் மீது திரும்பினால், என்னாவது என்பதுதான்.

அதுவும் நிச்சயமாக சீனா தானும் ஒரு உலக வல்லரசாக வளர்ந்து வருகிறது. அதனது பூகோள பொருளாதார ஆர் வங்கள் நிச்சயமாக அதனது படைவல்லமையை, அதுவும் குறிப்பாக கடற்படை வல்லமையை விரிவுபடுத்த விளையும் என்பதில் எந்தவிதமான சந்தேகமுமில்லை.

சீனா தானே தயாரித்த பல விமானந் தாங்கிக் கப்பல்கள் பல சர் வதேச கடலில் ஓடுகின்றன. ஒரு வளர்ந்துவரும் வல்லரசுக் கான பாதையில் சீனா பாரியளவில் முன்னேறி இருக்கிறது.

சீனாவின் கடந்தகால வரலாற்றைப் பார்த்தால் இது பிராந்தியத் திலும், உலகிலும் உள்ள முக்கிய வல்லரசுகளுடன் ஒரு உரசல் நிலையை ஏற்படுத்துவதற்கே அதிக சாத்தியத்தைக் காட்டு கின்றது. நிச்சயமாக அமெரிக்காவுடனும் நிலைமை அப்படித் தான் இருக்கிறது.



# தமிழீழ விடுதலை வரலாற்றில் நவம்பர்



### தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் பிறந்த நாள் 26.11.1954



வரலாறு தமிழர்களுக்குத் தந்த ஒரு பெரும் தலைவன் பிரபாகரன். அடிபணிந்து, தலைகுனிந்து, அடிமைப்பட்டு வீழ்ந்த தமிழன் ஆர்த்தெழுந்து, படைதிரண்டு அடிகொடுத்து வென்ற பொற்காலம் ஒன்றின் பிதாமகன். அவர் ஓர் அற்புதமான மனிதர். அபூர்வமான மனிதர். பிரபாகரன் என்றால் தமிழர்களின் ஆன்மா என்று பொருள். தமிழர்களின் வாழ்வு என்று பொருள். தமிழர்களின் கீர்த்தி என்று பொருள். இப்பெருந்த தலைவனைத் தமிழீழ தேசம் பெற்றெடுத்த நாள்.

### மாவீரர்களை நினைவு கூரும் புனித நாள்:





தமிழீழ விடுதலைக்காக முதற் களப்பலியான புலிவீரன் லெப். சங்கர் நினைவு நாளான 27.11.1982 தாயகதேசத்தின் விடிவுக்காக தாயின் மடியில் புதைக்கப்பட்ட அனைத்து மாவீரர் களையும் நினைவுகூரும் மாவீரர் நாளாக கொண்டாடப்படுகின்றது. தனது இனிய உயிர் அர்ப் பணிப்பால் விடுதலைக்கு வித்திட்டு உரமான மாவீரர்களை நினைவு கூரும் புனித நாளான இந்நாள். தமிழீழத்தின் தேசிய நாளாகக் கருதப்படுகிறது.

### இந்திய அரசுக்கு எதிராக தலைவர் நடாத்திய உண்ணாநோன்புப் போராட்டம்



1986இல் இந்திய அரசுக்கு எதிராகத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் சென்னையில் சாகும் வரை உண்ணா நோன்புப் போராட்டத்தை மேற்கொண்டார். விடுதலைப் புலிகளிடம் இருந்து இந்திய அரசு வலுக்கட்டாயமாகப் பறித்த ஆயுதங்கள் மற்றும் தொலைத்தொடர்பு கருவிகளைத் திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி, நவம்பர் மாதம் 8ஆம் திகதி இந்தப் போராட்டம் தொடங்கியது. பின்னர், அவது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, உண்ணா நோன்புப் போராட்டம் கைவிடப்பட்டது.

### மூத்த தளபதி மேஜர் கனேஸ் அவர்களின் 39ஆம் ஆண்டு வீரவணக்கம்



மூதூரில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை வித்திட்டு வளர்த்த தளபதி மேஜர் கனேஸ் (சித்திரவேல் சிற்றம்பலம், பேராறு - திருகோணமலை, பிறப்பு: 18.04.1961) 1981இல் புலிகள் இயக்கத்தில் இணைந்து 05 ஆண்டுகளாக இவர் பங்குபற்றிய சண்டைக்களங்கள் ஒன்றிரண்டு அல்ல. காரை நகரிலிருந்து திருக்கோயில் வரை இவரது முழக்கங்கள் கேட்டன. அவருடைய சாவு ஒரு இலை யின் உதிர்வு அல்ல. மலையின் சரிவு. 05.11.1986 அன்று இவர் வீரச்சாவடைந்தார்.

### மேஜர் பசீலன் அவர்களின் 38 ஆம் ஆண்டு வீரவணக்கம்



விடுதலைப்புலிகளின் முதன்மைத் தளபதிகளுள் ஒருவரான பசீலன் (நல்லையா அமிர்தலிங்கம், முள்ளியவளை, பிறப்பு: 05.07.1961) 1983இல் இயக்கத்தில் இணைந்தவர். முல்லைத்தீவு மாவட்டப் பொறுப்பாளராக பணியாற்றிய இவர், முள்ளியவளை 3ஆம் கட்டைப் பகுதியில் இந்தியப் படைக்கொதிரன சண்டை யொன்றில் எணிகளைத் தாக்குதலில் 08.11.1987 அன்று வீரச் சாவடைந்தார்.

### தென் தமிழீழத்தின் முதற்பெண்புலி மாவீரரான லெப். அனித்தா வீரச்சாவடைந்த நாள் 28.11.1988



இந்தியப்படைக் காலகட்டத்தில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தில் இரகசிய செயற்பாடுகளில் மக்களோடு மக்களாக நின்று ஈடுபட்டவர். களுவாஞ்சிக்குடியில் இந்தியப்படையும், ஈ.பி.ஆர்.எல். எப். தேச விரோதிகளும் கைதுசெய்த சமயம் சயனைட் அருந்தி வீரச்சாவடைந் தார். தென் தமிழீழத் தில் மாவீரரான முதற்பெண்புலி 2ஆம் லெப் அனித்தா (சித்திராதேவி தம்பிராசா, ஆரையம்பதி, பிறப்பு: 19.09.1970) இவராவார்.

### மாங்குளம் சிறிலங்கா இராணுவ முகாம் மீது கரும்புலித் தாக்குதல்


லெப். கேணல் போர்க்

முல்லை மாவட்டத்தின் தளபதியாகவும், வன்னித் தாக்குதலணித் தளபதியாகவும் இருந்து செயற்பட்ட போர்க் (மாப்பாணப்பிள்ளை அரசரத்தினம், ஓமந்தை, பிறப்பு: 11.11.1959) அவர்கள் மாங்குளம் இராணுவ முகாம் மீதான் தாக்குதலில் கரும்புலியாகச் செயற்பட்டு 23.11.1990 அன்று வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

### லெப். கேணல் ஜோய் அவர்களின் 34ஆம் ஆண்டு வீரவணக்கம்



மட்டு - அம்பாறை மாவட்டத் தளபதி லெப். கேணல் ஜோய் (கணபதிப்பிள்ளை ரகுநாதன், செங்கலடி, பிறப்பு: 02.1970) அவர்கள் கொடுவாமடு பகுதியில் சிறிலங்காப் படையினர் மீதான தாக்குதலின்போது விழுப்புண்ணடைந்து பண்டுவம் பெறும்போது 30.11.1991 அன்று வீரச்சாவடைந்தார்.

### தமிழீழக் காவல்துறையின் ஆரம்பம்:



தனியரசு உருவாக்கத்திற்கான வளர்ச்சிப் போக்கில் இன்னுமொரு படிக்கல் தமிழீழக் காவல் துறையாகும். 19.11.1991 அன்று தமிழீழத் காவல்துறை அணி உருவாக்கம் பெற்றது. தமிழீழக் காவல் துறையினர் தமது முதலாவது அணி வகுப்பு மரியாதையை 19.11.1991 அன்று தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் முன்னிலையில் வழங்கினர்.

### யாழ் புனித ஜேம்ஸ் தேவாலயம் தாக்கப்பட்ட நாள்:




யாழ். புனித ஜேம்ஸ் தேவாலயம் 13.11.1993 அன்று சிறீலங்கா இராணுவத்தின் வான்படைத் தாக்குதலில் தாக்கப்பட்டது. இதில் தேவாலயத்தினுள் வணக்கத்தில் ஈடுபட்டிருந்த ஒன்பது பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

### சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பூநகரிச் சமர்: 10-13.11.1993

விடுதலைப் புலிகளின் ஒபரேசன் தவளை நடவடிக்கை மூலம் 13.11.1993 அன்று நவீன ராடர் சாதனங்களுடன் கூடிய கடற்படைமுகாமுடன் ஆறு இராணுவ முகாம்களையும் அவற்றுடன் இணைந்த பல மினிமுகாம்களையும் நூற்றுக்கணக்கான காவலரண்களையும், உள்ளடக்கி 25

www.sangathamil.ca

ஒபரேசன் தவளை



கிலோ மீட்டர் சுற்றளவில் அமைந்திருந்த பூநகரி கூட்டுப்படைத்தளம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது. 10.11.1993 அன்று நள்ளிரவு தாண்டிய வேளையில் விடுதலைப் புலிகளால் ஆரம்பிக்கப்பட்ட இச்சமரில் 1000ற்கும் அதிகமான சிறீலங்கா இராணுவத்தினர் அழிக்கப்பட்டனர். விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்ட வடிவத்திற்கு புதியதொரு பரிமாணத்தைச் சேர்த்த இப்பெரும் சமரில் 469 புலிவீரர்கள் வீரச்சாவடைந்தனர். அந்தப் பெரு வெற்றியைப் படைத்து புலிகள் மீண்ட நாள் 13.11.1993 அன்று.



## லெப். கேணல் நவநீதன் அவர்களின் 32ஆம் ஆண்டு வீரவணக்கம்

நவநீதன் (தில்லையம்பலம் திருலோகநாதன், கனகராயன்குளம், பிறப்பு: 12.11.1969), போரன்றி வேறேதும் நினையாத புலிவீரன். போர்தான் இவனது தனிச்சிறப்புக் கலை. போரில் அவன் துறைசார் வல்லுனன். எத்தனையோ திறமைகளின் ஒட்டுமொத்த வெளிப்பாடாக அவன் உலா வந்தான். பூநகரி மீதான "ஒப்ரேசன் தவளை" படையெடுப்பின்போது அந்த வீரன் 11.11.1993 அன்று வீரவரலாறாகினான்.

## ஒபரேசன் தவளை இராணுவ நடவடிக்கைக்கு பக்க பலமாக பலாலி மீது கரும்புலித் தாக்குதல் – 11.11.1993

வரலாற்று புகழ்மிக்க "ஒபரேசன் தவளை" இராணுவ நடவடிக்கைக்கு பக்கத் துணையாக பலாலி பெருந்தளத்தினுள் ஊருவி ஒரு கரும்புலித் தாக்குதல் நடாத்தப்பட்டது. சிங்கள இராணுவத் தலைமையை நிலைகுலைய வைக்கவும், தடுமாற்றத்திற்கு உள்ளாக்கியும் விடுதலைப் புலிகளின் பலத்திற்கு வலும்சேர்த்து 13 கரும்புலிகள் வரலாறாகினர். அவர்களில் மேஜர் தொண்டமான் (கண்ணப்பர் நல்லதம்பி, ஊற்றுச்சேனை, மட்டு, பிறப்பு: 21.12.1971), மேஜர் கலையழகன் (பொன்னையா பேரின்பராசா, மட்டு, பிறப்பு: 22.11.1969), கப்டன் சிவலோகன் (சின்னத்தம்பி அருளானந்தன், கொக்கட்டிச்சோலை, மட்டு, பிறப்பு: 05.06.1973), கப்டன் சீராளன் (ஞானப் பிரசகம் ரஞ்சன, உயிர்த்தராசன்குளம், முருங்கன், பிறப்பு: 01.07.1972), கப்டன் செந்தமிழ்நம்பி (செல்லத்துரை ஜெகன், கோப்பாய், யாழ்., பிறப்பு: 01.01.1975), கப்டன் மதிநிலவன் (கணபதிப் பிள்ளை தவராசா, திருகோணமலை, பிறப்பு: 09.09.1975), கப்டன் ஐயனார் (செல்வநாயகம் இராசசேகரம், அராலி, யாழ். பிறப்பு: 27.11.1972), கப்டன் கரிகாலன் (இரத்தினசிங்கம் பிரபாகரன், திரு கோணமலை, பிறப்பு: 24.11.1973), லெப். கண்ணன் (நவரெட்ணம் நேசகுலேந்திரன், உடுத்துறை, யாழ், பிறப்பு: 24.06.1976), லெப். நல்லதம்பி (தங்கராஜா கோகுலநாதன், கொக் கட்டிச்சோலை, மட்டு, பிறப்பு: 01.01.1975), லெப். ஜீவரஞ்சன் (கிஷ்ணபிள்ளை முருகுப்பிள்ளை, தும்பங்கேணி, திக்கோடை - மட்டு, பிறப்பு: 26.07.1972), லெப். வீரமணி (தெய்வேந்திரம் சுதாகர், வட்டுக்கோட்டை, யாழ்., பிறப்பு: 09.08.1976), லெப். செங்கண்ணன் (தனுஸ்கோடி செந்தூர்பாண்டியன், சாத்தூர், சிவகாசி, தமிழ்நாடு, பிறப்பு: 25.01.1975) ஆகியயோர் வீரச்சாவடைந்தனர்.


லெப். செங்கண்ணன்


மேஜர் தொண்டமான்


மேஜர் கலையழகன்


கப்டன் சிவலோகன்


கப்டன் சீராளன்


கப்டன் செந்தமிழ்நம்பி


கப்டன் மதிநிலவன்


கப்டன் ஐயனார்


கப்டன் கரிகாலன்


லெப். கண்ணன்


லெப். நல்லதம்பி


லெப். ஜீவரஞ்சன்


லெப். வீரமணி


மேஜர் கணேஸ்


மேஜர் குமணன்

## பூநகரி கடற்பரப்பில் சிறீலங்கா கடற்படை மீது கடற் கரும்புலித் தாக்குதல்

விடுதலைப் புலிகளின் ஈருடகத் தாக்குதலான தவளைத் தாக்குதலின் வெற்றிக்காக பூநகரி கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட கடற் கரும் புலித் தாக்குதலில் மேஜர் கணேஸ் (நாகநாதி ஜீவநேசன், புத்தூர், யாழ்., பிறப்பு: 26.01. 1973), மேஜர் குமணன்அல்லது கோபி (சுப் பிரமணியம் செல்வ லிங்கம், பல்லவராயன் கட்டு, மன்னார், பிறப்பு: 06.06.1973) ஆகிய இரு கரும்புலி வீரர்களும் பங்கு கொண்டு வெற்றிக்கு வித்திட்டு 11.11.1993 அன்று வீரச்சாவடைந்தனர்.



## லெப். கேணல் அன்பு அவர்களின் 32 ஆம் ஆண்டு வீரவணக்கம்

விடுதலைப் புலிகளின் முதன் நிலைத் தளபதிகளுள் ஒருவராக அன்பு (பொன்னம்பலம் சர வணபவன், பூநகரி, பிறப்பு: 25.09.1966) முல்லை, மணலாறு மாவட்டத் தளபதியாகப் பணி யாற்றியவர். பூநகரிச் (ஒப்பரேசன் தவளை) சமரின் போது 12.11.1993 அன்று வீரச்சாவடைந்தார்.





## லெப். கேணல் சூட் அல்லது அருணன் அவர்களின் 32ஆம் ஆண்டு வீரவணக்கம்

இயக்கத்தின் நீண்ட வரலாற்று ஓட்டத்தோடு கலந்து, ஆரவாரமில்லாமல் தன் செயலால் வளர்ந்து உயந்தவன் சூட் (நவரட்ணம் விக்னராஜா, நல்லூர்-யாழ்., பிறப்பி: 31.05.1967). தான் பணியாற்றிய துறைகளில்லெல்லாம் பெயர் சொல்லும் முத்திரைகளை பதித்தவன். பூநகரித் களத்தில் 11.11.1993 அன்று விழும்போது, கரும்புலிகள் அணியொன்றுக்கு தளபதியாக இருந்தான்.



## லெப். கேணல் குணா அவர்களின் 32ஆம் ஆண்டு வீரவணக்கம்

விடுதலைப் புலிகளின் முதன்மைத் தளபதிகளுள் ஒருவரான குணா (சுந்தரம் விஜயராசன், சாவகச்சேரி, பிறப்பு: 28.11.1963), தென்மராட்சிக் கோட்ட சிறப்புப் பொறுப்பாளராக பணி யாற்றினார். பூநகரிச் சமரின் 11.11.1993 அன்று முதற் களப் பலியாக இவர் வீரச்சாவடைந்தார்.


மேஜர் வித்தி

## வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் தரையிறங்கு கப்பல் மீது கரும்புலித் தாக்குதல்

வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் சிறீலங்கா இராணுவத் தளபாடங்களை இறக்கிக் கொண்டிருந்த தரையிறக்கும் போர்க் கப்பல் மீதான கரும்புலித் தாக்குதலை கடற்கரும்புலி மேஜர் வித்தி (சந்தனம் யோகேஸ்வரன், மாத்தளை, சிறீலங்கா, பிறப்பு: 05.10.1971) மேற்கொண்டு 08.11.1994 அன்று வீரச் சாவடைந்தார்.



## லெப். கேணல் மல்லி அல்லது அமுதன்

விடுதலைப் புலிகளின் முதன் நிலைத் தளபதிகளுள் ஒருவரான மல்லி (சின்னதம்பி பத்மநாதன், புதுக்குடியிருப்பு, பிறப்பு: 27.04.1964), புலிகள் இயக்கம் பிரகடனப்படுத்திய போர்நிறுத்தத்தின் போது மணலாற்றுக் காட்டுக்குள் பதுங்கியிருந்த சிறீலங்கா இராணுவத்தினர் தாக்கியபோது இன் னுமொரு போராளியான வீரவேங்கை அருளப்பன் (நகுலேசப்பிள்ளை ஜெயக்குமார், நல்லூர், பிறப்பு: 05.12.1975) உடன் 17.11.1994 அன்று வீரச்சாவடைந்தார்.

## ஓயாத அலைகள் – 3




இலங்கையின் இராணுவ அரசியல் வரலாற்றில் பல திருப்பங்களுக்கும், மாற்றங்களுக்கும் காரணியாக இருந்த ஓயாத அலைகள் - 3 இராணுவ நடவடிக்கை 02.11.1999 அன்று விடுதலைப் புலிகளால் முன்னெடுக்கப்பட்டது. சுமார் ஏழு மாதங்கள் நீடித்த இவ்வெற்றிமிகு நடவடிக்கை மூலம் சிறீலங்கா அரசானது விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் வெற்றிகொள்ள முடியாது என்பதை உறுதி செய்தது.

### மடுத்திருப்பதிப் படுகொலை



மன்னார் மாவட்டத்தில் உள்ள மடுமாதா தேவாலயத்தின் மீது 20.11.1999 அன்று சிங்கள இராணுவம் நடத்திய பலத்த பீரங்கித் தாக்குதலில் தேவாலயத்தினுள் அடைக்கலம் புகுந்திருந்த 13 குழந்தைகள் உட்பட 44 பொதுமக்கள் கொல்லப்பட்டனர், 60 ற்கும் மேற்பட்ட பொது மக்கள் படுகாயம் அடைந்தனர். இத்தாக்குதலில் தேவாலயத்தின் ஒரு பகுதி பலத்த சேதத்திற்குள்ளானது.

### பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களின் 18ஆம் ஆண்டு வீரவணக்கம்



**மக்களுக்காகத் தன்னையே உருக்கி உழைத்த இலட்சிய நெருப்பு**



தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப்புலிகள்,
தமிழீழம்.
03/11/2007.

எனது அன்பான மக்களே!

சமாதான வழியில், நீதியான முறையிலே எமது மக்களது தேசியப் பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காணுமாறு அனைத்துலகம் அடுத்தடுத்து அழைப்பு விடுத்தபோதும், சிங்கள தேசத்திலிருந்து நல்லெண்ணம் வெளிப்படவில்லை. பௌத்தத்தின் காருண்யத்தைக் காணமுடியவில்லை. சிங்கள தேசம் தனது இதயக் கதவுகளைத் திறந்து, சமாதானத் தூதும் அனுப்பவில்லை. மாறாக, போர்க்கழுகுகளை ஏவி, இராட்சதக் குண்டுகளை வீசியிருக்கிறது. எமது அமைதிப் புறாவைக் கொடூரமாக, கோரமாகக் கொன்றழித்திருக்கிறது.

தமிழுலகமே ஆழமாக நேசித்த ஒரு அரசியல் தலைவனைச் சிங்கள தேசம் இன்று சாகடித்திருக்கிறது. தமிழீழ மக்களின் மனங்களை வென்ற ஒரு தன்னிகரற்ற தலைவனைச் சிங்களம் பலிகொண்டிருக்கிறது. எமது சுதந்திர இயக்கத்தின் அரசியற்றுறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் தமிழ்ச்செல்வனையும் ஏனைய ஐந்து போராளிகளையும் இழந்து இன்று தமிழீழ தேசம் வரலாற்றில் என்றுமில்லாத ஒரு பேரிழப்பைச் சந்தித்திருக்கிறது. இந்த மாபெரும் சோக நிகழ்வு எம்மக்களை அதிர்ச்சியிலும் ஆழ்ந்த துயரத்திலும் ஆழ்த்தியுள்ளது.

தமிழ்ச்செல்வன் எமது சுதந்திர இயக்கத்தில் இணைந்த காலத்திலிருந்தே என்னோடு ஒன்றாக, நெருக்கமாக வாழ்ந்தவன். நான் அவனை ஆழமாக அறிந்து, ஆழமாகவே நேசித்தேன். எனது அன்புத் தம்பியாகவே வளர்த்தேன். அவனது அழகிய சிரிப்பும் அதனுள் புதைந்த ஆயிரம் அர்த்தங்களையும் அவனுள் அடர்ந்து கிடந்த ஆற்றல்களையும் ஆளுமைகளையும் நான் ஆரம்பத்திலிருந்தே கண்டுகொண்டேன். இலட்சியப்போராளியாக, தலைசிறந்த தானைத் தளபதியாக, மாபெரும் அரசியல் பொறுப்பாளனாக, அனைத்துலகோடும் உறவாடிய இராஜதந்திரியாக, பேராற்றல்மிக்க பேச்சுவார்த்தையாளனாக அவனை வளர்த்தெடுத்தேன்.

தான் நேசித்த மண் விடுதலை பெறவேண்டும், தான் நேசித்த மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழவேண்டுமென்று சதா சிந்தித்தான். தான் நேசித்த அந்த மக்களது விடுதலைக்காக, விடிவிற்காகத் தன்னையே ஊனாக உருக்கி, உறுதியாக உழைத்த ஒரு இலட்சிய நெருப்பு அவன்.

நீண்ட நெருப்பு நதியாக நகரும் எமது விடுதலை வரலாற்றில் அவன் ஒரு புதிய நெருப்பாக இணைந்திருக்கிறான். இந்த இணைவிலே, எமது கனத்த இதயங்களில் ஒரு பெரும் இலட்சிய நெருப்பை மூட்டியிருக்கிறான். எமது இலட்சிய உறுதிக்கு உரமேற்றியிருக்கிறான். இந்த உறுதியில் உரம்பெற்று, நாம் எமது இலட்சியப் பாதையில் தொடர்ந்தும் உறுதியோடு பயணிப்போம்.

**"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"**

வே.பிரபாகரன்
தலைவர்,
தமிழீழ விடுதலைப்புலிகள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் 1984ஆம் ஆண்டு தன்னை இணைத்துக்கொண்ட தமிழ்ச்செல்வன் (பரமு தமிழ்ச்செல்வன், பிறப்பு: 29.08.1967), 1987ஆம் ஆண்டு தென்மராட்சிக் கோட்டப் பொறுப்பாளராகவும், 1991இல் யாழ் மாவட்ட சிறப்புத் தளபதியாக செயற்பட்டதோடு, 1993இல் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் நிலையைப் பெற்று கடைசிவரை ஓர் இலட்சிய போராளியாக, அரசியற் பொறுப்பாளனாக, அனைத்துலகோடு உறவாடிய இராசதந்திரியாக, பேராற்றல் மிக்க பேச்சுவார்த்தையாளனாக தமிழுலகமே ஈழமாக நேசித்த ஒரு அரசியல் தலைவனாகத் திகழ்ந்தார். 02.11.2007 அன்று சிறிலங்கா வான்படையின் வான்குண்டுத் தாக்குதலில் வீரச்சாவடைந்தார். இவருடன் லெப். கேணல் அன்புமணி (அலெக்ஸ்), மேஜர் மிகுதன், மேஜர் கலையழகன் (நேதாஜி), மேஜர் செல்வம், லெப். ஆட்சிவேல், லெப். மாவைக்குமரன், ஆகியோரும் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.



















### கேணல் பரிதி அவர்களின் 13ஆம் ஆண்டு வீரவணக்கம்



கேணல் பரிதி (நடராசா மதிந்திரன், கரம்பன், ஊர்காவற்துறை, பிறப்பு: 26.10.1963) எமது விடுதலை இயக்கத்தின் மூத்த உறுப்பினர்களில் ஒருவராவார். நேர்மையும், கண்ணியமும் மிக்க இவர் களத்திலும் புலத்திலும் எமது விடுதலைக்காக அயராது போராடியவர். சிங்கள் அரசின் உளவுப்பிரிவினரால் 08.11.2012 அன்று பிரான்ஸ் - பாரிசு நகரில் சுடப்பட்டு வீரச்சாவடைந் தார்லப். மாவைக்குமரன், மேஜர் செல்வம் ஆகியோரும் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

# கார்த்திகை (நவம்பர்)

# மாவீரர் மாதம்




தமிழீழத் தேசிய
THAMILEELA NATIONAL
"MAAVEERAR NAAL"
மாவீரர் நாள்
2025
மாவீரர்கள் ஒரு சத்திய
இலட்சியத்திற்காக மரணிக்கிறார்கள்.
அவர்களது சாவு
சாதாரண மரண நிகழ்வு அல்ல
எமது தேச விடுதலையின்
ஆன்மிக இறைகூவலாக
மாவீரர்களது மரணம் திகழ்கிறது.
தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன்
நவம்பர் 27
NOVEMBER 27
மாவீரர் துயிலும் இல்லம்
தாயக விடுதலைப் போராட்டத்தில்
வீரச்சாவைத் தழுவிக் கொண்ட
மாவீரர்களுக்கான
வீர வணக்க நாள்
In remembrance of Our Heroes
Who Sacrificed their lives for us,
for Our Homeland and for Thamil Nationalism
புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்
சங்கத்தமிழ்